
# கவின் தமிழ்
# 2005



வடக்கு கிழக்கு மாகாண
தமிழ் மொழி நாள் சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R8
ACCESSION NO:- 17023
CLASS NO :- 080

# கவின்தமிழ்

## வடக்கு – கிழக்கு மாகாணம்

# தமிழ் மொழி நாள்

# 2005

1193
BAITHUL HIKMAH
Book No 1193/TLT
U.L. Aliyar, Sammanthurai:-6

வடக்கு - கிழக்கு மாகாண
கல்வித் திணைக்களம்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACCESSION NO. 179023
080

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | கவின்தமிழ் |
| வகை | : | இலக்கிய ஆக்கங்களின் தொகுப்பு |
| இதழாசிரியர் | : | ந. அனந்தராஜ் |
| வெளியீடு | : | தமிழ்மொழி நாள் குழு<br>மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடக்கு கிழக்கு மாகாணம் |
| முகப்பு ஓவியம் | : | மு. இராதாகிருஸ்ணன் |
| பதிப்பு | : | 2005 |
| பக்கங்கள் | : | xvii + 110 |
| பிரதிகள் | : | 500 |
| அச்சுப்பதிப்பு | : | ரெயின்போ மினிலாப்<br>நீதிமன்ற வீதி,<br>திருக்கோணமலை<br>026-2227354, 0712 340194 |


முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவாகக் கொண்டாடப்படும் தமிழ் மொழித்திறன் விருத்தி நாட்களினூடாக எமது குழந்தைகளின் மொழி அறிவை விருத்தி செய்வோமாக.

— மலர்க்குழு —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "கவின்தமிழ் 2005"

## மலர்க்குழு

திரு. வீ. இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

திரு. ந. அனந்தராஜ்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்மொழிப்பிரிவு)

திரு. ஏ. ஆர். மைக்கல்
பொப்லெர் மாகாண மேற்பார்வையாளர்

## இதழ் ஆசிரியர்

திரு. ந. அனந்தராஜ்

## முகப்பு ஓவியம்

மு. இராதாகிருஷ்ணன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வணக்கம்



நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கொழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

-மனோன்மணியம்-

சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண
## தமிழ் மொழி நாள் விழா-2005

### விழாக் குழுவினர்

**காப்பாளர்**
**திரு. ஆர். தியாகலிங்கம்**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணம்

**தலைவர்**
**திரு. இ. விசாகலிங்கம்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு கிழக்கு மாகாணம்

**இணைப்பாளர்**
**திரு. வீ. இராசையா**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்

**செயலாளர்**
**திரு. ந. அனந்தராஜ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்

**பொருளாளர்**
**திரு. ஜே.ரி. புவிராஜ்**
பிரதம கணக்காளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழி நாள் - 2005
## விழா சிறப்புற உதவியவர்கள்

**திரு. ரி. பொன்னம்பலம்**
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்

**திருமதி. பு. தண்டாயுதபாணி**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**ஜனாப். யூ.எல். அலியார்**
கல்விப் பணிப்பாளர்

**ஜனாபா எம்.எம். ஆலீப்**
நிருவாக உத்தியோகத்தர்

**திரு. ஏ.விஜயானந்தமூர்த்தி**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. பி. செல்வின் இரேனியஸ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. கே. முருகுப்பிள்ளை**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.மு. ராதாகிருஸ்ணன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. ஸ்ரீஸ்கந்தராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**செல்வி. அ. கனகசூரியம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. க. நடராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. தங்கவேல்**
ஓய்வுபெற்ற அதிபர்

**திருமதி. எஸ். கணேசலிங்கநாதன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. சௌந்தரராஜன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஏ.ஆர்.மைக்கல்**
"பொப்லெப்" மேற்பார்வையாளர்

**திரு. இ. இராஜேஸ்வரன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஜி. ர. பிரான்சிஸ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**செல்வி. உ. சிவஞானம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. எஸ். சந்திரமோகன்**
பிரதம எழுதுநர்

திரு. த. கலாநிதி
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதிப்பிரிவு அலுவலர்கள், எழுதுவினைஞர்கள், தட்டச்சாளர்கள், கணனி இயக்குனர்கள், சாரதிகள், ஊழியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. ஆர். தியாகலிங்கம் அவர்களின்

# ஆசிச்செய்தி

இன்று தமிழர்கள் வாழும் நாடுகள் அனைத்திலும் தாய்த்தமிழுக்கு விழா எடுக்கும் நிகழ்ச்சிகள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருந்தும், பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் தமிழ் மொழித்திறன் விருத்தி தொடர்பான போட்டிகளையும், நாட்டுக்கூத்துப் போட்டிகளையும், விழாக்களையும் நடத்துவது என்பது அந்தப் பாடசாலை சார்ந்த கிராமத்தையே எழுச்சி கொள்ளச் செய்து விடும்.

இன்று பல்வேறு கவனக் கலைப்பான்களினூடாக மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் வாசிப்புத்திறன் விருத்தியும், ஆக்கத்திறன் வளர்ச்சியும் அருகிக் கொண்டு வருகின்ற நேரத்தில் பாடசாலை ரீதியாக மாணவர்களிடையே தமிழ் மொழித் திறன் விருத்திப் போட்டிகளை ஒழுங்கு செய்வதனூடாக அவர்களின் மொழி ஆற்றல் மேம் படுத்தப்பட்டு வருகின்றது என்பதை தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்களின் வெளிப்பாடுகளினூடாக அறிய முடிகிறது.

இத்தகைய ஒரு பாரிய முயற்சி வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படும் போது ஆசிரியர்களும், அதிபர்களும், மிகக் கூடியளவிலான மாணவர்கள் பங்கு பற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மொழித்திறன் போட்டிகளை நடத்துவதன் குறிக்கோள்களையும் அடைந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி மூல மாணவர்களின் மொழி விருத்திச் செயற்பாடுகளில் பாடசாலை மட்டம், வலயம், மாகாணமட்டம் என்ற பல்வேறு நிலைகளினூடாக மாணவர்கள் பயிற்சி பெற்று வரும்போது மொழித்திறன் விருத்தி, ஆக்கத்திறன் விருத்தி, கூட்டாகச் செயற்படும் தன்மை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை போன்ற தலைமைத்துவ பண்புகள் விருத்தியடைகின்றன.

அந்த வகையில் ஒவ்வொரு நிலைகளிலும் மாணவர்களின் போட்டித்திறன்களை வளர்த்தெடுப்பதில் தம் உழைப்பை நல்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி அலுவலர்கள் ஆகியோரின் முயற்சிகளை வாழ்த்துகின்றேன்.

வடக்குக் கிழக்கின் பரந்த பிரதேசங்களில் இருந்து வருகை தந்துள்ள மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஒன்று சேர்த்து மாகாண நிலையிலான போட்டிகளைச் சிறப்பாக நடத்துவதற்கு உழைத்து வருகின்ற மாகாணக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், தமிழ் மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஏனைய உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், எழுதுவினைஞர்கள், அலுவலர்கள், சிற்றூழியர்கள், அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

2005 ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெறும் தமிழ்மொழித்திறன் போட்டிகளும் அது தொடர்பாக வெளியிடப்படும் ''கவின்தமிழ்'' சிறப்பு மலரும் சிறப்புடன் வெளிவர என் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
## திரு. இ.விசாகலிங்கம் அவர்களின்
# ஆசிச்செய்தி

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மாணவர்களின் உள, உடல் ஆற்றல்களையும், ஏனைய திறன்களையும் வளர்ப்பதில் பல்வேறு நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும் திட்டமிட்டுக் செயற்படுத்தி வருகின்றது. அத்தகைய செயற்பாடுகளில் மாணவர்களின் தமிழ் மொழித்திறன் விருத்தியை மேம்படுத்துவதற்கான ஒரு செயற்பாடாகவே தமிழ் மொழி மற்றும் கலைத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவை பாடசாலை ரீதியாகவும், வலய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும், மாகாண ரீதியாகவும் நடத்தப்படுவதால் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழியில் கற்கின்ற சகல மாணவர்களும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியிலாவது பங்கு பெறக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அதிபர்கள் தமது பாடசாலை மட்டத்தில் அதிகளவிலான மாணவர்களைப்பங்கு பற்றச் செய்ய வேண்டும்.

மாணவர்களிடையே சிறுவயதில் மொழி விருத்தியை ஏற்படுத்துவதனூடாகவே எதிர்காலத்தில் சிறந்த ஆளுமையுள்ளவர் களாகவும், ஆற்றலுள்ளவர்களாகவும் அவர்களை உருவாக்க முடியும்.

தமிழ் மொழித் தினப் போட்டிகளினூடாக மொழித்திறன், பேச்சாற்றல், நடிப்பு மற்றும் கலைத்திறன் போன்ற ஆற்றல்கள் வளர்க்கப்படுவதுடன் தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான கூத்துக் கலையையும் வளர்ப்பதற்காகப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அருகிக் கொண்டுவரும் தமிழர்களின் பாரம்பரிய கலைகளான கூத்துக்கலை இன்றைய சிறார்களும் அறிந்து அதற்கேற்ப வளர்ப்பதன் மூலம் பாரம்பரியக்கலை வளர்ச்சியின் தொடர்ச்சியைப் பேணவும், அழிந்து விடாமல் காக்கவும் முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழித்திறன் போட்டிகளும் விழாக்களும் ஒவ்வொரு நிலைகளிலும் நடத்தப்படும் பொழுது அதற்காக அர்ப்பணித்துச் செயற்படுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதி, உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

மாகாண நிலைப் போட்டிகளை நடத்தும் பொழுது வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இதற்காகப்பல மனித வளங்கள் அர்ப்பணிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதம கணக்காளர், நிதிப்பிரிவினர், நிர்வாக அலுவலர்கள், பிரதம எழுதுவினைஞர்கள், எழுதுவினைஞர்கள், சாரதிகள், பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

2005 ஆம் ஆண்டு மிக எளிமையாக வவுனியாவில் கொண்டாடப்படும் தமிழ் மொழித்திறன் போட்டிகளும் அவற்றை ஆவணப்படுத்தும் ``கவின்தமிழ்" சிறப்பு மலரும் சிறக்க என் நல் ஆசிகள்!.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு மாணவரிடமும் காணப்படும் தமிழ்மொழி இலக்கியக் கலைத்திறன்களின் பண்பும், படைப்பும் தமிழ்மொழித்தின விழா நிகழ்ச்சிகளின் வழி மேம்படுத்தப்படுகின்றன.

இம்முறையும் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களின் தமிழ்மொழி இலக்கியத்திறன்களின் சிறப்புக்களை ஆராய்ந்து, பாராட்டிப், பரிசளிக்கும் நிகழ்வாகத் தமிழ்மொழித்தின விழா வவுனியா நகரில் இடம்பெறுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

விழாவில் பங்குகொள்ளும் மாணவர்களின் வெற்றிகள் பாராட்டப்படும் அதேவேளையில் எமது மாகாணப் பாடசாலை மாணவர்கள் அனைவரினதும் பங்களிப்பை உறுதிசெய்யும் வகையில் அவர்களைத் தமிழ்மொழி இலக்கியக் கலைத்திறன் பயிற்சிகளில் ஈடுபடுத்தியமையை அதிபர்களும், ஆசிரியர்களும் மனங்கொண்டு உறுதிசெய்வது அவசியம் எனக் கருதுகின்றேன்.

விழாக்களின்போது மாத்திரமன்றி என்றுமே மொழிசார்ந்த திறன்களில் பயிற்சியும், தேர்ச்சியும் பெற அனைத்து மாணவர்களையும் அவற்றில் ஈடுபடுத்துவதில் கருத்தூன்றி அனைவரும் செயற்படுதல் வேண்டும்.

புதுமையும், புலமையும், புரட்சியும் தோன்ற ஒவ்வொரு விழாவும், வளர்ச்சியையும், மறுமலர்ச்சியையும் நோக்கி முன்னேற அனைவரும் ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும்.

விழாவின் சிறப்புக்கு வலிமைசேர்க்க வெளியிடப்படும் "கவின் தமிழ்" என்னும் கலை இலக்கிய மலரின் வரவுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீ. இராசையா,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு, கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி நாள்

# இணைப்பாளரின் கருத்துரை



"வடக்குக்கிழக்கு மாகாணம் " என்றதும் உலகின் மூலை முடுக்கெங்கும் "தமிழ்" என்ற உணர்வையே ஏற்படுத்தும் அளவுக்குத் தூய தமிழை வளர்க்கும் ஒரு பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ள ஒரு பிரதேசத்தில் நடைபெறும் தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகள், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒவ்வொருவர் உள்ளங்கையும் புளகாங்கிதம் அடையச் செய்யும் ஒரு நிகழ்வாகும்.

கடந்த பல வருடங்களாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகளில் பங்குபற்றுவதுடன், அச்செயற்பாடுகளுடன் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களும் தமிழ் மொழி கற்பித்தலின் நுட்பங்கள் தொடர்பாகப் பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது இத்தகைய ஒரு வாய்ப்பை எமது மாகாண தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் பயன்படுத்துவ தனூடாகவே பாடசாலை மாணவர்களிடம் தமிழ் மொழி மேம்பாட்டை வளர்த்தெடுக்க முடியும்.

இன்று மாணவர்களின் மொழியாற்றலுக்கு ஆக்கத்திறன் விருத்திச் செயற்பாடுகள் மிகக் குறைவாகக் காணப்படுவதற்கு அவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைவாக இருப்பதும், நூலகத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்காமையுமே காரணமாகும். மாணவர்களின் மொழிஆற்றலை வளர்க்கும் பொழுது தான் அவர்களிடையே சிறந்த தொடர்பாடலும், ஆளுமை விருத்தியும் ஏற்படும். இன்று அதிபர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில், மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் மொழித்திறன் விருத்திக்கான செயல்திட்டங்களை வகுத்து ஆண்டு முழுவதும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மொழித்திறன் விருத்திப்போட்டிகளை வருடத்தில் ஒரு முறை நடத்துவதால் மட்டும் தமிழ் மொழித்திறன் மேம்பாட்டை வளர்க்க முடியாது என்பதைக் கவனத்தில் எடுத்து நாளாந்த பாடத்திட்ட அலகு வேலைத் திட்டங்களினூடாக மொழித்திறன் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவரிலும் தமிழ் மொழித்திறன் வளர்த்தெடுக்கப்படுவதே தமிழ் மொழி நாள் போட்டிகளின் முக்கிய இலக்காகும். அந்த வகையில் பாடசாலை மட்டத்திலும், வலயமட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் இதனைச் சிறப்பாக நடத்துவதற்கு உழைத்து வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக்கல்வி திணைக்கள அலுவலர்களையும் சிறந்த முறையில் ஊக்குவித்து வரும் மாகாணக்கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த மாகாணக்கல்விப் பணிப்பாளர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் நிர்வாக அலுவலர், பிரதம எழுது வினைஞர்கள் பணியாளர்கள், சாரதிகள் மற்றும் நிதிப்பிரிவின் பிரதம கணக்காளர், அலுவலர்கள் ஆகியோருக்கும் எனது நன்றி!

மாகாண நிலையில் தமிழ் மொழித்திறன் போட்டிகளும், நாட்டுக் கூத்துப் போட்டிகளும் மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும். என்ற வகையில் எம்மை ஊக்குவித்து வருவதுடன் வாழ்த்துச்செய்திகளையும் வழங்கிய கல்விச் செயலாளர் திரு. ஆர். தியாகலிங்கம் அவர்களுக்கும் எமது நன்றி!

மாகாண நிலையில் போட்டிகளை நடத்துவதில் அல்லும் பகலும் உழைத்து வரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. வீ. இராசையா அவர்களின் இடையறாத உந்துதல் எம்மை இயக்கிவருகின்றது அவருக்கும், ஆசிச் செய்திகளை வழங்கி எம்மைக் கௌரவித்து ஊக்குவிக்கும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. விசாலிங்கம் அவர்களுக்கும் ஓய்வு பெற்ற போதும் வேலைப்பளுக்களின் மத்தியில் எம்முடன் உழைத்துப் போட்டிகளைச் சிறப்புட நடத்த உதவும் அதிபர் திரு. வி. தங்கவேல் அவர்களுக்கும், 'பொப்லெப்' மேற்பார்வையாளர் திரு. ஏ. ஆர். மைக்கல் அவர்கட்கும் மற்றும் இப்போட்டிகளைச் சிறப்புற நடத்த உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது நன்றி!

நிறைவாக 'கவின்தமிழ்' இதழ் சிறப்புடன் வெளிவரத் தமது ஆக்கங்களை அனுப்பிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், முகப்பு ஓவியத்தை மிக அழகாக வரைந்த உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.மு.இராதாகிருஷ்ணன், அச்சுப்பிரதிகளை ஒப்புநோக்கி நிறைவாக்க உதவிய திரு.த.வேலவன் (சம்பத் வங்கி - திருக் கோணமலை) அவர்களுக்கும், சிறப்புற அச்சேற்றித் தந்த 'றெயின்போ மினிலாப்' நிறுவனத்தினர் அனைவருக்கும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நெஞ்சார்ந்த நன்றி என்றும் இருக்கும்

**ந. அனந்தராஜ்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)**
**இதழ் ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவின் தமிழை அலங்கரிப்பவை..................


| | | பக்கம். |
|---|---|---|
| 01. | வடபுலம் யாழ்குடாநாட்டுத் தீவுகளில் காணப்படும் இடப்பெயர் வரலாறு | - 01 |
| 02. | கோயில் மாடும் ஹொட்டல் பூனையும் | - 05 |
| 03. | உலக நூலகங்களின் வரலாறு | - 08 |
| 04. | மட்டக்களப்பு தமிழரின் மரணக்கிரிகை | - 12 |
| 05. | மீண்டும் அதே நிலை | - 18 |
| 06. | வன்னித் தமிழரின் தொல்குடி மரபுகள் | - 19 |
| 07. | மன்னார் மாந்தோட்ட மண்ணில் கூத்துக் கலை மரபுகள் | - 26 |
| 08. | காடழிப்பு | - 31 |
| 09. | ''லக்கல பல்லகம்'' | - 32 |
| 09. | தருமம் வெல்லும் | - 33 |
| 10. | கிழக்கிலங்கை கிராமியத்தில் பழமொழிகள் | - 34 |
| 11. | அணைத்து நலம் காத்திடுவோம் | - 37 |
| 12. | சமுதாய நலக் கல்வியில் முக்கியம் பெறும் சூழலியல் கற்கை | - 38 |
| 13. | பனி மூசை | - 42 |
| 14. | புரிந்து கொள்! இல்லையேல்........ மடிந்து போ! | - 43 |
| 15. | பயன்படாத கல்வி | - 44 |
| 16. | மாதோட்டப் புலவர்கள் மாண்பு | - 50 |
| 17. | தமிழ் எங்கள் உயிருக்கு நேர் | - 52 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நூற் பகுப்பாக்கம் - 54

19. புரிந்துணர்வுக் காலம் - 59

20. அறம் - 60

21. காற்று - கல் - 62

22. சங்கமிக்கும் நாள் வருமா - 63

23. காட்சி நிலைக்கல்வி - 64

24. திருகோணமலை இலக்கியப் பரப்பில் தடம் பதித்த சிற்றேடுகளும் சிறு சஞ்சிகைகளும் - 65

25. மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான துணைச் சாதனங்கள் - 77


## மாணவர் பக்கம்


01. நூல் நிலையம் தேவை (கடிதம்) - 87

02. பாடசாலை சென்ற என் முதல்நாள் அனுபவம் (கட்டுரை) - 89

03. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு (கட்டுரை) - 90

04. வியப்பூட்டும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சி (கட்டுரை) - 93

05. கண்ணீரில் கரைந்த பொழுதுகள் (கட்டுரை) - 96

06. அந்த ஒரு நாள் (கவிதை) - 100

07. நீலக்கடலின் ஓரத்தில் (கட்டுரை) - 102

வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களின் பெறுபேறுகள் - 106



வடக்குக் கிழக்கு மாகாண தமிழ்மொழித்திறன் போட்டிகளும், நாட்டுக்கூத்துப் போட்டிகளும், இருநாள் பெரு விழாக்களும் சிறப்புற நடைபெற தம் உடல் உழைப்பை மனமுவந்து அளித்து எம்முடன் தோள் கொடுத்து உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி.

என்றும் உங்களுடன்,<br>
தமிழ் மொழித்தினக்குழு<br>
வடக்கு கிழக்கு மாகாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க தமிழ்மொழி

-நெடுந்தீவு மகேஷ்-

வாழ்க எழில்நிறை வையக மெங்கணும்
வழங்கிடு நற்றமிழே.

வளர்கலை வீரம் விளங்கிட நல்லறம்
வளர்த்திடு தண்மொழியே.

மூழ்பகை தீய்ந்து முறைமுறை நற்பணி
முயன்றுழை செந்தமிழே.

நீள்கஇன் னன்பு நிலைக்க ஒளிதரு
நீதியின் தாய்மொழியே.

தூள்படத் தொல்லை தொடரிடர் துன்பம்
தொலைத்திட வாழ்மொழியே.

யாழ்வன்னி திருமலைமட்டு அம்பாறை
மலையகம் ஆள்மொழியே.

வாழ்கநின் தொன்மை வசந்தம் இளமைசீர்
வளந்தரு தேன்மொழியே.

சூழ்கடல் ஆர்க்கச் சுதந்திரம் பூக்க
சுடர்க தமிழ்மொழியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் கட்டுரை

# வடபுலம் யாழ்குடாநாட்டுத் தீவுகளில் காணப்படும் இடப்பெயர் வரலாறு

எஸ்.எம்.ஜோசெப் - நீர்கொழும்பு

முகவுரை :-

யாழ்குடாநாட்டின் வடக்கே குடாநாட்டுக்கு ஆரம் வைத்தாற்போல ஏழு தீவுகள் அமைந்துள்ளன. இவற்றுள் ஊர்காவற்துறையை மையமாகக்கொண்டியங்கும் லைடன் தீவு அல்லது வேலணைத்தீவே யாழ் நகருக்கு அண்மித்த பிரதான தீவாகும். மண்டைதீவு குருநகருக்குச் சமீபமாகவும் லைடன் தீவை சிறு பாலத்தினால் பிரித்தவாறு அதன் கிழக்கில் அமைந்துள்ள தீவாகும். முன்னர் காரைதீவு என அறியப்பட்ட காரைநகர் ஊர்காவற்துறை துறைமுகத்துக்கு மிக நெருக்கமாக அமைந்துள்ள தீவாகும். அதுதான் யாழ் நகருக்கு முதன் முதலில் தாம்போதி (புன்னாலைப்பாலம்) யால் இணைக்கப்பட்ட தீவாகும். ஒரு காலத்தில் காரைநகர் வட்டுக்கோட்டை, மானிப்பாய், சித்தங்கேணி, சங்கானை முதலாம் பட்டினங்கள் ஊடாக யாழ்நகர் செல்லும் பிரதான தரைவழிப் பயணப் பாதையாக விளங்கியது. பண்ணைப் பாலமும் வேலணைவழியாக புங்குடுதீவுக்குச் செல்லும் பாலமும், அமைக்கப்படுவதற்கு முன் தீவக மக்களின் பிரதான போக்குவரத்து காரைதீவு வழியாகவே நடைபெற்று வந்தது. அப்போது ஊர்காவற்துறைத் துறைமுகமே பிரதான இறங்குதுறையாக விளங்கியது. இன்று அனலைதீவு, எழுவைதீவு மக்கள் மாத்திரமே இத்துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றனர்.முன்னர் காரைநகர் (காரைதீவு), ஊர்காவற்துறை தேர்தற் தொகுதியுடனேயே இணைந்திருந்தது தற்பொழுது வட்டுக்கோட்டைத் தொகுதியுடன் சேர்ந்துள்ளது. ஆயினும் இருதீவுமக்களும் ஊர்காவற்துறை துறைமுகத்தை மிக நெருக்கமாகப் பிணைத்துள்ளனர். 1990களின் பின் வனப்பும், வளமும், கலகலப்பும் குன்றி துறைமுகம் களை இழந்து. சோபை இழந்து காட்சி தருகின்றது. காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, லைடன்தீவு, என்னும் ஆறு தீவுகளும் சமீபமான இடைவெளியில் அயலயலாக அமைந்துள்ளன. நெடுந்தீவே மிகத்தொலைவில் அமைந்துள்ள தீவாகும். இந்த ஏழுதீவு மக்களும் சங்கமாகும் மையமாக ஊர்காவற்றுறை விளங்கியது வைத்தியசாலைவசதி, பொலிஸ்நிலையம் , நீதிமன்றம், பொதுச்சந்தை, என்று பல்தரப்பட்ட தேவைகளுக்கும் ஊர்காவற்துறைக்கே வரவேண்டிய அவசியமிருந்தது. தீவுப்பகுதியின் உற்பத்திப்பொருட்களைச் சந்தைப் படுத்தவும், தீவகமக்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்லவும், ஏற்றி இறக்கும் படகுத்துறையாக விளங்கியது காவலூர் எனப்படும் ஊர்காவற்துறையே. இனி நாம் தீவகத்தின் வரலாற்றுப் பெருமைபேசும் இடப்பெயர்கள் சிலவற்றை நோக்குவோம்.

ஊர்காவற்துறை:

ஊரைக் காவல்செய்கின்ற துறைமுகம் அமைந்துள்ளதால் இவ்வாறு பெயர் ஏற்பட்டது என்பர். வேறுசிலர் " ஊரான்தோட்டம் " என வழக்கில் இருந்தபெயர் சிங்களத்தில் "ஊறாதொட்ட" என வந்தது என்பர். பன்றிகள் ஏற்றிய துறை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால்"ஊறாதொட்ட" எனப் பெயர் வந்தது என்று சொல்பவருமுளர். ஆயினும் யானைகள் இத்துறை முகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் உள. ஆனை இறவு வழியாக யானைகள் கொண்டுவரப்பட்டு பாய்க்கப்பல்களில் ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கலாம்.

தற்பொழுது இவ்விடம் KAYTS என ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டது என்று கூறுவாருமுளர் ஆயினும் போர்த்துக்கேய மொழிச் சொல்லிருந்து மருவி வந்த பெயர் என்றே ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

வடபுலத்தில் அமைந்துள்ள ஓர் இயற்கைத்துறைமுகம் இதுவாகும். இரு பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலங்களிலும் பாதுகாப்பான துறையாக இத்துறைமுகம் விளங்குவது விசேட அம்சமாகும் பன்னெடுங்காலமாக காவலூர் கடல் வணிகத்தில் தலைசிறந்து விளங்கிய துறைமுகமாகும். மூவேந்தர் காலத்துக்கு முற்பட்ட பழமைமிக்க துறைமுகம் இது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இத்துறைமுகம் செழிப்புற்று விளங்கியது 1950ம் ஆண்டுவரை இலங்கையில் கொழும்புக்கு அடுத்தபடியாக வருமானம் மிக்க துறைமுகமாக இது விளங்கியது. வட புலத்தில் எந்தத் துறைமுகமும் சுதந்திரத்தின் பின் புனரமைக்கப்படவில்லை. காங்கேசன்துறை துறைமுகத்தின் நிலையும் இதுதான். இது அரசின் புறக்கணிப்புக்கு எடுத்துக்காட்டு. பர்மா, சயாம், றங்கூன், சிங்கப்பூர், ஈறாக கடல்வணிகஞ் செய்த தீரமிகு கடலோடிகள் வாழ்ந்து புகழ்பெற்ற ஒரு துறைமுகம் இது. இறக்குமதி வர்த்தகத்தில் முன்னணியில் திகழ்ந்த துறைமுகம் என்றால் மிகையில்லை. பட்டுக்கோட்டைச் செட்டிமாரின் செல்வாக்கினால் காவலூரிலும் கப்பல் கட்டும் தொழில், படகுத்துறைத் தொழில் என்பன விருத்தி கண்டன. யுத்தகாலப் பஞ்சகாலத்தில் கூட காவலூர் அரிசிக் களஞ்சியமாகத் திகழ்ந்ததனால் தீவகமக்கள் பெரிதும் பாதிப்படையவில்லை என்று முன்னோர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளோம்.

கடற்கோட்டை கூறும் கதை:-

இலங்கையில் மிக அபூர்வமான காட்சிப்பொருளாய் கட்டட மீதியாய் ஒல்லாந்தர் ஆட்சியை நினைவுகூரச் செய்யும் அரும்பொருட் காட்சிப் பொருளாக விளங்குவது ஊர்காவற்துறை துறைமுக கடற்பரப்பில் அமைந்திருக்கும் கடற்கோட்டையாகும். காரைநகர் கடற்படைத் தளத்தை அண்மித்த கடற்பகுதியில் இது அமைந்துள்ளது. சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் இக்கோட்டை வெளிநாட்டு உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த இடமாகத் திகழ்ந்தது. ஊர்காவற்துறை இறங்குதுறை வழியாக நயினாதீவு பௌத்த தலத்துக்கு யாத்திரை மேற்கொண்டு வந்த தென் இலங்கைச் சிங்களமக்களைக் கவர்ந்த இடமாகவும் விளங்கியதை நினைவு கூரமுடிகிறது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் ஒல்லாந்தர் கட்டிய கோட்டைதான் இது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்." ஹமன் ஹீல்" Hammen Heil எனப் பெயர் விளங்கும் இக் கோட்டையைக் கட்டியவர்கள் யார்? என்ற சர்ச்சையும் கிளப்பப்படுவதுண்டு. ஒல்லாந்தர் தான் இதைக்கட்டினார்களா? இல்லை போர்த்துக்கேயர்தான் முதலில் இதைக்கட்டினர் என்பதற்கு ஆதாரங்கள் உள. யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றவும், அதை அரண் செய்யவும், பாதுகாக்கவும் இத்துறைமுகம் மிகப்பொருத்தமானது எனக்கண்ட போர்த்துக்கேயர் கடலில் ஒரு கோட்டையை அமைக்கத் தீர்மானித்தனர். அதற்கமைய அந்தோனியோ அமிறால் டெமென்சிஸ் என்ற போர்த்துக் கேயத் தளபதியினால் முதன் முதலில் இக் கடற்கோட்டை கட்டப்பட்டது என்பதே சரியான வரலாறாகும். 1658ல் ஒல்லாந்தர் இக்கோட்டையைக் கைப்பற்றியபின் அதைத் திருத்திப் புதுப்பித்தனர். ஒல்லாந்தர் அதைப் புனர்நிர்மாணஞ் செய்வதற்காக டொன் ஸ்ரீவின் பூதத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியாரைப் பொறுப்பாக நியமித்தார்கள். அதன்காரணமாகவே இக்கோட்டை பூதத்தம்பி கட்டிய கோட்டை எனக் கூறப்படுவது வழக்கிலிருந்தது.

## குரங்குக் கோட்டை (Fort of the Ape)

பெயரைக்கேட்டால் நகைப்பேவரும். ஆனால் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தை நினைவூட்டும் வரலாற்று மீதியாக விளங்கும் இக்கோட்டை ஊர்காவற்துறையில் அமைந்துள்ளது. பழங்கோட்டை என பண்டுதொட்டு அழைக்கப்பட்டுவரும் இக்கோட்டை ஊர்காவற்துறை மேற்கில் பருத்தியடைப்பு என்னுமிடத்தை அண்மித்த ஊருண்டி என்னும் பகுதியில் அமைந்துள்ளது. அதனால் இது ஊருண்டிக்கோட்டை எனவும் பெயர்பெறும். செம்மண் கலந்த செழிப்பான பகுதியாய் ஒரு காலத்தில் இப்பிரதேசம் விளங்கிற்று என்றும் அதன்காரணமாக மக்கள் இப்பகுதியில் குடியிருப்புக்களை அமைத்திருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.. எனவே ஊர் + உண்டி ஊருண்டி எனப் பெயர் வரலாயிற்று என்பர். பாதுகாப்புக் காரணத்துக்காக போர்த்துக்கேயர் இங்கு ஒரு கோட்டையை அமைத்தனர். அக்கோட்டை "Fort Eyrie" ஈரிக்கோட்டை என அழைக்கப்பட்டது. கடற்கோட்டையை அமைக்கு முன்னேரே போர்த்துக்கேயர் ஊருண்டிக் கோட்டையை அமைத்துவிட்டனர் எனத் தெரியவருகிறது. பிரபுக்கள் வாழும் மாளிகையின் வடிவமைப்பை (Castle) இது கொண்டிருந்தது என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. போர்த்துக்கேய பிரபுக்களின் வழிபாட்டறையும் அக்கோட்டையில் இருந்ததற்குச் சான்றுகள் உள. கைதிகளைச் சிறைப்பிடித்து இக்கோட்டையில் அடைத்துவைத்துச் சித்திரவதை செய்தார்கள் என்ற காரணத்தால் இக்கோட்டை குரங்குக் கோட்டை எனவும் பெயர்பெற்றது என்பர்.

## நயினாதீவு

பாடல்பெற்ற திருத்தலம் என இந்துக்கள் போற்றும் நாகபூஷணி அம்மன் ஆலயம் அமந்திருக்கும் புகழ் பெற்ற தீவு இதுவாகும். ஆனிமாதத்தில் இங்கு நடைபெறும் ஆலய உற்சவம் மிகப் பிரபலமானது. தீவகமக்கள் மாத்திரமல்ல குடாநாட்டு மக்களும் வன்னிப் பெருநில மக்களும் திரண்டு வந்து கோலாகலமாக வழிபடும் திருத்தலம். இது மணிமேகலை என்னும் காப்பியத்தில் இடம் பிடித்த இத்தீவு பௌத்தமத முக்கியத்துவம் பெற்ற யாத்திரைத் தலமாகவும் விளங்குவது பெருமைக்குரியதே. புத்தர் பெருமான் இத்தீவில் கால்பதித்தார். எனப் பௌத்தர்கள் கொண்டாடுகிறார்கள். அதனால்தான் இது நாகதீபம் என சிங்களத்தில் அழைக்கப்படுகிறது. என்பர் தென் இலங்கையிலிருந்து ஆண்டுமுழுவதும் பௌத்த யாத்திரீகர்கள் இங்கு வந்து போவது வழக்கம். சில ஆண்டுகள் யுத்த சூழ்நிலை காரணமாக இது தடைப்பட்டிருந்தது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் தற்போது சிங்கள யாத்திரீகர்கள் பெருமளவில் வருகைதரத்தொடங்கியுள்ளனர், பெரும்பாலும் குறிகாட்டுவான் இறங்குதுறை வழியாகவே பயணம் மேற்கொள்ளப்படுகிறது

## நெடுந்தீவு (Delbt)

சப்த தீவுகளில் தொலைவில் அமைந்துள்ள தீவுதான் நெடுந்தீவு. யாழ்ப்பாணத்திலிருந்து 20மைல் தொலைவில் உள்ளது. யாழ்நகரிலிருந்து பண்ணைப்பாலம் ஊடாக வேலணையை அடைந்து, புங்குடுதீவுப் பாலம் வழியாக குறிகாட்டுவான் இறங்குதுறையை அடைந்து கடல் வழியாக 5மைல் பயணம் செய்யவேண்டும். முன்னர் ஊர்காவற்துறை இறங்குதுறையே நெடுந்தீவுப் பயணத்துக்குப் பிரதான மார்க்கமாக விளங்கியது. ஊர்கவற்துறையிலிருந்து சுமார் 10மைல் தொலைவுக்கு கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 12,000 மக்களைக் கொண்ட தீவு இது. தொலைவில் அமைந்த காரணத்தால் நெடுந்தீவு என்ற பெயர் வந்தது என்பர். 5மைல் நீளமும் 4மைல் அகலமும் கொண்ட பெரிய தீவாகையால் இப்பெயர் வந்திருக்கலாம். ஒல்லாந்தர் இத்தீவுக்கு Delft எனப் பெயர் சூட்டினர். பசுத்தீவு என்றும் இது அழைக்கப்பட்டது. ஏராளமான பசுக்கள் இங்கு காணப்படுவதால் இப்பெயர் வந்தது என்பர். ஆனால் மரபுவழியான பாற்பண்ணைகளோ, ஆநிரைகளை மேய்ப்பதோ இங்கு இல்லை தீவின் மத்தியில் நீண்ட வெளி உண்டு. வெல்ல வெளி என இது அழைக்கப்படும் இயற்கையான மேய்ச்சல் தரை இங்குகாணப்படுகின்றது. முருகைக் கற்கலால் அமைந்த பட்டிகளில் கன்றுகள் தனியாகவும் பசுக்கள் தனியாகவும் அடைக்கப்படும் தீவின் மத்தியில் நீண்ட பெரிய குளங்கள் உண்டு.

மோருடன் வரகுசோறு நெடுந்தீவின் சிறப்பான உணவாகும். குரக்கன், வரகு, சாமை, பயறு, உழுந்து, என்னும் சிறுதானியங்கள் இங்கு பயிராகின்றன. நெடுந்தீவு குதிரைகளுக்குப் பிரபல்யமான தீவு. ஒல்லாந்தரால் கொண்டுவரப்பட்ட குதிரைகள் பல்கிப்பெருகியுள்ளன. மட்டக்குதிரைகள் என இவை அழைக்கப்படும். சிறந்த குதிரை பிடிகாரர் இங்குள்ளனர். மாடுகளையும் கயிறு எறிந்துதான் பிடிப்பது வழக்கம். கிழக்கூர், நடுக்குறிச்சி மேற்கூர் என மூன்று பிரிவுகளை உள்ளடக்கிய தீவு இது. பனை இங்குவாழ் மக்களின் சீவனோபாயத்துக்கு உதவும் கற்பகவிருட்சமாகும்.

உலகம் போற்றும் தமிழ்த்தூது தனி நாயக அடிகளார் அவர்களைத் தந்த ஊர் நெடுந்தீவாகும். பாவலரும் நாவலரும் மலிந்த இத்தீவில் பண்டிதர் ஆசிநாதன், கவிமுத்து எழுத்தாளருமான K.T ஞானபிரகாசம், "அமுது" எனப்படும் கவிஞர் அடைக்கலமுத்து போன்ற தீந்தமிழ்ப் பாவலர்களையும், எழுத்தாளர்களையும் தமிழ் உலகுக்குத் தந்த பெருமைக்குரிய தீவு இதுவாகும். யாழ்நகரிலும், யாழ்குடா நாட்டிலும் உள்ள குடிப்பரம்பலை ஆராய்ந்தால் தீவக மண்வாசனை வீசக்காணலாம். முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா உட்பட வன்னிப்பிரதேசத்திலும் நெடுந்தீவு முதல் சப்த தீவு மக்கள் செறிந்து காணப்படுவது கண்கூடு. இலங்கையின் முதல் தமிழ் ஆயரையும் யாழ்மறை மாவட்ட முதல் தமிழ் ஆயரையும் தந்த ஊர் கரம்பொன். ஆகும். திருமலை மட்டுநகர் முதல் தமிழ் ஆயரையும் இன்று உள்ள ஆயரையும் நல்கிய ஊரும் கரம்பொன் ஊரே. காவலூருக்கருகில் அமைந்த ஊர்தான் கரம்பொன் இன்றைய யாழ் ஆயர், முன்நாள் யாழ் துணைஆயர் L.R.அன்ரனி ஆண்டகை அவர்களும் காவலூரும் கரம்பொனும் தந்த மைந்தர்களே. இன்றைய மன்னார் மறைமாவட்ட ஆயரும் தீவகந்தந்த திருமகனே அவர் நெடுந்தீவு பெற்ற அரும் புதல்வனாவர் சாட்டி, சின்னமடு முதலிய தேவதாயாரின் யாத்திரைத் தலங்கள் லைடன் தீவிலே உள்ளன. இவ்வாறு கிறிஸ்தவமும் இந்துசமயமும் பரஸ்பரம் நல்லிணக்கத்துடன் செழிப்புற்று தமிழ் மக்கள் மதபேதமின்றி வாழும் தீவகம் தமிழ் சமுதாயத்துக்குகோர் கலங்கரை விளக்கம் எனலாம்.

## சிவபூமி

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையின் இயக்கர், நாகர் என்னும் இரு பழங்குடியினர் வாழ்ந்து வந்தனர். சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் முதல் வட இலங்கையில் தமிழர்கள் முறையாக தமிழ் அரசை அமைத்து ஆட்சிபுரிந்து வந்தனர். இந்துக்களால் வழிபடப்படும் ஈஸ்வரனுக்கும் வடக்கில் கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரம் மேற்கில் சிலாபத்தில் முன்னேஸ்வரம், கிழக்கில் திருக்கோணமலையில் திருக்கோணேஸ்வரம் தெற்கில் தேவேந்திர முனையில் பல சிவாலயங்கள் இருந்தன என போல்.ஈ.பீரிஸ் (Paul E. Peries) போன்ற சிங்கள வரலாற்றாசிரியர்களே எழுதியுள்ளனர். எஸ். எம். கார்மேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் மாடும் ஹொட்டல் பூனையும்

மணிப்புலவர்
மருதூர் .ஏ. மஜீத்

அவனது
விடா முயற்சியின்
வெற்றிச் சின்னமே
ஐந்து நட்சத்திர
''எவகிறீன்'' ஹொட்டல்

ஹொட்டலைப் போல
அங்கு வளர்ந்த
அந்தப் பூனையும்
கொழு கொழுவென்று
பசுமையானது

காலம் பகைக்க
மாற்றான் கைக்கு
எவகிறீன் மாறிய போது
வறியவனாக
வெளியே போனான்

போகும் போது
வளர்த்த பூனையை
அழைத்துச் செல்ல
நினைத்து நெருங்க
சொகுசு வாழ்க்கையை
நினைத்துப் பூனை
ஓடி ஒழிந்தது

முருகன் கோயில்
அருகே படுக்கும்
அந்த மாடு
கேயிலுக்குரியது

விடா முயற்சி
எதுவுமின்றி
மாட்டின் சீவியம்
சீராய்ச் சென்றது

வேலை இன்றி
தண்டச் சோறு
தின்று திரிவோர்
கோயில் மாடென
குறி சுடப்பட்டனர்

மாடு இதனைக்
கேட்க நேர்ந்தால்
வடக்கு தெற்காய்
தலையை அசைத்து
ஆமா சாமி போட்டு நிற்கும்
எதிர்த்து நின்றால்
ஏதும் ஆகா
என்று அதற்கு
நன்கு தெரியும்

உலக அரங்கில்
அரசியல் வானில்
கோயில் மாடாய்
ஹொட்டல் பூனையாய்
இருப்பவன் வாழ்வில்
சங்கடமுண்டா?
சத்தியம் உண்டா?
எதுவுமில்லை
என்பதே உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகநூலகங்களின் வரலாறு

- ஒரு பார்வை

# History of World Libraries - An outline

**அறிமுகம்:-**

நூலகங்களின் வரலாறு மிகவும் அனாதியானது. இதைப்பற்றி அறிய நாம் மிகவும் ஆரம்ப காலத்திற்குச் செல்ல வேண்டும். இத்தகைய வரலாற்று நோக்கில் நாம் முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் சில உள்ளன. அதாவது நூலகம் பற்றிய இன்றைய அதே கருத்து நிலையுடன் (Ideology) ஆரம்பகால நூலகங்கள் இருக்கவில்லை. அத்துடன் நூலகங்கள் பற்றிய அனுபவமும் அவற்றின் வரலாறும் உலகின் ஒவ்வொரு பகுதிகளிலும் மாறுபட்டே அமைந்திருந்தன.

இன்னொரு வகையில் நூலகங்களின் ஆரம்பகால வரலாற்றை விளங்கிக்கொள்வதென்பது மனிதனது ஆரம்பகால எழுத்து முறைமைகளையும் எழுது பொருட்களையும் விளங்கிக் கொள்வதாகவும் அமைகின்றது. மனித வரலாற்றை ஆராயும் போது பல்வேறு வகையான எழுத்துப் பதிவுகள் இருந்தமையை அறிய முடிகின்றது. இதற்குப் பல வகையான எழுது பொருட்கள் பயன்பட்டிருக்கின்றன. முக்கியமாகக் கல், களிமண்தகடுகள், தோல், மரப்பட்டை, புல் ஓலை முதலாகப் பல எழுதுபொருட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆரம்ப கால எழுத்து முறை படஉருவில் (Pictographic) இருந்து. காலவோட்டத்திலேயே வரிவடிவ எழுத்துக்களாக வளர்ச்சியடைந்தது. எழுதும் கலையின் ஆரம்பநிலையினை எகிப்து நாட்டினர் கண்டறிந்தனர். கிரேக்கர்கள் உயிரெழுத்துக்களைப் பயன்படுத்தினர். உரோமானியர்கள் அவற்றைச் சீர் செய்து உலகின் அனைத்துப் பாகங்களிலும் பரப்பினர்.

அச்சுமுறைமை தோன்றுவதற்கு முன்னர் எழுதுமுறைமையில் (Writing Method) ஒரே சீரான தன்மை காணப்படவில்லை. எழுதுவதற்காகப் பல்வேறு வகையான ஆவணங்கள் பயன்பட்டமையால் பற்பல விதமான ஆவணங்கள் (Documents) உருவாகின. இவற்றைப் பாதுகாப்பதற்கெனப் பல்வேறு வகையான நூலகங்கள் அல்லது ஆவணக் காப்பகங்கள் தோற்றம் பெற்றன.


திருமதி. மைதிலி விசாகரூபன்
**B.A (Hons),B.LISe: M.L.I.Se; C.L.I.Se**
விரிவுரையாளர் - இலங்கை நூலகச் சங்கம்,
பகுதி நேர விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நூலகங்களின் வரலாற்றைப் பின்வரும் அடிப்படைகளில் தெரிந்து கொள்ளலாம். அவை வருமாறு.

(1) **ஆரம்பகால நூலகங்கள்**
- ➢ பிரிக்யார்ட் நூலகங்கள்
- ➢ கிரேக்க நூலகங்கள்
- ➢ அலெக்சாந்திரிய நூலகம்
- ➢ உரோம நூலகங்கள்

(2) **இடைக்கால நூலகங்கள்**
- ➢ மடலாய நூலகங்கள்
- ➢ இஸ்லாமிய நூலகங்கள்
- ➢ சீன நூலகங்கள்




சேர்ந்து ஒயல்பட்டு வாசிப்பை வளர்த்தெடுப்போம் நிறைவாய் உலகில் வாழ்ந்திடுவோம்.

(3) **ஐரோப்பிய நாடுகளில் நூலக வளர்ச்சி**
- ➢ இங்கிலாந்தின் நூலகங்கள்
- ➢ இங்கிலாந்து நூலகச் சட்டங்கள்
- ➢ அமெரிக்க நூலக வளர்ச்சி
- ➢ காங்கிரஸ் பொதுநூலகம்

## 1. ஆரம்பகால நூலகங்கள்

### ➢ 'பிரிக்யார்ட்' நூலகங்கள்

'பிரிக்யார்ட்' நூலகங்கள் (Brickyard Libraries) எனப்படும் நூலகங்கள் பழைய களிமண் அச்சுக்களை (Ancient collection of clay tablets) தொகுத்து வைத்த இடங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. இந்தக் களிமண் படிவங்கள் ஆரம்பகாலங்களில் பிரமிட்டுக்களில் (Pyramids) காணப்பட்டன. இவை நிலையான அமைப்புடையனவாக இருந்தன (Fixed Structure) ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற முடியாதவையாகவும் இருந்தன. இவற்றைப் பதியப்பட்ட ஆவணங்களின் தொகுப்பு என்றவகையில் நூலகத்தின் ஆரம்பகால நிலையாகக் கருதுவர். இத்தன்மையான நூலகங்களைப் பாறை நூலகங்கள் (Rock Libraries) எனக் குறிப்பிடுவர்.

### ➢ கிரேக்க நூலகங்கள்

பண்டைய கிரேக்கத்து ஆவணங்களைப் பொறுத்தவரை பண்பாடு தொடர்பான விபரங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டாலும் நூலகங்களின் அமைப்புப் பற்றிய நேரடியான தகவல்கள் அதிகமாகக் காணப்படவில்லை. கிரேக்க நூலகங்களின் எச்சங்களைப்பற்றி நேரடியாகவோ அல்லது கிரேக்க இலக்கியங்கள் மூலமாகவோ தகவல்களைப் பெற முடியவில்லை. சாக்ரட்டீஸ் காலத்தைப் பொறுத்தவரை ஆரம்பகாலத் தொகுப்புக்கள் தனியாரிடம் இருந்தன. படிக்கும் பழக்கமும் குறைவாகவே இருந்திருக்கின்றது. பிளேட்டோவிலிருந்து அரிஸ்டாட்டிலுக்கு மாறும் அடுத்த தலைமுறையில் எதென்ஸ் நகரில் நூலகங்கள் வளர்ந்ததுடன் நூல்களும் அதிகமாகக் கிடைத்தன இக்காலத்தில் அலெக்சந்திரியாவில் மிக முக்கியமான நூலகம் தோற்றுவிக்கப்பட்டது பண்டைய கிரேக்கநாட்டில் நூலகங்களுக்கும் நூலகர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது என்பதற்குக் கிரேக்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ அலெக்ஸ்சாந்திரிய நூலகம்

பழமையான எகிப்தில் (Egypt) காணப்பட்ட சிறிய நவீனவகைசார்ந்த நூலகம் என்ற நிலையில் முதலாம் தொலமியால் நிறுவப்பட்ட அலெக்சாந்திரிய நூலகம் கூறப்படுகின்றது. இது கி.மு. 4ஆம் நூற்றாண்டளவில் நிறுவப்பட்டதாக அறியப்படுகின்றது.

இந்நூலகம் கிரேக்க நூலகங்களில் மிகப் பிரசித்தி பெற்ற நூலகமாகத் திகழ்ந்தது. அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த தத்துவஞானிகளால் எழுதப்பட்ட நூல்களின் சேர்க்கையைக் கொண்டு இந்நூலகம் உருவாக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. கிரேக்க இலக்கியங்களோடு பிறமொழி இலக்கியங்களும் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. நூலகத்தில் இல்லாத நூல்களைப் பிரதிபண்ணிப் பெறும் முறையும் இருந்திருக்கின்றது. நூல்களை எழுதுவோர் இங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததாகவும் அறிய முடிகின்றது.

கிரேக்க இலக்கியங்களைக் கொண்ட பூரணமான நூல் விபரப்பட்டியலொன்று விடய நிபுணர்களால் தொகுக்கப்பட்டிருந்ததாகவும் இந்நூலகம் கி.பி 391 வரை நிலைத்திருந்ததாகவும், பின்னர் அரேபியரால் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

➢ உரோம நூலகங்கள்

கி.மு 146 இல் ரோம் (Rome) மற்றும் இத்தாலி (Italy) ஆகிய நாடுகள் உருவாகின. பண்டைய ரோம் நாட்டில் எழுத்து முறையின் ஆரம்பத்தைப் பற்றிய தெளிவான விபரங்கள் இல்லை. அந்நாட்டு வரலாற்றின் முதல் ஐந்நூறு ஆண்டுகளைப் பார்ப்போமேயானால் ரோமில் நூலகங்கள் இல்லை என்பதும் அதன் காரணமாக கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலத்தீன் இலக்கியம் இல்லையென்பதும் ஆராய்ச்சியாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாக உள்ளது.

கிரேக்க நாட்டுடன் ஒப்பீடு செய்கையில் அங்கு நூலகங்கள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளமை போல ரோமராச்சியத்தில் நூலகங்கள் இருந்தமைக்கான சான்றுகள் இல்லை. அரச ஆதரவு இன்மை காரணமாகவும் நூலகங்கள் பெரிதும் வளர்ச்சியடையவில்லை பெரும்பாலும் தனிப்பட்டோரிடமே நூலகங்கள் இருந்தன.

உரோம நாட்டில் வியாபாரமும் கைத்தொழிலும் வளர்ச்சி பெற்ற பின்னர் நகரங்களில் வாழ்ந்த செல்வந்தர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியோர் தமது பாவனைக்கென வீடுகளில் நூல்களைச் சேகரித்து வைக்கத் தொடங்கினர். இச் செயல் அவர்களின் சமூக அந்தஸ்த்தை உயர்த்திக்காட்டுவதற்கான செயற்பாடாகவே அமைந்திருந்தது. இவ்வாறான நோக்கில் பல தனிப்பட்ட நூலகங்கள் உருவாகலாயின.

## 2. இடைக்கால நூலகங்கள்

ஆரம்பகாலத்தை அடுத்த காலப்பகுதியான இடைக்காலப் பகுதியிலும் (Mediaeval Period) நூலகங்கள் பெரும்பாலும் தனியாருடைய அல்லது சிறியமுயற்சிகள் மூலமாகவே உருவாகியிருந்தன. இத்தன்மையுடன் இன்னொரு வகையிலும் நூலகங்கள் உருவாகின. அவற்றுள் முக்கியமானவை மடாலய நூலகங்களாகும்.

➢ மடாலய நூலகங்கள்

தேவாலயங்கள் மற்றும் மடங்கள் என்பவற்றில் இணைந்து பல நூலகங்கள் உருவாகின இவை மடாலய நூலகங்கள் (Monastic Libraries) எனப்பட்டன. ஏறத்தால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 540 ஆம் நூற்றாண்டுகளிலிருந்து இத்தன்மை சார்ந்த நூலகங்கள் உருவாகின. அனேகமாக எல்லா மடாலயங்களும் நூலகங்களை உள்ளடக்கியனவாகவே இருந்தன.

மடாலய நூலகங்களுடன் இணைந்ததாக பிரதிபண்ணல் வேலையைச் செய்வதற்கென எழுது கூடங்களும் உருவாக்கப்பட்டன. நூல்களைச் சமய ஆசாரத்துடன் பிரதிசெய்ய வேண்டியது மதகுருமாருடைய கடமையாகக் கருதப்பட்டது. பிரதிசெய்தல் காரணமாக இக்காலப்பகுதியில் நூல்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இந்நூல்கள் இருதொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு தொகுதிநூல் பொதுமக்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டது. மறுபகுதி நூல்கள் குறிப்பிட்ட கட்டுபாட்டில் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்பட்டன.

பல்கலைக்கழகங்களின் தோற்றத்துடன் மடாலய நூலகங்களின் வளர்ச்சி குன்றத் தொடங்கியது. 8வது ஹென்றி மன்னன் மடாலய நூல்களைச் சேதப்படுத்தியதாகவும் இதனால் செல்வந்தர்கள் இவற்றை வாங்கிச் சொந்த நூலகங்களை உருவாக்கியதாகவும் அறிய முடிகின்றது.

➢ **இஸ்லாமிய நூலகங்கள்**

இடைக்கால இஸ்லாமிய நூலகங்களுள் பின்வரும் நான்கு வகைகள் காணப்பட்டன

i) அரச நூலகங்கள் (Royal Libraries)
ii) மசூதி நூலகங்கள் (Mosque Libraries)
iii) நிறுவனம் சார்ந்த நூலகங்கள் (Institutional Libraries)
iv) தனியார் நூலகங்கள் (Private Libraries)

மசூதி நூலகங்களில் மிக முக்கிய நூலகமாக ஸ்பெயின் நாட்டின் ரொலெடோ (Toledo) விலிருந்த நூலகம் குறிப்பிடப்பட்டது. இந்த அரச நூலகங்களை பெரும்பாலும் வைப்பு நூலகங்களாகவே (Depository Libraries) இருந்தன.

➢ **சீன நூலகங்கள்**

சீன நூலகங்களுடைய வளர்ச்சி பற்றிய தெளிவான வரையறைகள் குறைவாகவே உள்ளன.



**கற்றதை மீள வலியுறுத்த மீண்டும் கற்பது போல் ஒரு மகிழ்ச்சிதான்**

கி.பி 11ம் நூற்றாண்டில் சூ (chou) வம்சத்தவர்களின் சாம்ராஜ்ய காலத்தில் மிகப் பிரசித்தி பெற்ற ராஜாங்கநூலகம் (Imperial Library) இருந்ததாக அறியப்படுகின்றது. சூ (chou) வம்சத்தவரது ஆட்சி முடிவின் பின்னர் அவர்களைத் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களால் நூல்கள் மீதான ஆர்வம் புதுப்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் ஷியாவோ ஹோ (Hsiao Ho) என்பவரால் இரண்டு சுவடிக் காப்பகங்கள் (Archives) கட்டப்பட்டன என்று வரலாறு குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத்திலே சீன பௌத்த மடங்களில் நூலகங்கள் இருந்திருக்கின்றன. (Buddhist monasteries) 1729ஆம் ஆண்டில் சங் (sung) மன்னன் தை சூ (Tai Tsu)என்பவர் திரிபீடகத்தை (Tripitika) அச்சில் பதிப்பித்தமையுடன் சீனவரலாற்றில் ஒரு புதிய திருப்பம் உருவாகியது. 1127 ஆம் நூற்றாண்டளவில் பள்ளி நூலகங்கள் (School Library) வளர ஆரம்பித்தன சீனா முழுவதும் பெருமளவில் அச்சுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது சீனநூலக வளர்ச்சியின் பிரதான அம்சமாகச் சுட்டிக்காட்டப்படத்தக்கது

### 3. ஐரோப்பிய நாடுகளில் நூலக வளர்ச்சி

➤ **இங்கிலாந்தின் நூலகங்கள்**

14 மற்றும் 15ஆம் நூற்றாண்டுகளில் பல்கலைக்கழகங்களின் தோற்றத்தையடுத்து மடங்களின் புகழ் மங்க ஆரம்பித்தது

சென் மேரி தேவாலயத்தில் (St.Mary Church) நூலகத்தை மையமாகக் கொண்டு ஒக்ஸ்போட் (oxford ) பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு அடிக்கடி தேவைப்படும். நூல்கள் வாங்குகளில் (Benches) சங்கிலி போட்டு கட்டிவைக்கப்பட்டிருந்தன. மற்றவை பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டன

பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றிக் கல்லூரிகளிலும் நூலகங்கள் இருந்தன. பல்கலைக்கழகக் கல்லூரி நூலகங்கள் இதற்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

இங்கிலாந்து மன்னர்களும் சில தனியார்களும்கூட நூலகங்களை அமைத்தனர் வாசிக்கும் பழக்கம் பெருகப் பெருகத் தனியாரின் சேகரிப்புகளும் அதிகரித்தன. அச்சின் பயன்பாடும் அதிகரிக்கத் தொடங்கியது இதனைத் தொடர்ந்து அச்சில் வெளிவரும் நூல்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாயிற்று.

ஒக்ஸ்போர்ட்டில் 1602 இல் மிகப் புகழ் பெற்ற போட்லியன் (Bodleian Library ) ஆரம்பிக்கப்பட்டது. பிரிட்டனைப் பொறுத்தவரையில் தேசிய அளவிலான நிறுவனம் (National institution ) என்ற நிலையுடன் கூடிய ஒரு நூலகத்தை உருவாக்க இது முதல் முயற்சியாக அமைந்தது. இம் முயற்சியின் தொடர்ச்சியே 1759 இல் பிரிட்டிஷ் அருங்காட்சியகம் (British Museum) உருவாகவும் ஏதுவாக அமைந்தது

➤ **நூலகச் சட்டங்கள்**

நூலகங்களுக்கான சட்டங்கள் இயற்றப்படத் தொடங்கியமை நூலக வரலாற்றின் பிரதான மைல்கல் எனலாம். நூலகச் சட்டமியற்றலின் முன்னோடிகளாக இங்கிலாந்து நாட்டவரே குறிப்பிடப்படுகின்றனர்.

பென்னி சட்டம் (Penney Act) எனப்படும் முதலாவது பொதுநூலகச்சட்டம் 1850 இல் இங்கிலாந்தில் நடைமுறைக்கு வந்தது 1853 அளவில் இது ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது நூலக வளர்ச்சி வரலாற்றின் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

பென்னி சட்டத்தின் இரண்டாவது திருத்தம் 1857 ஆம் ஆண்டில் (West minister) மேற்கொள்ளப்பட்டது. இத்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு வெஸ்மினிஸ்ரர் என்னும் இடத்தில் முதலாவது பொதுநூலகம் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1877ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்திற்கான (Library Association of United Kingdom) உருவாக்கப்பட்டது 1964 ஆம் ஆண்டில் பொது நூலகங்கள் மற்றும் அருங்காட்சியாகச் சட்டம் (Public libraries and Museum Act) நடைமுறைக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தேசிய நூலகச் சட்டத்தின் பிரகாரம் "பிரிட்டிஷ் தேசிய நூலகம்" (British National Library) உருவாக்கப்பட்டது. இவை இங்கிலாந்து நூலக வளர்ச்சியில் மிகப்பாரிய வீச்சுக்கள் எனலாம்.

### ➢ அமெரிக்க நூலக வளர்ச்சி

அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு அரைநூற்றாண்டிற்கு முன்னர் கூட்டன்பேர்க் (Gutenberg) அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தார் ஸ்பெயின் நாட்டினர் அமெரிக்காவுக்குத் தம்முடன் அச்சியந்திரத்தினைக் கொணர்ந்தனர்

1725 ஆம் ஆண்டின் பின்னர் பெரும்பாலான அச்சகத்தினர் செய்தித்தாள் பஞ்சாங்கம் அரசவெளியீடுகள் போன்றவற்றை வெளியீடு செய்தனர். குடியேற்ற மக்கள் நூல்களிலும் அவற்றைக் கற்பதிலும் ஆர்வம் செலுத்திய தோடன்றிக் கல்லூரி நூலகங்கள் தனியார் நூலகங்கள் மற்றும் அரைப் பொதுநூலகம் (Semi-public Library) போன்ற பலவகையான நூலகங்களை அமைப்பதில் ஆர்வம் காட்டினர்.

அமெரிக்காவின் ஆரம்பகால நூலகங்கள் அரைப்பொது நூலகங்களாகவே (Semi-public library) இருந்தன. பின்னர் 18ஆம் நூற்றண்டில் உறுப்பினர் கட்டண அடிப்படையிலான சந்தா நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பொது மக்கள் பயன்பாட்டிற்கு நூல்கள் கிடைக்க இம்முறை சிறந்த முறையாகப் பயன்பட்டது.

குடியேற்ற ஆட்சியின் பிற்பகுதியில் (Late colonial period) வாடகை அல்லது சுழற்சிமுறை நூலகங்கள் (Rental or circulating libraries) வளர ஆரம்பித்தன அமெரிக்க நூலகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன

**காங்கிரஸ் பொது நூலகம்:-**

அமெரிக்க நூலகவரலாற்றில் காங்கிரஸ் பொது நூலகம் (Library of congress) உருவாக்கப்பட்டமை பிரதான விடயமாகும். 1815 இல் வைப்புச் சட்டம் (Deposit law)எனும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு அமெரிக்க வெளியீடுகளின் இரு பிரதியைச் சட்டரீதியாகப் பெற்று ஒரு பிரதியைக் காங்கிரஸ் நூலகத்திலும் மறு பிரதியை ஸ்மித்ஸோனியன் (Smithsonian) நிறுவன நூலகத்திலும் வைப்புச் செய்தனர்.

அமெரிக்காவில் பொது நூலகக் கூட்டமைப்பு (American Library Association ) 1870 இல் உருவாக்கப்பட்ட நிகழ்வானது நூலக வளர்ச்சியில் பாரிய உந்து சக்தியெனலாம். 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நூலகங்களில் நல்ல வளர்ச்சி நிலை காணப்பட்டது. இது இந்நூற்றாண்டின் இறுதியில் ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்தது.

முதலாவது உலகப்போரினால் நூலக' வளர்ச்சியில் வேகம் தளர்ந்து காணப்பட்டது 1920 களில் அமெரிக்காவிலுள்ள பல சிறிய நகரங்கள் தமக்கென நூலகங்களைத் தொடங்கியதுடன் தம் பணிகளைக் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தின இதனால் கிராமப்புறங்களிலும் நூலக வளர்ச்சி ஏற்படலாயிற்று.

**முடிவுரை**

மேற்கண்ட அனைத்தும் உலகப் பொதுவான நூலக வளர்ச்சி வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகளாக உள்ளன. மனித அறிவுத்தேடலுடன் தொடர்புபட்ட நூலகங்கள் ஆங்காங்கு வளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் ஆட்பட்டு வந்துள்ளன. தகவலால் ஆளப்படுகின்ற இன்றைய தகவல் யுகத்திலே நூலகங்கள் பற்றிய கணிப்பீடு அல்லது அதன் முக்கியத்துவம் மிக உயர்ந்ததாகும். அந்த வகையில் இன்று இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் கூட நூலகங்கள் முக்கிய இடத்தை வகிக்கத் தொடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தமிழரின் மரணக்கிரிகை

திரு. கு. சண்முகம் (B.A)
அதிபர்
மட்/ சிங்காரத்தோப்பு சரஸ்வதி வித்தியாலயம்,
களுவன்கேணி.

நானில வளமும் ஒருங்கேகூடி மணலும் மலையும் நதியும் சுனையும் ஏரியும் கடலும் வானுயர் காவும் அணி கலனாக சுந்தர மங்கையெனத்திகழும் மட்டன்னையின் மடியினிலே நடைபயிலும் வழக்காறுகளோ ஏராளம். அவை ஒவ்வொன்றும் மட்டக்களப்பு தமிழகத்துக்கே உரித்தானே தனித்துவப் பண்புகளைக் கொண்டுள்ளன. இந்த வழக்காறுகள் இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்வோடு ஒன்றிப்போய் கிடப்பதுடன் இன்றும் அவை பேணப்படுவது சிறப்பம்சமாகும். இந்தவகையில் மட்டக்களப்பில் தமிழரின் மரண வீட்டுக்கிரியையும் முக்கிய இடத்தை வகிக்கிறது.

பிறக்கும் போது பூரிப்படையும் மனிதன் வாழ்ந்து களைத்து மரண வேதனைப்பட்டு இறக்கிறான். உடலை விட்டு உயிர் பிரிந்தபின் உயிரற்ற அந்த உடலுக்கு மட்டக்களப்பு தமிழர் சூட்டும் பெயர் "சவம்" இறந்தவர்வீட்டை "சாவீடு" என்று அழைப்பர். ஒருவர் இறந்ததும் கால்பெருவிரல் இரண்டையும் சேர்த்து துணித்துண்டால் இறுகக் கட்டிவிடுவர். கைகளை மார்புக்குமேல் விரல்கள் ஒன்றுக்குள் ஒன்று பொருந்திய நிலையில் ஒன்று சேர்த்து மணிக்கட்டில் துணித்துண்டால் கட்டுவர். இவ்வாறு கைகால் கட்டப்பட்ட சவத்தை சாமூலைப் பக்கம் தலை வைத்து நீட்டி நிமிர்த்தி பாயில் வளர்த்துவர். "சாமூலை" என்பது தென்மேற்கு மூலையாகும். கால்கள் வடகிழக்கு திசையை நோக்கியதாக இருக்கும். கால்மாட்டுப் பக்கமும் தலைமாட்டுப்பக்கமும் குத்து விளக்கு வைத்து தேங்காய் நெய்விட்டு தீபமேற்றுவர் தலைமாட்டுப்பக்கம் வைக்கப்படும் குத்து விளக்கு எட்டுச் சடங்கு முடியும் வரை தொடர்ந்து எரியும்.

**சாவீட்டுச் செய்தி :**

மரணம் சம்பவித்ததும் உடனடியாக முற்றத்தில் பந்தல் அமைப்பர். இந்தப் பந்தல் ஒன்பது கால்களைக் கொண்டதாகவும் முன் பக்கம் சரிவாகவும் அமைக்கப்படும். பந்தலின் கூரை இழைக்கப்பட்ட தென்னோலையினால் வேயப்படும் இதன்பின் உறவினர்களுக்கு மரணச்செய்தி அறிவிக்கப்படும். எட்டாம் நாள்வரை தமது வழமையான அடுப்பில் நெருப்பு மூட்டுவதில்லை. மரணம் நிகழ்ந்த நேரத்தைப் பொறுத்து சவம் எடுக்கும் நேரம் குறிக்கப்படும்.

தமது குடும்பத்திற்கு சலவைத்தொழில் செய்யும் கட்டாடிக்கும் சவரத்தொழில் செய்யும் நாவிதனுக்கும், பிணப்பறை சேவிக்கும் பறையருக்கும் உடன் அறிவிக்கப்படும். பிணப்பறை அடிக்கும் பறையர் குழுவினர் உடனடியாகவே வரவழைக்கப்பட்டு பறைமேளம் வாசிக்கப்படும். இதனை மட்டக்களப்பு தமிழகத்தில் "பறை சேவித்தல்" என்று கூறுவர். சாவீட்டில் பறையருக்கு இருப்பதற்கு ஓலைக்கிடுகும் மண்பானையில் தண்ணீரும் சிறிய ஓலைப் பெட்டியில் வெற்றிலை பாக்கும் கொடுப்பர். இந்த நடைமுறை தற்காலம் அருகி வருகின்ற போதும் கிராமப்புறங்களில் இன்றும் நடைமுறையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்தில் போடப்பட்டுள்ள கூரையின் மேற்புறமத்தியில் கட்டாடி வெள்ளை கட்டுவார் இதனை "எச்சம் தாங்கி " என்று கூறுவர்.

**சவம் குளிப்பாட்டல்**

சவம் குளிப்பாட்டுவதற்குரிய ஏற்பாடுகள் அடுத்து இடம்பெறும். பந்தலில் கட்டப்பட்டுள்ள எச்சம் தாங்கியின் கீழ் சாமூலையைப் பார்த்தால் போல் ஒரு உரசம் அதன் எதிர்த்திசையில் மற்றொரு உரசம் வைக்கப்பட்டு அதன் மேல் பலகை வைக்கப் படும் பலகையின்மேல் புன்பாய் விரிக்கப்படும் அதன்மேல் மஞ்சள் தோய்த்து காய்ந்துலர்ந்த துணிவிரிக்கப்படும். இது குளிப்பாட்டிய சவத்தை வளர்த்துவதற்கான ஏற்பாடாகும்.

வீட்டின் பின்பக்கமாக இரண்டு பக்கமும் இரண்டு உரல்கள் போடப்பட்டு அதன் மேல் பலகை வைக்கப்படும் இந்தப்பலகையின் மீது இறந்தவரின் உடலை வைப்பர். சுற்றிவர கட்டாடி கொடுத்த வெள் ளையை சிலர் வளைத்துப்பிடிப்பர் மஞ்சள் தோய்த்த வெள்ளை ஆடையொன்று உடுத் தப்பட்டு, இறக்கும் போது உடுத்திருந்த ஆடைகள் களையப்படும். இவற்றை கட்டாடி எடுத்துக்கொள்வார். இதன்பின் இறந்தவர் ஆணாக இருந்தால் முகச்சவரம் செய்வார். மஞ்சள் கரைத்த நீரை இறந்தவரின் மிக நெருக்கமான உறவினரைக் கொண்டு பாதம் இருந்து உச்சிவரை ஊற்றச் சொல்வார் தொடர்ந்து உறவினர் சவத்தை மஞ்சள் நீரால் குளிப்பாட்டி ஈரம் துடைத்து ஆடைகள் அணிவிப்பர்.

இறந்தவர் திருமணமானவர்களானால் அவர்கள் திருமணத்தின் போது அணிந்த கூறைச்சேலை, கூறைவேட்டி சால்வை என்பவற்றில் பாதி அணியப்படும். மற்றப்பாதி மற்றவரின் சாவுக்கு பாதுகாப்பாக வைக்கப்படும். தமது சாவுக்கென மட்டக் களப்புத் தமிழகமக்கள் எழுபது எண்பது வருடங்களுக்கு மேலும் பேணிப் பாதுகாத்து வைத்திருப்பது இறந்தபின்பும் தமது மணக்கோலத்தை நினைவூட்டுவதற்காகவே என்பதில் ஐயமில்லை. அணிகலன்களும் அணிவிக்கப்படும். கணவன் இறந்தால் மனைவியின் கழுத்தில் உள்ள தாலிக்கொடி கழற்றப்பட்டு இறந்த கணவனின் மார்பின்மேல் வைக்கப்படும். இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட சவத்தை ஏற்கனவே பந்தலுக்குள் தயார் செய்யப்பட்ட பலகையின்மீது கொண்டு வந்து வளர்த்துவர். இவ்வாறு வளர்த்துவதை இங்குள்ளமக்கள் "ஒப்புச்சி வளர்த்துதல்" என்று கூறுவர். இவ்வாறு வளர்த்தப்பட்ட சவத்தின் கால்மாட்டிலும் தலைமாட்டிலும் குத்துவிளக்கு எரியவிடப்படும்.

சவம் குளிப்பாட்டும் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது விதவைப் பெண்கள் முற்றத்தைக் கூட்டி துப்பரவு செய்வது இங்குள்ள வழக்கமாகும். இறந்தவர் கணவனாக இருந்தால் மனைவியும் இறந்தவர் மனைவியாக இருந்தால் கணவனும் ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, ஒரு நாணயம் என்பவற்றை வெற்றிலையில் வைத்து மடித்து இறந்தவரின் இடுப்பு ஆடைக்குள் மிக இரகசியமாக செருகிவிடுவர்.

ஆடை அணிகள் அணிவிப்பரிசம் மட்டக்களப்பு தமிழ் மக்களிடையே குறிப்பிடக்கூடிய விசேட அம்சங்களுமுண்டு நாட்டுக் கூத்திற்கும் மாந்திரீகத்துக்கும் பெயர் பெற்ற மட்டக்களப்பில் அத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பிரபல்யம் அடைந்தவர் களாக இருந்தால் அந்தத்துறைகளுக்குரிய உடைகளை அணிவிப்பது வழக்கம் உதாரணமாக நாட்டுக் கூத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்தால் நாட்டுக் கூத்திற்குரிய ஆடைகளையே அணிவிப்பர்.

**சவக்கட்டில் தயாரித்தல்**

ஆண்கள் சவம் கொண்டு செல்வதற்கான கட்டிலை தயாரிப்பர். வாழைமரம், தென்னங்குருத்து, தடிகள், பழம்பாக்கு, செவ்வரத்தம்பூ, பட்டு, கடதாசி என்பன கொண்டு கட்டிலை தயாரிப்பர். நாவிதன் வாழைமரம் தடி என்பவற்றை வெட்டிக் கொடுக்க ஏனையோர் கட்டிலைக் கட்டுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முழம் நீளமுள்ள நான்கு வாழைமரக்குற்றிகள் வெட்டப்பட்டு செவ்வக வடிவில் வைக்கப்படும். ஒவ்வொரு வாழைக் குற்றியிலும் இரண்டு பக்கமும் கூராக்கப்பட்ட தடிகள் ஏற்றப்படும். நீளமான சற்று மொத்தமான இரண்டு தடிகளை செவ்வ கவடிவின் இரண்டு நீளப்பக்கத்திற்கும் வைத்துக் கட்டுவர். அகலப்பக்கத்திற்கு அரை முழத்துக்கு ஒன்றாக தடிகள் வைத்து கட்டுவர். மேற்பக்கம் சிறிய வீட்டின் கூரை போன்று அமைத்து வெள்ளைத்துணியைக் கட்டுவர். பக்கங்கள் அனைத்தும் வெள்ளைப் பட்டுக் கடதாசியினால் அலங்கரிக்கப்படும்.

அதன் பின் ஒரு சாண் அளவுள்ள வாழைக்குற்றிகளில் பூசனிக்காய் வடிவில் தென்னங்குருத்துகளால் ஐந்து வடிவங்கள் அமைக்கப்படும் இவை "குடம்" எனப்படும். தலைகீழாகக் கட்டப்பட்ட தென்னங் குருத்துகள் கட்டிலில் கட்டப்படும். பழப்பாக்கு செவ்வரத்தம்பூ என்பனவும் கட்டப்படும்.

### கடமைக்காரரின் கடமைகள்

கட்டில் தயாரிக்கப்பட்டுக் கொண்டி ருக்கும்போது இறந்தவரின் வீட்டுக்கு குடிவீட்டுக்கடமை செய்பவர்களான சவரத் தொழிலாளி, சலவைத்தொழிலாளி, பறையர் என்போருக்கு சாவீட்டுக்காரர் ஒரு முழம் நீளமான துணித்துண்டின் மூலையில் பணம் முடிந்து கொடுப்பர். அதை அவர்கள் தலையில் கட்டிக்கொள்வர்.

நாவிதன் தலைப்பாகை கட்டிக் கொண்டு அடுப்புமூட்டி புதுமண்சட்டி வைத்து நெல் பொரித்து சிறிய பெட்டியில் எடுத்துக் கொள்வா. அதன் பின் பச்சையரிசி, வெண்கல வட்டில், வெண்கலச்செம்பு, தேங்காய், அரைத்த மஞ்சள் என்பவற்றை அவ்வீட்டாரிட மிருந்து வெற்றுக்கொள்வார் அரைத்தமஞ் சளையும் பச்சையரிசியையும் புரட்டி வட்டில் எடுத்துக்கொள்வர். தேங்காயைத் துருவி பால்பிழிந்து செம்பில் எடுத்துக் கொள்வர். பாலிலும் அரைத்தமஞ்சள் கரைக்கப் பட்டிருக்கும்.

சவம் எடுப்பதற்கு நேரம் நெருங்கிய தும் கால்கழுவும் நிகழ்வு இடம்பெறும். ஒரு பாத்திரத்தில் மஞ்சள் கரைத்த நீரெடுத்து அதில் பாலறுகு வேப்பிலை என்பவற்றைப் போட்டுவைப்பர். இந்த நீரால் இறந்தவரின் மிக நெருக்கமான உறவினர்கள் இறந்தவரின் பாதத்தைக் கழுவுவர். பாதத்தைகழுவியவர் களுக்கு நாவிதன் மஞ்சள் புரட்டிய அரிசியை சிறிதளவு கையில் கொடுப்பர். இதை இறந்தவரின் பாதம் முதல் உச்சிவரை தூவுவர். அதன் பாலில் சிறிதளவு கையில் கொடுப்பார். அதையும் பாதம் முதல் உச்சிவரை தெளிப்பர். அதை அடுத்து "சவம் எடுத்தல்" நிகழும்.

### சவம் எடுத்தல்

கால் கழுவும் நிகழ்வு நிறைவு பெற்றதும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கும் கட்டிலை சவத்தின் அருகே கொண்டுவருவர். சவத்தை. பாயுடன் தூக்கி கட்டிலில் வைப்பர் வைத்ததும், ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக் கும் குடங்களை கட்டிலில் குத்துவர் நான்குபேர் நான்கு பக்கமும் கட்டிலைப் பிடித்துத் தூக்கிச் செல்லும் போது இறந்தவ ரின் உறவினர் நண்பர்கள் அலறி அழும் காட்சி நெஞ்சத்தை நெகிழவைப்பதாக இருக்கும்.

### கொள்ளிக்குடம் எடுத்தல்

இறந்தவரின் மூத்த ஆண்மகன் தந்தைக்கும், கடைசிமகன் தாய்க்கும் கொள்ளிக்குடம் எடுப்பர். கொள்ளிக்குடம் எடுக்கத்தகுதியானவர் கட்டாடி கொடுக்கும் மாற்றுத்துணியைக் கட்டிக்கொண்டு முழுகவார்க்கப்படுவார். கட்டாடி கொடுக்கும் துணித்துண்டை வாயில் கட்டிக் கொள்ள நாவிதன் நீர் நிரப்பி வாய் மூடப்பட்ட மண்முட்டியை தலையில் சும்மாடு வைத்து தூக்கி வைத்து கையில் குறக்கொள் ளியையும் கொடுப்பார்.

மட்டக்களப்பில் பிள்ளைப்பாக்கியம் இல்லாதவர்களுக்கும் ஆண்பிள்ளை இல்லாதவர்களுக்கும் திருமணமாகாதவர் களுக்கும் கொள்ளிக்குடம் எடுப்பதில்லை.

மட்டக்களப்பு தமிழகத்தில் பழம் பெரும் கிராமங்களில் தத்தமது குடிக்கமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவரிசை செய்வது வழக்கம், கூரை முடிவைத்தல், வெள்ளைபோடுதல், தென்னம் பாளைவைத்தல், நடைபாவாடை விரித்தல் என்பன நிகழும் இந்த வழக்காறு இன்றும் நடைமுறையிலுண்டு.

**மரண ஊர்வலம்**

சவத்தின் முன்னே பறையான் சேவித்துச் செல்ல, கட்டாடி நடைபாவாடை விரிக்க, நாவிதன் பொரிஎறிய, கொள்ளி குடக்காரர் முன்நடக்க மரண ஊர்வலம் சவக் காலையை நோக்கி செல்லும். இவ்வூர்வலம் வேலிக் கடப்படியை அடைந்ததும் சவக்கட்டிலை மூன்று முறை முன்பின்னாக ஆட்டுவர்.

கட்டாடி விரிக்கும் நடை பாவாடை யை பறையான் மிதிக்ககூடாது இந்த வழக்கம் இன்று நடைமுறையிலுண்டு. இறந்தவர் மிகவும் வயதானவர்களாக இருந்தால் துணித்துண்டால் பந்துகட்டி சவக்கட்டிலில் மேல் பந்து அடித்து விளையாடிச்செல்வர் இந்த வழக்கம் அருகி வருகின்ற போதும் சில இடங்களில் நடைபெறுகிறது.

**உலக்கையும் தண்ணீரும் வைத்தல்**

ஆண்கள் சவக்காலையை நோக்கிச் சென்றதும் விதவைப் பெண்கள் வீட்டு முற்றத்தைக் கூட்டித் துப்பரவு செய்வர். முதிய பெண்கள் வேலிக் கடப்படியில் மூன்று உலக்கைகளை கடப்புக்கு குறுக்கே வரிசையாகப் போட்டு தண்ணிக்குடமும் வைப்பர். கொள்ளிகுடம் எடுத்தவர் வீடு திரும்பி தலையில் தண்ணி தெளித்து உலக்கையைக் கடந்த பின்பே ஏனையோர் தலையில் தண்ணீர் தெளித்து உள்ளே வரவேண்டும் என்பது இங்குள்ள முக்கியமான நடைமுறையாகும்.



கூட்டில் அடைபட்ட காதல் புள்ளே!
வெளியே வந்தால், புவனமோ பெருங்கூடு
இதுவே உனக்கும் நிம்மதி தான்!

**சவத்தை அடக்கம் செய்தல்**

சவக்காலையில் சவத்தை அடக்கம் செய்வதற்காக வெட்டப்பட்ட செவ்வக வடிவமான குழியின் அருகே தோண்டப் பட்டமண் மேடை போல் அமைக்கப் பட்டிருக்கும். சவக்கட்டில் மூன்று முறை குழியை வலம் வந்தபின் இந்த மண்மேடையில் இறக்கி வைக்கப்படும். கட்டிலின் மேல்பகுதி பிடுங்கி எடுக்கப்பட்டு வேறோர் இடத்தில் வைக்கப்படும். சவத்தை மூடியுள்ள மஞ்சள் துணி அகற்றப்பட்டு கால் கை கட்டுகள் அவிழ்க்கப்பட்டு கை பக்க வாட்டில் வைக்கப்படும் அணியப்பட்டுள்ள நகைகள், அறுநாக்கொடி என்பன அகற்றப்படும். அதன்பின் மீண்டும் மஞ்சள் துணியால் சவத்தை மூடி சவத்தை குழிக்குள் வைப்பர். அதன்பின் பிடி மண் போடும் நிகழ்வு இடம்பெறும் நெருங்கிய உறவினர் முதலில் பிடிமண் போட அதனைத் தொடர்ந்து எல்லோரும் போடுவர். இறந்தவருக்கு வயதில் மூத்தவராக இருந்தால் தலைமாட்டுப் பக்கம் நின்றும் இளையவர்களானால் கால்மாட்டுப்பக்கம் நின்றும் இரண்டு கைநிறைய மண்ணை அள்ளி மூன்று முறை போடுவர். எல்லோரும் பிடிமண் போட்டு முடிந்ததும் மண் குவிக்கப்பட்டு குவியலாக இருக்கும் இதை "சவப்பிட்டி என்பர்" பின்னர் நாவிதன் சவப்பிட்டியின் மேல் மூன்று இடங்களில் ஒன்று இரண்டு மூன்று என "பிரண்டங்கொழுந்து " துண்டங்களை வைத்து மூடிவிடுவர். அதன் பின் கொள்ளிக்குடக்காரர் மூன்று முறை சவப்பிட்டியை சுற்றி வர மூன்று முறையும் நாவிதன் கத்தியால் முட்டியை கொத்தி உடைக்க கொள்ளிக்குடம் எடுத்தவர். திரும்பிப்பாராமல் வீட்டை நோக்கிச் செல்வார். பின்னர் கால்மாட்டுப்பக்கம் ஒரு இளநீரும் தலைமாட்டுப்பக்கம் இரண்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளநீரும் வைக்கப்பட்டபின் கட்டிலின் மேல்பகுதி சவப்பிட்டியில் மேல் வைக்கப்படும். எல்லோரும் வீடு நோக்கிச்செல்ல நாவிதன் கொத்து முறித்து அடி அளித்துவிட்டு அவரும் செல்வார்.

**உணவும் தலைமுழுகி மாற்றுடுத்தலும்**

வீடு திரும்பியவர்கள் தலையில் தண்ணீர் தெளித்து உலக்கையைக்கடந்து உள்ளே வந்ததும் கட்டாடியார் மாற்றுத்துணி கொடுப்பார். மாற்றுத் துணியைப் பெற்றுக் கொண்டு எல்லோரும் தலை முழுகி, மாற்று துணியை உடுத்து வந்து அமர்ந்ததும் அயலவர்கள் உணவு சமைத்துக் கொண்டு வந்து வீட்டில் உள்ள அனைவருக்கும் பரிமாறித் தாமும் உண்பது இங்குள்ள விசேட வழக்கமாகும்.

**அம்மானைபாடுதல் இளநீர்வைத்தல்.**

வீட்டின் முன் அறையில் எட்டாம் நாள் வரை குத்துவிளக்கு எரிக்கப்பட்டு அருகில் தண்ணீர்செம்பும் வைக்கப்படும். இந்த விளக்கின் அருகில் இருந்து எட்டாம் நாள் வரையும் "வைகுந்த அம்மானை" பாடுவர் எட்டாம் நாள் அதிகாலை பால் பொங்கல் பொங்கிப்படைத்து விநாயகர் வழிபாடு செய்து வழிபாடுவர்.

மூன்றாம் நாள்வரை மாலைக்குள் இளநீர் வெற்றிலை, பாக்கு, எரியும்திரி என்பன வேலிக் கடப்படியில் வைக்கப்படும் இவ்விளநீர் வைத்ததும் வீட்டிற்குள் செம்பில் தண்ணீர் வைத்து இறந்தவரின் உறவினர், இறந்தவரின் உறவைச் சொல்லி மூன்று முறை அழுவர்.

**மூன்றாம் நாள்கிரிகை**

மட்டக்களப்பு தமிழரின் மரணக் கிரிகையில் மூன்றாம் நாள் கிரிகை முக்கிய இடத்தை வகிக்கிறது இதனைப் பெரும்பாலும் "மூன்றுபுக்கை" வைத்தல் என்று கூறுவர். சிறிய புதுப்பானையில் வீட்டுக்குள் அடுப்பு மூட்டி தேங்காய்ப்பாலில் அரிசி, சர்க்கரை, கற்கண்டு என்பன சேர்த்துப் பொங்கலைச்சமைப்பர். இப்பொங்கலையும் உறவினரே செய்வர். பொங்கிய பொங்கலை வீட்டு முன்னறையில் பாய்விரித்து பாயில் வெள்ளை விரித்து தலை வாழை இலை போட்டு பொங்கலைப் படைப்பர். படைப்பின் அருகில் செம்பில் தண்ணீர், தேநீர், வெற்றிலைபாக்கு என்பனவும் வைப்பர். புக்கைவைக்கும் நேரத்தில் முற்றத்திற்கு குறுக்கே செல்லுதல். குழந்தைகள் அழுதல் ஆகாது எனக்கூறுவர். எல்லோரும் அந்தநேரம் அமைதியாகவே இருப்பர். மூன்று முறை பல்லி சொல்லும்வரை காத்திருப்பர். மூன்றாவது முறை பல்லி சொன்னதும் உள்ளே சென்று படைப்பின் மீது தண்ணீர் தெளிப்பர். படைப்பில் சிறிதளவு வாழை இலையில் எடுத்து வேலிக் கடப்படியில் எரியும் திரியுடன் வைத்து தண்ணீர் தெளிப்பர்.

**சாவீட்டில் கண்விழித்தல்**

எட்டாம் நாள் வரையும் சவத்துக்குப் போடப்பட்ட பந்தல் அப்படியே இருக்கும். தினமும் அயலவர்கள் வந்து விடியும் வரை நித்திரை கொள்ளாது விழித்திருப்பர். நித்திரை விழிப்பதற்காக தாயக்கட்டை விளையாடுதல், நாயும் புலியும், திருவன்சூது போன்ற விளையாட்டுக்களை விளையாடுவர். நித்திரை விழிப்பவர்களுக்கு தேநீரும், சிற்றுண்டியும் பரிமாறுவர்.

**எட்டாம் நாள் கிரிகை**

எட்டாம் நாள் கிரிகை மேலும் விசேடமானதாகும். அன்றைய தினம் வீட்டிற்கு சாணிபோட்டு மெழுகி மஞ்சள் நீர் தெளிக்கப்படும். சீமெந்து வீடாக இருந்தால் மஞ்சள் நீர் கொண்டு கழுவப்படும். எட்டுக் கிரிகைக்கென புதுப்பாயில் நெல் காயவைத்து கையால் குற்றி அரிசி பெறப்படும். சோறு, கூழ், தயிர், பலகாரம், கொழுக்கட்டை என்பவற்றுடன் ஏழு மரக்கறி சேர்த்து சமைத்த கறி என்பனவும் இறந்தவர் விரும்பி உண்ட தின்பண்டங்கள், பருகும்பானங்கள், பழவகைகள் என்பன வைக்கப்படும். பாய்விரித்து அதன்மேல் வெள்ளை விரித்து மூன்று தலை வாழை இலை போட்டு மூன்றுபடைப்பு படைக்கப்படும். இந்தபடைப்பை "கல்லை" என்று சொல்வர் இதில் ஒன்று விநாயகருக்கும், மற்றொன்று இறந்தவருக்கும் அடுத்தது இறந்தவரின் உறவினருக்கும் வைக்கப்படும். இவையாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டு வீட்டுக்கதவு சாற்றப்பட்டு பல்லி சொல்லும் வரை காத்திருப்பர். மூன்று முறை பல்லி சொல்லி மூன்றாவது தடவை பல்லி சொன்னதும் செருமிக்கொண்டு கதவைத் திறந்து கல்லையின்மீது தண்ணீரைத் தெளிப்பர். பல்லி சொல்ல தாமதமானால் ஏதோ குறைபாடுள்ளதாகவும் இறந்தவர் கோபம் கொண்டுள்ளதாகவும் கருதி நேர் கடன் வைப்பர். அங்கு வைக்கப்பட்ட உணவுப்பண்டங்கள் யாவற்றிலும் சிறிதளவு வாழைஇலையில் எடுத்து வேலிக் கடப்படியில் வைத்து எரியும் திரியும் வைப்பர். சுற்றிவர தண்ணீரை ஊற்றுவர்.

எட்டாம் நாள் முடிந்து ஒன்பதாம் நாள் காலையில் பந்தல் பிரிக்கப்பட்டு எட்டுநாளும் சேர்க்கப்பட்ட குப்பை கூழங்கள் குழிதோண்டி புதைக்கப்படும்.

**31ம் நாள் கிரிகை**

31ம் நாள் கிரிகை தான் மட்டக்களப்பு தமிழகத்தில் மரணக் கிரிகையின் நிறைவுக்கிரிகையாக அமைகிறது. முப்பத்தோராம் நாள் கிரிகையை "அமுது கொடுத்தல்" என்று கூறுவர். அமுது கொடுக்கும் தினத்திற்கு சில தினங்களுக்கு முன் அயலவர்களுக்கு அறிவிக்கப்படும். முப்பத்தோராம் நாள் கிரிகையை நடத்திவைப்பவர்களை "சங் கூதிகள்" என்று கூறுவர்.

குறிப்பிட்ட தினத்தன்று சங்கூதி ஐயர் வீட்டுக்கு வந்து வீட்டுக்கிரிகைகளைச்செய்து கோசலம், கோமயம், பால் என்பவற்றை மந்திரித்து குற்றங்களை நீக்குவார். அதன் பின் மூன்று கும்பங்களை வைத்து, பட்டு பூமாலை என்பவற்றால் அலங்கரிப்பார் வெற்றிலை பாக்கு பழம் என்பன கொண்டு மடைவைத்ததும், மூன்று முறை சங்கூதி பூசை செய்வார். அதன் பின் சகல பொருட்கள் மீதும் மந்திரிந்த நீரைத் தெளித்து குற்றம் களைவார். சமைப்பதற்குரிய தண்ணீரையும் மந்திரித்துக் கொடுக்க வீட்டிலுள்ளோர் சமைக்கத் தொடங்குவர்.

சோறு, கூழ், பலகாரம், கொழுக் கட்டை, பொங்கல், மரக்கறி என்பன சமைக்கப்படும். தயிர், பழவகை, சிற்றுண்டிகள், யாவும் சேர்த்துக்கொடுக்க சங்கூதி ஐயர் தலைவாழை இலை போட்டு மூன்று அல்லது ஐந்து படைப்பு படைப்பார் பின்னர் மூன்று முறை சங்கூதி பூசையைச் செய்வார். பூசையின் போது இறந்தவர் பாவித்த பொருள்களுக்காக தட்சனை வாங்கிக் கொள்வார்.

சங்கூதி ஐயருக்கு புதுவேட்டி சால்வை, தட்சணை, சமைக்காத உணவுப்பொருட்கள் அடங்கிய பெட்டி என்பன கொடுக்கப்படும். இந்தப்பெட்டியை பச்சைப் பெட்டி என்று கூறுவர். அத்துடன் சமைத்த உணவுப்பண்டங்கள் அடங்கிய ஒரு பெட்டியும் தானமாகக் கொடுக்கப்படும்.

மேற்கட்டி, வெள்ளை என்பன கட்டிய கட்டாடிக்கும் பச்சைப்பெட்டி, உணவுப் பெட்டி, தட்சணை என்பன வழங்கப்படும் அதன்பின் வீட்டினுள்ளே ஏனைய அனைவருக்கும் உணவு பரிமாறுவர். இத்துடன் முப்பத்தோராம் நாள் கிரிகை நிறைவு பெறும்.
மட்டக்களப்பு தமிழகத்தில் ஒருவர் மரணமடைந்தால் அவருக்கு செய்யும் கிரிகைகள்யாவும் இந்த முப்பத்தோராம் நாள் கிரிகையுடன் நிறைவு பெறும்.

சனிக்கிழமைகளில் மரணமடைந்தால் தென்னம் பிள்ளயும் புதன்கிழமைகளில், மரணித்தால் கமுகம்பிள்ளையும் சவப்புதையலில் நடுவது வழக்கம். அத்துடன் புதன், சனிக்கிழமைகளில் எந்த மரணக்கிரிகையும் செய்வதில்லை மறுநாளே செய்வர்.

நம் தமிழ்மக்களால் பரம்பரை பரம்பரையாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டுவரும் அர்த்தம் பொதிந்த வழக்காறுகள் மேல்நாட்டு நாகரிகம் ஊடுருவியதன் காரணமாக அருகி விடும் அபாயம் தோன்றியுள்ளது வேதனைக்குரிய விடயமாகும். அர்த்தமும் மகிமையும் நிறைந்த தமிழ்ச் சமூகத்தின் வழக்காறுகள் தொடர்ந்து பேணப்பட வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அதே நிலை

சொற்ப காலங்களாக...
யுத்தத்தின் சப்தத்தை
கேட்காத செவிகளும்
இரத்தக் கண்ணீரைச்
சிந்தாத விழிகளும்
முகாரி மீட்டாத
மனங்களும்,
மறு வாழ்வு பெற்றதைப் போல்
உணர்ந்தன.......
மகிழ்வாய்க் கொஞ்சம் இருந்தன......

முளைந்தெழுந்ததோர் சிலை
இனி விழுமோ இங்கு கொலை
வெடித்துச் சிதறுகிறதே தலை
என்ன இவ் விபரீதத்தின் நிலை?........

அடிபட்ட வடுக்கள் ஆறமுன்பே.......
ஆரம்பிக்கப்பட்டதோ இங்கு
அடுத்த கட்ட நடவடிக்கை

துப்பாக்கிகளும், தோட்டாக்களும்
தோள்களை நிமிர்த்திக் கொண்டன.
கண்ணி வெடிகளும், கைக்குண்டுகளும்
கலவர ராகம் பாடி நின்றன.

எவர் தலையை எடுக்கவென
ஏங்கி நின்றன.......
இரத்தக் கறை படிந்த
இரும்புக் கத்திகள்.
வரப் பயந்தன வாகனங்கள்.

வீதி வெளிகள் அடிக்கடி
வெறிச்சோடிப் போயின
சாதிவெறிகள் மட்டுமே
சந்திகளில் தலைக் காட்டின

யுத்தப் பொதிகளுடன்
மொத்தக் காவல் பழையபடி
அடையாள அட்டையையும்
அணைக்க வேண்டுமோ - இனி
உயிர்க்கும் பயந்தபடி.

சமாதானப் பேச்சிற்கு இதுவோர்
சவாலாய் அமைந்தது - நம்
சந்தோசத்திற்கும் நல்ல
சாட்டையடி விழுந்தது

கடையடைப்பும், ஹர்த்தாலுமே
கருப் பொருளாயின.....
தடையகற்ற முடியாமல்
சில தலைகள் தள்ளாடின

இப்படியே நீளுகின்றதே....
இலங்கையின் நிலை,
இறுதி வரை இவ்வாறு தானோ
இங்கே அழிவு முறை?

-பாலையூற்று-

செல்வி முகைசிரா முகைதீன்
சுருக்கெழுத்தாளர்
நீதிமன்றம் - திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னித் தமிழரின் தொல்குடி மரபுகள்

ஞா. ஜெகநாதன் B.A. Dip. in Edu
அதிபர் வ/பிறமண்டு வித்தி,

வன்னித் தமிழரின் தொல்குடி மரபுகள் பற்றி அறிய விளையும் நாம், அவர்களின் தொன்மை, வரலாறு பற்றி மிகச் சுருக்கமாக முதலில் பார்ப்போம்.

கி.மு. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, விந்திய மலைக்குத் தெற்காக இருந்த பெரிய கண்டத்தில், அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை, கிழக்கிந்திய தீவுகள், தென் அமெரிக்கா ஆகியன ஒரே நிலப்பரப்பில் சேர்ந்திருந்தன. இந்த பெரிய நிலப்பரப்பு 'இலெமூரியாக் கண்டம்' என அழைக்கப்பட்டது. 'எழுமொழி' பேசிய இக்கண்ட மக்கள் 'இலெமூரியர்கள்' என அழைக்கப்பட்டனர்.

காலத்திற்குக் காலம் பல கடல் கோள்கள் இப்பகுதிகளில் ஏற்பட்டதாக, மண்ணியல் பேராசிரியர்களான டெனற், வெசினர் போன்றோர் கூறுகின்றனர். இதனால் கடலடிப்பாறைகள் வெடித்து, இலெமூரியாக் கண்டத்தில் இருந்து, இலங்கை, அவுஸ்திரேலியா, தென் அமெரிக்கா போன்ற நிலத்திணிவுகள், அதில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளுடன் வேறு நிலத்துண்டங்களாக நகர்ந்து சென்றன. இதன் பிற்பாடு ஏற்பட்ட கடல் கோள்களினால் இலங்கையின் பெரும்பகுதி கடலுட் தாண்டது. இந்நிகழ்வுகளின் போது, பாடல் பெற்ற திருத் தலங்களான கோணேஸ்வரமும் திருக்கேதீஸ்வரமும் சிதைந்து அமிழ்ந்தன.

இலேமூரியாக் கண்டத்தில் நாகர், இயக்கர், முண்டர் ஆகிய திராவிட இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தனர். இலங்கை தனி நிலத்துண்டமாக நகர்ந்த போது, அதன் வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளில் வாழ்ந்த நாகர்களும், மத்திய, தென்பகுதிகளில் வாழ்ந்த இயக்கர்களும் அப்படியே தம் சொந்த மண்ணுடனேயே வந்து விட்டனர்.

அன்று தொட்டு நாகரும் இயக்கரும் தனித்தனி இராச்சியங்கள் அமைத்து ஆண்டு வந்தனர். நாகர்கள் நாகநாட்டையும், இயக்கர்கள் தாமிரபரணியையும் ஆண்டனர். தொலமி வரைந்த உலகப்படத்தில் நாகநாடு, தாமிரபரணி ஆகிய இரு நாடுகள் உள்ளடக்கப்பட்ட இலங்கை, 'செயிலான்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயன் இலங்கைக்கு வந்தபோது இதே நிலை காணப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. நாகநாடு வடக்கே மணிபல்லவத்தையும், கிழக்கே மட்டக்களப்பையும், தெற்கே மகவிலச்சிய, கதம்ப நதி என்பவற்றையும், மேற்கே புத்தளத்தையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது.

எழு மொழி, கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் செந்தமிழ் ஆகியது. எழுமொழியும், பாளியும், சமஸ்கிருதமும் கலந்து சிங்கள மொழி உருவாகியது. நாகர்களின் வழிபாட்டு முறைகள் சிந்துவெளி நாகரிக வழிபாட்டு முறைகளை ஒத்திருப்பதால் அவர்களின் சமயம் சைவம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இனி வன்னியர் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம். வன்னியர்கள் இந்தியாவில் வாழ்ந்த ஆரியரல்லாத ஒரு பழங்குடி மக்கள் குழுவினர். இவர்கள் ஏனைய பழங்குடி மக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் தனியாக விலகி, காடுகளை வெட்டிக்குடியேறி வாழ்ந்தனர். காடவர் என இவர்கள் அழைக்கப்பட்டனர். இதன் வடமொழிச் சொல் ''வ...நி'' ஆகும். இச் சொல் பின்பு மருவி ''வன்னி'' என மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்களுக்கும் இந்த நாட்டில்
வாழ்வதற்கான சம உரிமை உண்டு
அதைத் தடுப்பதென்பது ஏது முறை
இணைவோம் ஒன்றாய் பெறுவோம் சம உரிமை

இதனால் இம்மக்கள் ''வன்னியர்'' என அழைக்கப்படலாயினர். வன்னியர்கள் பற்றிப் பல கருத்துக்கள் கூறப்படினும், அவர்கள் அரசர்களால் கௌரவிக்கப்பட்ட ஒரு குலத்தினராகவும், வீர மறவர் களாகவும், சிற்றரசர்களாகவும் இருந்தனர் என்பது உறுதி.

கி.மு. 50ம் ஆண்டளவில் 60 வன்னியர்கள் இலங்கைக்கு வந்தனர். இலங்கை மன்னன் பாலசிங்கனுக்கு மணமகளாக நிச்சயிக்கப்பட்டிருந்த மதுரை மன்னனின் மகளை அழைத்துக்கொண்டு இந்த 60 வீரர்களும் இலங்கைக்கு வந்தனர். தலைமை தாங்கி வந்த வன்னி யனுக்கு ''திசாவ'' என்ற பதவி வழங்கப் பட்டு, அநுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டான். இன்றைய சிங்கள வன்னியர்களின் மூதாதையர் இவனே ஆவான்.

யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டபடியால், ஏனைய 59 வன்னியர்களுக்கும், யாழ்ப்பாணம் தவிர்ந்த நாக நாட்டின் ஏனைய பகுதிகள் பரிசாக வழங்கப்பட்டன. நாக சிற்றரசர்களுடன் போரில் 54 வன்னியர்கள் மடிந்தனர். எஞ்சிய ஐந்து வன்னியர்களும் நாகர்களுடன் சமாதானமாக வாழ நினைத்து அவர்களுடன் இரண்டறக் கலந்து விட்டனர். இந்தக் கலப்பு இனமே இன்றைய வன்னியர் இனமாகும்.

இனி, வன்னித்தமிழரின் தொல்குடி மரபுகள் பற்றிப் பார்ப்போம். இவர்கள் குளங்களை அண்டிய பகுதியில் சிறு சிறு கிராமங்களில் வாழ்ந்தனர். கோயி லையும், குளத்தையும் விவசாயத் தொழி லையும் புனிதமாகக் கருதினர். நாகர் காலத்துப் பெரிய குளங்களாக பாகற்காய்க்குளம் (பாவற்குளம்), அலவிச்சைக்குளம் (ஈறற் பெரியகுளம்) போன்றன இனங்காணப் பட்டுள்ளன. ஆதியில் இருந்த குளங்கள் யாவும் மரங்களின் பெயர்களுடன் அல்லது ஏதாவது காரணப் பெயர்களுடன் காணப் பட்டன. (உ-ம் : -விளாங்குளம், பூவரசங் குளம், பாலை மோட்டை, சின்னத்தம்பனை (தம்பனை மரம்), கூழாங்குளம், அலியன் சாயந்தகுளம், கற்சிலைமடு, பன்றிக் கெய்தகுளம், மரையடித்த குளம், கரப்புக்குத்தி, வெடிவைத்தகல், கொம்பு வைத்த குளம் போன்றன.)

வன்னித் தமிழர் சிறு சிறு அழகான வீடுகளை அமைத்து வாழ்ந்தனர். காணியைச் சுற்றி வேலி போடப் பட்டிருக்கும். காணியின் எல்லைகளில் நான்கு அடி உயரமான கெவர் உள்ள முதிரைக்கப்புக்கள் போடப்பட்டு,அவற்றிலே நீளமான இயாபரணை அல்லது திருக்கொண்டல் வளை வைக்கப்படும். இந்த வளைகளிலே கற்காரை, காயா போன்ற கதிகால்கள் வெளிப்புறத்தில் உட்புறச்சாய்வாக, நெருக்கமாகச் சார்த்தப்பட்டிருக்கும். இது தான் வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள் நாற்சதுரமாக, அல்லது வட்டமாக அமைக்கப்படும். இரண்டு அடி அகலமான மண்சுவர் ஏழு, எட்டு அடி உயரம் வரை அமைக்கப்பட்டு, முதிரை, இயாபரணை, தவிட்டை மரங்களினால் கூரை போடப்பட்டு, தரணி, உலுவிந்தை வரிச்சுகளினால் வரியப்பட்டு, வைக்கோலால் வேயப்பட்டிருக்கும். வரிச்சுகள் பால் கொடி, தெகிழங்கொடி போன்றவற்றால் வரியப்படும். வீட்டில் இரண்டு அறைகளும், இரண்டு அடி உயரமான திண்ணையும். காணப்படும். சமயலறை புறம்பாகக் காணப்படும். வீட்டின் முன்னால், சுவர்கள் இல்லாமல் 2½ அடி அகலமும் இரண்டு அடி உயரமும் கொண்ட திண்ணைகளுடன் மால் அமைக்கப்பட்டிருக்கும். வீடுகள் சாணத்தால் அழகாக மெழுகப்பட்டிருக்கும் வீட்டின் முன்புறமாக நெற்கொப்பறைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

வன்னித் தமிழர்கள் விவசாயத் தொழில் செய்யும் வேளாளர்கள். இவர்கள் குளத்து நீரைநம்பியே விவசாயத்தில் ஈடுபட்டனர். ஆயினும் வன்னியர் வருகையின் பின்பு காடு வெட்டிச் சேனைப்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டனர். சேனைப்பயிர்களாக நெல், குரக்கன், திணை, வரகு, கொள்ளு, பயறு, உழுந்து, ஓமம், கடுகு போன்ற பயிர்கள் செய்யப்பட்டன. குளத்து நீரை நம்பிய விவசாயம் வயல்களில் செய்யப்பட்டன. உழவு வேலைகளுக்கு எருமைமாடுகள் பயன்படுத்தப்பட்டன. வயல்களிலே மொட்டைக்கறுப்பன், கறுப்பு இளங்கலையின், கிரிமொறுங்கன், சம்பா, பனங்களியன், கறுப்புச் சீனட்டி, கண்டிச் சீனட்டி, வெள்ளைச் சீனட்டி, பச்சைப் பெருமாள், முருங்கைக் காயன், வட்டிப்பித்தன் போன்ற நெல்லினங்கள் விதைக்கப்பட்டன.

வயல்களுக்கு மாட்டெரு பசளையாகப் போடப்பட்டது. பெரும்பாலும் பயிர்களை நோய்கள் தாக்குவதில்லை. சிலகாலங்களில் நெல்கதிர் விடும் காலங்களில் நெல் - ஈ தாக்குவதுண்டு. இப்படியான நேரத்தில், புதிய பானையிலே குளத்து நீர் எடுத்து, குளித்த ஈர உடுப்புடன் அந்தப்பானையை நீருடன் பூசாரியிடம் கொடுப்பார்கள். பூசாரி அதைக் கோயிலில் வைத்து மந்திரித்து, மீளவும் வயற்காரனிடம் கொடுப்பார். அவன் அதை வேப்பங்குழையால் தொட்டு காணியைச் சுற்றிவரத் தெளித்து, மீதி நீரை வடமுகத்து வயலிலே ஊற்றி விட்டு, திரும்பிப் பார்க்காமல் ஏற்றுக் கடப்பால் ஏறி வெளியே சென்று, பானையை அவ்விடத்தில் உடைப்பார். மூன்று நாட்கள் வயற்பக்கம் போகக்கூடாது. நாலாம் நாள் சென்று பார்த்தால் ஓர் ஈயும் இருக்காது.

வயல்களில் வேலைகள் யாவும் ''வாரக்காரனால்'' செய்யப்பட்டது. வன்னியர்களின் இரண்டாம் வருகையின் போது இந்தியாவில் இருந்து 18 குடிமைகளையும் அழைத்து வந்தனர். 17 குடிமைகள் விவசாயம் செய்யப்படாத ஆரணியகமங்களிலே குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் வேளாளர்களுக்குக் குடிமைத் தொழில்கள் செய்தனர். எஞ்சிய ஒரு குடிமை வேளாளர்களுக்கு விவசாய ''வாரத் தொழில்'' செய்தான். வாரக்காரனும் மனைவி, பிள்ளைகளும் எசமானின் வீட்டிலும் வயலிலும் வேலை செய்ய வேண்டும்.

வயல்கள் விளைந்தவுடன் அறுவடை நடைபெறும். ''பரத்தை போட்டு வெட்டுதல்'' என்ற முறையில் அரிவு வெட்டு நடைபெறும். சகல கமக்காரர்களின் வாரக்காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒவ்வொரு கமங்களாக வேலை செய்யும் முறை பரத்தை போட்டு வெட்டுதல் எனப்படும். அறுவடை முடிந்ததும் உட்பட்டிகள் சேர்க்கப்பட்டு மாவக்கையாக்கி, மாவக்கைகள் கதிர்க் கட்டுகளாகக் கட்டப்பட்டு, சூடடிப்புக் களத்திலே உள்ள சூட்டுப் பிட்டியிலே சூடு வைக்கப்படும்.

சூடு அடிப்பு முறை மிகவும் அவதானமாகச் செய்யப்படுகிறது. வைகாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாகத்தில் வரும் வற்றாப்பளைப் பொங்கல் முடிந்து. சோழகக் காற்று வீசத் தொடங்கிய பின்பும், அடுத்து வரும் புதூர் நாகதம்பிரான் பொங்கல் முடிந்த பின்பும் சூடடிப்பு ஆரம்பமாகும். அலைந்து திரிந்த ''பரியலங்கள்'' எல்லாம் வற்றாப்பளைப் பொங்கலுக்குச் சென்று அவை திரும்பி வர முன்பு சூடடிப்புக்கள் நிறைவு பெறும். அல்லாவிட்டால் பரியலங்கள் களத்தில் இருந்து நெல்லை அள்ளிக் கொண்டு போய்விடும் என்று கூறுவார்கள்.

சூடடிப்புக்களம் செதுக்கப்பட்டு, சாணத்தினால் மெழுகப்படும். களத்திலே சாணப்பிள்ளையார் வைத்து, விளக்குத் திரி கொழுத்தி, தேங்காய் உடைத்து சூடடிப்பு ஆரம்பமாகும். கதிர்கள் பெரிய குவியலாகக் குவிக்கப்படும். ஐந்து எருமைமாடுகள் ஒன்றாகப் பிணைக்கப் படும். பின்பு இவை நன்கு பழக்கப்பட்ட வயது முதிர்ந்த ஒரு எருமைக் கடாவுடன் பிணைக்கப்படும். இந்த ஆறு மாடுகளும் ''நடையன்'' என அழைக்கப்படும். நடையன்கள் கதிர்குவியல் மேல் ஏற்றப் பட்டுச் சுற்றிச் சுற்றி வளைக்கப்படும். இந்த நடையன் வளைக்கும் வேலையை ஒருவர் செய்வார். நன்கு பழக்கப்பட்ட மாடு கதிர்க்குவியலின் நடுவில் திரும்பித்திரும்பி நிற்க ஏனைய மாடுகள் சுற்றிச் சுற்றி வரும். நடையன் வளைப்பவரை விட இன்னும் மூவர் சூடடிப்பு வேலையில் ஈடுபடுவர். சூடடிப்பு முடியும்வரை ஒருவரும் வீட்டுக்குப் போக முயாது. சூடடிப்புக் களத்திலே வழமையாகப் பாவிக்கப்படும் சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்கள் பாவிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| நெல் | - | கூரன் |
| மாடு | - | நடையன் |
| சாக்கு | - | பெருவயிறன் |
| சுளகு | - | குல்லம் |
| சுண்ணாம்பு | - | வெள்ளை |
| நெருப்பு | - | சிவப்பு |
| வைக்கோல் | - | பொலிக்கொடி |
| சப்பிநெல் | - | கோல் |

தூப்பரவு செய்யப்படாத நெல் - பொலி

சோழகக் காற்றிலே நெல் தூற்றப்படும். அதன்பின் நெல் அளக்கப்பட்டு மாட்டு வண்டிகளிலும், பொதி மாடுகளிலும் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நெற் கொப்பறைகளில் மூன்று வகையாகச் சேமிக்கப்படும். கோயில் நெல் களத்திலேயே அளந்து எடுக்கப்பட்டுவிடும். சேமிக்கப்படும் நெல் பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப் படும்.

1. விதை நெல்
2. தனது உணவுக்குரிய நெல் (சம்பா, கறுப்புச் சீனட்டி, மொட்டைக் கறுப்பன் போன்றன.)
3. ஆயா நெல் - இது ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படும்.

நெல் அளவைமுறைகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

| | | |
|---|---|---|
| 16 கொத்து | - | 1 மரக்கால் |
| 4 மரக்கால் | - | 1 மூடை |
| 28 கொத்து | - | 1 புசல் |
| 3 புசல் | - | 1 மூடை |
| 84 கொத்து | - | 1 மூடை |

நாலு மரக்கால் நெல் விதைக்கப் படும் வயற்காணி ஓர் ஏக்கர் எனப்பட்டது.

வளவுக்காணியிலே மா, பலா, தென்னை, கொய்யா, தேசி, தோடை, முருங்கை, சீத்தா, அன்னமுன்னா முதலிய பயன்தரும் மரங்கள் காணப்பட்டன. வீட்டுத் தோட்டத்தில் கத்தரி, வெண்டி, புடோல், பீர்க்கு, பூசணி, நீற்றுப் பூசணி, சுரை, கொச்சி, பொத்த மிளகாய், மிளகாய், வாழை, கொத்தாவரை முதலிய மரக்கறிகள் பயிரிடப்பட்டன. காணிகளில் காணப்படும் நாயுருவி, தூதுவளை, சிறு குறிஞ்சா, குறிஞ்சா, கொவ்வை, குப்பைமேனி, பன்றித்தகரை, பூசனிக் கொழுந்து, முடக்கொத்தான் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்த கீரைவகை உணவாகப் பாவிக்கப்பட்டது. அத்துடன் குளக்கரைகளிலும் காட்டுப் பகுதிகளிலும் காணப்பட்ட வல்லாரை, பொன்னாங்காணி, வட்டுக்காய், சுண்டங்காய், பாகற்காய், பிரண்டை என்பன மரக்கறி உணவாகப் பயன்படுத்தப்பட்டன.

இனி, வன்னித் தமிழரின் சமயவழிபாட்டு முறைகள் பற்றிப் பார்ப்போம். முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் என்பன இன்றும் முக்கிய ஈஸ்வர ஆலயங்களாகக் காணப்படுகின்றன. இவற்றை விட, கி.பி. 247இல், வீரநாராயணச் செட்டி என்பவனால் கதம்ப நதியருகில் அமைக்கப்பட்ட சந்திரசேகரர் ஆலயமும், கேணியும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இவருடைய பெயராலேயே செட்டிக்குளம் என்ற பெயர் வந்தது. ஆலயம் அமைந்துள்ள பகுதி வவ்வாலை என அழைக்கப்படுகிறது. இவற்றை விட நாக வணக்கம் (புதூர் நாகதம்பிரான் கோவில்), அம்மன் வணக்கம் (வற்றாப்பளை அம்மன் கோவில்), என்பவற்றுடன் ஐயனார், வயிரவன், போன்ற தெய்வ வழிபாடுகளும் காணப்பட்டன கோயில்களிலே பூசாரி என்ற குலமரபு முதல்வர் பூசை செய்வார்.

கிராமத்தில் பல வகையான சடங்கு முறைகள் நடைமுறையில் இருந்தன. இச்சடங்குகள் கோயில்களிலும் வீடுகளிலும் செய்யப்பட்டன. கோயில் பொங்கல், மடைபோடுதல், திருமணச் சடங்கு, பிள்ளைக்குப் பெயரிடுதல், சோறு தீற்றுதல், காது குத்துதல் (ஆண்களும், பெண்களும்), பூப்புனித நீராட்டு, மரணச் சடங்கு, மூன்றாம் சடங்கு, எட்டாம் சடங்கு, முப்பத்தோராம் சடங்கு, ஆண்டுத் திவசம், மாபாளையம் என்பன இச்சடங்குகளிலே குறிப்பிடக் கூடியவை.

வன்னியர்களின் கல்விமுறை பற்றி ஆராயும் போது, இங்கு திண்ணைப் பாடசாலைகளிலே கல்வி கற்கப்பட்டதை அறிய முடிகிறது. கிராமத் தலைவர் எழுதவும் வாசிக்கவும் பழக்குவார். மண்ணில் விரலால் எழுதும் முறையே ஆரம்பத்தில் இருந்தது. அதன்பின்பு, எழுத்தாணி மூலம் பனையோலை ஏட்டிலே எழுதினார்கள். அத்துடன், பாரம்பரிய வைத்திய ஏடுகள், மந்திர ஏடுகள் போன்றன, பெறுமதிமிக்க பொக்கிஷங்களாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டன. ஏட்டு எழுத்துக்களில் ''குற்று'' இல்லாத படியால் அதை வாசிப்பதற்கு நீண்ட அநுபவம் தேவை. இப்படியான அனுபவம் பெற்ற பெரியோர்கள் ஏடுகளை ஏனையோருக்கு வாசித்துக் காட்டினர்.

## இராவண தேசம்

**இலங்கையின் பழம் பெருமைகள் வரலாற்றுக்கு முற்பட்டவை இப்பெருமைகளை விளக்கும் புராண இதிகாசக் கதைகள் எண்ணற்றவை. இராவணனின் இலங்கை இதுவல்ல என்போரை மறுக்கப் பின்வரும் சான்றுகள் ஆய்வாலர்களினால் கொடுக்கப்பட்டுள்ளன.**

♣ இராவணன் சீதையைச் சிறைவைத்த அசோகவனம், நுவரெலியா நகருக்கு அருகில் பதுளை செல்லும் வழியில் உள்ள அசோக மரங்கள் நிறைந்த பெருங்காடு தான் என்பர் அங்கே சலசலத்து ஓடும் அருவி அருகே சீதையம்மன் கோயிலும் உண்டு.

♣ இராம - இராவண யுத்தம் இலங்கையில் வெலிமடைக்கு அருகில் 'ராமலங்கா' என்ற இடத்தில் கி.மு 1301 இல் நடந்தது என ''ராஜவாலியம்'' என்ற புராண பாளி நூல் குறிப்பிடுகிறது.

♣ சிவபக்தனான இராவணேஸ்வரன் கட்டிய திருக்கோணஸ்வரம் ஆலயத்தை யே பின்னர் கி.பி 1150 இல் குளக்கோட்டு மன்னனால் புதுப்பிக்கப்பட்டது இவனே கந்தளாய்க் குளத்தையும் கட்டினான். இன்றும் திருக்கோணமலை கோணேசர் ஆலயத்தின் மந்திர உச்சாடனத்தில் 'இராவணனுக்கும்' சுலோகம் உச்சரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கிலே, அல்லி அரசாணி மாலை, இராமாயணம், மகா பாரதம், நிகண்டு, காத்தவராயன், திருவிளையாடற்புராணம் என்பன பெரிய எழுத்து, படங்களுடன் நூல் உருவில் வெளிவந்தன. இவை செய்யுள் நடையில் அமைந்திருந்தன. இவற்றைப் பாடி, பொருள் சொல்லக்கூடிய ஒரு சிலரே வன்னியில் காணப்பட்டனர். விசேட தினங்களில், ஊர்களில் இவை பாடப்படும் வழமை இருந்தது. அப்போது அதைக் கேட்பதற்கு அயற்கிராம மக்களும் ஒன்று கூடுவார்கள்.

நூற்கல்வி திண்ணைப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டது போல, தொழிற்கல்வி வீடுகளில் கற்பிக்கப்பட்டது. தந்தை, மூத்த சகோதரன் ஆகியோர் குருவாக அமைந்தனர். கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை காணப்பட்டபடியால் தொழிற்கல்வியானது தொடர்கல்வியாக மேற்கொள்ளப் பட்டது. கல்வி முறையானது கிராமங்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி முறையாகவும், பூர்வீக தமிழர்களின் கலாசார, பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து, அதன்படி அடுத்த தலைமுறையினரை வழிநடத்தும் முறையாகவும் காணப்பட்டது.

ஆயினும், கி.பி. 1872ஆம் ஆண்டில், வவுனியா, குடியிருப்பில், இலங்கைத் திருச்சபையால் பாடசாலை தொடங்கப்பட்டவுடன் திண்ணைப் பாடசாலை முறை செயலிழக்கத் தொடங்கியது. இதே காலப்பகுதியில், நெளுக்குளம், இராசேந்திரகுளம், தண்ணீரூற்று, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் இலங்கைத் திருச்சபையினர், பாடசாலைகளை நிறுவினார்கள்.

நாக சிற்றரசர் காலத்தின் பின்பு பல கௌரவ உயர்பதவிகள் கல்வி கற்றோருக்கும், செல்வாக்கு மிக்க வேளாளர்களுக்கும் வழங்கப்பட்டன. அப்பதவிகளிலே, பண்டாரம், உடையார், முதலியார், கிராமத்தலைமைக்காரன் (தற்போதைய கிராம சேவை அலுவலர் பதவியை ஒத்தது), கோயில் முகாமையாளர் போன்றன முக்கியமானவை. கி.பி. 1811 இல், வன்னியின் கடைசி மன்னன் பண்டார வன்னியன் இறந்த பின்பு, வன்னி நாட்டிலே கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்ட வேளையில், கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றியவர்கட்கும் மேற்குறிப்பிட்ட உயர்பதவிகள் வழங்கப் பட்டன. இதனால், தாங்கள் பாரம்பரியமாக வகித்து வந்த உயர் கௌரவப் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, வேளாளப் பிரமுகர்கள் சிலர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டனர். அத்துடன், வவுனியா, குடியிருப்பில், கி.பி. 1852ஆம் ஆண்டு ''பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்'' என்ற ஆலயத்தையும் அமைக்க உறுதுணையாக இருந்தனர்.

வன்னியர்கள் பொழுது போக்காக, மீன் பிடித்தல், வேட்டையாடுதல், தேன் சேகரித்தல், வண்டிச்சவாரி போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இவற்றிலே மீன்பிடித்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. வன்னியிலே குளங்கள் அதிகமாகக் காணப்பட்டன. அவை வற்றாக் குளங்களாக இருந்தபடியால் அவற்றிலே மீன் இனங்கள் அதிகம் காணப்பட்டன. விரால், பனையேறி, வாளை, கணையன், பொட்டியன், சுங்கன், மயறி, மாங்கன், ஐரை, கெழுத்தி, விலாங்கு, குறவை, உழுவை, கச்சல் போன்ற மீனினங்கள் குளங்களிலே காணப்பட்டன. வயல்களுக்குக் கடைசித் தண்ணீர் பாய்ந்து முடிந்ததும், குள உரிமையாளர்கள் அனைவரும் ஒன்று கூடி, ''கரப்பு'' என்ற உபகரணத்தால் வரிசையாக நின்று மீன் பிடிப்பார்கள். இந்தமுறை ''கரப்புக்குத்தி மீன்பிடித்தல்'' எனப்படும். இதைவிட, பெண்கள் ''மீன்வாருதல்'' என்ற முறைமூலம் மீன் பிடிப்பார்கள். இந்த மீன்களிலே விரால், பனையேறி போன்றவை அனைவராலும் விரும்பப்படுபவை. பனையேறி என்ற மீன் நீரை விட்டு வெளியே வந்து, பக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடாகச் சரிந்து, அரம் போன்ற பூமுடிகளின் உதவியுடன் நிலத்திலும் நகர்ந்து செல்லக்கூடியது. பெரிய மழை பெய்யுங்காலங்களில் வீட்டு முற்றங்களுக்கே இந்த மீன்கள் வந்து விடும். முன்பு ஒரு காலத்தில், பெருமழை பெய்த நேரத்தில், இந்த மீன் நீரை விட்டு வெளியே வந்து, ஒரு பனைமரத்தில் ஏறி விட்டதாம். அதனால் தான் அதற்கு "பனையேறி" என்ற பெயர் வந்தது.

வன்னியர்கள் சுயதேவைப் பூர்த்தியுடன் வாழ்ந்தனர். இருப்பினும் சீனி, சர்க்கரை, உப்பு, பிடைவை, இரும்பு, தங்கம், வெள்ளி போன்றவற்றுக்கு இந்திய, யாழ்ப்பாண வியாபாரிகளை நம்பி இருந்தனர். யாழ்ப்பாண வியாபாரிகள் கூடார வண்டிகளிலே சீனி, சர்க்கரை என்பவற்றுடன் புகையிலை, புழுக்கொடியல் என்பவற்றையும் கொண்டு வந்தனர். நெல் விளையும் வரை தங்கியிருந்து, பண்டமாற்றாக நெல்லைப் பெற்றுச் சென்றனர்.

இன்றைய சூழலில், வன்னிநாடு தமிழர்களின் மூலஸ்தானமாக மாறியுள்ளது. வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் பல மக்கள் இங்கு குடியேறி உள்ளனர். அவர்கள் வன்னியர்களுடன் இரண்டறக் கலந்து விட்டனர். இருப்பினும் வன்னியர்கள் இன்றும் தமது தனித்தன்மை யுடன் ஏனையோருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆயினும், வன்னியரை இனங்காண்பது கடினமாகி விட்டது. தமிழரின் தொல்குடிமரபுகளை கால ஓட்டத்திற்கு ஏற்றவகையில் நெகிழ்வுத் தன்மையுடன் பேணி வரும் மக்களை நாம் இன்றும் வன்னி நாட்டில் சந்திக்கின்றோம். அவர்கள் தான் நவீன வன்னியர்கள்.

ஆம்!....அத்தகைய வீரமும், வருவிருந்தோம்பும் பண்பும் நிறைந்த அந்த வன்னிப் பெருநிலம் தான் ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரமும், பாதுகாப்பும் கொண்ட மண்ணாகத் திகழ்வதில் நாம் பெருமைப்படாமல் இருக்க முடியுமா?

**உசாத்துணை நூல்கள்:-**


1. பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும் - காலாநிதி துரை மனோகரன்
2. வையாபாடல் - கலாநிதி க.செ.நடராசா
3. பண்டார வன்னியன் விழாமலர் - மாவட்ட அபிவிருத்திச் சபை, வவுனியா, 22
4. ஈழத்தவர் வரலாறு - கலாநிதி. க. குணராசா
5. குளக்கோட்டன் தரிசனம் - க. தங்கேஸ்வரி
6. நாம் தமிழர் - பொ. சங்கரப்பிள்ளை
7. இலேமூரியா அல்லது குமரிக்கண்டம் - கா. அப்பாத்துரையார்
8. தென் இந்திய வரலாறு - K.A. நீலகண்ட சாஸ்திரி
9. The Wonder that was India - பசாம்
10. பண்டைய தமிழகம் - பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்
11. தென் கிழக்கு ஆசிய வரலாறு - D.G.E. ஹோல்
12. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்- ந.சி. கந்தையா
13. யாழ்ப்பாணச் சரித்திரம் - கலாநிதி. க. குணராசா
14. மறைந்த நாகரிகங்கள் - ந.சி. கந்தையா
15. மருதநிலா - வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் - 1996
16. தமிழர் பண்பாடு - புலவர். கா. கோவிந்தன்
17. இருபது வருடங்களுக்குப்பின் தாய் நாட்டுக்குத் தப்பிய கைதியின் கதை - எம். பால கிருஷ்ணன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழர் தம் வாழ்வு யுத்த அனர்த்தங்களால் சிதைக்கப்பட்டுள்ள நிலையிலும், மன உறுதியுடன் சமூக, பொருளாதார, கலாச்சார அம்சங்களில் நமது இருப்பினைத் தக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கிய உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு உத்வேகம் அடைந்துள்ளது என்பது வெளிப்படை. இயங்கியல் விதியின் பிரகாரம் மனிதனை நெருக்கடிகள் சூழ்கின்ற போது தான் மனிதனின் சிந்தனைச் சக்தியும் செயல் திறனும் கூர்மை அடைகின்றது. வாழ்வின் இருப்பினை அடுத்த தலைமுறையினருக்கு வழங்க வேண்டுமாயின் முதலில் நமது மொழி சார்ந்த பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டும்.

தமிழரின் பண்பாட்டுக் கோலங்களில் கலைகள் தனித்துவமானவை. அதிலும் நாடகக் கலை சங்ககாலத்தில் இருந்து வளர்ச்சிகண்டு வந்துள்ளது. எனினும் இந்த வளர்ச்சிக்கான சான்றாதாரங்களை முழுமையாகப் பேணிக்காப்பதில் நம்மவர் தவறிழைத்து விட்டனர். ஈழத்துக் கலை வளர்ச்சியில் நாடகக்கலை தனித்துவ சக்தி வாய்ந்தது. பிரதேசவாரியான நாடக வளர்ச்சியை நோக்கும்போது மன்னார் மாவட்டத்தின் நாடகக்கலையானது ''கூத்து'' வடிவத்தை நீண்ட காலமாகக் கொண்டது.

பொதுவாக நோக்கும்போது தமிழினத்தின் நாடகக்கலையின் மூலவேர் ''கூத்து'' வடிவத்தையே கொண்டது என்பது ஆய்வாளரின் கருத்தாகும். அதனால்த்தான் ''கூத்து'' என்பது நாடகம் என்ற கருத்தினைக் கொண்டது. தமிழரின் புகழ் பூத்த கூத்து நாடக வடிவானது மன்னார் மாவட்ட மக்களால் காலங்காலமாக பயில் நிலையில் பேணப்பட்டு வருகின்றது. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும், கடல்வளமும், பயிர் வளமும் சிறக்கும் மன்னார் மாதோட்ட மானிலமானது கிழக்கே ஆலங்குளத்தையும், மேற்கே பாக்கு நீரிணையையும் தெற்கே மோதகரம் ஆற்றையும் வடக்கே வெள்ளாங் குளத்தையும் எல்லையாகக் கொண்ட 957½ சதுரமைல் பரந்த விஸ்தீரணமுடைய நிலப்பரப்பாகும். பல நூற்றாண்டு காலமாக தமது பாரம்பரிய சமுதாய ஒழுங்கமைப் புக்களுடன் வாழ்ந்து வரும் மன்னார் தமிழ் பேசும் மக்கள் கூத்து வடிவிலான நாடகக்கலையை தமது வாழ்வில் பிரிக்க முடியாத அம்சமாகப் பேணிக்காத்து வந்துள்ளனர்.

# மன்னார் மாந்தோட்ட மண்ணில் கூத்துக் கலை மரபுகள்

திரு. எஸ். டேவிட் (அதிபர்)

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியரான போத்துக்கேயரின் வருகையோடு இலங்கையில் கத்தோலிக்க - கிறிஸ்தவ மதம் பரவலடைந்துள்ளது. கத்தோலிக்க மதப் பரப்புதலின் செல்வாக்குக்குட்பட்ட முதன்மை பிரதேசமாக மன்னார் பிரதேசமே விளங்கியது. கத்தோலிக்க குருக்கள் மக்களை மதமாற்றம் செய்வதற்கான சிறந்த ''பிரச்சார ஊடகமாக'' இங்கு ஏற்கனவே பயில் நிலையிலிருந்த கூத்து வடிவங்களையே தேர்ந்தெடுத்தனர். அந்த அளவுக்கு கூத்துக்கலை மக்களின் வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்திருந்தது.

இதனால் கத்தோலிக்க குருக்கள் கலை இலக்கியங்களில், அன்று சிறந்து விளங்கிய புலவர்களை இனங்கண்டு அவர்களை அணுகி, கிறிஸ்தவ மதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கதைக்கருக்களைக் கொண்ட கூத்து நாடகங்களை எழுதுவித்து, அவற்றைப் பக்தி பூர்வமான கலை நிகழ்வுகளாக அரங்கேற்றினர். இத்தகைய கூத்து நாடகங்கள் புனிதர்களின் தியாக வாழ்வைப் பிரதிபலித்தமையால் மக்கள் இக்கூத்துக்களை பக்திபூர்வ நிகழ்வாகக் கருதினர். இரண்டு மூன்று இரவுகள் ஆடி நடிக்கக் கூடிய கூத்துக்களை நாடகம் என்றும், ஓர் இரவில் நடிக்கும் கூத்தினை ''வாசாப்பு'' என்றும் வழங்கினர். ''வாசாப்பு'' என்பது வசனமும் பாவும் கலந்த நாடக வடிவமாக விளங்கி, காலகதியில் ''வாசாப்பு'' என மருவியதாக கூத்தியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாடகம், வாசாப்பு போன்ற கூத்து வடிவங்களுடன் வனவாசாப்பு, சாபா, டிறாமா, பாசுக்கை போன்ற புதிய நாடக வடிவங்களும் கிறிஸ்தவ மதப்பரப்புதலின் பயனாக தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டன.

''பாஸ்கு'' நாடகம் என்பது உலக இரட்சகர் கிறிஸ்து பெருமானின் திருப்பாடுகளின் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் நாடகமாகும். இப்பாஸ்கு நாடகங்கள் ஆரம்பத்தில் ''உடக்கு'' என்ற மரப்பாவைகளினாலான மனித உருவங்களைக் கொண்டு நடிக்கப்பட்டது. இதனை மக்கள் ''உடக்கு பாஸ்'' என்று அழைத்தனர். தென்னிந்தியாவில் அன்று பயில் நிலையில் இருந்த பாவைக்கூத்தின் மற்றொரு பரிமாணமாக உடக்கு பாஸ் அமைந்தது. இன்றும் உடக்குபாஸ் எனப்படும் பாவைக்கூத்து பேசாலையில் பயில் நிலையில் உள்ளது. மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள பறப்பாங்கண்டல் பெரியகோவில் இலங்கையிலேயே பாஸ்கு நாடகம் நடிக்கப்படும் பிரபல்ய புனித ஆலயமாக அன்று விளங்கியதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய தகவல் என்னவெனில் கிறிஸ்தவ மரபு நாடக வருகையினால் இலங்கையின் நாடக வரலாற்றில் புதிய திருப்பு முனை ஏற்பட்டது என்பது தான். நாடகவடிவம், பாத்திரப்படைப்பு, கதைக்கரு, அரங்கவடிவம், ஒப்பனை போன்ற பல அம்சங்களில் புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்மாற்றங்கள் ஈழத் தமிழரின் பிற்கால நாடக முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

நாடக வடிவங்கள் கிறிஸ்தவ மதக்கருத்துக்களை பிரதிபலித்தாலும் நாடகத்தின் பாவடிவங்கள் ஏற்கனவே வழக்கில் இருந்து வந்த பாவடிவங்களைக் கொண்டு தான் உருவாக்கப்பட்டன. உதாரணமாக ஒரு கிறிஸ்தவ கூத்து நாடகத்தினை முழுமையாக ஆழ்ந்து நோக்கும் போது வெண்பா, கவி, விருத்தம், சிந்து, வண்ணம், தாளிசை, கட்டளைக் கலித்துறை, தோடையம், இன்னிசை போன்ற பல்வேறு பாவடிவங்களைக் கொண்டதாக இருப்பதை அறியலாம். இப்பாவடிவங்கள் யாவும் நமது தமிழ் மொழியின் இலக்கண வரம்புக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய காலப்பகுதியில் கத்தோலிக்க குருக்களால் கூத்து நாடகங்களை உருவாக்கி அரங்கேற்றுவதற்கான ஊக்குவிப்பு வழங்கப்பட்டதால் மன்னாரில் பரவலாக வாழ்ந்த பல புலவர்கள் ஒவ்வொருவரும் பல நாடகங்கள் எழுதினர். எமது பொதுவான கணிப்பீட்டின்படி 1957ம் ஆண்டு வெள்ளப்பெருக்கில் அழிந்தவை போக ஏறத்தாழ 150 நாடக ஏடுகள் இன்றும் பல கிராமங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என அறிய முடிகின்றது.

மன்னார் மாதோட்ட மண்ணில் 16ம் நூற்றாண்டுக்கு முன்பு நாடகக் கலை எந்த நிலையில் இருந்தது என்பதற்கான சான்றாதாரங்கள் அவ்வளவாக இல்லை. 16ம் நூற்றாண்டில்தான் மாதோட்ட அரங்கக் கலையினை தடங்காண முடிகின்றது என அமரர் புலவர் பெஞ்சமின் செல்வம் அவர்கள் தனது ஆய்வின் மூலம் நிறுவியுள்ளார். மன்னார் மாவட்டத்தில் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவ நாடக மரபின் தந்தையாக அமரர் லோறன்ஸ் புலவர் என இனம் காணப்பட்டுள்ளார். இவரது காலப்பகுதி கி.பி. 16ம் நூற்றாண்டின பிற்பகுதிக்கும் 17ம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரால் இயற்றப்பட்டதெனக் கருதப்படும் வெண்பா வடிவிலான காப்புக் கவியானது மிகவும் பக்தி பூர்வமானதும், பிரபலமானதுமாகும்.

அமரர் லோறன்ஸ் புலவர் அவர்கள் பாடிய இந்த முதன்மையான காப்புக்கவியானது மன்னார் மாநில கிறிஸ்தவ நாடக மரபின் தேசிய கீதமாகவும், நாடக நிகழ்வின் ஆரம்பத்துக்கு முன்பு பாடப்படும் புகழ்மிக்க வெண்பாவாகவும் விளங்குகின்றது.

வெண்பாவிலான அவர் பாடிய வல்ல சிலுவை காப்புக்கவி இவ்வாறு அமைகின்றது.

வல்ல சிலுவை மரத்தைப் புயத்தேந்தி
சொல்லரிய வாதைத்துயரோடு - கல்வாரி
மேட்டுக்கு மேல் நடந்த தேவபரனே - எமது
பாட்டுக்கு முன் நிற்பதாம்.


சுதந்திரமாகச்சுற்றிச்
சுழன்றுவர ஆசை தான்?
சைக்கிளில் தனியாய் சென்றுவர
சுதந்திரம் தான் இல்லையே

அமரர் லோறன்ஸ் புலவர் அவர்களிடம் இலக்கண இலக்கியம் கற்ற பல மாணவர் களே பிற்கால கிறிஸ்தவ கூத்து நாடகங்களை உருவாக்கியும், மேடையேற்றியும் கூத்து நாடக மரபை வளப்படுத்தினர். லோறன்ஸ் புலவர் அவர்களின் முதன்மை மாணவர்கள் வரிசையில்,

* தென்பாங்கில் என்றிக் எம்பிரதோர் நாடகம் பாடிய குருகுல நாட்டுத்தேவர்.

* கோது கப்பித்தான் நாடகம் பாடிய சந்தியோகுப் புலவர்.

* மரிகிருதாள் நாடகம் பாடிய வெள்ளைப் புலவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களை அடியொற்றி பிற்காலத்தில் ஏராளமான கிறிஸ்தவ இஸ்லாமியப் புலவர்கள் பல நாடகங்களை எழுதினார்கள். இப்புலவர்கள் அனைவரும் பரஸ்பரம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதக்கொள்கைகளை தெளிவுற அறிந்திருந்தார்கள் என்பதை மன்னார் புலவர்களின் வரலாற்றைத் தொகுத்தளித்த அமரர் பெஞ்சமின் செல்வம் அவர்கள் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மக்கள் கிராமியக் கலையான கூத்து நாடகங்களை அரும்பெரும் கலைப் பொக்கிசமாகக் கருதினர். ஒவ்வொரு ஊருக்கும் உகப்பான ஒவ்வொரு நாடகம் உண்டு. இவை வயல் அறுவடை முடிந்த ஒய்வு காலங்கள், ஆலய உற்சவ காலங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வேளைகளில் அனேகமாக நடிக்கப்படுகின்றன. ஊர் ஒற்றுமைக்காகவும், செழிப்பான வாழ்வுக்காகவும், பஞ்சம், பசி, பிணி நீங்கி செல்வமும் நல்வாழ்வும் பெறுவதற்காகவும் இறைவனின் கருணையை நாடி மிகவும் பக்தி பூர்வ நிகழ்வாக நாடகத்தை அரங்கேற்றி முடிப்பர்.

ஒரு நாடக அரங்கேற்றத்துக்காக செய்யப்படும் ஆரம்ப நிகழ்வுக்கும் இறுதி நிகழ்வுக்கும் இடையே உறுதியான ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்படும். இச்சம்பிரதாய மரபுகளைப் பின்வருமாறு சுருக்கமாகப் பட்டியலிடலாம்.

* நாடகக்கூட்டம்
* நிர்வாகக் குழுத் தெரிதல்
* பாத்திரப்பகிர்வு
* ஏடுதிறத்தல்
* ''றிஹேசல்'' என்ற ஆங்கிலச் சொல்லின் திரிபான ''ஏசார்'' எனப்படும் நாடகப் பயிற்சி ஒத்திகைகள்.
* ''கெச்சை கட்டுதல்'' எனப்படும் காற்சலங்கை கட்டும் நிகழ்ச்சி
* கூத்து அரங்கினை அமைக்கும் முதன்மை நிகழ்வான கன்னிக்கால் நாட்டுதல்.
* கூத்து பந்தல் அமைத்தல்.
* வெள்ளை கட்டுதல்.
* வாழைக் குற்றியில் தேங்காய் எண்ணெய் ஒளிப்பந்தம் ஏற்றுதல்.
* கூத்து தொடங்கும் முன் அரங்கின் முகப்பில் வார் வளைதல்.
* அரங்கக் காவல் அண்ணாவியால் அரங்கிற்கு மந்திரம் ஓதி காவல் காத்தல்.
* கூத்து அண்ணாவியார் களரி கட்டுதல்.
* கிராம சேவகர் கட்டளை சொல்லுதல்
* ஏட்டு அண்ணாவியார் ஏடு திறத்தலும் 'காப்புக்கவி' பாடுதலும்.
* நடிகரைக் கௌரவித்தல் (கூத்தின் முடிவில்)
* மங்களம் பாடுதல்
* ஆலயம் செல்லுதல்
* கூத்து முடிந்து நடிகர்களின் வீடுகளுக்குச் செல்லுதல்.
* கூத்த முடிந்து 8 தினங்கள் ஒளிப்பந்தம் வைத்து இளைஞர்கள் பந்தலைக் காவல் காத்தல்.
* (ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி) பந்தல் விருந்து சமைத்து உண்ணுதல்

என கூத்து அரங்கேற்றம் சம்பந்தமான சடங்கு சம்பிரதாயங்கள் நீண்ட பட்டியல் கொண்டது. மன்னார் நாட்டுக் கூத்து அரங்கின் இச்சம்பிரதாயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடக அரங்கேற்றத்தின் போதும் நுட்பமாகவும் கருத்தூன்றியும் ஊர்ப் பெரியவர்களால் கடைப்பிடிக்கப்படும். அரங்க நிகழ்விற்கான ஏற்பாடுகளில் பெரியவர்களின் கருத்துக்களை இளைஞர்கள் பெரிதும் மதிப்பர்.

## கூத்துக் கலையின் இன்றைய அவல நிலை

மன்னாரில் கூத்துக் கலை இன்று உறக்க நிலையில் உள்ளது. மிக மோசமான யுத்தம் நடைபெற்ற காலங்களில், வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலமையிலும் பரவலாக ஆங்காங்கே பல கிராமங்களில் கூத்துக்கள் துணிச்சலுடன் அரங்கேற்றப்பட்டன. ஆனால் அமைதி நிலவுகின்ற மூன்று வருட காலப்பகுதிக்குள் வசதி வாய்ப்புக்கள் சாதகமாகி உள்ள நிலையில் எத்தனை கூத்துக்கள் அரங்கேறின என எண்ணிப் பார்க்கும் போது ஏமாற்றமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதெல்லாம் மக்களின் அனைத்து வயதுப்பிரிவினரும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குள் ‘அடக்கம்’ செய்யப்பட்டுள்ள நிலையிலேயே உள்ளனர். ஆலய உற்சவ காலங்களிலும், நெல் அறுவடை முடிந்த பின்னரும் ஆங்காங்கே ஏட்டிக்குப் போட்டிபோல பரவலாக பல கிராமங்களில் கூத்துக்களை ஒற்றுமையாக, பக்திபூர்வமாக அரங்கேற்றும் முயற்சிகள் இன்று பெரும்பாலும் கைவிடப்பட்டுள்ளன.

கூத்துக் கலைகளின் வரன் முறைகளையும், இராக தாளங்களையும், சம்பிரதாய மரபுகளையும் நன்கு அறிந்த பல மூத்த கலைஞர்கள் முதுமை அடைந்து விட்டனர். இந்நிலையில் இளைய கலைஞர்கள் மன்னாரின் பாரம்பரிய கூத்துக்கலையை அரங்கேற்ற முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு இன்றைய காலத்தின் கட்டளையாக உள்ளது. தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் தவம் கிடக்கும் அனைத்து வயதுப் பிரிவினரையும் நமது பாரம்பரியக்கலைகளை உயிர்ப்புடன் அரங்கேற்றுவதனூடாக, விழிப்படையச் செய்வதன் மூலம் நமது கலைப் பாரம்பரியத்தை ‘கன்னிமை’ தவறாமல் பேணிப் பாதுகாக்க முடியும்.




## பாட்டுக்குப் பாட்டுப்பாடி கூழும் குடித்தவர்

சோழ நாட்டில் வாழ்ந்த சிலம்பிக்கு கம்பரைக் கொண்டு ஒரு பாடலைப் பாடுவிக்க வேண்டும் ஒரு ஆசை வந்து விட்டது

‘‘என்னைப்பற்றி ஒரு பாடல் பாடுங்கள்! சுவாமி” வினயமாகக் கேட்ட சிலம்பியைப் பார்த்து

‘‘என் பாட்டுக்கு நூறு பொன் வேண்டும் தருவாயா? என்று கம்பர் கேட்டதும்

‘‘சுவாமி!... என்னிடம் ஐம்பது பொன்தான் உள்ளது அதனைத் தருகின்றேன். ஒரு பாட்டுப் பாடுங்கள்......” என்று .மன்றாடியதும் கம்பர்

‘‘தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே!

மண்ணாவதும் சோழ மண்டலமே........” என்று பாதிப்பாடலை மட்டும் அவனது வீட்டுச் சுவரில் எழுதிவிட்டுப் போய் விட்டார்

சிலம்பிக்குத் தாங்கௌாத வருத்தம் !

அந்த வரிகளைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்ததைப் பார்த்து ஔவையார் அவனிடம் இருந்து கூழைக் கேட்டு வாங்கிக் குடித்து விட்டு கம்பர் எழுதிய இரு அடிகளையும் தொடர்ந்து

‘‘அம்பொற் சிலம்பி அரவிந்தத்தாளணியும்

எம்பொற் சிலம்பே சிலம்பு...” என்று மீதிப்பாடலைப் பாடி முடித்ததும் சிலம்பி மகிழ்ச்சியில் திளைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடழிப்பு

**இராகம்: மலையமாருதம்** **தாளம் : ஆதி**

மனிதா உனக்கன்பான வேண்டு கோள்
நீ காட்டை பெருக்கிடு

காட்டு வளம் பேணின் காலமுந்தன் கையில்
நாட்டு நலம் யாவும் நன்மையாகும் பாரீர்
கோடை தன்னில் மேகம் சூழ்ந்து கொட்டு மழை கொட்டிடும்
வாடை போன்ற காற்று வீசி வளங்கள் பல தந்திடும்

(மனிதா.....)

மண் அரிப்பை தடுத்திடும் மரங்கள் ஒன்று சேர்ந்தாலே
கண்மணியாம் காட்டினை காத்து நாங்கள் வாழ்ந்தாலே
விண்ணை முட்டுமாறுதல் வீறு கொண்டு நின்றாலே
எண்ணரிய நன்மைகள் எய்தி நாமும் வாழலாம்.

(மனிதா......)

கூவும் குயிலின் வர்க்கமே கூடு கட்டி வாழ்ந்திடும்
பாடும் பறவைக் கூட்டமே பாடி ஆடிப் பறந்திடும்
தேடித் திரியும் மந்தியினம் தாவி ஓடித்திரிந்திடும்
ஓடிப்பாயும் மானினமும் ஒழிந்து ஓடி நின்றிடும்.

(மனிதா......)

காடழித்தால் வாழ்க்கையில்லை கவனமாகக் கேட்டிடு
மேடை போட்டு முழங்கினாலும் மீட்சி இல்லை வாழ்விலே
கூடை நிறைந்த கொள்கைகள் கோவிந்தாவாப் போகுமுன்
மடை திறந்த வெள்ளம் போல் மாற்று வழி கண்டிடு.

(மனிதா....)

ஒரு மரத்தை வெட்டின் ஆயிரமாய் நாட்டிடு
பரு மரத்தை அழித்திடின் பல மரங்கள் ஆக்கிடு
கருமையிருள் அகன்றிடும் கணணியுகம் தன்னிலே
ஒருமையுடன் செயற்படு ஒளியுடனே வாழலாம்.

(மனிதா.......)

ஆக்கம்:-
**திருமதி. மங்களேஸ்வரி சேதுலிங்கம்**
**B.A. Dip in Education**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லக்கல பல்லகம்'

## (Laggala Pallegama)

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளில் 'இலக்கல பல்லகம்' என்ற தேர்தல் மாவட்டத்தில் பணியாற்றினேன். இது மாத்தளையில் உள்ளது.

'இலக்கல பல்லகம்' கிராமச் சங்கத் தலைவர் பழமையைப் போற்றுபவர். குடுமி வைத்திருந்தார். தலைமயிர் வெட்டி 'குறொப்' வைத்திருப்பவர்களை அவருக்குப் பிடிக்காது. 'சைட் பேர்ன்' வைத்திருப்பவர்களைக் காடையர் என்பார்.

பொதுவாக அரச ஊழியர்களை வெறுப்பவர். நில அளவையாளர், வீதி ஓவசீயர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் தம்தம் கடமைகளைச் சரிவரச் செய்வதில்லை என்று வருடம் முழுவதும் 'பெட்டிசன்' எழுதிக் கொண்டிருப்பார். அரச மருத்துவ உத்தியோகத்தரும் விலக்கல்ல.

அவரை நாற்பது வயதில் 'அஸ்மா' **(Asthma)** ஆட் கொண்டது. அதிட்டம் கிட்டியது மருத்துவர்களுக்கு. அவர்களுக்கு நண்பராயினார் கிராமச்சங்கத் தலைவர்.

நேரம் கிடைக்கும் பொழுது அளவளாவுவார்.

''மாத்யா, இந்தத் தேர்தல் மாவட்டத்துக்கு 'சிறீபுர' , 'நாவுல', 'நாலந்த' என்ற பெயர்களில் ஒன்றை வைக்கத் திட்டமிட்டனர், தெரியுமோ? நானும் எமது மக்களும் தீவிரமாக எதிர்த்தோம்''

''ஏன் எதிர்த்தீர்கள்?''

''லக்கல'' என்ற பெயரை வையுங்கோ என வாதாடினோம்.....''

''லக்கலப் பெயரில் என்ன விசேடம்?''

''மாத்யா அப்படிக் கேளுங்கோ. இராமாயணத்தின் காலத்தை யாரும் சொல்ல முடியுமோ? முடியாது. எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு அது முந்தியது. 'லக்கல' என்ற பெயர் இராமயணத்துடன் தொடர்புடையது'' என்றார், கிராமச் சங்கத் தலைவர். எனக்குப் புதிராக இருந்தது.

''சீதையை இலங்கையில் இடம் மாறி மாறிச் சிறை வைத்தனர். இங்கேயும் சிறை வைத்தான். இராவணன்........''

என் புருவம் நெளிந்ததைக் கண்டு,

''மாத்யா சந்தேகம் வேண்டாம், இங்கு சிறு குன்றுகள் உள்ளன. இரு சிகரங்கள்-முடிகள் கொண்ட ஒரு குன்றின் குகையிலும் சீதையைச் சிறை வைத்தான் இராவணன்....''

தலையை அசைத்தேன்.

''அநுமான் வந்து சீதை இருந்த குகையை ராம இலக்குமணருக்கு 'லக்குக்' (இலக்குக்) காட்டினான். அதன் காரணமாகத்தான் 'லக்கல' என்ற பெயர் வந்தது....'' என்று அவர் சொன்னதும் எனக்குப் பெருவியப்பும், பேரானந்தமாகவும் இருந்தது.

'இலக்கு' நல்ல தமிழ்ச் சொல். 'இலக்கு வைத்தல்' 'குறிக்கோள்' போன்ற கருத்துக்கள் உண்டு.

அவர் சொன்னதில் உண்மையை உணர்ந்தேன்.

'தெமிழ வாடியா' 'பெரமுன' (போர் முனை) போன்ற ஊர்கள் இருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே. மக்களின் பெயர்களையும் அவதானிக்கலாம். கே.எம். (K.M.) கிரிபண்டா. முதல் இரு எழுத்துக்களும் K.M. கோனாரே முடியான் சலாகேயைக் குறிக்கும். கோணார் இடையர் கார் மேகத்தைக் கண்டவுடன் 'மந்தாரம்' என்று சாதாரணமாகச் சொல்வார்கள்.


பண்டா. மெனிக்கே என்பன பாண்டியன், மாணிக்கவல்லி என்ற பெயர்களின் திரிபு என்பர்.

தொன்மைக் காலத்தில் இலங்கையில் தமிழர் பரந்து வாழ்ந்த சான்றுகளை வைத்து ஆய்வாளர் ஆய்வு செய்யவேண்டியது அவசியமும், முக்கியமானதுமான அவர்களது கடமையாகும்.

ஆம்!.... இவை ரொன்று எமது பண்டைய தமிழர் வாழ்விடங்களையும், சின்னங்களையும், இனங்கண்டு அவற்றை ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையல்லவா?

தம்பையா கயிலாயர்
கொழும்பு.

# தருமம் வெல்லும்



ஆனந்த உள்ளமே நாம் காணும் வீடு
அற்புதம் கண்டே நீ நாளும் பாடு
வான வெளியிலே புதுப் புதுக் காட்சி
வண்ணத்தில் தெரியுதே மகிழ்ச்சியின் மாட்சி

பரந்த உலகிலே புதுமை பல கோடி
பண்போடு கூடியே முயற்சியில் நிதம் நாடி
பறந்து பறவைகள் களிப்பில் ஆடும்
பாய்ந்து வரும் நதியிலே புதுப்புனல் ஓடும்

ஓடும் நதியிலே நிலமகள் செழிக்கும்
ஒருமித்து வாழ்வினில் ஒற்றுமை சிறக்கும்
வாடும் உயிர்களின் நல்மனம் களிக்கும்
வாஞ்சை நீங்கியே மானிடம் நிலைக்கும்

தருமம் நிலைமாற வஞ்சனைகள் மறைக்கும்
தன் நிலை மறந்தே தருமமும் சிரிக்கும்
வருகின்ற வஞ்சனை அதர்மத்தை விரிக்கும்
விரித்த போதிலும் தருமம் மறுபடி தழைக்கும்.

தெ. அரியநாயகம்.
பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்,
சது / விபுலானந்தா மகா வித்தியாலயம்,
மல்வத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை கிராமியத்தில் பழமொழிகள்

பேச்சு மொழி என்பது இன்று பெரிதும் ஆற்றலுடன் கூடிய அதி சக்தி வாய்ந்த ஊடகமாக விளங்குகின்றது. வரிவடிவ எழுத்துக்களாய் தமது எண்ணக் கருத்துக்களை வெளியிடுவதிலும் பார்க்க, இலகுவில் எழுத்தாளக் கூடிய இலாவகம் பேச்சு மொழியிலேயே பெரிதும் விரவிக் காணப்படுகிறது. பிற உயிர் இனங்களில் நின்றும் மானுட வர்க்கத்தை மகிமை மிக்கதாய் உயர்த்திக் காட்டும் உன்னத உயர் சிறப்பை பேச்சு மொழி பெற்று விளங்குகின்றது. பேசும் பேற்றினை பெற்ற மனிதன் கலையின்பத்தை தம் வாழ்வியலோடு இணைத்துக் கொள்ள விரும்பினான். இயற்கையோடு இணைந்த இயல்புத் தன்மை வாய்ந்ததான இக்கலைகளே நாட்டார் இலக்கியங்களாக தோற்றம் பெறலாயிற்று.

ஏட்டுக் கல்வி இல்லாத நாட்டுப்புற மக்களிடையே எழுதாக் கவிகளாக 'தொன்று தொட்டு' வழங்கிவரும் பாடல்களே நாட்டார் பாடல்களாய் நயம் சிந்தி நிற்கின்றன. இவற்றுள் கிராமியக் கவிகள், உபகதைகள், பழமொழிகள், விடுகதைகள் புதிர்கள் எனப் பல வடிவங்களாய் பார்க்க முடிகிறது. இவையாவும் மக்களின் வாழ்க்கைப் போக்கினால் புரிந்து கொள்வதற்கும், அம்மக்களில் நிலவி நிற்கும் பண்புகளை விளங்கிக் கொள்வதற்கும் துணை செய்கிறது. பிரதேச மக்களின் இயல்பான பண்பாட்டுக் கோலங்களை கோடிட்டுக் காட்டும் அற்புத ஆற்றல் மிக்கதாய் நாட்டுப் பாடல்கள் திகழ்கின்றன.

நாட்டார் இலக்கியத்துள் நயம் கொழிக்கும் ஒன்றாக பழ மொழிகள் வழங்கப்பட்டு, வாழ்வோடு வற்றாப் பெருக்காய் வளங்கொழிக்கின்றது. முன்னோர் தம் வாழ்வில் கண்ட அனுபவங் களின் திட்டலாய் ஆளப்படுபவை பழமொழி களில் பார்க்கமுடிகிறது. சென்ற சமுதாயத் தவரின் எச்சங்களை அறிவதற்கு பெரிதும் துணை நல்கின்றது. கற்பனைக் கலப்புகள் இல்லாத இலக்கிய வடிவமாய் ஏற்றம் பெறுகிறது. யாரினால் எப்போது ஆக்கப் பட்டதென்பதை அறுதியாக கூறமுடியாது. மக்களின் பொதுச் சொத்தாய் அன்று தொட்டு இன்றுவரை நிலவி நிற்கிறது. பழமொழிகள் படிப்பறிவுள்ள மக்களின் நாவில் மட்டுமன்றி படிப்பேதுமறியாப் பாமரர் வாழ்விலும் பயிற்று வருகிறது.

பலநூறு பழமொழிகள் செவ்விய மொழி வழக்கைப் பெற்று ஏடுகள் தோறும் இடம் பெற்று வருகின்றன. இன்னும் பலநூறு மொழிகள் செம்மை பெறாது பொதுப்பேச்சு வழக்கினை ஒட்டியதாக நாள் தொட்டு வாய் மொழியாய் வழங்கப்பட்டு வருவதை அறியக் கூடியதாய் உள்ளது. இடத்துக்கிடம் இம்மொழிகளின் சொல், வசன அமைப்புகள் விற்கப்பட்டு வழங்கப் பெறுவதையும் காணக்கிடக்கிறோம். நடைமுறை வாழ்வின் அனுபவப் பிழியலாக குறுகிய வாக்கிய வடிவம் கொண்டதாய் காணப்படுகிறது. பழமொழிகளானது. பொறுக்கியெடுத்த தெள்ளிய சொற்களைக் கொண்டது. அழுத்தமான, கனதிமிக்க செய்திகளை ஆழமான பொருள் பொழிப்புடன் கூறி நிற்கின்றன. தோண்டத் தோண்ட நீர் பெருக்கெடுப்பதைப் போன்று ஏட்டிலும், நாவிலும் தோன்றத் தோன்ற என்றும், எங்கும் வாழும் தன்மை மிக்கதாய் மிளிர்கின்றன.

பழைமை மிகுந்த இம்மொழிகள் எஞ்ஞான்றும் பழம் போன்றதாய் இனிக்கும் சுவை நிறைந்ததாகும். வாழ்க்கைக்கு நெறி காட்டும் நீதிக் கருத்துக்கள், நற் போதனை கள் போன்றதை ஈர்ந்து நிற்கிறது. காலம் காலமாக வாழ்வுடன் ஒட்டி உறவாடும் பழக்க வழக்கங்கள், வழக்காறுகள், வாழ்வியல் பாங்கு, படிப்பினைகள், சிந்தனைக் கீற்றுகள் என்பவையே பழமொழிகளின் உள்ளடக்கமாகும். பண்பாட்டுக் குன்றுகளின் சுனையூற்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவம் தாங்கி நிற்கின்றன. ஔவைப் பிராட்டியாரின் நீதிப் பாடல்கள், தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறள் சிந்தும் நல்லியற் கருத்துக்களுக்கு ரிஷிமூலமாய் பழமொழிகள் பங்காற்றி நிற்பதையும் மறுப்பதற்கில்லை.

கிராமப்புறங்களில் வாழும் பேயரறியா பெரியோர்களின் மதிநுட்பத்தை வெளிப்படுத்தும் பழ மொழிகள் பெரிதும் குறிப்புப் பொருளையோ சுட்டி நிற்கின்றன. பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் எழுத்தாளப்படுவதால், சொல்பவற்றை வலிமையோடும், திண்மையோடும் உரைப்பதற்கு உதவுகின்றது. எடுத்த பொருளை பொலிவுடன் கூறுவதற்கும், அழகுடன் காட்டுவதற்கும் பெரிதும் பயன் நல்கின்றன. செவி வழியாய் வந்து செல்லும் இம் மொழிகள் மட்டக்களப்பு தமிழகத்தின் மக்களுக்கே உரித்தான பழமொழிகளாய் வழக்காடப்படுவதை உணர முடிகிறது. அதிலும், குறிப்பாக சம்மாந்துறை சூழ் நிலப்பகுதியில் சீவனம் செய்யும் மக்களிடையே வாய் மொழியாக பலநூறு பழமொழிகள் பயிலப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை செம்மொழியற்ற மொழிப் பயன்பாட்டை உள்வாங்கி இருப்பது குறிப்பிடத்தக்க தாகும். எடுத்துக் காட்டாக சில மண்வா சனை மிக்க பழமொழிகளையும் அவற்றின் குறிப்பு விளக்கங்களையும் நோக்குவோம்.

முஸ்லிம் பொதுமக்களிடையே பெரிதும் ஊடாடும் பழமொழிகளில் ஒன்று, 'ஊரார் கோழி அறுத்து உம்மா பெயரில் கத்தமா?'' 'கத்தம்' என்பது இறந்தவர் நினைவாய் இடம் பெறும் சடங்காகும். இந்நிகழ்வு இஸ்லாம் விதித்த கடமைகளுள் ஒன்றாக இல்லாதிருப்பினும், தொன்று தொட்டு நிகழப்பெறும் ஒரு சடங்காகவே கொள்ளப்படுகிறது. இறந்தவர்க்காக மூன்றாம், ஏழாம், நாற்பதாம் தினங்களில் உறவினர்களையும், சுற்றத்தவர்களையும் அழைத்து உணவு பரிமாறலுக்குப் பின்னர் இறைவனை பிரார்த்தனை புரியும் நிகழ்வாகும். இது இந்துக்கள் இறந்தவர் நினைவாக செய்யும் ''பிதிர்க்கடனை' ஒத்ததாகும். இப்பழமொழியைப் பார்ப்பின் நற் காரியங்களுக்கு தீய வழிகளில் இருந்து பெற்றுக் கொண்டதை பயன்படுத்தல் தகுமா? என்பதாக ஏளனம் செய்கிறது.

''கொண்டைக்கு தக்கதாகத்தான் கோதிக் காட்ட வேண்டும்.'' என்னும் பழமொழியானது, இருக்கின்ற அளவைக் கொண்டு தான் எதையும் செய்ய வேண்டுமென்பதை உணர்த்தி நிற்கிறது. ''தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு'' என்னும் பழ மொழியைப் பார்ப்பின் எப்படித்தான் நெருங்கிய உறவாய் இருப்பினும் சில விடயங்களில் விலகியே செய்ய வேண்டுமென்பதை விளக்கி நிற்கிறது. ''குஞ்சுக் கோழி என்றாலும் குனிந்துதான் அறுக்க வேண்டும்.'' உயர்ந்த நிலையினை உடையவராய் இருப்பினும் பணிவு கொள்ளுமிடத்தில் ஒழுகித்தான் செயலாற்ற வேண்டுமென்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. ''மாடு நின்று தின்னும், வீடு இருந்து தின்னும்'' என்னும் மொழி பொருளாதார யதார்த்தத்தை பிட்டு வைக்கிறது. வீடுகட்டுதல் என்பது இன்றும் வாழ்வின் பெரும்சுமைதான். செல்வத்தை ஓசை படாது ஏப்பம் விடும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

''கையாடினால்தான் வாயாடும்'' ஏழைத்தொழிலாளர் என்றும் உழைத்தால்தான் வாழ்க்கை வண்டி நகரும் என்பதை இடித்துச் சொல்கிறது. ''ஆனை அடிப்பதற்கு முன் தானே அடித்து சாக வேண்டாம்'' என்ற பழமொழியானது வாழ்வின் தத்துவப் பார்வையை விளக்குகிறது. துன்பம், பிரச்சினை தன்னை பீடிப்பதற்கு முன்பே அவை தன்னை உறுத்தி விடுமே என்று அஞ்சுபவர்களின் நெஞ்சுக்கு உறுதி காட்டுகிறது.

''ஆமை ஆயிரம் முட்டை இட்டு அமைதி காக்க கோழி ஒன்றை இட்டு கொக்கரிக்குமாம்'' என்ற சிந்தனை மொழியானது அறிவுடையோரும், நிறைவுடையோரும் அதிக ஆக்கப்பணிகள் செய்து விட்டு அமைதி காக்க ஓரிரு விடயத்தை செய்து விட்டு தன்னை பீற்றித்திரியும் குறைமதி உடையோரைக் குத்தலாய்ச் சுட்டிநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாச்சியார் ஊற்றினால் நான்கு மாதத்தில் காய்க்கும் ஆச்சியார் ஊற்றினால் ஆறு மாதத்தில் காய்க்கும்'' என்ற அறிவு மொழியை நோக்கின், உரியவரே தன் பணியை செய்வதால் விரைவில் முடிந்து பலன் கிட்டும். அதே வேளை பிறரைக் கொண்டு செய்விப்பதால் எதிர் பார்க்கும் பலனை விரைவில் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை தெள்ளியமாய் உரைக்கிறது. ''வீதியில் அலங்காரம், வீட்டினில் ஓங்காளம்'' என்ற மொழியானது பகட்டை விரும்பும் போலிகளை உரித்துக் காட்டுகிறது. பிறரிடம் பெருமையாய் பீற்றிக் கொள்ளும் வேளை, வீட்டிலே வெற்று விளாங்கனியாய் சிறப்பிழந்து சிறுமைப் படுவர் என்ற கருத்தினைக் காட்டுகிறது.

''ஊசி ஊட்ட இடம் கொடுத்தால் உலக்கையை ஓட்டுராரே'' என்ற மொழியானது பிறர் துன்பம் நீக்குதற்காய் நிலையறிந்து உதவி செய்து விடின், அதைச் சாதகமாக்கி உபத்திரவம் செய்பவர்களுக்கு நல்லுபதேசம் நவிலும் ஒன்றாய் ஒளிர்கிறது. ''மாடு உசும்பாமல் மணி உசும்பாது'' என்னும் பழமொழி காரண காரியத்தை விளக்கி நிற்கிறது. ஏதும் நிகழ்வுகள் இடம்பெறுவதாய் இருந்தால், தக்க காரணம் இருக்கத்தான் செய்யும் என்பதை விளக்குகிறது.

''கதிருத்தலை கண்ணில் அடிப்பட்டால் கறையான் கண்ணுட்டும் பார்க்காதாம்'' இந்த படிப்பினை கொடுக்கும் பழ மொழியானது அனுபவத்தால் சூடு பெற்று துன்பம் அடைந்தவர்கள் அதை மீண்டும் நாடாது தவிர்த்துக் கொள்வர் என்பதை விளக்குகிறது.

''பெட்டைக் கோழி கூவி பொழுது விடியாது'' இந்த சிறப்பு மொழியைப் பார்ப்பின், அதிகாலையில் சேவல் கூவும் என்பதே பொதுவில் நோக்கப்படுகிறது. சேவல் கூவத் தொடங்கும் வேளை பொழுது புலரப் போகிறது என்பதை தற்குறிப்பேற்றமாய் காட்டி நிற்கிறது. பொறுப்பாக்கப்பட்டவரே குறித்த காரியத்தை செய்வதே சிறப்புக்குரியதாகும். அதுவே செவ்வையாய் முடியக் கூடியதுமாய் இருக்கும்.

''குரைக்கும் நாய் கடிக்காது'' என்பதை நோக்கின் ஊரைக் கூட்டி ஊதிப் பெருப்பிப்பதால் ஏதும் உருப்படியாய் ஆகாது என்பதை அற்புதமாய் காட்டுகின்றது. ''வயிறு நிறைந்தால் வண்டு நாறும்'' என்பதாக பிரயோகிக்கப்படும் மொழியின் விளக்கத்தை பார்ப்பின், தேவையை நிறைவேற்றக் கிடைப்பதே திருப்தி கரமானது. அளவுக்கு அதிகமாய் கிடைப்பதானது தீய விளைவுகளை பெரிதும் ஏற்படுத்தும் என்பதை பக்குவமாக பறை சாற்றுகிறது.

''வாயில் ஓதல் இருந்தால் வழியில் சாப்பாடு'' என்னும் பழமொழி அறிவுடையோரின் சிறப்பினைச் சொல்கிறது. கற்றவர்க்குப் போகுமிட மெல்லாம் சிறப்பு உள்ளதென்பதை உறுதியாய் உரைக்கின்றது. சுட்டிப்பாக சமய வேதத்தை கற்பவரை சமூகத்தினர் சங்கைப் படுத்துவர் என்பதையே உணர்த்துகின்றது.

இவ்வாறு சான்றோர்களின் பட்டறிவால் பிறந்து, பிறருக்கு உதவும் நற்கருத்துக்களை கொடுப்பதே பழிமொழிகளாகும். என்பதை மேலே தரப்பட்ட உதாரணங்கள் புலப்படுத்துகின்றன.

நாட்டார் இலக்கியத் தொகுதியில் ஒரு பகுதியாய் அரசோச்சும் இவை என்றும் அழியாது நிலை பெற்றுவிட்டது. இனிய, எளிமையான எதுகை மோனை பெற்றமைந்ததாய் பிரகாசிக்கின்றன. அறிவுரைகளையும், தெளிவுரைகளையும் சிந்தனைகளில் விதைத்து மனித சமுதாயம் சீர் நிறக சிறப்பாக பங்காற்றுகின்றமை ஈண்டு மகிழத்தக்கதாகும்.

இஸட்.எம்.மன்சூர் ஆசிரிய ஆலோசகர்.
வலயக் கல்வி அலுவலகம்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணைத்து நலம் காத்திடுவாய்!

காடு வெட்டிக் களனி கண்டு
கஷ்டமுற்ற பாட்டாளி
நாடு கெட்டுப் போனதிலே
நலி விழுந்து போயினரே

குஞ்சிச் சம்பா நெல் விதைத்து
கூடச் சில பயிர் நாட்டி
கிஞ்சித்தும் பஞ்ச மின்றி
களிப்புற்றார் இன மெங்கே!

சிங்களவர் தமிழர் முஸ்லிம்
சேர்ந்து ஒன்றாய் வாழ்ந்த காலம்
மங்கியதே இன வெறியால்
மீள ஒரு வழிவருமா!

அந்தி பட்ட நேரத்திலும்
அச்சமின்றி உலா வந்தோம்
எந்த வீட்டு வாசலிலும்
ஏகிப்போய் நட்பாய்ந்தோம்!

இந்த நிலை இன்றிலையே
என்ன விதிக் கொடுமை ஐயா
சொந்த மண்ணிற் சுதந்திரமாய்
சேர்ந்து வாழ முடியலியே!

முத்துப் பண்டா முகம்மது குமார்
முக்குடும்பம் ஒன்றிணைந்து
ஒத்து வேலை செய்த தெல்லாம்
ஓரம் கட்டிப் போன தென்ன!



சுய நலத்தில் வெறி பூண்டு
சூழ்ச்சி யிட்ட சிலபேரால்
பயமற்று வாழ்ந்த குலம்
பிரிவினையில் மூழ்கியதே!

கல்வி நிலை வளர்ந்தோங்கி
கலை ஞானம் மிகைத்திருந்தும்
பல்லினத் துட் பிரிவாச்சே
பகையாளி மிகையாச்சே!

ஏனிந்த இழி செயல்கள்
இவைகளினால் என்ன பயன்
மனித குல சமுதாயம்
மடமை தனில் மூழ்கியதே!

ஆளுக்கு ஆள் இடர் பட்டு
ஆயுதத்தைக் கையேந்தி
நாளுக்கு நாள் கட்டுத்தள்ளும்
நீசத் தனம் முறையாமோ!

மதப் பெயரில் சிலை எழுப்பி
மாலையிட்டு வணங்கினாலும்
மதம் பிடித்த குணம் மாற
மாற்று வழி கண்டோமா!

தமிழர் தினம் தளைத்தோங்க
தாபமிடும் கவின் தமிழே!
அமிழ் தூறும் தமிழிணைப் போல்
அனைத்து நலம் காத்திடுவாய்!

**மூதூர் "கலைமேகம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய நலக் கல்வியில் முக்கியம் பெறும் "சூழலியல் கற்கை"

## அறிமுகம் :

இன்று உலகையே வெகுவாக பாதிக்கும் மிகப்பெரிய பிரச்சனையாக அமைவது சுற்றுச்சூழல் பாதிப்பாகும். வளர்ந்து வரும் உலகமாற்றங்களும், நாடுகளுக்கு இடையிலான பொருளாதார, மற்றும் வல்லரசு மேலாதிக்கப் போட்டியும் மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன. சூழலை பாதுகாப்பது தொடர்பான சிந்தனை காலங்காலமாக மாநாடளவில் அந்தந்த நாடுகளின் அரசமட்டத்திலும் பொதுவான அமைப்பு மட்டத்திலும் பேசப்படும் விடயமாகவே இருந்து வந்துள்ளது. நடைமுறையில் பாதுகாப்பு செயற்பாடு என்பது கேள்விக்குரியதாகவே அமைகிறது. பதிவுகள் அளவில் மிக துல்லியமாகவும் தெளிவாக வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வரையறைகளை ஐ.நா.சபை முதல் சாதாரண கிராமிய அமைப்புவரை அவதானிக்க முடிகிறது.

சூழல் பாதுகாப்பு என்ற எண்ணவாக்கத்தை சமூகமட்டத்தில் சட்டரீதியாக அமுல்படுத்துவது என்பது பயனற்ற விடயமாகவே தற்போது சூழலியலாளர்களாலும் கல்வியியலாளர்களாலும் மற்றும் சாதாரண மக்கள் மத்தியிலும் உணரப்பட்டுள்ளது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சுயசிந்தனையில் எதிர்கால தற்கால கருத்தியலை கவனத்தில் கொண்டு பரந்த அளவிலான மனப்பான்மையுடன் செயற்படும் பொழுது தான் சூழல் பாதுகாப்பு என்பது சாத்தியமான செயல்வடிவமாக மாற்றம் பெறும். இத்தகைய சுய சிந்தனை மற்றும் மனப்பாங்கை சமூகமட்டத்தில் பரவலாக்குவது என்பது திடீரென சாத்தியப்படாது. இதனை வரன்முறையான ஓர் ஒழுங்கமைத்த கல்விக் கலைத்திட்டம் ஊடாகவே சிறுவயது முதல் படிப்படியாக பாடசாலை மட்டத்தில் இருந்து வளர்க்க வேண்டும். இத்தகைய சூழல் பாதுகாப்பு கல்வி என்ற அடிப்படையை வலியுறுத்தும் வகையிலேயே இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

## சூழல் கல்வியின் முக்கியத்துவம்.

உலகளாவிய ரீதியில் சூழல் கல்வி பற்றிய சிந்தனை மிக வலுவடைந்துள்ளது அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் முதல் சூழலில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் வரை மனிதன் பல்வேறு அடிப்படையில் பாதிப்படைந்துள்ளான். இப்பாதிப்புக்களில் இருந்து எமது புவிச்சூழலை பாதுகாப்பது என்பது ஒவ்வொருவருடைய பொறுப்பும், கடமையும் ஆகும். சூழல் பிரச்சினை என்பது தனி நாட்டினதோ அல்லது தனிநபரினதோ இல்லை. உலகளாவிய பிரச்சினை சூழல் பிரச்சினையை இனங்காணவும் இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 1972 இல் ஸ்ரொக்கோமில் நடைபெற்ற ஐ.நா. மானிடச்சூழல் மகாநாட்டில் சூழல் சார் கல்வி பற்றிய அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன் 1977இல் திபிலிசியில் நிகழ்ந்த உலகநாடுகளுக்கு இடையிலான சூழற்கல்வி மகாநாட்டிலும் இக்கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டது.

## சுற்றுச் சூழல் கல்வி

கல்விச் செயற்பாடுகளில் இன்று சுற்றுச் சூழல் தொடர்பான கற்கையும் முக்கியம் பெறுகின்றது சுற்றுப்புற இயற்கை சூழ்நிலை, உயிரிகள் வாழ்வதற்கு ஆதாரமானவை. நிலம், நீர், இயற்கை வசதிகள், செடிகொடிகள், மரங்கள் அடங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகள், காற்று மண்டலம் என்பன மனிதவாழ்க்கையை தாக்கும் சூழ்நிலை காரணிகளாக அமைந்துள்ளன. இவற்றின் அளவு அல்லது விகிதம் வாழ்க்கை சாத்தியமற்றதாகி போய்விடும் என்று சூழலியலாளர்களால் உணரப்பட்டுள்ளது இக் கருத்தியல் பற்றிய தெளிவு மக்கள் மத்தியில் பரவலடைய கல்வி முக்கிய கருவியாக அமைகிறது. அத்துடன் தேச அபிவிருத்திக்கும், வாழ்வியல் மேம்பாட்டுக்கும் வேலை வாய்ப்புக்கும் அடிப்படையாக அமைகிறது.

சுற்றுச் சூழல் கல்வி என்பது, சூழலியல் விஞ்ஞானி, ( Environmental Sciestist) சூழலியல் பொறியியலாளர், ( Environmental Engineer) சூழல் திட்டமிடலாளர், ( Environmental Planner) சூழலியல் ஆய்வாளர் (Environmental Consultant) என பல்வேறு கூறுகளில் தற்காலத்தில் உலகளாவியரீதியில் சூழல் கல்வி விரிவடைந்து வருகிறது நிலம், நீர், வளி, காற்று மண்டலங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த சூழல்சார் பாதுகாப்பு செயற்பாட்டு விடயங்களை, எதிர்கால மனித வாழ்வு என்ற நீண்ட பார்வையில் வலியுறுத்துவதாகவும் அமைகிறது.

### சூழல் கல்வி கற்பிப்பதற்கான அணுகுமுறைகள்

எமது சுற்றுப்புறச்சூழல் எவ்வாறு மாசடைகின்றது? அதனால் ஏற்படும் விளைவுகள் எவை? மாசடைவதை தவிக்கும் முறைகள் எவை? சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவது எப்படி? அதற்கான வழிமுறைகள் என்பவற்றை இளம் சந்ததியிடம் அறியச்செய்வதே அடிப்படை நோக்காக கொண்டு, சமுதாயத்துக்குப் பொருத்தமானதாகவும், தனக்கு பயனுடைய வகையில் அமையும் தன்மையில் பிரச்சினையை அணுகி தீர்வு காணும் திறமையை மாணவரிடையே வளர்க்க வேண்டும். இதற்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் முறை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

* தனிப்பாட அணுகுமுறை என்பது சுற்று புறக் கல்வியை தனி ஒரு பாடமாக கற்பிப்பதைக் குறிக்கும்.
* பாடவேளை முறை என்பது, பாடவேளையை மட்டுப்படுத்தி ஒதுக்குதலை குறிக்கும்.
* பாடங்களை வகுத்து, அலகுகளாக்கி (Unit Approach) முறைமையை கையாளுதல்.
* ஒருங்கிணைந்த அணுகுமுறை என்பது (Integrated Approach) ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைந்து கற்பிப்பது.

மேற் கூறப்பட்ட அணுகுமுறைகள் ஆரம்ப மற்றும் இடைநிலை மட்ட வகுப்புகளுக்கு கையாளப் பயன்படுத்தும் முறைகளாக உள்ளன. தற்கால பாடசாலை செயற்பாடுகளின் விரிவாக்கத்துக்கும், ஆசிரியர் வேலை அமைக்கும் மத்தியில் சுற்றாடல் கல்வி ஓர் பாடமாக கற்பிக்கப்படுவது தேவைதானா என்ற கேள்வியும் தோன்றத்தான் செய்கின்றது கூடியளவு ஒன்றிணைந்த பாட அமைப்பின் ஊடாக செயற்படுத்துவதே பொருத்தமானதாகவும் சாத்தியப்படக் கூடியதாகவும் அமையும்.

### சூழல் கல்வியின் அடிப்படை நோக்கு

சுற்றுப்புறப் பாதுகாப்பு என்பது வெறும் சட்ட நடைமுறைகள், மாநாடுகள் ஊடாக சாத்தியப்படக்கூடியதன்று இதனை கருத்தில் கொண்டு சமூகமட்டத்தில் ஒவ்வொருவரும் தானாக சுயசிந்தனையில் பரந்த மனப்பான்மையுடன் செயற்படும் வகையில் இளம் தலைமுறையினரிடையே அறிமுகம் செய்யும் வகையில் சூழ்ல்கல்வி சிந்தனை விதைக்கப்படுகிறது. அத்துடன் மக்களிடையே சூழல் பற்றிய அறிவு, மனப்பான்மை, திறமைகள், மதிப்பீடு, பங்கேற்பு, விழிப்புணர்வு, எதிர்காலத் திட்டமிடல், முன்னெச்சரிக்கையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களை பயன்படுத்தல் போன்ற விடயங்களில் தெளிவு பெறச் செய்தல் அவசியமாகிறது.

### ஆசிரியரும் சூழல் கல்வியும்.

ஆசிரியர் மாணவர்களுக்கு பல்வேறு நுட்பங்களை, விளக்கும் வகையில் இக்கல்வியை வழங்குவது மிக முக்கியம். சூழல் மீதான அக்கறையை ஏற்படுத்த மாணவரை சுற்றுப்புறச் சூழலை பாதிக்கும் வகையில் ஏற்ற ஒரு செயலையும் செய்ய மாட்டேன் என உறுதி மொழி எடுக்கச் செய்ய முடியும். உலகச் சுற்றுச் சூழல் நாள் சுற்றுச்சூழல் திருவிழா என்பவற்றை மாணவரை கொண்டு ஒழுங்கு செய்தல். மேலும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுப் போட்டிகள், பொருள் பொதிந்த வாசகங்களை எழுதுதல், சுற்றுச் சூழல் வட்டம் (Environmental Club) ஒழுங்கமைக்க வழிப்படுத்தல், சுற்றுச்சுழல் தகவல் முனை (Environmental Corner) என்பவற்றை பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் நடைமுறைப்படுத்த மாணவரை வழிப்படுத்த முடியும். மேலும் களப்பயணம், மரம் நடுதல், சுற்றுச் சூழல் நடைபயணம், சுற்றுச்சூழல் குறித்த ஆய்விதழ்கள், இயற்கை வளங்கள் தத்தெடுத்தல், என்ற பல்வேறு அடிப்படையில் ஒழுங்குபடுத்த முடியும்.

### சூழல்கள் அறிவு விருத்திக்காக பொதுவழிமுறைகள்

சூழல்சார் சிந்தனையை மாணவர்களின் பாடசாலை செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு, பின்வரும் திட்டங்கள் ஊடாகவும் அவனை ஈடுபடுத்த முடியும். பொதுவாக ஊடகங்களின் மூலம் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை சூழல்சார் விழிப்புணர்வை மையப்படுத்தி வழங்கமுடியும். மேலும் குடும்ப வாழ்க்கை கல்வி நிகழ்ச்சித் திட்டம் ஊடாக சனத்தொகை, போசாக்கு பற்றிய சிந்தனையையும், பெண்கல்வி விரிவாக்கம், அபாயக் கல்வி நிகழ்ச்சி திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாகவும் சூழல்சார் கல்விச் சிந்தனையை வளர்க்க முடியும்.



வனவள முகாமைத்துவம் பற்றிய நுண்கலைத் திட்டம், கடல்வளம் தொடர்பான கற்கை நெறிகள், இயற்கை அனர்த்தம் பற்றி முன் பாதுகாப்பு கல்வி திட்ட நடைமுறைகளை ஒழுங்கு செய்வதன் மூலமும், சூழல் கல்வி பற்றிய மாணவர் பங்கு கொள்ளும் மாநாடுகள் செயலமர்வுகளை நடாத்துவதன் மூலமும் பயன்பெற முடியும்.

" Think Globally and Act Locally "

என்ற சிந்தனையில் தமது சூழல் பற்றிய பிரச்சினைக்கு

**அழகாய்ச்சிரித்தாய் கடல் அலையே**
**இழகிய நீயேன் பொங்கிப்பாய்ந்தாய்**
**இதழ் குவித் தழித்தது போதும் - இனி**
**அணைத்துக் காத்து வாழவைப்பாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகாண வழி ஏற்படும் பொழுதுதான் தேசிய சூழல் பிரச்சினை தீர்வடைய சாத்தியப்பாடு உண்டாகும் உதாரணமாக 1977ஆம் ஆண்டில் கிரீன் பெல்ட மூவ் மெண்ட (Green Belt) என்ற அமைப்பை கென்யாவை சேர்ந்த பெண்மணி " வாங்கரி மாத்தாய் " தொடங்கி இதுவரை 3 கோடி மரங்களை தமது நாட்டில் நாட்டியுள்ளார் இத்தகைய வழிமுறைகளை முன் எடுத்துக்காட்டாக காட்டவேண்டும்.

அரச ஊக்குவிப்பு முறையாக அமையவேண்டும் சுனாமியில் இருந்து மலேசியா கூடியளவு அழிவில் இருந்து தப்பிக்க அங்குள்ள மாங்குரோவ் காரணம் என மலேசிய பல்கலைக்கழக சுற்றுசூழல்துறை பேராசிரியர் தெரிவித்துள்ளார். அதே போல மாலைதீவு பாதுகாக்கப்பட அங்குள்ள பவளப்பாறைகளே மிக முக்கிய காரணம். இதனால் அந்நாட்டு அரசு இவற்றினை பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளது அதே போல எமது நாட்டிலும் உள்ள பல்வேறு வளங்களை பிரதேச வேறுபாடு இன்றி பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சூழல் பாதுகாப்பு பிரதேசங்களை முக்கியப்படுத்தி பிரகடனம் செய்தல். உதாரணமாக 623 ஹெக்டேயர் பரப்பளவு உள்ள மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு பகுதியாகப் (Biosphere Reseve) பிரகடனம் செய்யப்பட்டுள்ளமையால் இளம் சமுதாயத்தினர் மத்தியில் இப்பகுதியின் முக்கியத்துவம் ஈர்க்கப்பட்டுள்ளது. இவ் வளைகுடாவைச் சுற்றி 21 பவளப்பாறை தீவுகள் தேசிய கடல்வாழ் உயிரினங்களின் பூங்கா (National Marine Park) என வரையறை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாற்றுச் சக்தி மூலங்களை அறிமுகம் செய்வதன் மூலம் சூழல் பாதிப்பை தவிர்க்க முடியும். மாற்றுச் சக்தி பாவனை அறிவியலை இளைய தலைமுறையின் மத்தியில் பரவலடையச் செய்ய வேண்டியுள்ளது. இயற்கை சக்தி மூலங்கள், கடல்நீர், அணுசக்தி, மூலம் இயங்கும் வாகனங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

மழை நீரை சேமிக்கும் கல்வி செயற்திட்டத்தை எமது நாட்டில் அறிமுகம் செய்தல். இந்தியாவில் இக்கற்கை முக்கியம் பெற்றுள்ளது. பல்கலைக்கழக மட்டத்தில் இது தொடர்பான அறிவுபுலம் உருவாக்கப்பட்டு நிலத்தடி நீர் மேலாண்மை முகாமையாளர், நிலத்தடி நீர் ஆலோசனையாளர் போன்ற வேலைவாய்ப்பு பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு இது போன்ற கற்கையை எமது நாட்டிலும் அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது.

சுற்றாடலில் இடம்பெறும் மாற்றங்களை உடனுக்குடன் அறியும் வகையில் சர்வதேச தரத்திலான சூழல் தகவல் மையம் ( Environmental Information Centre) எமது நாட்டில் அமைக்க வேண்டியுள்ளது. அதனூடாக எமது மாணவ சமுதாயம் பல்வேறு கற்கையை பெற வாய்ப்புண்டு. சமுதாய மைய கல்வி திட்டச் செயற் பாடுகளினூடாகவும் முறைசாராக் கல்விப் பிரிவுச் செயற்பாடு ஊடாகவும் சூழல்கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். அத்துடன் இளைய தலைமுறையினருக்கு பேண்தகு அபிவிருத்தி பற்றிய சந்தனையை வலுவடையச் செய்வதும் முக்கிய செயற்பாடாக உள்ளது. வருங்கால சிந்ததியினருக்கு தரிசுநிலங்களையும் பாலைவனங்களையும் பரிசாக கொடுப்பதில் எந்த வித அர்த்தமும் இல்லை. ஆளுக்கொரு தோப்பு வளர்ப்போம் என்னும் புதிய சிந்தனையை நேசிக்கும் தலைமுறையினரை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர் கையில் உள்ளது. " நான் செய்யும் எந்தச் செயலாலும். சுற்றுப்புறச் சூழலுக்கு பங்கம் வரக்கூடாது என்ற மனப்பான்மை உணர்வை சுயமாக மாணவர் உருவாக்கிக் கொள்ள சுற்றுச் சூழல் கல்வி வழிகாட்டுமானால் அதுவே மிகப் பெரிய சூழல் பாதுகாப்பு செயல்முறை திட்டமாக அமையும்.

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் (ஆசிரியர்)
யா/சரவணை சின்னமடு றோ.க.த.க பாடசாலை
தீவகக்கல்வி வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பனி மூசை

றிஸ்வியூமுஹம்மத் நபீல்
கல்முனை. 06.

எண்ணெய் விசிறியும்
பனி மூசை அடிக்கிறது
தத்தி தத்தியாய்
பெண்டுகள் கைபோட்டு
புல் எடுத்த வேளாண்மை
காட்டுக் குருவி
காடை
கண்ணில் படாமல்
தொட்டுச் செய்த வயல்

குலுங்கி மார்பாடும்
கொண்டையில் நோய் வந்து
உடல் வெளிறி
குனிந்த எனது குமர்
நிமிரவே இல்லை இன்னும்

காண்டா மிருகம்
துயில் கொள்ளும் போதாகுதல்
மேய்ந்திருந்தால்
மனம் ஆறி விட்டிருக்கும்...
பரண் வைத்து
காவல் காத்து
முழித்திருக்க
அதுவும்
போர் ஓய்ந்த பொழுதொன்றில்
புழுவுக்கென்ன கிடக்கு



பயந்த சீவன்
என் பச்சை வயல்
நாவறண்டு
காய்ச்சலெடுக்கும் தறுவாயில்
சந்தனம் குழைத்து
வெயில் பூசி
கனக்கின்ற சூட்டிலும்
அசையாமல்
நெளிகிறது புழு

தயிர்ச்சட்டி போலிருந்த
வயலில்தான் நெல்லெறிந்தோம்
மூனரை மாதந்தான்
கெட்ட கேட்டுக்கு
பாட்டம் பாட்டமாய்
கிளி வந்ததும்
கொத்த அங்கேது குடலை
கதிர் பறிந்து
கலகலக்கும் வயதில்...

வரம்படியில்
கால் கடுக்க நிற்பானேன்
முடிவெடு
அடுத்தாள் கீத்துக்குத்
தாவும் முன்!!



" பாடசாலையிலும் அதற்குப் புறம்பான நேரங்களிலும் கூடக் கல்விக்காகவே உழைத்து மகிழ்கின்ற ஆசிரியர் சமூகம் தனது வேதன உயர்வுக்காகவும், சம்பளப்பாக்கிக்காகவும், பதவி உயர்வுக்காகவும், கல்விப்பணிமனைகளுக்கு அலைந்து திரிவது மனவேதனையைத் தரும் ஒன்றல்லவா? நல்லாசிரியர்களின் அடிப்படைத் தேவைகள் இனங்காணப்பட்டு கல்வி நிர்வாகிகளினால் நிறைவேற்றி வைக்கப்படும் பொழுது கல்வி அபிவிருத்தியின் உச்சப்பயனை அடைந்து கொள்ளலாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்து கொள்!
# இல்லையேல்... மடிந்து போ!

மனிதா!
நீ நடந்தால் புல்லும் சாகாது ஆனால்......
உன் உள்ளம் அதிர்ந்தால்..........
இலக்குத் தப்பாது
இறவி நெருங்கிடும் வையகமாம் இதற்கு!
பிரகாசமுடையதோ இத்தரணி?
இல்லையில்லை!
பிரம கத்தி நிறைந்த போர்க்களம்
துவண்டிருக்கும் உனை மிதித்தால்
துடித் தெழுவாய்!
இருந்தாலும்
யாவையும் எல்லைப் படுத்தப்பட
உன் பொறுமைக்கு மட்டும் ஏனோ? ? ?
பூமி கூட எல்லையாகாது

உன் நாமதேயம் நரம்புடைத்தல்ல!... உலகைச்
சிருஷ்டிக்கக் கூடியளவு சிக்கனவுடையது
நீறு பூத்த நெருப்பாகி விடு மனிதா......
நீ சாது! நீ மிரண்டால் .....?
படிந்து போனால் மடிந்திடுவாய்!
இடித்துரைத்தால் ஒடிந்திடுவாய்! - எனவே
துணிந்து செல்!
வெற்றிக் கொடியோடு
துணிந்து வா!

இராதன் கைப் பறவையாய் நீ......வேண்டாம்!
நீ நினைத்தால் கிரிசன் தலைக் கங்கையாகிட முடியும்!
ஐயகோ! உன் சாகசங்கள் உனக்குள்ளேயே
வலிந்து உன் கரங்களை உயர்த்திடு!
தாய் நாட்டைக் காத்திடத் தாவிப் பாய்ந்திடு!
உன் பார்வையோ.....கைச்சரிகை!
சிலம்பம் பெற்றவை உன் கைகள்!
உன் தாயகமே உன்னிதய மூச்சு!
நானிலம் உனைக் கைகூப்பித் தொழுதிட
உனக்கு மட்டும் பொறுமையில் ஏன்
இந்தப் பாறை உள்ளம்?
பைங்கூழ் உனதுள்ளம் - அதில்
அரும்ப வேண்டும் தேசப்பற்று மொட்டுக்கள்
அவை விகற்பங்கள் இலாது
வெடித்து மலர்ந்து.....
உனை மதித்திடும் புல்லியரை
வேட்டமிடும் வரை
நிலைத்திருக்கச் செய்! - அதுவரை......
உதிர்ந்து விடாமல் பார்த்துக் கொள்!

ஏய்! மனிதா!!!
புரிந்து கொண்டு
வீறிட்டெழு!!!!!
இல்லையேல் .......
மடிந்து போய்
மண்ணாகிடு!!!!



ஸயிந்தவி அமிர்தகுலசிங்கம்.
புவியியல் சிறப்பு 2ம் பிரிவு
கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படாத கல்வி

தேசத்துக்குத் தேசம், மொழிக்கு மொழி காலத்துக்குக் காலம் கல்விக் கோட்பாடுகள் மாறுபட்டவையாகவே இருந்துவந்துள்ளன.

இன்றும் கூட கல்விக் கோட்பாடுகள் விரைவான மாற்றங்களைக் கண்டு கொண்டே இருக்கின்றன எனலாம்.

மாற்றமே உலகின் பொது நியதி. உலகில் மாறாது நிலைத்திருப்பது மாற்றம் ஒன்றே தான் என்பார்கள் அறிஞர்கள். "மாற்றலாம் வையகத்தில்" எனப்பாடுகிறார் மாணிக்க வாசக சுவாமிகள்.

இருப்பினும் எனக்குப் பிடித்தமான நிலையான கல்விக் கோட்பாடு ஒன்று உண்டு அது விளங்கிக் கொள்ளச் சற்றுக் கடினமானது. இருப்பினும் இருப்பினும் அதுவே சிறப்பானது என்பது எனது அபிப்பிராயம்

"கற்றவைகள் யாவும் மறந்துபோன பின்னும் எது உள்ளத்தில் எஞ்சியிருக்கிறதோ அதுவே கல்வி" என்றான் ஒரு மேலைத்தேசக் கல்வியியலாளன். அதுவே எனக்குப் பிடித்த கல்வித் தத்துவம்.

இதை மனப்பாங்கு என்று கருதலாமோ என்று நினைத்துப் பார்த்தால் இச் சொல்லின் பொருள் போதாது போல் எனக்குப் படுகிறது.

**தமிழ்மணி அகளங்கன்**

உண்ட உணவு முழுவதும் அப்படியே வாழ்நாள் முழுதும் வயிற்றினுள் இருப்பதில்லை. இருக்கவும் கூடாது அவை அன்றன்றே சமிபாடடைந்து ஊட்டச்சத்துக்களாகப் பிரிப்பட்டால் தான் உடலுக்குப் பயன்படும்

அந்த வகையது தான் கல்வியும் என்பது அவரது அபிப்பிராயம். உண்ட உணவு மறைந்து போய் அல்லது உருமாற்றம் அடைந்து ஊட்டச் சத்துக்களாவதுபோல கற்றவைகள் மறந்து போனாலும் அதனால் பெற்றவைகள் பயன்படும் என்பதே இதன் விளக்கம்.

ஆனால் தொழிற் கல்வியைப் பொறுத்தவரை இதன் பொருத்தப்பாடு மிகமிகக் குறைவு அல்லது அரிது என்றே சொல்லலாம்.

தொழிற்கல்வி பெருமளவிற்கு நேரடிப் பயன்பாடு கொண்டது. கற்றது மறந்து போனால் மறந்து போனது தான் எந்தப் பயன்பாடும் இல்லை.

இங்கே நேரடிப் பயன்பாடுடைய தொழிற்கல்வி கற்று அக்கல்வி பயன்படாமற் போய்ப் பரிதவித்த மூவரைப் பற்றிப் பாரக்கப் போகிறோம்.

### கசன் கற்ற சஞ்சீவினி வித்தை

மகாபாரதத்தின் ஆரம்பத்தில் இடம் பெற்றிருக்கும் ஒரு அருமையான கதை கசன் கதை. தேவகுருவாகிய கிருகஸ்பதியின் மகன் இவன்.

தேவர்களும் அசுரர்களும் பெரும் போர் புரிந்து இருதரப்பினர்களும் இறந்தழிந்து போன வேளைகளில் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் அமிர்த சஞ்சீவினி மந்திரத்தின் மூலம் அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் அசுர சேனா வீரர்களை உயிர்பெற்றெழச் செய்து கொண்டிருந்தார்.

இந்த மந்திரத்தை அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் மட்டுமே அறிந்திருந்தார் அதனால் தேவர்களால் அசுரர்களோடு தொடர்ந்து யுத்தம் செய்ய முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தைக் கைவிட்ட தேவேந்திரன் தனது குருவாகிய கிருகஸ்பதிமேல் கோபம் கொண்டான். சஞ்சீவினி மந்திரத்தை அவர் அறியாமல் இருந்தது தான் அவனது கோபத்துக்குக் காரணம்.

தேவேந்திரன் மனம் நொந்து தேவகுருவின்மேல் கோபம் கொண்டிருப்பதை அறிந்து குருவின் மகனான கசன் அந்த சஞ்சீவினி மந்திரத்தைத் தான் கற்று வருவதாகக் கூறிப் புறப்பட்டான். அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் சென்று சேர்ந்தான்.

தன்னை மாணவனாக ஏற்றுக் கொண்டு தனக்கு இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சஞ்சீவினி மந்திரத்தைக் கற்பிக்கும் படி பணிந்து வேண்டினான்.

சுக்கிராச்சாரியாரோ அவன் தேவகுருவின் மகன் என்பதை அவன் மூலமாகவே அறிந்து கொண்டு அவனது நேர்மையைப் பாராட்டி தனது சீடனாகச் சேர்த்துக் கொண்டார்.

சஞ்சீவினி மந்திரத்தைக் கற்பிக்க அவர் மறுத்த போதும் அவன் மாணவனாக இருந்து எப்படியாவது அவரது மனதில் இடம்பிடித்து அவரிடம் இவ்வித்தையைக் கற்றுக்கொண்டே திரும்புவது என்று பிடிவாதமாகக் காலங்கருதிக் காத்திருந்தான்.

மிகுந்த பணிவோடு அவருக்கு வேண்டிய பணிவிடைகளைக் குறைவில்லாமல் செய்து அவரது மனமாற்றத்துக்கான காலம் கருதிக் காத்திருந்தான்

தமது அசுர குருவாகிய சுக்கிராசாரியாரிடம் தமது எதிரிகளான தேவர்களின் குருவின் மகன் கசன் சீடனாக வந்து பணிபுரிவதைப்பார்த்து அசுர அசுரன் விடப்பன்மன் மிகுந்த கோபம் கொண்டான்.

சுக்கிராச்சாரியாரிடமிருந்து சஞ்சீவினி மந்திரத்தை அவன் கற்றுவிடக் கூடாது என்று கருதிய அவன் கசனைக் கொல்ல முயன்றான்.

குருவின் மாடுகளை மேய்த்துக் காட்டுக்குச் சென்ற கசனை விடப்பன்மனின் வீரர்கள் கொன்று துண்டு துண்டாக வெட்டி நாய்களுக்கு இரையாகப் போட்டுவிட்டார்கள.

கசன் மேல் பெருங்காதல் கொண்டிருந்தாள், சுக்கிரச்சாரியாரின் மகளான தேவயானி. கசன் மாலையாகியும் வீடு திரும்பாததையும் பசுமாடுகள் திரும்பியதையும் பார்த்துப் பரிதவித்த தேவயானி தன் தந்தையிடம முறையிட்டு அழுதாள்.

தனது ஞான திருஷ்டியின் மூலம் அசுரர்கள் செய்திருந்த கொடுமையைக் கண்டு கொண்ட சுக்கிராச்சாரியார்.

நாய்களின் வயிறுகளில் இரையாகிப் போயிருந்த கசனைத் தனது சஞ்சீவினி மந்திரத்தின் மூலம் உயிர்ப்பித்தார்.

நாய்களின் வயிறுகளைக் கிழித்துக் கொண்டு கசன் உயிர்பெற்று வெளிவந்து சேர்ந்தான் தேவயானி மிகவும் சந்தோஷம் அடைந்தாள்.

இன்னொரு தடவை தேவயானிக்காகப் பூப்பறிக்கக் காட்டுக்குள் சென்ற கசனை விடப்பன்மனின் வீரர்கள் கொன்று உடலை அரைத்துச் சமுத்திர நீரில் கரைத்துவிட்டார்கள்.

கசனைக் காணாது அழுது புலம்பிய தேவயானிக்காக சுக்கிராச்சாரியார் மீண்டும் தனது சஞ்சீவினி மந்திரத்தைப் பயன்படுத்தி கசன் உயிர்பெற்று வரும்படி செய்தார்.

இப்படிப் பலதடவைகள் அசுரர்கள் கசனைக்கொல்வதும், சுக்கிராச்சாரியார் அவனை எழுப்புவதுமாகக் காலம் கழிந்தது.

அசுரர்கள் மிகவும் புத்திசாலித் தனமான காரியமொன்றைச் செய்தார்கள். கசனைக் கொன்று அவனுடலை எரித்துச் சாம்பலாக்கி சுக்கிராச்சாரியார் குடிக்கும் மதுவில் கலந்து விட்டார்கள்.

கசனைக் காணாது தவித்த தேவயானி தந்தையிடம் முறையிட்டாள் சுக்கிராச்சாரியாருக்கு மகள் தேவயானி மேல் அளவு கடந்த பிரியம் இருந்தது. அவளுக்கு கசன் மேல் அளவு கடந்த காதல் இருந்தது.

தனது ஞான திருஷ்டியின் மூலம், கசன் சாம்பலாகத் தான் குடித்த மது பானத்தில் கரைந்து தன் வயிற்றினுள் இருப்பதைக் கண்டு கொண்டார் சுக்கிராச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசன் உயிர் பெற்று வரவேண்டும் மென்றால் தான் இறந்து போக வேண்டிவரும் என்று மகளிடம் விளக்கினார் சுக்கிராச்சாரியார்.

அவளோ தன் காதலனான கசன் எவ்விதத்திலும் உயிர் பெற்று வரவேண்டுமென்று பிடிவாதமாக அழுது புலம்பினாள்.

இறுதியாக சுக்கிராச்சாரியார் ஒரு முடிவுக்கு வந்தார் கசனும் உயிர்பிழைக்க வேண்டும் நானும் வாழவேண்டும் என்றால் அதற்கு ஒரே வழிதான் உண்டு என்று உணர்ந்தார்.

தனது வயிற்றுக்குள்ளே இருக்கின்ற சாம்பல்த் தூள்களை கசனாக உருவெடுக்க வைத்து வயிற்றினுள் அவன் இருக்கிறபோதே அவனுக்குச் சஞ்சீவினி மந்திரத்தை உபதேசிப்பதென்றும் அம்மந்திரத்தைக் கற்றுக்கொண்ட பின் தனது வயிற்றைக் கிழித்துக் கொண்டு கசன் வெளியே வரவேண்டும் என்று வயிறு கிழிக்கப்பட்டதால் இறந்து கிடக்கப் போகின்ற தன்னை சஞ்சீவினி மந்திரம் மூலம் சகன் உயிர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்.



**முல்லைக்குத் தேநீந்து புகழைச் சேர்த்தாய்**
**எல்லைக்கு மேதுநதல் நட்பென்றாய்**
**கர்ணன் போல் கடமை காத்த**
**கொடைக்குப் பெயர் பெற்ற பாரியின் தேரிது**

அதன்படி கசனைத் தனது சஞ்சீவினி மந்திரம் மூலம் உயிர்ப்பித்து அவனுக்கு அம்மந்திரத்தை உபதேசித்தார்.

வயிற்றினுள் இருந்து கொண்டே கசன் தான் விரும்பிவந்த அந்த அரிய மந்திரத்தைக் கற்றுக் கொண்டான்.

அதன்பின் அவர்கூறியபடி அவரது வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்தான் தான் கற்றுக் கொண்ட சஞ்சீவினி மந்திரத்தின் மூலம் தன் குருவாகிய சுக்கிராச்சாரியாரை உயிர்பெறச் செய்தான். தேவயானி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் தத்தளித்தாள்.

எல்லாம் சுபமாக முடிந்து விட்டது தான் எண்ணிவந்த காரியம் ஈடேறிவிட்டதால் சகன் தேவலோகம் செல்ல விடைகேட்டு நின்றான்.

கசன்மேல் தீராத காதல் கொண்டிருந்த தேவயானி, கசன் தன்னை விட்டுச் செல்கின்றான் என்பதை அறிந்து தன்னைத் திருமணஞ் செய்து கொள்ளும்படி வேண்டினாள்.

அவனோ அதனை மறுத்துப் பல்வேறு காரணங்களைக் காட்டினான். குரு தந்தைகுச் சமனானவர், அதனால் நீ என் சகோதரி அது மட்டுமல்ல நான் இப்போது உன் தந்தையின் வயிற்றிலிருந்து தோன்றியிருக்கிறேன். அதனால் அவர் என் தாயுமாகியிருக்கிறார், எனவே நீ என் சகோதரி என்று காரணம் சொல்லி விடை பெறமுயன்றான்.

அவளோ கோபத்தின் எல்லைக்கே சென்று விட்டாள் தன்னால் பல தடவை காப்பாற்றப்பட்டவன் அவன். அவனுக்காக அவள் வடித்த கண்ணீர் கொஞ்சமல்ல தன்னை அவன் வஞ்சித்து ஏமாற்றிவிட்டான் என்று கோபங் கொண்ட அவள் அவனுக்குச் சாபமிட்டாள்.

என் தந்தையிடம் நீ கற்ற இந்தச் சஞ்சீவினி மந்திரத்தை நீ மறந்து போவாய் என்று சாபமிட்டாள்.

தேவயானியின் சாபத்தினால் கசன் தான் கற்ற சஞ்சீவினி மந்திரத்தை மறந்து போனான் அவன் மிகுந்த பிரியாசையுடன் கற்ற அரிய அக்கல்வி அவனுக்குப் பயன்படவில்லை என்று மகாபாரத்தில் வியாசமுனிவர் இக்கதையைச் சொல்கின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்ணன் - பரசுராமன்**

துரியோதனனின் உயிர் நண்பனான கர்ணன் பரசுராமரிடம் சென்று வில்வித்தை கற்க விரும்பினான். பரசுராமரோ சத்திரியர்களுக்கு வில்வித்தை பழக்குவதில்லை என்று விரதம் பூண்டிருந்தார்.

தனது தந்தையான ஜமதக்கினி முனிவரைக் கொன்ற கார்த்தவீரியார்ச்சுனன் என்ற சத்திரிய மன்னனையும் அவனது புத்திரர்களையும் கொன்று குவித்தும் கோபம் அடங்காதவராக இருபத்தியொரு தலைமுறைகளுக்கு சத்திரிய வம்சத்தைப் பூண்டோடு ஒழிப்பதாகச் சபதம் செய்து நிறைவேற்றியவர் அவர்.

சத்திரியர்கள் மேல் அவ்வளவு கோபம் அவருக்கு இருந்தது சபதத்தை நிறைவேற்றிய பின் பீஷ்மாச்சாரியார் என்று அழைக்கப்பட்ட சந்தனுமகாராஜாவின் மகன் கங்கையின் மைந்தன் தேவவிரதனுக்கு வில்வித்தை கற்பித்தார்.

காசிராஜனது மகள் அம்பையின் பொருட்டாக தனது சீடனான பீஷ்மருடன் பெரும் யுத்தம் செய்யவேண்டி ஏற்பட்டது.

தனது சீடனான சத்திரிய வம்சத்து பீஷ்மரை வெல்லவும் முடியாமல், தோற்று அவமானப் படவும் விரும்பாமல் யுத்தத்தை இடையில் நிறுத்தித் திரும்பிச் சென்று ஒதுங்கி வாழ்ந்தவர் அவர்.

அதன் பின் சத்திரியர்களுக்கு வில்வித்தை கற்பிப்பதில்லை என்று விரதம் பூண்டிருந்த அவர் அந்தணகுலத்தவரான துரோணாச்சாரியாரும் வில்வித்தை கற்பித்தார்.

அவரிடம் வில்வித்தை கற்கவேண்டுமென்று விரும்பிய கர்ணன் தன்னை அந்தணன் என்று பொய் சொல்லி சகல வில்வித்தைகளையும் கற்றுவிட்டான்.

தன் மகன் அருச்சுனனைக் காப்பதற்காக கர்ணனைப் பரசுராமரின் கோபத்துக்கு ஆளாக்கக் காலம் கருதிக் காத்திருந்தான் இந்திரன்.

ஒரு நாள் பரசுராமர் கர்ணனின் மடியில் தலைவைத்துப் படுத்துறங்கினார். இந்திரன் விஷவண்டு வடிவெடுத்து கர்ணனின் தொடையைத் துளைத்தான்.

கர்ணனோ தன் குருவின் நித்திரை குழம்பக் கூடாது என்று வலியைப் பொறுத்துக் கொண்டான் வண்டு ஒரு பக்கத்தில் துளைத்து ஊடுருவி மறுபக்கத்தினூடு வெளியேறிவிட்டது.

துவாரத்தினூடு இரத்தம் பெருக்கெடுத்ததுப் பீறிட்டுப் பாய்ந்து பரசுராமரது முகத்தில் பட்டுவிட்டது துயில் நீங்கி எழுந்த பரசுராமர் திகைத்துப் போனார்.

அத்தகைய கொடிய தாங்கமுடியாத பெரு வலியைச் சத்திரியனால் மட்டுமே தான் தாங்கிக் கொள்ள முடியும் எனக் கருதிய அவர் கர்ணனிடம் உண்மையைக் கேட்டார்

அவன் தனது நிலையைச் சொல்லி அந்தணனென்று பொய் கூறியதை மன்னிக்கும்படி பாதங்களில் பணிந்தான்.

கோபம் கொண்ட பரசுராமர் அந்தணன் என்று பொய் சொல்லி அவன் கற்ற கல்வி அவனுக்குப் பயன்படாமற் போகும் படியான கொடிய சாபத்தைக் கொடுத்தார்.

முக்கிய போர்க்களங்களிலே எல்லாம் தான் கற்ற வித்தையை மறந்து போகும் நிலையை அடைந்தான்.

தான் மிகவும் முயன்று கற்ற அந்த வில்வித்தையைப் பயன்படுத்த முடியாதவனாக போர்க்களத்திலே அவற்றை நினைவுக்குக் கொண்டுவர முடியாதவனாக அருச்சுனனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புகளுக்கு இரையாகினான் கர்ணன்.

பரீட்சை மண்டபத்தில் கற்றது நினைவுக்குவராது போனால் எப்படியிருக்குமோ அந்த நிலையில் கற்றதை மறந்து இறந்து போனான் கர்ணன்.

**ஏகலைவனும் துரோணரும்**

காட்டு வேடுவனாகிய ஏகலைவனுக்கு வில்வித்தை கற்கவேண்டுமென்று ஆசை ஏற்பட்டது.

அதுவும் குருகுலத்துச் சத்திரிய இளவரசர்களான துரியோதனன் முதலானவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் வில்வித்தை கற்பிக்கும் துரோணாச்சாரியாரிடம் வில்வித்தை கற்கவேண்டும் என்பது அவனது ஆசை.

துரோணரிடம் சென்று தன் விருப்பத்தைக் கூறினான் ஏகலைவன். துரோணரோ சத்திரியர்க்கன்றி மற்றையோர்க்கு தான் வில்வித்தை கற்பிப்பதில்லை என்று கூறி மறுத்துவிட்டார்.

ஏமாற்றத்தோடு காட்டுக்குத் திரும்பிய ஏகலைவன், துரோணர் போன்ற ஒரு சிலையைச் செய்து வைத்து மானசீகமாக அவரைக் குருவாகக் கருதி வழிபட்டு வில்வித்தையைச் சுயமாகக் கற்கத் தொடங்கினான்.

துரோணாச்சாரியார் குருகுலத்துச் சத்திரிய இளவரசர்களுக்குக் கற்பிப்பதெல்லாம் அவனுக்கும் தெரியவந்தது

அருச்சுனனுக்குத் துரோணர் விசேடமாகக் கற்பித்த வில் நுணுக்கங்களையும் ஏகலைவன் காட்டிலிருந்தபடியே கற்றுவிட்டான்.

ஒரு நாள் பாண்டவர்கள் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றார்கள் அவர்களுக்கு முன்னால் சென்ற அவர்களது வேட்டை நாய், ஏகலைவன் செய்து வைத்திருந்த துரோணாச்சாரியாரது உருவச்சிலையில் சிறுநீர் கழிக்க விட்டது.

கோபம் கொண்ட ஏகலைவன் தனது அம்பொன்றைச் செலுத்தி அந்த நாயின் வாயைத் தைத்து விட்டான்.

நாய் குரைக்க முடியாமல் திரும்பி வந்தது பாண்டவர்கள் தமது நாயின் வாய் அம்பினால் தைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிசயித்தார்கள்

ஒரு அம்பு எய்து வாயைத் தைத்து மூடும் வித்தையைத் துரோணாச்சாரியார் அருச்சுனனுக்கு மட்டுமே தான் கற்பித்திருந்தார்.

கோபமும் ஆச்சரியமும் ஒரு சேரப்பெற்ற அருச்சுனனும் ஏனையோரும் நாயின் பின்னால் ஏகலைவனைத் தேடிச் சென்றனர்

வழியில் ஏகலைவனைக் கண்டு வாக்குவாதப்பட்டனர். தங்கள் நாயின் வாய்க்கு அம்பெய்து தைத்த வித்தையை எவரிடம் கற்றான் எனக் கேட்டனர்.

அவனது பதிலைக் கேட்ட அருச்சுனனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

ஏகலைவனோடு வாக்குவாதப்படுவதை நிறுத்திவிட்டு நாடு திரும்பினான். அருச்சுனன் கோபத்தோடு சென்று தனது குருவாகிய துரோணாச்சாரியாரிடம் அது பற்றிக் கேட்டான்.

அவரோ தான் அந்த வித்தையை அருச்சுனனுக்கு மட்டுமேயன்றி வேறு யாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கவே இல்லை எனக்கூறி மறுத்து அருச்சுனனோடு காட்டுக்குச் சென்றார்

காட்டிலே ஏகலைவனைக் கண்டனர். ஏகலைவன் தன் மானசீகக் குருவாகிய துரோணாச்சாரியாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

தான் அவரது உருவச் சிலையைச் செய்து வைத்து அவரை மானசீகக் குருவாக வழிபட்டு வந்ததையும் அதனால் அவர் தன் சீடர்களுக்குக் கற்பித்ததெல்லாம் தனக்கும் தெரிய வந்ததையும் கூறி அவரது உருவச் சிலையைக் காட்டி பாண்டவர்களின் நாய் செய்த காரியத்தையும் தான் அம்பெய்து தண்டித்ததையும் ஒன்றும் மறைக்காமல் பயபக்தியோடு எடுத்துக் கூறினான்.

துரோணாச்சாரியார் அவனிடம் தனக்குக் குரு தட்சணை தரமுடியுமா எனக் கேட்டார் அவனோ தன் உயிரையே தட்சணையாகக் கேட்டாலும் தரத் தயாராக இருப்பதாகக் கூறினான்.

ஏகலைவனது இடதுகைப் பெருவிரலைத் தட்சணையாகக் கேட்டார் துரோணாச்சாரியார். தயக்கமின்றி, கலக்கமின்றி, மனமகிழ்ச்சியோடு தனது கத்தியினால் தனது இடதுகைப் பெருவிரலை வெட்டித் தன் குருவின் பாதங்களில் குரு தட்சணையாக வைத்தான் ஏகலைவன்

குரு தட்சணை கொடுத்தவர்களில் மிகவும் போற்றப்படுகின்ற நிலையை அடைந்தான் ஏகலைவன்.

இடது கைப் பெருவிரலை இழந்ததனால் தான் கற்ற வில்வித்தையைப் பயன்படுத்த முடியாதவனாகினான் ஏகலைவன்

கசன், கணன், ஏகலைவன் ஆகிய மூவரும் தாம் கற்ற கல்வியினால் எவ்வித பயன்பாடும் அற்றவர்களாகினர், இக்கதைகள் மகாபாரதத்தில் வியாச பகவானால் சொல்லப்பட்டுள்ளன.

இன்றும் பலர் கல்விமறுக்கப்பட்டும் கற்ற கல்வியைப் பயன்படுத்த முடியாதவர்களாகவும் இருக்கின்ற நிலை உண்டு இதிகாசம் காட்டிய இந்த இழிநிலை இன்னும் தொடரலாமா.

**"இயற்கைக்கு எதிராக மனிதர்கள் அடைந்திருக்கும் வெற்றிகளுக்காக நாம் நம்மை மிகவும் அதிகமாக பாராட்டிக் கொள்ளக் கூடாது. இப்படிப்பட்ட ஒவ்வொரு வெற்றிக்கும் இயற்கை நம்மை பழிவாங்கி விடுகிறது. முதல் கட்டத்தில் ஒவ்வொரு வெற்றியும் நாம் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது உண்மையே. ஆனால் இரண்டாவது, மூன்றாவது கட்டங்களில் முற்றிலும் மாறுபட்ட, நாம் எதிர்பாராத விளைவுகள் ஏற்படுகின்றன முதல் கட்டத்தில் ஏற்பட்ட வெற்றியை அவை பெரும்பாலும் ரத்துச் செய்து விடுகின்றன.**

- பிரெடெரிக் எங்கெல்ஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதோட்டப் புலவர்கள் மாண்பு

மாதோட்டம் தன்னில் வாழ்ந்த
மாண்புறு பாவலர்கள்
மகிமை சேர் பாடல் தன்னை
மகிழ்வுடன் தீட்டியுள்ளார்
தீதுகள் நீங்க மாந்தர்
திடமுடன் வாழவென்று
தீந்தமிழ் பாடலாலே
திறமையைக் காட்டியுள்ளார்.

நாடகம் தனை எழுதி
நலமுடன் இன்பம் கண்டார்
நாட்டினில் வாழ்வு தேங்க
நன்மைகள் பொங்க வேண்டி
ஊடகமாக நின்று
ஒளிபெற வாழ்ந்து மண்ணில்
ஒப்பற்ற காவியங்கள்
ஊர்களில் தவழ விட்டார்

எங்கெங்கு மக்களெல்லாம்
இதயத்தால் ஒன்று சேர்ந்து
பங்கங்கள் நீங்க வென்று
பரிவுடன் பாடிச் சென்றார்
மங்களம் பாடி மக்கள்
மனதினை தொட்டுச் செல்ல
இங்கிதமாகவே தான்
இன்புடன் பாடி நின்றார்

உண்மை சேர் தத்துவங்கள்
உலகினில் நிலவ வேண்டி
மண்ணக மீதில் இன்பம்
மாண்புடன் மலர வேண்டி
எண்ணங்களாலே அன்பு
எங்குமே மலர வென்று
இன்புடன் பாடிச் சென்றே
இதயங்கள் தன்னை வென்றார்

காதலுடன் வீரம் சேர
கண்ணியம் கடமை கூர
மாதர்கள் கற்பு தன்னை
மகிழ்வுடன் எழுதிச் சென்றார்
தீதுகள் நீங்க மண்ணில்
திறமை சேர் பாடலாலே



தீந்தமிழ் மணக்க எங்கும்
தீட்டினார் பாடல் தன்னை

பக்தியும் ரசமும் கொட்ட
பாங்குடன் படைத்து நின்று
முத்தியும் பெறவே மக்கள்
முழுமன துடனே ஏற்க
சக்தியும் கொண்டதாக
சகலமும் பெறவே என்றும்
திக்கெட்டும் புகழ் பரப்ப
தீட்டினார் நாடகங்கள்

பாடலில் என்ன இல்லை
பாங்குடன் செழுமை உண்டு
தேடலில் இன்பம் கண்டு
தீந்தமிழ் செழிக்கு தன்றோ
நாடிடும் நாடகத்தால்
நன்மையும் பொங்கலாகும்
ஆடிடும் நாடகத்தால்
அகுளுமெ பெருகுமன்றோ

நாடகங் கள் தனிலே
நல்ல தான கருத்தும்
நலமுடன் விளங்க எங்கும்
நன்மைகள் கொண்டிலங்கி
பீடைகள் துன்பம் நீங்க
பெருமையாய்ப் பாடி நின்றார்
நாட்டினில் துன்பம் நீங்க
நலமுடன் பாடிச் சென்றார்.

அப்பொழுதுதான் மா தோட்ட
அருமை சேர் பாடல் கண்டு
ஆதரை மீதில் உண்மை
அழகுமே திகழுமன்றோ
எப்பொழுது தான் நடக்கும்
இவ் அரும் செயல்கள் கண்டு
இன்புறும் நாள் எந் நாளோ...
அந்த நாள் பொன்னாளாகும்

கலாபூசணம்.
செ.செபமாலை
(குழந்தை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலாபனை

மின்னல் வெடித்து எரிமலை விழிக்கும்
மேகம் கறுத்து மழையில் குளிக்கும்
கன்னல் சுவையில் வாழை வெடிக்கும்
கணினி மொழியில் கவிதை துடிக்கும்


வாய் மொழி வாசகம் வாழ்த்தும்
வால் பிடி தோசம் வீழ்த்தும்
கால் படும் நிலம் வியர்க்கும்
களம் சுடும் நிறம் உயிர்க்கும்

சுயநல வாழ்வை தீமழை எரிக்கும்
தோழமை நாளில் பூமழை சிரிக்கும்
பயன்தரு மரங்கள் மழையைக் கொடுக்கும்
பக்கச் சார்பு உலையைக் கெடுக்கும்

நெல்லை மகேஸ்வரி
கோட்டை தெரு
நெல்லியடி வடக்கு
நெல்லியடி

வல்வையில் தமிழ் வளர்த்து
மதுரையில் புகழ்பெற்ற
இயற்றமிழ் போதகாசிரியர்

## புலவர் ச. வைத்தியலிங்கம் பிள்ளை
(1843 - 1900)



நாவலர் போன்று இலக்கிய ஆக்கம், ஆய்வு, நூற்பதிப்பு ஆகிய மூன்று துறைகளிலும் புலவர் வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள் ஈடுபட்டிருந்தார். நாவலர் செய்தது போன்றே இவரும் தனது இலக்கிய, மதப் பணிகளை நிறுவன முறையில் அமைத்துக் கொண்டார். வல்வெட்டித்துறையில் பாடசாலை ஒன்றினையும், அச்சியந்திரசாலை ஒன்றினையும் நடத்தி வந்தார். ஆறுமுக நாவலரைப் போன்று இவரும் தமிழகத்திலே கௌரவிக்கப்பட்டு ''இயற்றமிழ் போதகாசிரியர்'' என்ற பட்டமும் வழங்கப்பட்டு போற்றப்பட்டார். இவரது நூல்கள் பல சென்னையில் வெளியாகின. இவர் இயற்றிய நூல்களை ஆய்வு ரீதியாக ஐந்து துறைகளாக வகுக்கலாம்.

1. பதிப்புகளும் உரைகளும்,
2. நிகண்டு
3. கடவுளர் மீது பாடியவை
4. கிறிஸ்தவ எதிர்ப்புக் கண்டனப் பிரசுரங்கள்
5. சமூகம் பற்றியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

உ. முஹம்மது லூத்பி

ஒருவன் தனது கருத்துக்களையும் உள்ளக்கிடக்கைகளையும் எடுத்துரைப்பதற்கேற்ற ஒரே ஒரு சாதனம் மொழியாகும். ஆகவே, மனித இனத்தின் தொடர்பாடலுக்கு மொழி இன்றியமையாதது.மனித சமுதாயம் மொழியின் அவசியத்தை உணரத்தலைப்பட்டதிலிருந்தே சிந்திக்க வழி பிறந்தது. எனவேதான் மனிதன் தனது கருத்தை பரிமாறவும் நுண்மதியிலிருந்து வேலை வாங்கவும் மொழி உதவுகின்றது.

மொழி மனித நேயங்களை வளர்த்து சமூக உறவு விரிசல்களை குறைத்து ஒற்றுமையை வலுப்படுத்த உறுதுணையாக நிற்கின்றது. ஒருவனுக்கு மொழியில் எந்தளவுக்கு ஆற்றலும் ஆளுமையும் உள்ளதோ, அந்தளவுக்கே அவனது சமூகச் சூழலும் பொருத்தப்பாடுடையதாக அமைந்திருக்கும்.

உலகில் பல்வேறு மொழிகள் தோன்றி வழங்கி மறைந்துள்ளன. அவற்றுள் சில மொழிகள் மட்டும் இன்றுவரை அழியாமல் நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு நிலைபெற்றுள்ள மொழிகளுள் சில பேச்சு வழக்கு இழந்து இலக்கிய மொழியாக உள்ளன. இவ்வாறு தோன்றி வளர்ந்து மாயும் மொழிகளுள் அன்று தொட்டு இன்றுவரை இலக்கிய வளமும் இலக்கண நெறியுடையதாக புதுமைக் கருத்துக்களையும் பொலிவையும் பெற்று விளங்கும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

பொதுவாக மொழிகளின் தோற்றம் குடியேற்றத்தோடு தொடர்புடையது. மக்கள் முதன்முதலில் தோன்றிய நிலப்பகுதியை லெமூரியா என்பர். இந்நிலப்பரப்பை தமிழ் இலக்கியத்தில் குமரிக் கண்டம் என்று கூறப்படுகிறது. இங்கு பேசப்பட்ட மொழி தமிழ் மொழி என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. தமிழ் மொழி என்ற சொல்லுக்கு நேரான வடசொல் திராவிடமாகும். தமிழ், திராவிடம் என்பன வேறுபட்ட இரு சொற்களாகும். எனினும் ஒன்றின் திரிபே மற்றையது என்பதை மொழியியலாளரான கால்ட்டு வெல் ஏற்றுள்ளார். தமிழ் மொழியில் வளமான இலக்கியங்களும் அறநூல்களும் சமய நூல்களும் மேல் நாட்டறிஞர் பலருடைய உள்ளங்களைக் கவர்ந்துள்ளன. அவற்றைக் கற்று வாழ்நாள் முழுவதும் தமிழோடு தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டவர்கள் பலர். எனவே இத்தகைய சிறப்புமிக்க தமிழ் மொழிக்கு விழா எடுத்து வாயார வாழ்த்தி நெஞ்சாரப் போற்றி மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து கொண்டாடுகின்றனர். புனித மிக்க தமிழ் தினம் தமிழ் பேசுகின்ற மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கொண்டாடப்படுகின்றது.

மொழிப்பற்று என்பது இயற்கையானது. அது தாய்மேல் வைக்கின்ற பாசத்துக்கு ஒப்பானது. நமது நாட்டின் ஆட்சி மொழியாகவுள்ள தமிழ் மொழிக்கு விழாவெடுத்து அதன் மீது பற்றையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துதல் தமிழ்மொழியைப் பேசுகின்ற நம்மனைவரினதும் கட்டாயக் கடமையாகும்.

" தமிழுக்கு அமுதென்று பேர்-அந்த
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் "

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாராட்டிப் புகழ்ந்துள்ளார் எனவே நாம் தமிழ் மொழியின் சிறப்பையும் பெருமையையும் அறிந்து போற்றுவதோடு மற்றவர்களுக்கு இதனை எடுத்துக் காட்டவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி தொன்மையானது. இதனையே, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த தமிழ் மொழி என்பர். இலக்கியமும், சொற்சுருக்கமும், சொல்வளமும் கொண்ட தமிழ் மொழி நமக்குப் பெருமையே தருகிறது.

" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று மகாகவி பாரதியார் தமிழின் சிறப்பையும் உயர்வையும் பறை சாற்றினார் அத்தகைய சிறப்பை நாமும் போற்றவேண்டும். வாழ்த்த வேண்டும்.

சங்கம் அமைத்து தமிழை மூவேந்தர்கள் வளப்படுத்தினார்கள். அதனால் தமிழ் வளர்ந்தது. புலவர்கள் தோன்றினர். இலக்கியங்கள் உருவாகின. இவற்றையெல்லாம் நினைவு கூறுதல் சாலப்பொருத்தமான செயலாகும்.

"தமிழ் மொழி பண்பட்டது தனக்கென உரியவளம் நிறைந்த இலக்கிய சொல்வளங்களைக் கொண்டது "என்று மாக்ஸ் முல்லா என்ற மொழியறிஞர் எடுத்துரைத்துள்ளார். ஆகவே தமிழ் மொழிக்கு வளம் மட்டும் இருந்தால் போதாது அது விஞ்ஞான மொழியாகவும் தொழில்நுட்ப மொழியாகவும் வளர்ச்சியடைய வேண்டும்.

தமிழ்மொழி எம் தாய்மொழி எம்மை பெற்றெடுத்த எம்தாய் எம்மை தாலாட்டியதும் தமிழிலேதான் எம்முடன் பேசியதும் தமிழிலேதான், எனவே, தமிழ் மொழியைப் பற்றி நன்கு அறிய வேண்டியது அவசியமாகும்.

இயற்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொறிசியஸ் போன்ற நாடுகளில் தமிழ்மொழி பேசப்பட்டு வருகின்றது அதுமட்டுமல்லாமல் நமது நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் தமிழைப்பேசி அங்கு தமிழை வளர்த்து வருகின்றனர்.

பலர் வகுப்பு முதல் பல்கலைகழகம் வரை தமிழ் மொழிக்கு பாடத்திட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மொழியறிவில் போதிய ஆற்றல் இல்லாவிட்டால் மாணவர்களாகிய நாம் கற்றலில் திருப்தியான வெற்றி ஈட்ட முடியாது வெற்றிகரமான கற்றலுக்கு வாசிப்புத்திறனும் சொல்லாட்சியும் அதிகம் தேவை அதேவேளை சொற்பஞ்சம் ஆசிரியர்களது கற்பித்தலுக்கு தடைக்கல்லாக அமைந்திருப்பதை பாடசாலைகளில் காண்கிறோம்.

தமிழ் மொழியைப் பொருத்தவரையில் எமது நாடாகிய இலங்கையில் வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை முதலான பிரதேசங்களுக்கிடையில் பேச்சுவழக்கில் வேறுபாடுகள் காணப்படுகிற போதிலும் எழுத்து வழக்கு ஒன்றேயாகும்.

"என்னை இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு"

என்று திருமூலரின் கூற்றின் மூலம் என்றுமுள தென் தமிழின் பெருமை நாம் சொல்லாமலே புலப்படும்.

எனவே, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கும் பிளவு விரிசல்களை ஒடுக்கி நாடெங்கிலும் வாழ்ந்து வருகின்ற அனைத்து தமிழ் பேசும் மக்களும் தமிழை வாழ்வாங்கு வாழச் செய்வதற்கு ஒன்றிணைய வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நூற் பகுப்பாக்கம்

எம்.பி.எம்.பைரூஸ்
பிரதம நூலகர்
தொகை மதிப்பு புள்ளி
திணைக்களம்

பொருட்களை பகுத்ததல் அவற்றின் ஒற்றுமை கண்டு ஒன்று சேர்த்தலும் வேற்றுமை கண்டு பிரித்தலுமாகும். நூல்களைப் பகுத்தல் என்பது ஒரு நூலின் திட்டமான பொருளை அறிந்து அந்த நூலகத்தில் அநுசரிக்கப்படும் பகுப்பாக்கத் திட்டத்தில் அவ்விடயத்திற்குத் தரப்படும் குறியீட்டை அந்நூலுக்கு இடுவதாகும். நூல்களை பகுத்தலின் மூலம் நூலகத்தில் ஒரே விடயம் பற்றிய நூல்களை இறாக்கைகளில் ஒன்றாகவும் அப்பொருளோடு தொடர்பான நூல்களை அடுத்தடுத்து வைப்பதற்கும் ஏதுவாகிறது.

இந்தியாவின் நூலகவியலின் தந்தை என்று அழைக்கப்படும் காலஞ்சென்ற கலாநிதி எஸ். ஆர் இரங்கநாதன் அவர்கள். நூலகவியலுக்கென ஐந்து விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றார். அவை யாவும் எந்த நூலகத்திற்கும் மிக்க பொருத்தமுடையன. அவை நூலகவியலின் பஞ்சசீலக் கொள்கைகள் எனப் பலராலும் வர்ணிக்கப்படுபவை. அவை பின்வருமாறு.

1. நூல்கள் அனைத்தும் பாவனைக்கே
2. நூலுக்கு ஏற்ற வாசகர்
3. வாசகருக்கு ஏற்ற நூல்
4. வாசகர் நேரம் பேணுக
5. நூலகம் வளரும் தன்மையுடையது

இவையனைத்தையும் உற்று நோக்கினால் இவற்றுள் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்கள் புலப்படும். "நூல்கள் அனைத்தும் பாவனைக்கே" என்பதன் கருத்து என்ன? நூலகமொன்று எத்தனை அளவுடையதாயினும் அதற்கென கொள்வனவு செயப்படும் ஆவணங்கள் யாவும் பாவனைக்குரியவையே. இவற்றைத் தேடிப் பலதரப்பட்ட அறிவுடைய மக்கள் நூலகத்துக்கு வருவார்கள். அவர்களது அறிவியல் தேவைகளை பூர்த்தி செய்யவே இவை நூலகத்திலுள்ளன என்பது தெளிவாகின்றது. நூல்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட வேண்டுமாயின் அவை யாவும் ஏதாவதொரு ஒழுங்கில் அடுக்கப்பட வேண்டும் அப்படிச் செய்தால் தான் நூலகரும் வாசகர்களும் சுரபமாகத் தமக்குத் தேவையான விடயங்களைத் துரிதமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

நூலகத்துச் சேர்கைகைகள் ஒழுங்கான முறையில் வகைப்படுத்தி வைக்கப்படுவதற்கென ஏற்படுத்தப்பட்டதே "நூல் பகுப்பாக்கம்" ஆகும் இதன் உதவியுடன் தொடர்பான பாடங்களை ஓரிடத்தில் கொண்டு வரவும் தொடர்பற்ற பாடங்களை வேறுபடுத்திக் காட்டவும் முடிகின்றது. இன்று "நூல்களை பகுத்தல் செய்வதற்கு பலவேறு வகுப்பாக்கத் திட்டங்கள் வெவ்வேறு நாட்டறிஞர்களால் உருவாக்கப்பட்டிருப்பினும் மிகப் பிரபல்யமானதும், பரந்த அளவில் பாவனையில் உள்ளதுமான பகுப்பாக்கத் திட்டம் " தூயி தசாம்ச பகுப்பாக்கத் திட்டம் " (Dewey Decimal Classification Scheme) என்ற பெயர் கொண்ட பகுப்பு முறையாகும் இலங்கையின் பெரும்பான்மையான நூலகங்களில் இம்முறை பின்பற்றப்படுகின்றது. தூயி தசாம்ச பகுப்புத்திட்டம் 21ம் பதிப்பு 4 தொகுதிகளாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டம் மெல்வில் தூயி என்ற அமெரிக்க அறிஞர் ஒருவரால் உருவாக்கப்பட்டது தூயி இதை உருவாக்கியதால் அவரது பெயரிலேயே இது இன்று அழைக்கப்படுகின்றது இதனையே இன்று சுருக்கமாக DDC என்று அழைக்கின்றோம் இப்பகுப்பு முறையிலே தூயி உலகிலுள்ள அறிவு அனைத்தையும் பத்து வகுப்புக்குள் அடக்கியுள்ளார்.

இப்பகுப்பு ஒவ்வொன்றையும் அமைப்பதற்கு அராபிய எண்களான 0 இலிருந்து 9 வரையிலான எண்களை பயன்படுத்தியுள்ளார். அவை முறையே பின்வரும் வகுப்புக்களை உள்ளடக்குவனவாக அமைத்துள்ளன. இது "பிரதம வகுப்பு" (Main Class) என அழைக்கப்படுகின்றது.

000 - பொது ஆக்கம்
100 - தத்துவம்
200 - சமயம்
300 - சமூக விஞ்ஞானம்
400 - மொழி
500 - தூய விஞ்ஞானம்
600 - தொழில்நுட்ப பிரயோக விஞ்ஞானம்
700 - கலைகள்
800 - இலக்கியம்
900 - பொதுப் புவியியல் வரலாறு

மேற்கூறிய ஒவ்வொரு வகுப்பும், பத்து உப பொருட் பிரிவுகளாகப் பின்வருமாறு விரிகின்றமையை அவதானிக்கலாம். இதனை இரண்டாவது சாராம்சம் என அழகக்கப்படுகின்றது அதாவது.

300 - சமூக விஞ்ஞானம்
310 - பொதுப் புள்ளிவிபரம்
320 - அரசியல்
330 - பொருளியல்
340 - சட்டம்
350 - பொதுநிருவாகம்
360 - சமூகசேவைகள் தாபனங்கள்
370 - கல்வி
380 - வர்த்தகம், தொடர்பு, போக்குவரத்து
390 - நாட்டாரியலும், பழக்கவழக்கங்களும்

அத்துடன் மேற்கூறிய ஒவ்வொரு வகுப்பு மேலும் பத்து உப பொருட் பிரிவுகளாகப் பின்வருமாறு விரிகின்றமையை அவதானிக்கலாம். அது மூன்றாவது சாராம்சம் என் அழைக்கப்படுகின்றது அதாவது:

330 - பொருளியல்
331 - தொழிற் பொருளியல்
332 - நிதிப் பொருளியல்
333 - காணிபற்றிய பொருளியல்
334 - கூட்டுறவு
335 - சமவுடைமை
336 - அரசநிதி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

337 - சர்வதேச பொருளியல்

338 - உற்பத்தி

339 - பொருளியல் பற்றிய தலைப்புகள்

இந்த பிரிவுகள் மேலும் தேவைக்கேற்ப பொருட்பிரிவுகளாக வளரும். இப்படிப் பத்துப் பத்தாக திரித்துக்கொள்ள இந்த தூயி மசதம்ச பகுப்புத் திட்டம் இடமளிக்கின்றது. எந்தவொரு அறிவுத்துறையின் முழு விரிவையும் இணைத்துக் கொள்ளும் இப்பண்பு இத்திட்டத்தின் ஒரு சிறப்பம்சமாகும்

இலங்கையின் பாடசாலை நூலகங்களுக்கு தூயி தசாம்ச பகுப்பாக்கத் திட்டத்தின் சுருக்கத்தைத் தரும் மூன்றாம் சாராம்சம் பெரும்பாலும் போதுமானதாயிருக்கும். எனினும் எமது சிறப்புத் தேவைகளுக்கு தூயி தசாம்ச பகுப்பாக்கத் திட்டத்தின் மூல நூலையே நாடவேண்டும் என்பதைக் குறிப்பாக மனதில் இருத்திக்கொள்ளல் மிக அவசியமாகின்றது

ஒரு பாடசாலையின் சேகரிப்பு அதாவது நூற்கையிருப்பு மிகவும் சொற்பமானதாயின தூயி தசாம்ச பகுப்பாக்கத் திட்டத்தின் இரண்டாம் சாராம்சம் பெரும்பாலும் போதுமானதாயிருக்கும் எனவே பாடசாலை நூலகங்களின் பகுப்பாக்கத் தேவையைக்கருதி திட்டத்தின் இரண்டாம் சாராம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## தூயியின் தசாம்ச வகுப்பின் 21 ஆம் பதிப்பிற்கிணங்க வகுப்புப்பிரிவு

000 - பொதுவிடங்கள்
010 - நுல்விபரப் பட்டியல்
020 - நூகை விஞ்ஞானம்
030 - கலைக்களஞ்சியங்கள்
040 -
050 - பொதுச் சஞ்சிகைகள்
059.94811 - தமிழ் சஞ்சிகை
060 - பொதுத் தாபனங்கள்
070 - பத்திரிகைத்துறை
090 - கையெழுத்துப் பிரதிகள் அரிய நூல்கள்

100 - தத்துவ சாத்திரம்
110 - பௌதீக அதீதம்
120 - அறிவாராய்ச்சியல்
130 - உளவியல் மறைபொருள்
140 - குறிப்பிட்ட மெய்யியற் கருத்துக்கள்
150 - உளவியல்
160 - அளவியல்
170 - ஒழுங்கவியல்
180 - தொல்கால இடைக்கால கீழைத்தேய மெய்யியல்
190 - நவீன மேலைத்தேய மெய்யியல்

200 - சமயம்
210 - இயல் அறைநூல்கள்
220 - விவிலியம் (பைபில்)
230 - கிறிஸ்தவ மறைக்கோட்பாடு
240 - கிறிஸ்தவ ஒழுக்க பக்தி இறைவியல்
250 - கிறிஸ்தவ திருச்சபையும் சமயத்துறைச் சபைகளும்
260 - கிறிஸ்தவ சமூக இறையியல்
270 - கிறிஸ்தவ தேவாலய வரலாறு
280 - கிறிஸ்தவ பிரிவுகளும் நெறிகளும்
290 - பிர சமயங்களும் ஒப்பீட்ச் சமயமும்
294.3 - பௌத்தம்
294.5 - இந்துசமயம்
297 - இஸ்லாம்

300 - சமூகவிஞ்ஞானம்
310 - பொதுப் புள்ளிவிபரம்
320 - அரசியல்
330 - பொருளியல்
340 - சட்டம்
350 - பொதுதிருவாசகம்
360 - சமூகசேவைகள் தாபனங்கள்
370 - கலவி
380 - வர்த்தகம் தொடர்பு போக்குவரத்து
390 - நாட்டரியலும் பழக்கவழக்கங்களும்

400 - மொழி
410 - மொழியியல்
420 - ஆங்கிலம்
430 - ஜேர்மன் மொழி
440 - பிரெஞ்சு மொழி
450 - இத்தாலிய மொழி
460 - ஸ்பானிய மொழி
470 - லத்தீன் மொழி
480 - கிரேக்க மொழி
490 - பிறமொழிகள்
491.48 - சிங்களமொழி
494.811 - தமிழ்மொழி
500 - தூயவிஞ்ஞானம்
510 - கணிதம்
520 - வானசாத்திரம்
530 - பௌதீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

540 - இரசாயனவியல்
550 - புவிவிஞ்ஞானம்
560 - தொல்லுயிரியலும் தொல்விலங்கியலும்
570 - உயிரியல் விஞ்ஞானம்
580 - தாவரங்கள்
590 - விலங்குகள்

600 - தொழில்நுட்ப பிரயோக விஞ்ஞானம்
610 - மருத்துவ விஞ்ஞானம்
620 - எந்திரவியல்
630 - விவசாயம்
640 - மனைப்பொருளியல்
650 - முகாமைத்துவ சேவைகள்
660 - இரசாயன எந்திரவியல்
670 - உற்பத்திகள்
680 - விசேட உபயோக உற்பத்திகள்
690 - கட்டிடங்கள்

700 - கலைகள்
710 - குடிமக்கள் தரையமைப்புக்கலை
720 - கட்டடக்கலை
730 - பிளாஸ்ரிக் கலை
740 - வரைதலும் அலங்காரக் கலைகளும்
750 - ஓவியங்களும் ஓவியத்தீட்டலும்
760 - துல்லிய வரைதல்கள்
770 - புகைப்படங்களும் புகைப்படக் கலையும்
780 - சங்கீதம்
790 - பொழுது போக்கு கலைகள்

800 - இலக்கியம்
810 - அமெரிக்கஆங்கில இலக்கியம்
820 - ஆங்கில இலக்கியம்
830 - ஜேர்மன் இலக்கியம்
840 - பிரெஞ்சு இலக்கியம்
850 - இத்தாலிய இலக்கியம்
860 - ஸ்பானிய, போர்த்துக்கேய இலக்கியங்கள்
870 - இலத்தீன் இலக்கியங்கள்
880 - கிரேக்க இலக்கியம்
890 - பிறமொழி இலக்கியங்கள்
891.48 - சிங்கள இலக்கியம்
894.8 - திராவிட இலக்கியம்
894.811 - தமிழ் இலக்கியம்

900 - பொதுப் புவியியல் வரலாறு
910 - புவியியலும் பிரயாணமும்
920 - பொதுவாழ்க்கைச் சரிதம், குலமரபு சின்னங்கள்
930 - புரதான உலகின் வரலாறு
940 - ஐரோப்பாவின் பொது வரலாறு
950 - ஆசிய கிழக்கு பொது வரலாறு
954.93 - இலங்கையின் வரலாறு
960 - ஆபிரிக்காவின் பொது வரலாறு
970 - வட அமெரிக்காவின் பொது வரலாறு
980 - தென் அமெரிக்காவின் வரலாறு
990 - உலகின் பிற பகுதிகளின் பொது வரலாறு

## 000 - பொது விடயங்கள்

இவற்றின் படி பொது வகுப்பில் பொதுவாக எழுதப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொது அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவை இப்பிரிவினுள் அடங்கும் இவற்றுள் உள்ளடக்கப்பட்டிருக்கும் பாடங்கள் குறிப்பிட்டதொரு பாடத்துடன் மாத்திரம் தொடர்புபடாமல் சகல பாடங்களையும் கொண்டனவாக உள்ள தன்மையால் இவ்வகுப்பு ஏற்படுத்தப்பட்டது எனவே தமிழ்க் கலைக்களஞ்சியம் என்ற நூலுக்கு பகுப்பிலக்கமானது 039.94811 என வரும்.

இதனை அடுத்து வரும் 100 ஆவது வகுப்பில் தத்துவங்கள் அனைத்தும் அடங்கும் 200 ஆவது வகுப்பில் சமயங்கள் வரும். இதல் 210 முதல் 280 வரையிலுள்ள எண்கள் கிறிஸ்தவ சமயத்துக்குரியவை 290 என்ற ஒரு வகுப்பில் உலகில் உள்ள ஏனைய சமயங்கள் அனைத்தும் உள்ளடக்கப்படுகின்றன

இந்து சமயம் 294.5
பௌத்த சமயம் 294.3
இஸ்லாம் 297 ஆகும்

400 மொழிகளுக்குரிய வகுப்பாகும் 420 ஆங்கில மொழிக்கும் 430, 440, 480 என்பன முறையே ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலிய, ஸ்பானிய, இலத்தீன், கிரேக்க மொழிகளுக்கும் உரிய எண்களாகும் 490 ஆவது பகுப்பில் ஏனைய மொழிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழுக்குரிய நூலின் தாசாம்ச எண் 494.811 என்பதாகும்.

500 இல் தூய விஞ்ஞானத்தின் பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. அவையாவன விஞ்ஞானத்துடன் தொடர்புடைய பாடங்களாகும். பிரயோக விஞ்ஞாகமான 600 ஆவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பம், விவசாயம் போன்ற பிரயோக விஞ்ஞானத்துடன் தொடர்புபட்ட பாடங்கள் வருகின்றன. 700 ஆவது வகுப்பில் கலைகள் நுண்கலைகளுக்குரியதாகும்.

கட்டிடக்கலை, வரைதலும் அலங்காரக் கலைகளும், ஓவியங்களும் ஓவியம் தீட்டலும், புகைப்படங்களும் புகைப்படக் கலையும், சங்கீதம், விளையாட்டுகள், என்பன இவ்வகுப்பின் உட்பிரிவுகளாக அமையும்.

இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டது 800 ஆவது பிரிவாகும் இங்கு 810 - 880 வரையிலுள்ள எண்கள் மொழிப் பிரிவினைப் போன்று மேலைத்தேச இலக்கியங்களுக்கென ஒதுக்கப்பட்ட பின்னர், ஒரேயிடமான 890 ஏனைய மொழிகளிலான இலக்கியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழைத் தேச இலக்கியங்கள் யாவும் இவ்வகுப்பில் வருகின்றன உதாரணமாக தமிழ் இலக்கியத்துக்கான வகுப்பெண் 894.811 என்பதாகும்.

இறுதியாகவுள்ள 900 என்ற வகுப்பில் வரலாறு, பிரயாணம், புவியியல், வாழ்க்கைச் சரிதம் ஆகியன வருகின்றன. இதல் 910 புவியியல் பிரயாண நூல்கள் ஆகியனவற்றுக்கும் 920-990 வரையிலுள்ள எண்கள் கண்டங்களினரீதியாக உலக நாடுகளின் வரலாறுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆகியவற்றின் வரலாறுகளைக் குறிக்கின்றன. இப்படியாக மென்மேலும் சிறிய பிரிவுகளைப் பிரித்து மிக நுண்ணியதாகப் பாடத்தினை பகுக்கக் கூடிய வாய்ப்பு இப்பகுப்பு முறைக்கு உண்டு. இருப்பினும் கிராமிய மட்டத்தில் மிக நுணுக்கமான பகுப்பாக்கம் செய்யாமல் பெரும் பிரிவுகளாக நூல்களைப் பிரித்தல் போதுமானதாகும்.

நூல்களை பகுத்தல் செய்யும் போது கற்பனை வடிவிலமைந்த நூல்களும் (Fiction) பாட சம்பந்தமான நூல்களும் (Non-Fiction) வருவதைத் காண முடியும். குறிப்பாக இலக்கியத்தில் கற்பனை வடிவிலமைந்த நாவல்கள் சகல மொழியிலான இலக்கியங்களிலும் வருகின்றன. அவை யாவற்றையும் ஆசிரியர் அகர வரிசைரீதியாக ஒழுங்கு செய்வதுதான் மரபாக உள்ளது.

அதன்படி அகிலன் எழுதிய ஒரு நாவலுக்கு ஒன்றில் 894.8113 என்ற பகுப்பெண்ணை வழங்கவோ அல்லது ''க''என்ற குறியீட்டுடன் ஆசிரியரின் பெயர் முதல் முன்றெழுத்துக்களையும் எழுதியோ பகுக்கலாம். நூலின் பகுப்பெண்ணை நூலின் முதுகுப் புறத்தின் அடிப்பகுதியில் ஓட்டி வைப்பதுண்டு.

இதனால் இலகுவாக நூலின்' பகுப்பை இனங்காண முடியும் நீளமாகவுள்ள பகுப்பிலக்கங்களை கொண்ட துண்டுகளை முதுகில் ஓட்டும் போது பார்வையிட முடியாது ஒரு பகுதி மற்ற நூல்களுக்கிடையே மறைந்து விடக்கூடும் இது வாசகர்களுக்கு சிரமத்தைத் தரக்கூடும். எனவே கதை கவிதை கட்டுரை போன்ற இலக்கிய நூல்களை பகுப்பாக்கம் செய்யும் போது அநாவசிய காலவிரயத்தைத் தவிர்க்கும் பொருட்டு இலக்கங்களை விட "க" என்ற எழுத்தையும் ஆசிரியரின் முதல் மூன்று எழுத்துக்களையும் பயன்படுத்துவது வழக்கம்

இது போன்றே ஏனைய மொழிகளிலும் உள்ள நாவல், கவிதை, கட்டுரைகளுக்கும் செய்வது நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வுக் காலம்

இது புரிந்துணர்வுக் காலம்
வேடங்கள் கோசங்கள் போடும்
பலரைப் புரிந்து கொள்ளும்
காலமும் கூடத்தான்.

புனர் வாழ்வும் மீள் கட்டுமானமும்
எனும் பெயரில் பணப்புழக்கமும்
தொழில் நுட்பங்களின்
சாசகங்களும் நிகழும் காலம்

உல்லாச பிரயாணங்களும்
அறுசுவை உணவுச்சாலைகளும்
தங்ககங்களும் தாராளமாய்
உருவாகும் காலம்

இருந்தும் என்ன
கணவனைக் காணா மனைவி
சூனியத்தின்படி அவர் இருக்கிறாரா ?
இல்லையா?
விடை பகர்வோரா எவரும்?

இன்று வருவார் நாளை வருவார்
நல்லதுணையாக எம் தந்தை தாயெனவே
தவிக்கும் பிள்ளைகளின் ஏக்கத்தை
தீர்ப்பது யாரோ?

கல்விச்சாலை சென்ற
பிள்ளையை இன்னும் காணவில்லை
பெற்றவர் புரிந்து கொள்ள
நெடுங்காலம் சென்றது.

எங்கே இவர்கள்?
ஏனின்னும் வரவில்லை?
கடல் சூழ் ஈழத்துக்
கரைகள் அழுகின்றன.

கிளிநொச்சி கிணறுகளில்
கிடைத்த மனித எச்சங்களும்
இவர்களிலை என்றாகி விட்டது.

செம்மணியில் சிந்திய கண்ணீர்
சேறும் சக்தியுமாய்
செருப்புக்கள் தேய்ந்தது தான் மிச்சம்.
நாவற்குழியையும் குடைந்து
குடைந்து திட்டிகளை
குளமாக்கியும் பார்த்தோம்.

முன்னமும் இப்படித்தான்
வந்தாறுமூலையில் அடைக்கலம்
தேடிவந்தவர்களையும் இன்னமும் தேடிக்
கொண்டுதான் இருக்கின்றோம்.

எங்கு தேடியும் இவர் சேதி
கிடைக்கவில்லை.
இவர்கள் தேகம் காற்றில் கலந்ததுவோ
அல்லது கடல்நீரில் கரைந்ததுவோ?

உறவுகளின் வாழ்வில்
வசந்தம் வருமா?
இவர்கள் கதி செப்புமா - இப்
புரிந்துணர்வுக் காலம் ?

வி. குணபாலா
கலாசார உத்தியோகத்தர்

**நூலகவியலின் ஐந்து கட்டளைகள்**

1931 ஆம் ஆண்டில் நூலகவியலின் தந்தை என அழைக்கப்படும் சீ.ரங்கநாதன் அவர்களால் எழுதப்பட்ட "நுலக இயலின் ஐந்து கட்டளைகள்" (Five laws of Library Science) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. நூல்கள் படிப்பதற்கே (Books are for Use)
2. ஆளுக்கு ஒரு நூல் (Every reader his / her book)
3. நூலுக்கு ஒரு ஆள் (Every book its reader)
4. காலம் கருதுக (Save the time of the reader of the stap)
5. நூலகம் வளரும் தன்மையது (Library ia a growing organism )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம்

சீ. என். துரைராஜா ஜே.பி

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்த குடியினர் எனப் பெயர் கொண்ட தமிழ் மக்கள் அறவழியிலே தொடர்ந்து நடைபோடுவதால்தான் இன்றும் தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள். வள்ளுவன் சொன்னார்

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என நாம் பெரும் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து, செல்வச் செழிப்பினிலே வளர்ந்து, செல்வச் செருக்கினால் மனம் போனபடி வாழக் கற்றுக்கொள்கிறோம். வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களுக்கு எமது வாழ்க்கையும் காரணம் சொல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. இன்றைய இளம் சிறார்கள் கூட கண்ட கண்ட பழக்க வழக்கங்களைப் பழகி கண்போன போக்கில் பொய் வாழ்வின் முன்னேற்ற பாதையை கண்டறிய முடியாமல் திகைத்து திண்டாடி நிற்பதை நாம் நேரில் காணக்கூடியதாய் உள்ளது. வள்ளுவன் சொன்ன வார்த்தைகளின்படி நாம் நடப்போமேயானால் துன்பச் சுமைகளை சுமக்க வேண்டிய நிலை ஏற்படாது. நாம் எமது இளமைக் காலத்தில் பயிலும் கல்வியிலே தேர்வு செய்து அதன் நல் விழுமியங்களில் தொடர்ந்து கால்பதிப்போமேயானால் எம்மை துன்பங்கள் ஒன்றும் செய்யா. இளமையிலே பாடசாலை கல்வியிலே வள்ளுவன் சொன்ன "கற்க கசடற" குறள்வழி ஒழுகுவோமேயானால் நன்மைகள் நம்மை நாடிவரும். உயரிய நூல்களையும் உயர்ந்த பண்புகளையும் நாம் நேர்வழி நின்று கற்போமேயானால் துன்பம் எம்மை ஒன்றும் செய்யா.

**"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்**
**திறனறிந்தோன் தேர்ச்சித் துணை"**

"ஒழுக்கம் விழுப்பம் தரலாம். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என கூறுகின்றது. அவ்வொழுக்கமானது அறத்தையும் தன்னகத்தே இருத்தி அறிவுபூர்வமாக செயல்படவும். அறத்தின்மேல் பற்றுவைத்தவன் அவன் உதிர்கின்ற சொல்களுமோ அறிவு நிறைந்தவை களாகவும், எக்காலத்திலும் எந்நேரத்திலும் எவ்விடத்திலும் துணிந்து நின்று பெரியோர் களையும், அறிஞர்களையும் போற்றி மதிப்பவனாகவும் வாழச் கற்றுக் கொள்வானேயானால் அறம், அவனை வாழவைக்கும்.

"கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்" என்பார்கள். ஆனால் நாட்டில் இன்றோ விசாரணைகள்கூட அதிகார வர்க்கத்தின் கையில் அகப்பட்டு நீதி, நியாயம், நேர்மை அத்தனையும் இழந்து எங்கோ சென்று கொண்டிருப்பதை பார்க்கின்றோம். மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என பேரறிஞர் அண்ணா அன்று சொன்னார். ஆனால் இன்றோ நாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் மட்டும்தான் உண்டு, என்று வக்காலத்து வாங்கும் காலமாக மாறியுள்ளதை கண்ணெதிரே காணக் கூடியதாக இருக்கின்றது.

மனிதன் மாய தோற்றத்தில் மயங்கி, அவன் நடை உடை, பாவனையில் ஈர்க்கப்பட்டு உண்மையெது பொய் எது என உணர முடியாது கலங்கும் காலம் இருக்கலாம். ஆனால் வள்ளுவன் தன் வாய்மொழியினிலே மிக மிக தெளிவாக கூறுகின்றார் நேராகவும் நிதானமாகவும் கண்ணுக்கு விருந்தளிக்கும் அம்பு கொடியது ஆனால் வளைந்து நெளிந்து தோன்றினாலும் யாழின் கொம்பானது எவ்வளவோ இனிமையானது என்பதை

**"கணை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்"** என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தின் மேல் பற்று வைக்கும் நாம் ஒவ்வொருவரும் மக்களின் பண்புகளையும், செயல்வகைகளையும் உணர்ந்து ஆய்ந்து அறிந்து கொள்ளல் நாம் அறத்தின் மேல் வைக்கும் மதிப்பாகும்.

கூன் குருடு செவிடு நீங்கி மனிதனாகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமென்றனர். இப்படி மனிதனாகப் பிறப்பவனும் அறவழி ஒழுகினால் அவனை தெய்வமாகப் போற்றும் மக்கள் கூட்டமும் இம்மண்ணில் இருக்கத்தான் செய்கின்றனர்.

"**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**" என்றார் வள்ளுவப் பெருந்தகை.

மனிதன் மனிதனாக வாழவேண்டும், அவர் உலகில் பிறப்பெடுப்பதன் நோக்கத்தை நோக்கியே வாழவும் வேண்டும். அறத்தின் கண்ணே அவன் ஒழுகி வாழ்வான். ஆனால் அவன் மனிதப் பிறவியில் இருந்து தெய்வப் பிறவிக்கு மாற்றப்படுகின்றான்.

நாம் எவ்வளவுதான் சிறப்பாகவும் சீராகவும் வாழ்ந்தாலும் மக்களின் இன்றைய மனம் அழிவுப் பாதையை நோக்கி சென்றுகொண்டுதான் இருக்கின்றது. நீதியாகவும், நேர்மையாகவும் வாழ்ந்தாலும் அருகினில் வாழ்பவர்கள் அவனின் வளர்ச்சியிலே பொறாமை கொள்கின்றனர். அவனின் குதிக்கால் நரம்பை வெட்ட பின் நிற்கமாட்டார்கள்.

"**பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்**
**எழுபது கோடி உறும்**" ஆமாம் மன்னவனுக்கு மந்திரி எவ்வளவு முக்கியமோ; அவன் அரசனுக்கு எடுத்துக்கூறும் அறநெறியை விட்டு, வேற்று நடவடிக்கையை கூறுவானே யானால், அவன் அரசின் பக்கத்தில் இருப்பதிலும் பார்க்க, எழுபது கோடி பகைவர்கள் பக்கத்தில் இருந்தாலும், அரசன் அஞ்சவேண்டியதில்லை. பகைவனின் நடவடிக்கைகளை நாள்தோறும், ஏன் நிமிடம்தோறும் அரசன் கவனித்தே நடப்பான்.

இன்றைய மனித வாழ்க்கயில் எது செய்தாலும் குற்றம் குறை காணுதல் மனிதனின் இயல்பாக மாறியுள்ளது. மனிதன் தன் மன நோக்கை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு பண ஆசை, பதவி ஆசை ஆகியவற்றில் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் மக்களிடம் வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து விடுகின்றனர். அதனால் உண்டாகும் துன்பத்தை, விருப்பு வெறுப்புகளை, நன்மை தீமைகளை தொட்டுப் பார்க்காமல் இதனை நான் செய்வேன் என வாக்குறுதி பகர்கின்றனர். ஆனால் அதனால் உண்டாகும் எதிர் அலைகளை அவனால் தாங்கிக்கொள்ள முடியாமல் பரிதவிப்பதையும் நாம் காண்கின்றோம்.

"**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்**" இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம், என்று வாய்வீரம் போட்டு சொல்லுதல் மனிதர் ஒவ்வொருவருக்கும் இலகுவான காரியமாகும். ஆனால் நாம் சொல்லியபடி அக்காரியத்தை செய்து முடித்தல் அவ்வளவு சுலபமான காரியமாக நாம் எண்ணக்கூடாது.

அறவழி வாழ்பவன் உண்மை நேர்மை, நீதி, நியாயம் என அறத்தோடு கூடிய வாழ்க்கை வாழ்ந்தால்தான் அவனின் சொல்லுக்கும் செயலுக்கும் மதிப்பாக இருக்கும். அறத்தோடு வாழ்பவன் தன்னில் பெரியோரையும், அறிஞர் பெருமக்களையும் கனம் பண்ணி வாழ்தலே அவன் அறத்தை கைக்கொண்டு வாழ்பவன் எனலாம். அறத்தை அறிந்தவனாய், அறிவு நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய், எக்காலத்திலும் செயல் செய்யும் திறன் அறிந்தவனாய் உள்ளவன் ஆராய்ந்து கூறும் துணையாவான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காற்று - கல்

வெளிச்சத்தின் மறுபக்கம்
பூமிக்குள் -
பூகம்பம் தேடுகின்றது

ஒளிகளின் ஊஞ்சலில்
சூரியன் -
கிளித்தட்டு ஆடுகின்றது

மனிதனின் ஒருபக்கம்
மனதுக்குள் -
புனிதத்தை விற்கின்றது

இருட்டின் சுவாசத்தில்
மழைத்துளி -
வறுமையில் கரைகின்றது

மழையின் வருகையில்
முட்களின் -
மோகனம் கேட்கின்றது

மண் பாதைகளில்
மழை -
வெள்ளம் பாய்கின்றது

மண் பானைகளில்
பனைவெல்லம் -
சோற்றைத் தேடுகிறது

சேற்றின் குளிர்ச்சியில்
எருமைகள் -
நாற்றை அழிக்கின்றன

உழவனின் வாளும்
இளைஞனின் தோளும்
காடுகள் பூக்க
நிலத்தைக் கீறும்

சமநிலைத் தொண்டும்
சாயாத கோபுரமும்
சுமைகளைக் கலைந்து
சூழ்ச்சிகள் அழிக்கும்

காட்டுப் பூக்கள்
தேன் கொட்டும்
நாட்டுப் பூக்கள்
தேன் குத்தும்

அமைதியின் உழவன்
விளக்கை இழந்து
இருளில் உழுகின்றான்

யுத்த நதிகள்
மலைகளை மறந்து
கடலில் கலக்கின்றன

பொருட்களின் விலைகள்
புள்ளடிகள் கேட்பதற்காக
உருவங்கள் மாற்றுகின்றன

தேசியமும் சமூகமும்
யுகபுருசன் படிவத்தில்
தேசமாகும் வாருங்கள்.

**K.P.** புலேந்திரராஜா **J.P**
நல்லூர் சங்கிலியன் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமிக்கும் நாள் வருமா!

பச்சன் வெளி வெட்டையிலே
பத்தேக்கர் நில மிருக்கு
கச்சிக் குட்டிக் காக்காட
கடாப் பொனையல் தானிருக்கு
பேச்சு முத்து வட்டை விதான்
பார்வையிலே வயல் விளையும் !

கச்சிக் காக்கா முதலிடுவார்
கணபதியார் கமம் செய்வார்
இச்சையுடன் மூவருமாய்
எந்நாளும் மகிழ்ந்துண்பார்
மிச்சம் காலம் உள்ள நட்பு
முறிஞ்சி போன மாய மென்ன!

ஆமினாவும் பார்வதியும் அன்பான
தோழியராம்
அடுத்தடுத்துக் குடி வாழும்
சேம முள்ள குடும்பங்களாம்
சாம நேர மானாலும் தவறாது சந்திப்பர்
சாமித் தம்பி பெண்டில் ரதி
சம்சுனாவும் பேன் பார்ப்பார்!

அறுவடைக்கு நாள் பார்த்து
அனைவருமாய் நெல்லுக் குத்தி
கருவாடும் வாங்கி வைப்பார்
களத்தடியில் சமைத்துண்ண
எருமை மாட்டு பாற்தயிரும்
எடுத்து வைப்பார் அண்டாவிலே!



இப்படியாய் எத்தனை பேர்
ஈரினமும் கலந்திருந்தார்
தப்புத் தண்டா வந்ததில்லை
தலை குனிந்து போனதில்லை
அப்புக் குட்டிக் காக்கா மகள்
அழுத கோலம் கண்டதில்லை!

என்ன சனி பிடித்த தோ
இந்த வினை காணலானோம்
வன் செயலும் வந்தது காண்
வயல் விதைப்பு நின்றது காண்
இன்று வரை ஈரினமும்
இணையும் வழி தான்றியோம்!
தற் செயலாய்ச் சந்தித்தால்
தண்ணி கேட்பார் கணவதியார்
பற்றுதலில் இச்சிக் காக்கா
பழைய சோலிக்கதை யளப்பார்
அற்று விட்ட அன்பு நட்பு
அண்டி வரும் காலமெப்போ!

தமிழர் தினம் பல பிறந்தும்
தமிழர் நிலை என்னாச்சு
கமக்காரர் உற வெல்லாம்
கனவாகிப் பிணமாச்சு
சமாதனச் சாத்வீகம்
சங்கமிக்கும் நாள் வருமா!

ஆக்கம் :-
மூதூர் "கலைமேகம்"

ஆசிரியர்கள் கல்வியில் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களாகத் திகழ வேண்டும் அதனைப் பொருத்தமான முறையில் மாணவர்களுக்கு வழங்கவேண்டும். இதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தினமும் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

**- அருட் திரு. பிரான்சிஸ் அடிகளார் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி நிலைக் கல்வி

யப்பானியர்கள் கல்விகற்கும் காலத்திலேயே தன்னைப்பற்றியும் தான்வாழ்கின்ற நாட்டைப்பற்றியும், தான் பேசுகின்ற மொழியைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்வதற்கு யப்பானிய கல்வித் திட்டம் வழிவகுத்துள்ளது. யப்பானியரின் கலைத்திட்டத்தில் குழந்தைகளின் ஆரம்பவகுப்புகலில் இருந்தே குழந்தைகள் இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடிய காட்சிநிலைக் கல்விப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதனாலேயே குழந்தைப்பருவத்தில் மனதில் பதிந்து கொள்கின்ற காட்சிகள் எதிர்கால வாழ்க்கையிலும் பயன்தரக்கூடிய வகையில் யப்பானின் பாலர் பள்ளிகள் யாவும் கல்வியைத் திட்டமிட்டுள்ளன. இதனூடாக பாலர் பள்ளிப்பருவத்திலேயே இயற்கைச் சூழல்களை பாலர்பள்ளிகளிலேயே அமைத்து அச்சூழலிலேயே கல்வி பயில வாய்ப்பளிக்கின்றனர்.

**பொதுக்கல்வி என்றால்......!**

இங்கிலாந்தின் கல்வி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கல்வியியல் ஆய்வுகளை மேற்கொண்ட இங்கிலாந்தின் கல்வியியலாளரான தோமஸ் எச். ஹக்ஸ்லி தனது " அனைவருக்குமான பொதுக்கல்வி " என்ற நூலில் பொதுக்கல்வி பற்றிப்பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

" இளமைப் பருவத்தில் பொதுக்கல்வி மூலம் மிக நல்ல பயிற்சி பெற்ற ஒருவன் கீழ் வரும் சிறப்பியல்புகளைப் பெற்றிருப்பான்.

தலைவன் கருதுவதை உடன் நிறைவேற்றும் சிறந்த பணியாளனைப் போன்று மனம் நினைப்பதை அவனது உடல் நிறைவேற்றும். அவனது உடல் தன்னால் முடிந்த வரை ஒரு பொறி இயங்குவது போன்று எளிமையாகவும் மகிழ்ச்சியோடும் செயல்களைச் செய்து முடிக்கும். அவனது மனம் ஒரு நீராவிப் பொறி போன்று இயங்கும். சிலந்தி வலை நூலிலும் பார்க்க நுண்ணியதாக இருப்பினும் நங்கூரம் போன்று வன்மையும் உறுதியும் உடையதாகவும் எதிலும் ஈடுபாடு கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருக்கும் அவன் இயற்கை விதிகளின் அடிப்படை உண்மைகளை அறிந்தவனாகவும் அவ்விதிகள் இயங்கும் விதங்களைப் பற்றிய அறிவு உள்ளவனாகவும் திகழ்வான்

**உன் ஆற்றல்களை வெளிப்படுத்துவது**

(John Dewey 1819 - 1952) அமெரிக்காவின் தலைசிறந்த தத்துவ ஆசிரியராகவும் கல்வியியலாளராகவும் இருந்த ஜோன் டூயி (John Dewey 1819 - 1952) கல்வி பற்றிக்குறிப்பிடுகையில் உணவும் இனப்பெருக்கமும் உடலியல் வாழக்கைக்கு எப்படி இன்றியமையாதனவோ அப்படியே தான் கல்வியும் சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக அமைந்துள்ளன. கல்வி ஒரு சமூகத்தேவையாகும். தொடர்ந்துள்ள சமூக வாழ்க்கைக்கு அது ஒரு வழியாகும். ஒருவன் தனக்குப் பயனுள்ள அனுபவங்களைப் பெறவும் பிறருக்குப் பயனுள்ள சமூக வாழ்க்கையை வாழவும் அவனுக்கு உதவும் வழியே கல்வியாகும். என்று குறிப்பிட்ட டூயி கல்விக்குப் பின்வருமாறு விளக்கத்தையும் அளித்துள்ளார்.

"தன்னுடைய சூழ்நிலையை கட்டுப்படுத்தவும் பொறுப்புக்களை நிறைவேற்றவும் உதவக்கூடிய வகையில் தனியொருவனிடம் உள்ள ஆற்றல்கள் அனைத்தையும் முன்னேற்றமடையச் செய்வதே கல்வியாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை இலக்கியப் பரப்பில் தடம் பதித்த சிற்றேடுகளும் சிறு சஞ்சிகைகளும்

கலாவிநோதன், கலைவிருதன், கலாபூஷணம்
முதுகலைஞர். த. சித்தி அமரசிங்கம்

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் திருகோணமலையும் தன் பங்களிப்பை அதிகளவில் செய்துள்ளது. ஆனால் இந்த இலக்கியப் பங்களிப்பு மற்றைய மாவட்டங்களின் இலக்கிய முயற்சிகள் போன்று அடிக்கடி பேசவோ, எழுதவோபடாத காரணத்தால் திருக்கோணமலையில் இலக்கிய முயற்சிகளும் செயற்பாடுகளும் மிகக் குறைவாகவே அறியப்படமுடிகிறது. எனவே திருக்கோணமலையில் இலக்கிய வளர்ச்சிபற்றி அறிய முடியாத காரணத்தால் எம்மிடையே இலக்கியங்கள் இல்லை என்று வாதிடுவோரும் உள்ளனர். அதேவேளை இலக்கியம் பற்றிய சரியான ஆவணங்கள் காக்கப்படாத காரணத்தால் அவர்களின் கூற்றை மறுதலிக்கவும் முடியவில்லை

இத்தகைய நிலையில் திருக்கோணமலை இலக்கிய வரலாற்றை ஆராயப்புகின் எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் அது தம்பலகாமத்தைச் சேர்ந்த வேளார் மரபிலுதித்த ஐயம்பெருமான் மகன், வீரக்கோன் முதலியார் இயற்றிய 'வெருகல் சித்திர வேலாயுதர் காதல்' என்ற நூலின் பிறப்போடேயே ஆரம்பமாகின்றது. இந்நூல் கண்டி நகராண்ட முதலாம் இராசசிங்கன் காலமான 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாடப்பட்டதென அறியக்கிடக்கிறது.

எனவே, 16ம் நூற்றாண்டில் இருந்து 20ஆம் நூற்றாண்டு மையப்பகுதிவரையுள்ள இலக்கிய வளர்ச்சியில் பலநூல்கள் வெளிவந்திருந்தபோதும், சிற்றேடுகள் பற்றிய தகவல்களையோ சிறு சஞ்சிகை பற்றிய தகவல்களையோ என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. எனக்குக் கிடைத்த ஆதாரங்களை வைத்து நோக்கும் போது, 1919ஆம் ஆண்டு திருக்கோணமலையில் பெண்களால் ஸ்தாபிக்கப்பட்ட 'மாதர் ஐக்கிய சங்கத்தின் சிறு சஞ்சிகையின் பிறப்புடன் ஆரம்பமாகிறது. இதன் ஆரம்பகால குழுவின் தலைவியாக ஸ்ரீமதி சு. தங்கம்மான், ஸ்ரீமதி. நா.நீலயதாஷி ஆகியோர் செயற்பட்டனர்.



1930ஆண்டு செயற்பட்டதாக ஊகிக்கக் கூடிய இம்மன்றத்தின் இயக்கம் பற்றி கூறப்படுவதாவது,

''மாதம்தோறும் மகிழ்ந்து குழுமினர். தீதங்கோட்டித் தெளிந்துரையாடினர். வாதம் செய்தனர் வாக்கு நிரப்பினர் போதம் எய்தினர் புன்மை அகற்றினர்.'

'புன்மை அகற்ற' இந்தியாவில் இருந்து அறிஞர்கள் இம்மன்றத்தினர் ஆண்டு நிறைவு விழாக்களைச் சிறப் பாகக் கொண்டாடினர். ஆண்டுமலர்களும் வெளியிடப் பட்டன. இத்தகைய ஆண்டு மலரே ''மாதர் மதி மாலிகை''



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




'மாதர் மதி மாலிகை'யின் ஒவ்வொரு இதழின் அட்டையிலும் வீணை ஏந்திய சரஸ்வதியின் உருவம், வெவ்வேறு தோற்றங்களில் இடம்பெறுகின்றமை கவனிக்கத்தக்கது.

மேலும், ஒவ்வொரு இதழின் ஆரம்ப பக்கங்களிலும், மாதர் இலக்கிய சங்க வாழ்த்துப்பாக்களும், இறுதிப் பக்கங்களில் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா வாழ்த்துக்களும், அறிக்கைப்பத்திரங்களும் இடம் பெறுகின்றன. வாழ்த்துப்பாக்கள் எழுதியோருள் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவர் பத்மாசினி, அன்னார் அக்காலத்தில் சித்தி பெற்ற மதுரைத் தமிழ் சங்க ஐந்து தமிழ்ப் பண்டிதர்களுள், ஒரே ஒருவரான பெண்மணி. ஏனையோருள் ஒருவர் திருக்கோணமலை தந்த அறிஞர் தி.த. கனகசுந்தரம்பிள்ளை. மற்றொருவர் அன்னாரது புதல்வர் தி.க. இராஜேஸ்வரன். அவரது விஞ்ஞானக் கட்டுரைகளும் சஞ்சிகைகளில் இடம்பெற்றுள்ளன.

'மாதர் மதி மாளிகை'யின் இலட்சியம், நேரடியாகப் பெண்கள் தொடர்பான விடயங்களில் மட்டுமன்றி, அவர்களது அறிவு வளர்ச்சிக்கு உகந்த ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்தி, அறிஞர் பெருமக்கள் எழுதும் கட்டுரைகளைப் பிரசுரிப்பதுவுமேயாகும். இன்று, பரவலாக அறியப்படாத சுவாமி விபுலானந்தர், மா. பீதாம்பரம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலானோரும் தமிழ்நாட்டு அறிஞர்கள் சிலரும் மாதர் மதிமாலிகையில் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளனர். எத்தனை இதழ்கள் வெளிவந்தன என்பதை அறிய முடியவில்லை. கலாநிதி செ. யோகராசா - ஞானம் மார்ச் 2004 இதழில் குறிப்பிட்டுள்ளார்.

1952ஆம் ஆண்டுவரை வேறு எந்த சிற்றேடுகளோ சஞ்சிகைகளோ வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

முதல் முறையாக திருக்கோணமலையில் ''திருவள்ளுவர்'' கழகம் அமைக்கப்பட்டது. இதன் ஸ்தாபகர்களான திருக்கோணமலை ஸ்ரீ இராமகிருஷ்ணசங்க இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற மேல் வகுப்பு மாணவர்களான திரு.கு.செந்திவேல், ஆ.சச்சிதானந்தம், இ.சுப்பிரமணியம், சி.சிவசண்முகானந்தேஸ்வர சர்மா, து.குலவீரசிங்கம், வி.இராமச்சந்திரன், சு.சண்முகவேலாயுதம், ஆ.அனந்தராஜ், நா.ஏரம்பமூர்த்தி, ச.ஜெயச்சந்திரன், செ.இராஜகுருதேவர், செ.நவரெட்டிணராஜா, வ.குணரெத்தினம், ம.பாலசுந்தரம், து.கணேசதாசன், சே.அப்துல் அஸீஸ் போன்றோரின் ஊக்கமும், பெ.பொ.சி. போன்ற ஆசிரியரின் உந்துதலாலும் உருவானதே இந்தக் கழகம். திருவள்ளுவர் கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட திருக்குறள் மகாநாடு, கல்கிச் சஞ்சிகையாலேயே பெரிதும் பாராட்டப்பட்டதென்றால் இதைப்பற்றி வேறேதும் கூறத்தேவையில்லை இந்த வள்ளுவர் கழகம் வெளியிட்ட கையெழுத்துப் பிரதிதான் 'கமலை'.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1952இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மாதாந்த சஞ்சிகை மாதந்தோறும் வெளிவந்தது. மன்றச் செய்திகளைத் தாங்கியதோடு மட்டுமன்றி, கதை, கட்டுரை, கவிதை, சித்திரம் போன்ற பல அம்சங்களைத் தாங்கி வந்தது.

வா.தா.சு. அமரன், வெற்றிமதி, ராஜ், சத்-சித், சந்திரன், மோகன், வி.சோமஸ்கந்தர், T.R. மதனகோபால் B.Sc, பெ.க.பண்டிதை இலக்குமி, நா.ஏரம்பமூர்த்தி, வி.இராமச்சந்திரன், அருணன், சுவாமி சச்சிதானந்தயோகி போன்றோர் பங்கு கொண்டுள்ளனர். இதன் சித்திரங்களை சு. சண்முகவேலாயுதம், ஆ. ஆனந்தராஜா ஆகியோர் வரைந்துள்ளனர்.

இதன் ஆசிரியர்களாக சி.சின்னத்துரை, இ.சுப்பிரமணியம், நா. ஏரம்பமூர்த்தி ச.ஜெயச்சந்திரன் போன்றோர் இருந்துள்ளார்கள்.

கமலை கையெழுத்துப் பத்திரிகையாக வந்தபோதும், சுந்தானந்த பாரதியார் திருக்கோணமலைக்கு வருகை தந்தபோது, அவரைக் கௌரவிக்கும் முகமாக, கமலையின் ஒரு இதழ் அச்சில் வெளிவந்தது.

'கமலையில் கால் பதித்து, தடம் பதித்த எழுத்தாளர் களுள் இன்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் 'எருவில் மூர்த்தி' என்ற புனைப்பெயரில் வாழ்ந்து வரும் மட்டக்களப்பு நா.ஏரம்பமூர்த்தியும், ''வெற்றிமதி'' என்ற புனைப்பெயரில் எழுதிவந்த லண்டன் வாழ் ஜெயச்சந்திரனு மாவார்கள்.'

இதையடுத்து வெளிவந்த கையெழுத்துப் பத்திரிகை ''யாழ்''. 1954ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ம் திகதி நான்கு பக்கங்களைக் கொண்ட ஒரு முழுசதுரத்தாளில், 'யாழ்' என்ற பெயரைத்தாங்கிக் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளிவந்தது. இது வீச்சுக்காறத் தெரு ஒழுங்கையில், கிணற்றடிப் பிள்ளையார் கோவில் முன் திறந்த மண்டபத்தில், இரண்டு செங்கற்கள் தாங்க நீண்ட பலகை ஒன்றின்மேல் சில மாதாந்த சஞ்சிகைகளோடு ''யாழும்'' வாசிப்பதற்காக களம் கண்டது. இதில் ஆசிரியர்களாக இருந்து செயல்பட்டவர்கள் த. அமரசிங்கம், சிவலிங்கம் ஆகியோர்.

மலேசியாவில் இருந்து வெளிவந்த 'தமிழ் முரசு' என்ற பத்திரிகையில் வாராவாரம் வரும் ''மாணவ மணிமன்றம் என்ற அனுபந்தத்தைப் பார்த்ததால் வந்த உந்துதலே 'யாழின்' பிறப்பு. ஆரம்பத்தில் நான்கு பக்கங்களைக் கொண்ட முழு சதுரத்தாளில் வந்தபோதும் ஓரிரு மாதங்களில் கோடில்லாத அப்பியாசக் கொப்பியில் 'யாழ்' உருமாறியது. இதிலும் கதை, கட்டுரை, கவிதை, சித்திரக்கதை போன்ற பல அம்சங்கள் அடங்கின.

இந்த யாழ் சஞ்சிகையின் வரவால் வீச்சுகாரத்தெருவில் ஒரு சனசமூக நிலையமும், 'விநாயக முன்னணி வாசிகசாலை' என்ற ஒரு வாசிகசாலையும் உருவாகியது ஒருகாலத்தில் திருக்கோணமலையின் பல பகுதிகளில் இருந்தும் வாசகர் கூட்டம் வந்து குவிந்த வண்ணம் இருக்கும். இந்த வாசிகசாலையில் புத்தகங்களும் இரவல் கொடுத்து வந்தார்கள். அது மட்டுமன்றி இந்த சனசமூக நிலையம் இலவசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரவுப்பாடசாலையும் நடத்தியது.


வீச்சுக்காரத் தெருவில் இருந்த 'யாழ்' பின்னர் இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது பல மாணவர்களின் பங்களிப்பு நிறையவே கிடைத்தது. ஆரம்பத்தில் இரண்டு பிரதிகளை எழுதி ஒன்று விநாயகர் முன்னனி வாசிகசாலையிலும், மற்றையது நகரசபை வாசிகசாலையிலும் போடப்பட்டது. காலப்போக்கில் ஒரு பிரதியே வெளியிட முடிந்தது.

யாழின் ஆரம்பகாலத்தில் தங்கள் எழுத்துக்களைப் பதிந்தவர்களுள் இன்று பிரபல்யமாகப் பேசப்படும், பிரமிள் என்று அழைக்கப்படும். தருமு சிவராமலிங்கம், கவிஞர்.விமர்சகர். சி.சிவசேகரம், அமரர். புலவர். சத்தியமூர்த்தி, முதுபெரும் ஊடக வியலாளர் சி.குருநாதன், நிலவளவையாளர். சி. தம்பி ராசா, தமிழர் விடுதலைக் கூட்டணியில் தேர்தலில் நின்ற பொன் இராமநாதன், து. சண்முகநாதன் போன்றோர். அது மட்டுமின்றி சமகாலத்தில் வெளிவந்த மற்றும் கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியர்களான தாபி.எஸ்.ரமணி, கென்றி ராசு போன்றோரையும் குறிப்பிடலாம். இது மட்டுமின்றி மட்டுநகரில் இருந்து, காசி ஆனந்தன், திமிலைத் துமிலன், திமிலை மகாலிங்கம், ஆரையூர் அமரன் போன்றோரின் படைப்புக்களும் இடம்பெற்றிருந்தன.

பிரமிள் என்று அழைக்கப்படும் தருமு சிவராமலிங்கன் 'எழுத்து' என்ற சஞ்சிகையில் கால் பதிக்குமுன் யாழிற்கே நிறையக் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். 'யாழில்' கால் ஊன்றியே 'எழுத்துச்' சஞ்சிகையில் தடம் பதித்தார். இது இங்குள்ள அனேகருக்குத் தெரிந்த போதும் பிரமிளைப்பற்றிக் குறிப்பிடும் போது இந்த உண்மையைக் கூறவிருப்பமின்றி இருட்டடிப்புச் செய்துவிட்டு, நேரடியாக 'எழுத்தில்' தான் முதல் கால் பதித்துள்ளதாக எழுதி வருகின்றார்கள். அதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் 'தமிழில் நவீனத்துவம்' என்ற நூலை எழுதிய பாலசுப்பிரமணியம் அந்த நூலில் 9ம் அத்தியாயத்தை 'யாழ்' கையெழுத்துப் பிரதிக்குப் பிரத்தியேகமாக ஒதுக்கி அதில் யாழில் தருமு எழுதிய கட்டுரை பற்றி எழுதியுள்ளார்.

'யாழ்' தொடர்ந்து ஐந்து வருடங்கள் வெளிவந்தது. ஒரு சில மாதங்கள் தவறுதலாக விடப்பட்ட போதும் அடுத்த வெளியீட்டை இரண்டு மாதங்களுக்குச் சேர்த்து வெளியிட்டதும் உண்டு.

இதில் ஒரு விஷேசம் என்னவென்றால் மற்றக் கையெழுத்துப் பத்திரிகைகளை விட யாழில் குழந்தைப் பாடல்கள் அதிகம் வெளிவந்தன. கழகப் புலவர். பெ.பொ.சி. சி.தம்பிராசா போன்றோர் நிறையவே எழுதினார்கள்.



தருமு சிவராமு பல புனைப்பெயர்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியபோதும் சித்திரங்களும் வரைந்துள்ளார். 'ராஜன்' என்ற புனைப்பெயரில் சண்முகவேலாயுதத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரங்களும், சித்திரக் கதைகளும் யாழுக்கு மெருகூட்டியது மட்டுமின்றி, அச்சு சஞ்சிகை போன்ற உணர்வையே ஏற்படுத்தியது.

''1952, அப்போது ஜே.எஸ்.சி.வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது (தற்போதைய எட்டாம் வகுப்பு) த.அமரசிங்கம் என்கிற ஆசிரியர் வகுப்பு ஆசிரியராக இருந்தவர். (ஆரம்பத்தைச் சேர்ந்த இவர் அப்பகுதி கிராமசபைத் தலைவராகவும் இருந்தவர் ''ஆரையூர் அமரன்'' என்ற பெயரில் இவரது பல கவிதைகள் 'சுதந்திரன்' போன்ற பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தன.)

அவரது தூண்டுதலில் பாடசாலை மட்டத்தில் தவணைக்கொன்றாக கையெழுத்தில் வெளிவரத்தொடங்கியது தான் 'அறிவுச்சுடர்' என்ற பத்திரிகையாகும். 'எஸ்.ரமணி' என்ற புனைப்பெயரில், தாபியே அதன் ஆசிரியராக இருந்து, அதன் எழுத்துப் பிரதி தயாரித்தல். தேவையான படம் கீறுதல் போன்ற அனைத்துக்கும் பொறுப்பாக இருந்தார்.

இவ்விதழ்கள் நகரசபையால் நடத்தப்பட்டு வந்த வாசிகசாலை, ஔவையார் வீதியில் இயங்கிய வினாயக முன்னணி வாசிகசாலை, காளி கோயிலடி சக்தி நூல் நிலையம் என்பவற்றில் இவ்விதழ்கள் பார்வைக்காக வைக்கப்படுவதுமுண்டு.

அக்காலத்தில் தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த சிறுவர் பத்திரிகைகளான 'கண்ணன்', கற்கண்டு போன்ற பத்திரிகைகளின் அமைப்புத்தாக்கம், ஆரம்பகால 'அறிவுச்சுடர்' இதழ்களில் காணப்பட்ட போதும், பின்னர் தனக்கென ஒரு பார்வையைப் பின்பற்றியது. இவற்றில் சிறுகதைகள், விடுகதைகள், குறுக்கெழுத்துப் போட்டிகள், பாடசாலை மாணவர் மன்றச் செய்திகள், தொடர்கதை, ஒருபக்கச் சித்திரக்கதை போன்றவை இடம் பெற்றன.

1954இல் எஸ்.எஸ். சி. இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியதன் பின் பாடசாலைத் தொடர்பு அறுந்ததன் காரணமாக பாடசாலைத் தோழர்கள் எஸ்.ஜோசப், எம். வில்வராஜ், ஹென்றி ராசு என்பவர்களின் துணையுடன் பெரிய அளவில் பக்கங்களை அதிகரித்து, இரு மாதங்களுக்கொருமுறை மேற்படி அறிவுச்சுடர் பத்திரிகையைச் சில காலம் வெளியிடக் கூடியதாக இருந்தது'' என்று, தாபி கூறினார். மேலும் அவர் கூறுகையில்,

சிலகாலம் இவரது இடமாற்றத்தினால் நின்று போயிருந்த 'அறிவுச்சுடர்' பத்திரிகை மீண்டும் 1968ல் 'ரோணியோ' இதழாக மாணவர் மன்றத்தினால் வெளியிடக்கூடியதாக இருந்தது. என்றும் தாபி குறிப்பிட்டார்.

''ஆனந்தி'' இது ஒரு மாத சஞ்சிகை. 1966இல் இருந்து 1969ஆம் ஆண்டு வரை வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியராக இருந்தவர் திருமலை நவம் என்று அழைக்கப்படும் இன்றைய உவர்மலை விவேகானந்தா அதிபர் திரு.க. நவரெட்ணம். இதுபற்றி குறிப்பிடும்போது, ஆனந்தியில் வழமை போன்று கட்டுரைகள், கவிதைகள் போன்ற ஆக்கங்களோடு நாவலும் அதில் இடம் பெற்றுள்ளதாகக் கூறினார். நாவலை எழுதியவர்களுள் திருமலை ஜீவா என்பவர் குறிப்பிடப்பட்டவர் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமலை ஜீவாவைப்பற்றிக் குறிப்பிடும்போது, இவர் நீதிமன்ற வீதியில் வசித்ததாகவும், 1967-68 இல் ''அல்லி'' என்ற ஒரு கையெழுத்துச் சஞ்சிகையை நடத்தியதாகவும், நகர பாதுகாவலனாக நியமனம் பெற்ற பின் அவரைச் சந்தித்ததில்லை என்று குறிப்பிட்டார். ''அல்லி'' ஆண்டுமலர் தட்டச்சில் வெளிவந்ததாக அறியக்கிடக்கிறது.

ஆனந்தியின் பிரசவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களுள் சான்டிக்கோ மணியம் (சுப்பிரமணியம்), கோணேஸ், நவசோதி ஆகியோராவர்.

1958, 59 காலப்பகுதியில் 'யாழ்' கையெழுத்தின் தாக்கத்தால் இந்துக் கல்லூரி மாணவன் ஜெகதீசனை ஆசிரியராகக் கொண்டு 'தாமரை' வெளிவந்தது. இதுவும் கதை, கட்டுரை, கவிதைகளைத் தாங்கி வந்தது. இதன் ஆசிரியர் ஓர் சித்திரக் கலைஞராக இருப்பதால் அவரது சஞ்சிகையில், சகல சித்திரங்களும் அவரது கைவண்ணத்தால் ஆக்கப்பட்டதே.

'யாழ்' கையெழுத்துப் பத்திரிகையில் தன் முழுப் பங்களிப்பையும் செய்துவந்த தருமு. சிவராமலிங்கத்தின் உள்ளத்தில் ஒரு புதிய எண்ணம் உருவாகியது. அது தானும் ஒரு கையெழுத்துப் பத்திரிகையை வெளிக்கொணரவேண்டும் என்பதே. காரணம். சிறுகதை, கவிதை, கட்டுரை, சித்திரம் அனைத்துமே அவருக்கு இயலுமான ஒன்று. எனவே எல்லாம் தானாகக் கொண்டு வெளிக்கொணர்ந்த கையெழுத்துச் சஞ்சிகையான ''இளங்கோ''வின், ஒரு பிரதியை அழகுற அமைத்துத் தன் நண்பர்கள், ஆசிரியரிடத்தில் காட்டி வந்தார்.

வீச்சுக்காறத் தெருவில் வசித்து வந்த திரு. செந்திவேல். இவர் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவர்தான் திருவள்ளுவர் கழகத்தை அமைத்து திருக்குறள் மகாநாட்டை நடத்திய, இந்துக்கல்லூரி மாணவர்களின் முக்கியமானவர்களுள் ஒருவர், பண்பாளர், திருக்கோணமலை இளையசமுதாயத்தை நல்வழியில் நடத்தவும், தமிழை கற்பதற்காக கழகப்புலவர் பெ.பொ.சியின் இல்லத்தில் காலை 4.00 மணிக்கு புறநானூறு வகுப்பை நடத்த, முன் நின்று உழைத்தவருமாவார். மாணவர்களின் ஒழுக்கத்தில் மிகவும் அக்கரை கொண்டவர். அவரிடத்தில் சிவராம் தன் கையெழுத்துச் சஞ்சிகையைக் காண்பித்தார். அதைப் பார்த்து ரசித்த த. செந்திவேல் மாஸ்டரின் முகத்தில் ஒரு வித அசைவு தோன்றியது. அதற்குக் காரணம் தருமுவால் வரையப்பட்ட அரை நிர்வாணப்படம். சாடைமாடையாக அதைப்பற்றியும் விமர்ச்சித்துள்ளார். அவ்வளவுதான் அந்தப் பிரதியை வாங்கிக்கொண்ட தருமு சிவராம், அந்தப்பிரதியை ஒரு கொங்கிறீற் கல்லோடு கட்டி, காளிகோவில் இடப்பக்கம் இருந்த பெரிய நீர் தொட்டியில் (தற்போது நேர்முட்டி இருக்கும் இடம்) தூக்கிப் போட்டு விட்டார்.

திருக்கோணமலையில் அந்த நாட்களில் கல்வீடுகள் மிகக் குறைவு. அனேக மானவை கிடுகுகளால் வேயப்பட்ட வீடுகளே. அதுமட்டுமன்றி குறிப்பிட்ட அந்தக் கால கட்டத்தில் காரணம் தெரியாமல் அடிக்கடி பரவலாக வீடுகள் தீப்பிடித்து எரியத் தொடங் கும், சிலசமயத்தில் காற்றின் வேகத்தால் தீ பரவி பல வீடுகள் எரிந்து சாம்பலான சம்பவங்களும் உண்டு. இதில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட இடம் சிவன் கோவிலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் குறிச்சி பகுதிகளே, எனவே இதனைத் தடுப்பதற்காக அங்காங்கே பெரிய கிணறுகள் கட்டி அதில் தண்ணீர் தேக்கி வைப்பார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தீயணைக்கும் படையினர் இக் கிணறுகளின் நீரைப்பயன்படுத்தி தீயை அணைப்பார்கள். அப்படிக் கட்டப்பட்ட கிணறு ஒன்றுதான் இன்று நேர்முட்டி இருக்கும் இடத்தில் இருந்தது. இதன் அருகில்தான் சிவராமுவின் வீடும் இருந்தது. எனவே அந்த பிரதியை கிணற்றில் போடுவதில் எந்த சிரமமும் அவருக்கு இருக்கவில்லை.

1985இல் வெளிவந்த இன்னொரு கையெழுத்துப் பத்திரிகை 'அல்லி'. இந்த பத்திரிகையை நான் பார்க்க கொடுத்து வைக்கா விட்டாலும் 1986இல் வெளிவந்த இதன் ஆண்டு மலரைக் காணும் வாய்ப்பு கிட்டியது.

இந்த 65 பக்கங்களைக் கொண்ட 'அல்லி' ஆண்டு மலரில் 37 கவிதைகள் (சிறிதும் பெரிதும்), எட்டுச் சிறுகதைகள், மூன்று கட்டுரைகள், ஐந்து விமர்சனங்கள், இரண்டு சிந்தனைச் சிதறல்கள் இருந்தன. இதுபற்றி 21.08.1967 வீரகேசரி இலக்கியப் பலகனியின் கருத்தைத் தருகின்றேன்.

**அல்லியில் பிரதேச வாசனை இல்லையே!**

''திருக்கோணமலை பாலையூற்று அஷ்ரபா நூர்டீனின் 'அல்லி' என்ற கையெழுத்து சஞ்சிகையின் ஆண்டு மலர் (86) மலர்ந்துள்ளது. தயாரிப்பு திக்குவல்லை ஸப்வான், அழகமைப்பு திக்குவல்லை ஸுஹ்ரி.

கட்டுரை, கதை, கவிதை விமர்சனம் என்று பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கி உள்ளது. அல்லியில் பக்கத்துககு பக்கம் பொருத்தமான படங்கள் வர்ணங்கள் காணப்படுகின்றன. அல்லி வெளியீட்டுக் குழுவினரின் முயற்சி பாராட்டத்தக்கது.

கவிஞர் அல்அஸீமத் அவர்கள் ஆசியுரை வழங்கியுள்ளார். சஞ்சிகையின் இறுதிப்பக்கங்கள், வாசகர்களின் இதயக் கருத்துக்களை சேகரிக்கும் களஞ்சியமாக காணப்படுகிறது.

அல்லியில் கவிதைப்படைப்பாளிகளுக்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இங்கு ஆசிரியர் அதிகமான படைப்பாளிகளுக்கு களம் கொடுக்க வேண்டும் என்ற தொனியில் தொழிற்பட்டிருப்பது தெரிகிறது. கிட்டத்தட்ட நாற்பது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அவை மரபு, புதுக் கவிதைகள். ஆனால் கட்டுரை, சிறுகதை என்பன சொற்பமாகவே இடம் பெற்றுள்ளன. கட்டுரைகள் ஆக இரண்டே இடம் பிடித்துள்ளன.

அல்லி, பிரதேச சூழ்நிலையை புறக்கணித்து விட்டது ஒரு குறை என கருதுகிறேன். திருக்கோணமலை பிரதேசமும், இக்கால நிலையில் யுத்த அவலங்கள், சோக மன ஓலங்களைக் கொண்டது. அந்த நிகழ்ச்சிகள் ஒன்று கூட சஞ்சிகையில் இடம் பெறவில்லை. அதுவும் ஆண்டு மலர் என்பதால் முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். அமைதியற்ற நிலையில் வாழும் மக்களின் சூழலை இலக்கிய கண்ணாடி காலந்தோறும் காட்ட வேண்டும். அந்த பிரதிபலிப்பினை அல்லி காட்டத் தவறி விட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''**இளங்கோ**'' என்ற பெயரில் இதே (1958, 59) காலப்பகுதியில் இன்னும் ஒரு கையெழுத்துப் பத்திரிகை பெரியகடைப்பகுதியில் இருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர்களாக திரு. ஆறுமுகம், திரு. ஜோர்ஜ் ஆகிய இருவர் இணைந்து செயற்பட்டனர்.

தி.மு.க. எழுத்துக்களால் ஆகர்சிக்கப்பட்ட இவர்கள் எம்.ஜி.ஆர். பகத்தர்கள். எனவே புதிய சிந்தனை கொண்டவர்களாக இருந்தார்கள். இரண்டு மாதத்திற்கொன்றாக 5 அல்லது 6 இதழ்கள் வெளிவந்தன. பொது நூல் நிலையத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டன. ஒரு இதழ் அச்சில் வெளிவந்தது. இதன் சித்திரக்காரர் தாபி அவர்கள் சினேக்லேனில் இருந்து வெளிவந்த இச்சஞ்சிகை தேவாலயங்கள் பற்றிய புரட்சிகரமான செய்திகளை வெளியிட்டதன் காரணமாக, தொடர்ந்து வெளிவரமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டது.

இவ்விதமாக நிறையவே வெளிவந்த போதும் ஒவ்வொன்றைப்பற்றி தெளிவாக தேவைக்கு ஏற்ப அவற்றின் பெயரையும் காலத்தையும், ஆசிரியர்கள் விபரத்தையும் கீழே தருகின்றேன்.

"Trinco Dyle" இருமொழியில் Father Dely என்பவரால் புனித சூசையப்பர் கல்லூரியின் சார்பில் இரு பக்கங்கள் கொண்ட மாதாந்த செய்திப் பத்திரிகையாக அச்சில் 1950 - 51 - 52 காலப்பகுதியில் வெளிவந்தன.

1958இல் அச்சில் வெளிவந்த சஞ்சிகை 'நிலா', ஆசிரியர் தாபி, பதிப்பாசிரியர் வர்ணன். இதே ஆண்டில் வெளிவந்த கையெழுத்துப் பத்திரிகை ''இளங்கதிர்'' ஆசிரியர் சி. ஆறுமுகம்,

1964ஆம் ஆண்டு தி/கலைமகள் மன்றம் நடத்திய கையெழுத்துப்பிரதி ''அலை'' இதன் ஆசிரியர் செ. சச்சிதானந்தம்.

1987 தை 1ஆம் திகதி 'கோணைத்தென்றல்'' என்ற மாதாந்த சஞ்சிகை தட்டச்சில் வெளிவந்தது. இது 14, வித்தியாலயம் ஒழுங்கையில் இருந்து TSK அறிவாலயம் என்ற வெளியீட்டகத்தினூடாக வெளிவந்தது. இதன் இணை ஆசிரியர்கள், ''தில்லை சசி'' என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் தில்லைக்குமரன், சிங்காரவேலு சசிக்குமார் ஆகியோராவர். பல பிரச்சனைகளுக்கு மத்தியிலும் 90ஆம் ஆண்டுவரை வெளிவந்தது. மீண்டும் 1995ன் ஐப்பசியில் அச்சில் ஒரு இதழ் வெளிவந்தது.





1978ம் ஆண்டு சித்திரைத் திங்களில் **வசந்தம்** கையெழுத்துப் பத்திரிகையாக வெளிவந்தது. இதில் கதை, கவிதை, கேள்வி, பதில் போன்ற பல அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. இதன் ஆசிரியராக மௌலீஸ்வரன் இருந்தார்.

நவம்பர் மாதம் வரையே இப்பத்திரிகை வெளிவந்தது. அதன் பின் பல ஆண்டுகள் கழித்து 1988இல் கோணேஸ்வரனை இணைத்துக் கொண்டு மீண்டும் வசந்தம் சித்திரைத் திங்களில் அச்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்தது. இருந்தும் இச்சஞ்சிகை 6 மாதங்களே வெளிவந்தது. இதன் புரட்சிகரமான சிந்தனைகளும், கருத்துக்களும் அன்றைய காலகட்ட சூழ்நிலையில் சுமுகமான உறவை வளர்க்கவில்லை.

நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றத்தின் காரணமாக எங்கள் நிலைப்பாடும் மாறவேண்டி இருந்ததால் தொடர்ந்து செயல்பட முடியாமல் போய்விட்டது என்று, வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார், அதன் ஆசிரியருள் ஒருவரான மௌவீஸ்வரன்.




- 1991.03.31இல் தி/மெதடிஸ்த சேகர வாலிபசங்கத்தால் வெளியிடப்பட்ட கையெழுத்து பத்திரிகை 'திருமலைத்தீபம்''
- 1989-02-04இல் 21, கிறீன் வீதியில் இருந்து வெளிவந்தது. 'யதார்த்தம்' என்ற தட்டச்சு சஞ்சிகை.
- 1992.03.30இல் தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இருந்து வந்த சஞ்சிகை 'அறிவொளி'
- 1966ஆம் ஆண்டு 60, இராஜவரோதயம் வீதியில் வெளிவந்த கையெழுத்து மாதாந்த ஏடு 'யாழ்', ஆசிரியர் பெ.பொ.சியின் மகன் தனசேகரம், உதவி ஆசிரியர் கோணேஸ்வரன், மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்தது.
- அதே ஆண்டில் வெளிவந்த மற்றொரு ஏடு 'கன்னித்தமிழ்' ஆசிரியர் - க. கோணேஸ்வரன், ஓவியம் - செ. அல்லிமுத்து, விலாசம் - 25, வெலிங்கட அடை வீதி, திருக்கோணமலை.
- ''மாலை நிலா'' 1967ஆம் ஆண்டு, 300, திருஞானசம்பந்தர் வீதியில் இருந்து வெளிவந்த மாதாந்த ஏடு. ஆசிரியர் இணைய சிவலிங்கம்.
- திருமலை நேசன் 1966ஆம் ஆண்டு வெளிவந்த சஞ்சிகை, ஆசிரியர் சத்திய மூர்த்தி (DR), தமிழக இனிது நேசன் மாதிரி அமைப்பைக் கொண்டு வெளிவந்தது. மாணவர்களிடையே பரபரப்பையும் விறுவிறுப்பையும் ஏற்படுத்தியது.மாணவர்களிடையே பரிமாற்றம் மூலம் வாசகர்களை வளர்த்துக் கொண்டது. மூன்று நான்கு இதழ்களுடன் நிறுத்த வேண்டியதாயிற்று.



- 1977இல் வெளிவந்த மற்றுமொரு சஞ்சிகை 'புதுமை நெஞ்சங்கள்' ஆசிரியர்கள் அருள் சுப்பிரமணியம், தாபி, சு.சுந்தா, நவசோதி. 5 பிரதிகள் வரை வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிரவன் 1972இல் தட்டச்சில் வெளிவந்த முத்திங்கள் ஏடு, ஆசிரியர்கள் எம். வை. ராஜகபூர், தங்க சச்சிதானந்தன், அனஸ்டின், பத்திநாதன், ஓவியம் கிங்ஸ்லி, இது 305,அன்புவழிபுரத்தில் இருந்து வெளிவந்தது.

**நிலாவெளியில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளாவன.**

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜவரோதயம் அவர்களின் நினைவாக 1960ஆம் ஆண்டு ''வரோதயன் மலரகம்'' என்னும் கையெழுத்தும் ஏடு வெளிவந்தது. ஒரு பிரதியோடு அது நின்று விட்டது.

இதையடுத்து 'நிலவொளி'' என்ற கையெழுத்துச் சஞ்சிகை வெளிவந்தது. சஞ்சிகைக்குழுவில் திரு.ரீ.என்.தவபாலன் (நிலவின்தாசன்) கு.மயில்வாகனன் (நிலாகேகயன்) கெ.சித்திரலோயுதன் (நிலாவூர்ச்சித்திரா) க.சிதம்பரநாதன், தா.அமிர்தகுல சிங்கன், கெ.தர்மகுலராஜா, திரு.சண்முகராஜா ஆகியோர் அடங்குவர்.

தகவல் - ரீ.என். தவபாலன்

**கிண்ணியாவில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளாவன.**




1. **மலர்விழி** - 1958ல் வெளிவந்த கையெழுத்துச்சஞ்சிகை ஆசிரியர்கள் S.A. முத்தலிப், M.I.M. தாஹீர்.

2. **முத்து** - மாத இதழ் 1961இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் வெளியிடப்பட்டது. ஆசிரியர்கள் M.I.M. சாலிஹ், M.I.M. தாஹீர்.

3. **தியாகி** - 1964இல் முற்போக்கு வாலிபர் மன்றத்தால் வெளியிடப்பட்ட மாத இதழ் ஆசிரியர்கள் M.I.M. தாஹீர், S.A. முத்தலிப்

4. **கேணிச்சுடர்** - ஆலங்கேணி பாரதி படிப்பகத்தால் 1965இல் வெளியிடப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகை ஆசிரியர் கேணிப்பித்தன்.

5. **பாரதி** - ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தால் 1970இல் வெளியிடப்பட்டது. ஆசிரியர் சி. பரமேஸ்வரன்.

6. **ஈச்சம்பழம்** - ஈச்சந்தீவு பிள்ளையார் படிப்பக வெளியீடாக 1973இல் வெளிவந்தது. ஆசிரியர் தாமரைத்தீவான்.

7. **கிண்ணி** - கிண்ணியா மகா வித்தியாலயத்தால் 1980இல் வெளியிடப்பட்டது. கையெழுத்துச் சஞ்சிகை ஆசிரியர் M.A. அக்பர் சலீம்

8. **வரப்பு** - ஆலங்கேணி விடிசேவல் கலை இலக்கிய ஒன்றியத்தால் 1982இல் வெளியிடப்பட்ட மாத மரபுக் கவியேடு ஆசிரியர் அ. கௌரிதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **நேயம்** - கிண்ணியா எவர்சைன் அச்சகத்தில் இருந்து 2000ஆம் ஆண்டில் வெளிவந்த செய்திப்பத்திரிகை. ஆசிரியர் எம்.எஸ்.எம். நியாஸ்.

10. **கதிரவன்** - ரெயின்போ மினிலாப் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தினசரி செய்திப்பத்திரிகை. சி.குருநாதன், சி.சசிகுமார், ந.அனந்தராஜ், மற்றும் பலரின் கூட்டு முயற்சியில் வெளிவந்தது

11. **பூச்சிட்டு** - கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இருந்து 2003ஆம் ஆண்டு வெளிவந்த சிறுவர் சஞ்சிகை ஆசிரியர் ஏ.சீ.எம். முஸ்இல்.

12. **குரல்** - கிண்ணியா குரல் வெளியீட்டகத்தால் 2003இல் வெளியிடப்பட்ட செய்திப்பத்திரிகை.

தகவல் ஏ.சீ.எம். முஸ்இல் (B.A. Dip in Ed)

### மூதூரில் இருந்து

1976 நவம்பர் மாதத்தில் இருந்து வெளிவந்த மாதாந்த சஞ்சிகை 'முத்தூர் முரசு' 12 பக்கங்களைக் கொண்ட இச்சஞ்சிகை தட்டச்சில் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இதனை மூதூர் இளைஞர் இலக்கிய மன்றம் வெளியீடு செய்துள்ளது. ஒரு ஆசிரியர் குழு இதன் வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுள்ளனர். 1977ஜனவரி, 1977 மார்ச் ஆகிய இரு இதழ்கள் என்பார்வைக்குக் கிடைத்தது. இதில் கவிதை, குட்டிக்கதை, தொடர்கதை இவற்றுடன் புன்னகைப்புதிர் என்ற பகுதியும் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. இதில், மு.க. அமானுல்லா, புதுவை இரத்தினதுரை, தோப்பூர் குணாளன், ஜே.பி. ஞானச்சந்திரன், ரீ.ஏ.ஜாயா, செல்வி.பிரபா, தவா, நிலவின்தாசன், வீ.எம்.நகீப், அஸ்லம் சுஜா, கே.எம்.ஹனிபா ஆகியோரது கவிதைகளுக்கும் இ.ஜெகதீசன், வ.அ.இராச ரெத்தினம், மூதூர் ஜனாப் காதர், திருமலை சுந்தா, K.R. டேவிற், ஏ.எஸ்.உபைதுல்லா போன்றோரது கதைகளும் மூதூர் மக்கீனின் தொடர்கதையும் இடம் பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் குழுவில் ஏ.எஸ்.உபைதுல்லா, எம்.எஸ்.அமானுல்லா, மூதூர் ஜனாப் காதர், வீ.எம்.நகீப், எம்.பலீல் ஆகியோர் பங்கு கொண்டுள்ளனர்.


திருக்கோணமலைக் குரல்

இக்கட்டுரையைச் சில பக்கங்களுக்குள் அடக்கவேண்டி இருப்பதாலும், ஆவணப்படுத்தப்பட்டுள்ள சில சஞ்சிகைகளை தேடுவதில் ஏற்பட்ட சிரமத்தின் காரணத்தாலும் உரியநேரத்தில் இக்கட்டுரையை முடிக்க வேண்டும் என்ற கால நிர்ணயத்தாலும் என் ஆய்வைப் பூரணப்படுத்த முடியவில்லை.

மூதூர் இலக்கிய கர்த்தாக்களிடம், பலமுறை அங்கு வெளிவந்துள்ள மாத கையெழுத்து, தட்டச்சு, அச்சு சஞ்சிகைகளைத் தந்துதவும் படி பலமுறை கேட்டும் பலன் பூஜியமே. மேற்கண்ட இரு இதழ்களும் ஒரு கடைக்காரரிடம் மன்றாட்டமாகக் கேட்டுப் பணம் கொடுத்துப் பெற்றவையே.

இவை முடிந்த முடிவல்ல. இக்கட்டுரை யினூடாக ஒரு புதிய உந்து சத்தி கிடைத்துள்ளது. அதி விரைவில் இது பற்றிய ஒரு ஆவணப்பதிவை ஏற்படுத்த வேண்டும். நம் நாட்டின் சிற்றேடுகள் பற்றிய விரிவான நூலை எழுத வேண்டும் என்ற முனைப்பே அது. இறை அருளால் அது நிறைவேறும் போது இப்போது விடப்பட்ட அனைத்தும் ஆதாரங்களுடன் படங்களுடன் தெளிவாக வெளியிட எண்ணியுள்ளேன். இதுவரை தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

வேண்டுகோளை அலட்சியம் செய்தவர்கள். தங்கள் மண்ணிற்காவது தங்களிடம் உள்ள பதிவுகளைத் தந்துதவினால் ஒரு பூரணத்துவமான ஆய்வு நூலை வெளிக் கொணரலாம் என நம்புகிறேன்.

நான் அறிந்தமட்டில் 1954ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை வெளிவந்த கையெழுத்துப் பத்திரிகை, தட்டச்சுப்பத்திரிகை, றோணியோபத்திரிகை அச்சுப் பத்திரிகைகளில் தொண்ணூறு வீதமான பங்களிப்பை - கதை, கவிதை, சித்திரம் இப்படி ஏதோ ஒரு விதத்தில் பங்களிப்புச் செய்துவரும் ஒரே இலக்கியவாதி, பன்முகப்பட்ட ஒரு கலைஞன் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுகதை, கவிதை, நாவல், நாடக எழுத்தாளரும் நடிகரும் சித்திரக் கலைஞருமான ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் தாபி சுப்பிரமணியம் என்றால் அது மிகையாகாது. இன்றும் அவர் ஓயவில்லை.

**தந்தையின் கடமை**

**''எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச் செந்நெறி - மேல் நிற்பச் செயல் வேண்டும் - அந்நெறி மான்சேர்ந்த நோக்கினாய் ஆங்க வணங்காகும் தான் செய்த யாவை தனக்கு.''**

மான் போன்ற பார்வையை உடையவளே! ஒரு தந்தையானவன் தன் குழந்தையை எவ்விதத்திலேனும் நல்ல வழியில் நிற்குமாறு அறிவுறுத்துதல் வேண்டும். தன்னால் நிலை நிறுத்தப்பட்ட படிவம் தனக்கே தெய்வம் ஆகும் செந்நெறியில் நிற்கச் செய்தல் தெய்வமான தன்மையை அமையச் செய்தலாம்.

பழமொழி நானூறு

உலகெங்கும் உள்ள பாடசாலைகள், “ஸ்தாபிக்கப்பட்ட சமூக ஒழுங்கினை மீண்டும் பிரதி செய்வதற்காக திட்ட மிடப்பட்ட வர்த்தக நிறுவனங்களோ” ஆகும். மலேசியாவிலோ, பிரேசிலிலோ, கூடுதலான பாடசாலைகள் அமைக்கப்படுவது காலத்தையிட்டு ஒரு கணக்காளரின் கண்ணோக்கையும் பதவியுயர்வுகளையிட்டு ஒரு அதிகாரியின் கண்ணோக்கையும், அதிகரித்த நுகர்வையிட்டு ஒரு விற்பனையாளரின் கண்னோக்கையும், வேலையின் நோக்கத்தையிட்டு ஒரு தொழிற்சங்கத் தலைவனின் கண்ணோக்கையும் போதிக்கின்றன. வகுப்பில் கூடுதலான நேரம் செலவு செய்தல் சந்தையில் தங்கள் பெறுமதி அதிகரிக்குமென மக்கள் படிக்கின்றனர்.

**- ஐவன் இல்லிச் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான துணைச் சாதனங்கள்

நடராஜா அனந்தராஜ்

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் மொழி விருத்தியும், ஆக்கத்திறன் விருத்தியும் குன்றி வருவதை அண்மைக்கால ஆய்வுகள் சுட்டிக் காட்டிய போது, கல்விப்புலத்தில் உள்ளவர்களால் அதனைச் சீரணிக்கும் நிலை ஏற்படவில்லை. ஆனால் மாணவர்கள் மட்டத்திலும், ஏன் ஆசிரியர்கள் மட்டத்திலும் கூட வாசிப்பு திறன் பழக்கமும், மொழி விருத்தியும் குன்றி வருவதைக் காணமுடிகினறது. இத்தகைய நிலைக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1. மாணவர்கள், ஆசிரியர்கட்கான வாசிப்புப் பயிற்சியும, கால அவகாசமும் வழங்கப்படுவதில்லை.

2. பாடசாலைகளில் நூலக அபிவிருத்தி ஏற்படுத்தப்படவில்லை. ஏறகனவே பொதுக் கல்வித் திட்டத்தினூடாக நவீன நூலக வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பாடசாலைகள் கூட, ஒழுங்கான முறையில் அவற்றைப் பயன்படுத்துவதில்லை.

   உ - ம்:- 1. சிலபாடசாலைகளின் நூலகக்கட்டிடம் வேறு தேவைக்காகப் பயன்படுத்தப்படுவதால்.
   2. நூல்கள் அலுமாரிகளில் பூட்டி வைக்கப்படடிருத்தல்.
   3. மாணவர்கட்கான நேரசூசி ஒழுங்கு பேணப்படுவதில்லை.
   4. ஆசிரிய நூல்களின் (Teacher Libra..........) பணியை முறையாகச் செய்வதற்கு அனுமதிப்பதில்லை.

3. அண்மைக்காலத்தில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்கள், திரைப்படங்கள் மாணவரின் வாசிப்புத்திறனை மழுங்கடிக்கச் செய்து வருகின்றன.

4. பாடசாலைகளுக்கு கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியைத் திட்டமிடுகையில் அதிபர்கள் நூலக அபிவிருத்தியில் கவனம் செலுத்துவது முறை

5. தேர்வு மையக் கல்வியினூடாகவே மாணவர்கள் பயிற்றப்பட்டு வருவதால் விடைக்குறிப்புக்களை மட்டும் மனனம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தி வருதல். இதற்கு வகுப்பு ரீதியாகச் சில ஆசிரியர்களும் உடந்தையாக இருத்தல்.

இத்தகைய பாரதூரமான ஒரு நிலையில் இருந்து எமது வருங்காலச் சந்ததியினரை மீட்டெடுக்க வேண்டிய தேவை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் புலத்தில் பணியாற்றுவோரிடமே உள்ளது. இதனை ஒரு சமூகப் பொறுப்பாகக் கருதி ஒவ்வொரு ஆசிரியரும் இதய சுத்தியுடன் செயற்பட முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பினால் அரவணைக்கும் தாயல்ல இவன்
அகிலத்தை அன்பால் வெல்லும் ஆசானிவன்
அருகோட ணைக்கச் சுகமாய்க் கற்கும்
மழலைகள் முகத்திலோ பாரீர் உலகை

மாணவர்கள் நூல்களின் மீது விருப்பத்தை ஏற்படுத்தவும், அவற்றை வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்யவும் பல்வேறு உத்திகளை ஆசிரியரின் கையாள்கையினூடாக மாணவர்களிடையே வாசிப்பு ஆற்றல்களுக்கும் திறனும் உயர்வடையும்.

இதற்குப் பின்வரும் சில அணுகுமுறைகளை வகுப்பறையாகவும், சனப்பயணங்களிலும் அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவன் உயர் ஆளுமையை விருத்தி செய்ய முடியும்.

## 1. செயல் அட்டைகள்

மாணவர்கள் விரும்பும் பொருட்கள், கதைப்பாடல்கள், குழந்தைப் பாடல்கள், ஆட்டப்பாடல்கள், போன்றவற்றை ஆசிரியர்கள், தாமே தயாரித்து பொருத்தமான விளக்கப்படங்களுடன் வேறுபட்ட செயல் அட்டைகளாகத் தயாரித்து ஒரு ஆண்டுகளுக்குத் தேவையானவற்றைத் தொகுத்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இவை போன்ற செயல் அட்டைகளைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தித் தயாரிக்கச் செய்ய வேண்டும். மாணவர்கள் விரும்பும் விடயங்களை பெரிய எழுத்தில் சில சிறிய சொற்றொடர்கள் உடையதாக ஆக்க வேண்டும். இதற்கு மஞ்சள் அல்லது பழுப்பு வெள்ளைத் தாள்களையும் கறுப்பு அல்லது நீல நிறப் பேனையை பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை அமைப்பதற்கு சிறுகதைகள், குழந்தைப் பாடல்கள், விலங்குகள் பறவைகள் பற்றிய விபரங்கள், கதைப்பாடல்கள் போன்றவற்றையும், படங்களுடன் பயன்படுத்தலாம்.

இவை அச்சில் வெளிவரும் நூல்களை விட கண்ணையும், கருத்தையும் கவரும்.

## 2. படங்களும், சொற்களும் உள்ள அட்டைகள்

• வளர்ப்பு விலங்குகள், பறவைகள், விளையாட்டுப் பொருட்கள், மரம், செடி, கொடிகள் வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், ஊர்தி வகைகள், உடல் உறுப்புக்கள் ஆகியவற்றைப் பற்றி மாணவர்களுக்குத் தெரிந்தவற்றைத் தெரிவு செய்து ஒவ்வொன்றையும் விளக்கும் படங்களைத் தனித்தனியாக வரைந்து அல்லது ஒட்டி ஒவ்வொன்றின் கீழும் அவற்றின் பெயரைப் பெரிய எழுத்துக்களில் எழுதி அட்டைகளைத் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதேபோன்று படங்கள் இன்றியும் சொற்களை அட்டைகளில் எழுதி வைத்திருத்தல் வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் கல்வியைத் தொடங்கும் பிள்ளைகளுடன், ஆசிரியர்களை அன்னியோன்னியமாகப் பழகி, உறவாடியபின் இந்த அட்டைகளைக் கொடுத்து அவற்றில் உள்ள சொற்களை நினைவுப்படுத்திப் படிக்கும் பயிற்சியை ஏற்படுத்த வேண்டும். இவற்றில் நல்ல பயிற்சிகள் ஏற்பட்ட பிறகுதான், அச்சிடப்பட்ட நூல்களைக் கொடுத்து வாசிக்கச் செய்தல் வேண்டும்.

## 3. படங்களையும், பெயர்களையும் இணைத்தல்.

பிள்ளைகள் அனுபவ ரீதியாகக் கண்டு உணர்ந்த பொருட்களின் படங்களையும், அவற்றின் பெயர்களையும் தனித்தனியாக அட்டைகளில் எழுதித் தயாரித்து வைத்துக் கொள்ளல் வேண்டும். இவற்றைப் பிள்ளைகளிடம் கொடுத்துப் படத்திற்குப் பொருத்தமான பெயரைப் பொறுக்கிச் சேர்க்கச் செய்தல். அதே போன்று பெயருக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்யவும் பயிற்சிகளைக் கொடுத்தல்.

## 4. முகவரி அட்டைகள்:-

வகுப்பில் உள்ள பிள்ளைகள் ஒவ்வொருவரின் பெயர்களைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதி வைத்திருத்தல் வேண்டும். இந்த அட்டைகளை எழுமாற்றாக ஒவ்வொருவரிடமும் கொடுத்து அவற்றை உரியவரிடம் சேர்ப்பிக்கச் சொல்லுதல். இவற்றை அவர்கள் தமது சட்டையில் இணைத்து வைக்கச் செய்தல். 'தபால்காரன்' விளையாட்டு என அழைக்கப்படும்.

## 5. சொற்றொடர் அட்டைகள்:-

எழுவாய் பயனிலை கொண்ட தனி வாக்கியங்கள் கொண்ட சொற்றொடர்களையும், அவற்றிற்குப் பொருத்தமான படங்களையும் கொண்ட அட்டைகளைத் தயாரித்தல்

உ - ம் ''மாடு மேய்கிறது''
''வாத்து நீந்துகின்றது''
''நாய் ஓடுகின்றது'' போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தலாம்.

இதேபோன்று பன்மைச் சொற்றொடர்களையும் எழுதி வாசிக்கும் பயிற்சியைக் கொடுக்கலாம்.

உ - ம்:- வேலன் பந்து அடிக்கின்றான்
மாடு புல் மேய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. கட்டளை அட்டைகள்:-**

பிள்ளைகள் அன்றாடம் செய்யக்கூடிய சிறிய செயல்களை அல்லது வேலைகளைக் கொண்ட கட்டளைத் தொடர் வாக்கியங்களைப் பெரிய எழுத்தில் எழுதி அச் செயல்களை நிறைவேற்றச் செய்யலாம்.

உ - ம் ''எழுந்து நில்''
''புத்தகத்தை எடு''
''நேரே செல்''

''வலப்புற திரும்பு'' போன்ற கட்டளைச் சொற்றொடர் அட்டைகளைத் தயாரித்து அவற்றைப் பிள்ளைகளிடம் காட்டி அச்செயலை நிறைவேற்றச் செய்தல்.


**7. சொல் அட்டைகளைத் தொங்கவிடுதல்**

வகுப்பு, பள்ளி, பள்ளியில் உள்ள தோட்டம் போன்ற இடங்களில் உள்ள பொருட்களின் பெயர்களை எழுதி அப்பொருட்களில் அல்லது மரங்களில் தொங்கவிடுதல். இவற்றை ஒவ்வொரு நாளும் பார்க்கும் பொழுது அச் சொற்களை வாசித்து மனதில் நிறுத்திக் கொள்வர்.

**8. அறிவிப்புப் பலகைகள் / செய்திப் பலகைகள்:-**

அன்றாடம் தெரியப்படுத்த வேண்டிய முக்கிய செய்திக் குறிப்புக்களை எழுதி, அவற்றைப் படிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

உ - ம்:- ''நாளை பொங்கல் பண்டிகை, பள்ளி விடுமுறை
''இன்று மாணவர் எழுச்சி நாள்.



**'' நிறையப் பேச ஆசைதான்... ஆனால் எனக்கு கணக்கச் சொற்கள் தெரியாதே இப்போ சின்ன சின்ன படக் கதைகளை கொஞ்சம் கொஞ்சமாக வாசிக்கிறேன். அப்புறமா நிறையப் பேசுவேன்.......ஓகே!''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாளை மறு நாள் பள்ளியின் ஆண்டு விழா'' என்பன போன்ற செய்திகளை எழுதி மாணவர்களின் பார்வையில் பட விடலாம்.

### 9. கதைப்படங்கள்:-

ஒரு ஆண்டில் வகுப்பில் கற்பிக்கக் கூடிய இருப்பதற்குக் குறையாத கதைப்படங்களைத் தயார் செய்து வைத்தல். ஒவ்வொரு கதைக்கும் நான்கு அல்லது ஆறு பகுதிகளாக விளக்கப்படங்கள் அமைதல் வேண்டும். ஒவ்வொரு படத்தின் கீழும் க்தையை விளக்கும் முறையில் ஒன்றிரண்டு சிறிய சொற்றொடர்களை எழுதி வைத்தல். இவற்றை வாசிக்கும் பயிற்சியை வழங்குதல்.

### 10. படிப்புத் தாள்கள்:-

பிள்ளைகளின் துணையுடன் ஒரு படத்தை அல்லது கதையைப் பற்றிய பல சொற்கள் அல்லது சொற்றொடர்களைப் பெரிய தாள்களில் பெரிய எழுத்துக்களில் எழுதித் தொங்கவிட்டு வைக்கலாம். இவற்றை நூல்களுக்குப் பதிலாகப் படிப்பதற்குப் பயன்படுத்தலாம்.

### 11. தேதிப் பெட்டி

சொற்களும், படங்களும் எழுதிய தாள் சுருளை ஒரு பெட்டியில் அமைத்து அவற்றைச் சுழற்றக் கூடியவாறு அமைத்து வைத்தல். பெட்டியின் கைப்பிடியைச் சுழற்றும் பொழுது ஒவ்வொரு சொல்லும், படம் பிள்ளைகளுக்குத் தெரியும். அவற்றை ஆவலுடன் அவர்கள் வாசித்துப் பயிற்சி பெறுவர். இவை ஆசிரியர் வகுப்பில் இல்லாத வேளைகளிலும் சுய கற்றலை ஊக்குவிக்கும்.

### 12. தனிப் பயிற்சிக்கான செயல் அட்டைகள்:-

வகுப்பை ஆறு குழுக்களாக பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வகை அட்டைகளைக் கொடுத்து அவற்றிற்கான விடைகளை எழுதச் செய்தல். இவற்றை மாற்றி மாற்றிக் கொடுத்தல்.

ஆறு தனிப்பயிற்சி செயல் அட்டைகளைப் பின்வருமாறு தயாரிக்கலாம்.

1. ஒழுங்கின்றி எழுதப்பட்ட சொற்களைக் கொண்ட வாக்கியங்களைத் தயாரித்தல். இவற்றை மாணவர்கள் ஒழுங்குபடுத்தி வசனமாக்குதல் வேண்டும்.

2. விடுகதைகளை எழுதி அவற்றை வாசிக்கச் செய்து அவற்றுக்கான விடைகளை எழுதச் செய்தல்.

3. வினாக்களுக்கு ஏற்ற விடைகளையும், விடைகளுக்கு ஏற்ற வினாக்களையும் பொருத்திக் கண்டு பிடித்தல்.

4. இரு நிரல்களில் ஒரு நிரலில் வாக்கியம் அல்லது கூற்றையும் எழுதுதல் மற்றைய நிரலில் அவற்றுக்குப் பொருத்தமான சொற்களை ஒழுங்கற்ற முறையில் எழுதி அவற்றைச் சரியாக இணைக்கச் செய்தல்.

5. ஒரு பொருள் குறித்த பல சொற்கள், பல பொருள் குறித்த ஒரு சொல்லையும் எதிர்ச் சொற்கள், எதிர்பாற சொற்கள் போன்றவற்றையும் அட்டையில் எழுதிக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

6. சரி அல்லது தவறு என்ற இருவகைக் கூற்றுக்களைக் கொடுத்துச் சரியானவற்றைக் கண்டு பிடிக்கவைத்தல்.

இவை போன்ற வெவ்வேறு வகைச் செயல் அட்டைகளைத் தயாரித்துக் குழு முறையில் செயற்பட வைத்தல்.

## 13. வாக்கிய அஞ்சல் போட்டி:-

ஒரு சொல்லை ஒரு மாணவன் சொல்ல அதன் அடுத்த சொல்லை வேறு ஒருவர் கூற இப்படி ஒவ்வவொரு வாக்கியங்களை அமைத்துச் சொற்பயிற்சியைக் கொடுத்தல்.

## 14. பெரிய புத்தகங்களைத் தயாரித்தல்:-

பெரிய படங்கள் அவற்றுக்குப் பொருத்தமான கதைக்குரிய வாசகங்களை எழுதி பெரிய அளவிலான புத்தகங்களைத் தயாரித்து மாணவர்களுக்கான வாசிப்புப் பயிற்சியைக் கொடுத்தல். இவை மாணவர்களால் இலகுவில் அவதானிக்கக் கூடியவையாகவும், கவர்ச்சியாகவும், இருப்பதால் மாணவர்கள் விரும்பி வாசிப்பர்.

## 15. நடமாடும் புத்தகப் பெட்டி முறை (Mobile Library Book Box)

ஒவ்வொரு வாகுப்புக்கும் பொருத்தமான சிறிய கதை நூல்களைப் பெட்டியில் வைத்து வகுப்பு ரீதியாகப் பெயர்ச் சுட்டி ஒட்டி வைத்தல். வகுப்பு நேரங்களில் பாடங்கள் நடைபெற்ற வேளைகளில், நூலக மாணவர் தலைவர் (Library monitor) மூலம் அவை வகுப்பறைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவற்றை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும், வழிகாட்டல்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

இவ்வணியைச் சிறப்பாகச் செய்வதற்கு ஆசிரிய நூலகரின் சேவையை அதிபர் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தினூடாகக் கிடைக்கும் அனுகூலங்கள் பின்வருமாறு.

1. நூலக மாணவர் தலைவர்களை ஒவ்வொரு வாரமும் புதிது புதிதாகத் தெரிவு செய்து பொறுப்பை ஒப்படைப்பதால் மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பு வளர்க்கப்படுதல்.

2. வகுப்பறை வேலைகள் பாதிக்கப்படாது இருப்பதுடன் ஒழுங்கு, கட்டுப்பாடும் பேணப்படும்.

3. மாணவர்களிடம் ஒவ்வொரு நூல்களைக் கையளிக்கும் போதும், அவர்கள் எவ்வாறாயினும் அவற்றைப் பார்க்கவோ அல்லது வாசிக்க முயற்சி செய்யவோ வேண்டிய கட்டாய தேவை உள்ளது.

4. படிப்படியாக வெவ்வேறு வகையான நூல்களைப் பார்க்கவேண்டும். வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கும்.

5. நூல்களைப் பேண வேண்டும், அவற்றை முறைப்படி பயன்படுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி ஒவ்வொரு பிள்ளையிடமும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்து பார்த்துக் கற்றிடுவோம்
நாளும் நெஞ்சில் பதித்திடுவோம்
அதனால் உலகை வென்றிடுவோம்
ஏற்றம் பெற்றே உயர்வோம் நாம்

## 16. செய்திப் பலகைகளைத் தயாரித்தல்:-

பாடசாலை அலுவலக முகப்பில் அல்லது மாணவர்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் பெரிய அளவிலான செய்திப் பலகையை அமைத்து வைத்தல். இதில் நாள்தோறும் ஏதாவது செய்திகளை அல்லது தகவல் குறிப்புக்களைப் பெரிய எழுத்துக்களில் வெவ்வேறு நிறங்களில் எழுதிக் காட்சிக்கு வைத்தல்.

இதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து அவர்கள் மூலம் செய்திகளைத் தயாரித்து எழுதுவித்தல் வேண்டும். இதற்கு ஆசிரிய நூலகர் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் செயற்படுவார். இதன் மூலம்,

1. செய்திகளையும், தகவல்களையும் தயாரிக்கும் மாணவர்கள் வாசித்துத் தகவல்களைத் திரட்டிக் கொள்வர்.

2. கூட்டப் பொறுப்பு வளர்க்கப்படும்.

3. தலைமைத்துவப் பண்பு மேம்படுத்தப்படும்

4. அவ்வழியால் போகின்ற ஒவ்வொருவரின் கண்களிலும் இது எளிதாகத் தென்படுவதால் அவற்றை வாசிக்க முற்படுவர்.

5. மாணவர்களின் எழுத்தாற்றலும், கிரகிக்கும் தன்மையும் வளர்த்தெடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. வகுப்பறை நூலகம் அமைத்தல்:-

ஒவ்வொரு வகுப்பிலும் சிறிய அளவிலான நூல் றாக்கைகளைத் தயாரித்து அவற்றில் நூல்களை நேரான பார்வையில் படக்கூடியவாறு காட்சிப் படுத்துதல். இவை மாணவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டுவதுடன் வாசிக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் ஏற்படுத்தும்.

## 18. சில மணித்துளி நேரம் எல்லாப் பணிகளையும் நிறுத்தி எதையாவது வாசிக்கச் செய்தல்.

இது Drop Everything And Read (DER) என்ற ஆங்கில வாசகத்தால் குறித்துக் காட்டப்படும் ஒரு வாசிப்பு ஊக்குவிப்புச் செயல்திட்டமாகும். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரம் மணி அடித்தலும் பாடசாலையில் உள்ள ஒவ்வொருவரும் அப்படியே மௌனமாக நின்று எதையாவது வாசிக்கும் பழக்கத்தை அறிமுகம் செய்தல் வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள் எல்லோருமே இச் செயல்திட்டத்தில் பங்கு பெற வேண்டும்.

## 19. நூலின் ஆர்வமுள்ள பகுதியின் ஒரு பக்கத்தைப் பெரிய அளவில் காட்சிப்படுத்துதல்:-

ஏதாவது ஒரு நூலின் ஆர்வத்திற்குரிய பந்தியை மட்டும் பெரிய தாளில் எழுதி அல்லது ஒளிபுக விடும் தாளில் எழுதி, மேனிலை படகுமாரி கருவியினூடாக திரையில் விழச் செய்து அப்பந்தியின் பகுதியை வாசிக்க வைத்தல் அதில் ஆர்வம் ஏற்பட்டதும், அந்நூலை பெற்று அக் கதையை வாசிக்க விருப்பம் கொள்வார்கள் இதற்குப் படங்களைக் கூடப் பயன்படுத்தலாம். இவ்வாறான தெரிவுகள் மாணவர்களின் வயது, வகுப்புக்கு ஏற்ப அமைதல் வேண்டும்.



சோழப் பெருமன்னன்
கரிகால் சோழன்
சுற்றி உலகைத்
தன்குடை சேர்த்தான்
ஈழம் வரை
அவன் பெயர் ஓங்கும்
கரிகாலனிவன் தமிழ்
முடியுடை மன்னன்
புன்செய் நிலங்களை
நன்னில மாக்கவே
காவிரி சென்று
கல்லறை கட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண நிலை எழுத்தாக்கப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற ஆக்கங்கள்.

## கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் பிரிவு - 03

செல்வி. பிரவினா கிருபைராஜா
தி/ சென்மேரிஸ் கல்லூரி

கி. பிரவீனா,
92, பாரதி வீதி,
குருநாகல்.
28.05.05

உள்ளுராட்சி ஆணையாளர்,
உள்ளுராட்சித் திணைக்களம்,
குருநாகல்.

ஐயா!

### நூல் நிலையம் தேவை

நான் குருநாகல் மாவட்டத்திலுள்ள மத்திய மகளிர் பாடசாலையில் க.பொ.த உயர்தரம் படித்து வருகின்றேன். ''பூஞ்சோலை'' எனும் கிராமத்தில் வசித்து வருகின்றேன்.

''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்'' என்பது ஒரு முதுமொழி. இம் முது மொழியானது ஒரு மனிதன் வாசிப்பதன் மூலம் அடையும் முழுமை பற்றி எடுத்துரைக்கிறது. இதன் அடிப்படையின் கண் உற்றுநோக்கினால் எமது கிராமத்தில் முழுமை பெற்ற மனிதர்கள் இல்லை எனலாம். காரணம் எமது கிராமத்தில் நூல் நிலையம் ஒன்று கூட இல்லை.

பாடசாலைகளில் மாணவர் தொகையை அடிப்படையாகக் கொண்டே நூல் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. எமது பாடசாலையில் மாணவர்களது எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் நூல் நிலையம் அமைக்கப்படவில்லை. மாணவர்களது கற்றலில் நூல் நிலையமானது பெரிதும் செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாக உயர்கல்வி கற்கும் எம்போன்ற மாணவர்களுக்கு இது அத்தியாவசியத் தேவையாகவுள்ளது. எமது கிராமத்தில் மிகவும் பாழடைந்த கட்டிடம் ஒன்றே நூல் நிலையமாகவுள்ளது. இக்கட்டிடத்திற்கு மின்சார வசதியில்லை. ஆகையால் அங்கு சென்ற படிப்பது மிகவும் சிரமமாகவுள்ளது. மற்றும் பெறுமதியான புத்தகங்கள் பல திருடர்களால் திருடப்பட்டு விட்டன. எஞ்சிய புத்தகங்கள் எலிகளாலும், பூச்சிகளாலும் அரிக்கப்பட்டு பாவனைக்கு உகந்த வண்ணம் இல்லை. இவ்வாறு நல்ல நூல்கள் அழிந்தமைக்கு காரணம், நூல் நிலையம் ஒன்று அமைந்திராமையே. இவ்வாறு, பல வரலாற்று நூல்கள் மற்றும் இலங்கையின் பாரம்பரியத்தை உணர்த்தும் நூல்கள் சிதைந்து போவதை தாங்கள் தடுக்க வேண்டும், என்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது கிராமத்தின் இளஞ்சமுதாயமானது தொலைக்காட்சி மற்றும் பல்வேறு விளையாட்டுக்களில் தமது பொன்னான நேரத்தை வீண் விரயமாக்குகின்றனர். இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசத்தில் நூல் நிலையம் ஒன்று அமைந்திராமையே காரணமாகும் நூல் நிலையம் ஒன்று அமைந்திருக்கும் பட்சத்தில் பல்வேறு வகையான தரமான நூல்களை வாசிப்பதை தமது பொழுது போக்காக கொண்டிருப்பர். இதனால் அவர்களின் மனம் சிதைந்து தீய பொழுது போக்குகளில் ஈடுபடுவதைத் தவிர்த்திருப்பார்கள். ''நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்''. நூல்களின் கருத்துக்கள் ஒரு நண்பன் போல் நல்வழியில் இட்டுச் செல்லும் என்பது மறுக்க இயலாத உண்மை.

மற்றும் இது எமது கிராமத்தின் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகிறது. படித்தவர்கள் பொதுப் பரீட்சைகளுக்குத், தயார்ப்படுத்தும் போது, பொது அறிவுப் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. எமது கிராமத்தில் வருமானம் குன்றியோர் பலர் இருக்கின்றனர். அவர்களால் இவற்றைப் பணம் கொடுத்து வாங்க முடியாது.

இங்கு தாங்கள் பதவியேற்ற காலம் முதல் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதுடன், கல்வி வளர்ச்சியில் கூடிய அக்கறை செலுத்துபவர் என்பதனையும் கேள்வியுற்றேன். எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்காக நூல் நிலையம் ஒன்றை நிறுவித்தாருங்கள். ஐயா! ஒரு மாணவியான எனக்கு இந்த விழிப்புணர்வு ஏற்பட்டதை எண்ணியாவது இவ் உதவியைச் செய்து தாருங்கள் விடியலுக்காக காத்திருக்கிறது இந்த மாணவ சமுதாயம்.

நன்றி

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
மத்திய மகளிர் பாடசாலை மாணவி,
கி. பிரவீனா.

பிரவீனா கிருபைராஜா
தி/சென் மேரிஸ் கல்லூரி,
திருக்கோணமலை.

### நூல் குற்றங்கள்

ஒரு நல்ல நூலானது பின்வரும் பத்துக்குற்றங்களைத் தவிர்த்தவையாக இருக்க வேண்டும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடகிறது.

1. கூறியது கூறல்
2. மாறுபட்டுக் கூறல்
3. குறைபடக் கூறல்
4. மிகைபடக் கூறல்
5. பொருளில்லாமல் கூறல்
6. மயங்கக் கூறல்
7. இனிமையில்லாதன கூறல்
8. இழிசொற்கலால் புனைந்து கூறல்
9. ஆதாரமின்றித் தானே ஒரு பொருளைக் படைத்துக் கூறல்.
10. எவ்வாறாயினும் படிப்போர் மனங்கொள்ளாதவாறு கூறல்

(தொல்காப்பியம் - பொருள் : 663

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆக்கம் : பிரிவு 1**

# பாடசாலை சென்ற என் முதல்நாள் அனுபவம்

01. எனக்கு ஐந்து வயது பூர்த்தியடைந்தபோது எனது பெற்றோர் என்னை இந்துஆரம்பப் பாடசாலையில் சேர்த்தனர்.

02. நான் அப்பாவுடன் பாடசாலைக்குச் சென்றவுடனேயே அந்தப் பாடசாலைக் கட்டிடத்தைப் பார்த்துப் பிரமிப்படைந்து விட்டேன்.

03. எனது அப்பா என்னைப் பாடசாலைக்குள் அழைத்துச் சென்று அதிபரைச் சந்தித்து வணக்கம் கூறினார்.

04. அதிபர் எனது பெயர், விபரங்களைப் பதிவுசெய்த பின்னர் என்னை எனது வகுப்பறைக்குச் செல்லுமாறு கூறினார்.

05. அப்பா என்னை அழைத்துச்சென்று வகுப்பாசிரியரைச் சந்தித்த போது அவர் எங்களை அன்புடன் வரவேற்றார்.

06. அம்மாவைப்போல என்னை அன்போடு அணைத்துச் சிறிய கதிரையில் அமரச் செய்தார்.

07. அப்பொழுது பாடசாலையில் பிரார்த்தனைக்குரிய மணி ஒலித்ததும் அனைவரும் ஒரு வரிசையில் பிரார்த்தனை மண்டபத்திற்குச் சென்றோம்.

08. மனதில் அச்சம் மேலிடப் பாடசாலை சென்ற எனக்கு ஆடலுடன் பாடலும், கதையும் விளையாட்டும், ஆசிரியரின் கனிவான நடத்தையும் என்னை மகிழ்வின் உச்சிக்குக் கொண்டு சென்ற அந்நிகழ்வு ஒரு புதிய அத்தியாயம்.

09. சில நிமிடங்களில் பிரார்த்தனை நிறைவுற்றதும் அனைவரும் எமது வகுப்பறைக்குச் சென்றோம்.

10. வகுப்பறைக்குச் சென்றதும் ஆசிரியர் சில அறிவுரைகளை எமக்குக் கூறினார்.

11. நாங்கள் ஆசிரியர் கூறும் அறிவுரைகளைக் கவனமாகச் செவிமடுத்தோம்.

12. இடைவேளைக்குரிய மணி ஒலித்ததும் அனைவரும் கைகளைக் கழுவிவிட்டு எமது உணவை உண்டோம்.

13. பின்னர் ஆசிரியர் எங்களை விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச்சென்று பல விளையாட்டுக்களை எமக்குச் சொல்லித் தந்தார்.

14. பாடசாலை விட்டு வீடு சென்றதும் எனது பெற்றோரிடம் பாடசாலையில் நடந்ததைக் கூறினேன்.

15. நான் பாடசாலை சென்ற முதல்நாள் அனுபவம் என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி ஆகும்.

செல்வி. சோ. திரியம்பதி
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை வரைதல் : பிரிவு 4

# சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்பிருந்த மூத்த குடியில் பிறந்தது எங்கள் தமிழ்''. அன்றே தமிழனும் தோன்றிவிட்டான் எனக்கூறுவதற்கு ஐயமில்லை.

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் ''

என்று பாண்டிய மன்னனால் தெய்வத்தன்மை பொருந்திய புலவர் என்று பாராட்டப்பட்ட ஔவையார் மனிதப் பிறப்பின் மகத்துவத்தை நனிசொட்டத்தந்துள்ளார். அணுவைத் துளைத்து ஏழ்கடலைப்புகுத்தி, குறுகக் குறுந்தொகையாகத் தரும் சிறப்பு பெற்றவர் ஔவையார். அத்தகைய சிறப்பு வாய்ந்த, வியக்கவைக்கும் வகையில், இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துவிட்டது மானிட வர்க்கம். இதை யாராலும் மறுக்கமுடியாது. இத்தகைய நிலையில் மனிதன் தனது பல்வேறு தேவைகளை நிவர்த்திசெய்ய சுற்றுப்புறச் சூழலை சுரண்டுகின்றான். அதேவேளை அதனைப் பாதுகாக்க கூடுதலான மனிதவர்க்கம் மறந்து போய் விடுகின்றது. இதுவே உலகிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும்.

ஆதி காலத்தில் இப்புவியில் மனித இனம் மிகவும் சொற்ப அளவிலேயே இருந்ததுடன் அவனும் அவனுடைய எண்ணங்களும் விருத்தியடையவில்லை. எனவே காடுகளில் மிருகங்களோடு மிருகங்களாக ஆறறிவு படைத்தவனாக வாழ்ந்து வந்தமையால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படவில்லை. காலம் கடந்து செல்ல ''நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக'' மனிதனின் எண்ணங்கள் விருத்தியடைய செயல்களும் விருத்தியடைந்தன. அதன்படி அவனால் அவனையே உணர முடிந்தது. தனது தேவைகள் குறைவாக இருப்பதை உணர்ந்து சுற்றாடலிலிருந்து தனக்கு ஏற்ற பயன்களைப் பெற ஆரம்பித்ததுடன் நின்றுவிடாது, அவற்றை மாற்றியமைத்துப், பயன்படுத்தவும் பழகிக் கொண்டான். மனிதன் சூழலிலுள்ள மரஞ்செடி கொடிக்காடுகளி லிருந்து உணவுக்காக உண்ணக்கூடிய பழங்கள், காய்கறிகள் என்பவற்றையும் பெற்றான். பின்பு அவற்றைப்பயன்படுத்தி வீடுகள், தளபாடங்கள், பாலங்கள், படகுகள், போன்றவற்றை உருமாற்றிப் பெற்றான். சூழலிள்ள நீர் வளத்தைப் பயன்படுத்தி நீர்மின் உற்பத்தி விவசாயங்களுக்கு தேவையான நீரைப்பெற குளங்கள் என்பவற்றை அமைத்தான். அதுதவிர குடிப்பதற்கு குளிப்பதற்கு உட்பட உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத அவசியமானவற்றை பெற்றான். நிலவளத்தையும் மனிதன் விட்டுவைக்கவில்லை நிலத்தை அகழ்ந்து கனிய எண்ணெய், கனிய வளங்களான இரத்தினக்கற்கள், நிலக்கரி பெறுமதி மிக்க பறைகள் என்பவற்றை பெற்றான். இவையாவற்றையும் இன்றும் பெறுவதை நிறுத்தாது பெற்றுக் கொண்டே இருக்கின்றான்.

இதன் விளைவாக சுற்றுப்புறம் இயல்புநிலையை இழக்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சியின் பின் ஒவ்வொரு மனிதனுடையதும் தேவைகள் அதிகரித்தன. இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் பல புதிய நவீன தொழினுட் பத்தின் விளைவாகப்பல கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் படுத்தும் போது அவைகளும், அவற்றின் கழிவுகளும் சுற்றுப்புறச் சூழலிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இன்று மனிதனின் பல நடவடிக்கைகள் இயற்கைச் சுற்றுபுறச் சூழலின் இயல்பு நிலையில் பெரும் தீங்கு விளைவிக்க கூடியனவாக அமைந்துள்ளது என்பதை மாணவர்களாகிய எங்களால் அன்றாடம் ஊடகங்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் சனத்தொகை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. என்பதை மத்திய வங்கி ஆண்டறிக்கை கூறியுள்ளது. அத்துடன் ஐம்பது ஆண்டுகளின் முன் அறிஞர்கள் கூறியபடி இரண்டாயிரம் ஆண்டளவில் நாட்டின் அதாவது இலங்கையின் சனத்தொகை ஆறு தசம் எட்டு மில்லியன்களாகும். இதன் படி மத்திய வங்கி ஆண்டறிக்கையின், பிரகாரம் வளர்ச்சியடைந்து வரும் மனிதத் தேவைகளுக்கு சனத்தொகைக்கும் ஏற்ப இயற்கை வளங்கள் வளர்ச்சியடையவில்லை. எதிர்மாறாக வளங்கள் குறைவடைந்து பற்றாக்குறையை நோக்கி நகர்கின்றதை அறிய முடிகின்றது.

அதிகரித்து வரும் கைத்தொழிற்சாலைகளால் பெருமளவு சுற்றுப்புறச்சுழல் மாசடைகின்றது. ஏனெனில் கைத்தொழிற்சாலை கழிவுகள் இரசாயனச் சேர்வை மிக்கன. அவற்றை நீரில் இடுவதால் நீர் நிலைகளில் வசிக்கும் உயிரினங்கள், தாவரங்கள் அழிவடைகின்றன. அக்கழிவுகளை காட்டுப்பகுதிகளில் இடுவதால் மரம், செடி, கொடிகள் மட்டுமல்லாமல் ஊர்வன மற்றும் முலையூட்டி விலங்குகளும் அழிவடைகின்றன. தற்போது அதிகரித்து வரும் தன்னிறைவற்ற சனத்தொகையால் குடியிருப்பு அமைப்பதற்கு காடுகள் அழிக்கப்படுவதா லும் சூழல் மாசுபடுகின்றது. தற்காலத்தில் எமது நகரமுட்பட உலகளாவிய ரீதியில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றால் ஆன பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை நாம் எரிக்கும் போது உண்டாகும் விளைவு வளியை மாசுபடுத்துகின்றது. அத்துடன் இவைகளை மண்ணில் புதைத்தாலும் இவை உக்கமாட்டாதவை. இதனால் மண்ணில் தாவரங்கள் வளர முடியாமை, மண்ணுண்ணுயிர்கள் அழிவடைதல் போன்றன ஏற்படும். பிளாஸ்டிக், பொலித்தீனினாலான பொருட்களை நீர் நிலைகளிலிட்டால் அங்கு இவை அழியாது காணப்படுவதால் அவ்வுயிர்களுக்கும் பாதிப்பேறபடும். அத்துடன் இன்று போர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அவற்றினால் ஆயுதங்கள் மூலம் நிலப்பரப்பு சூனியப்பிரதேசமாக உருப்பெறுகின்றன. குண்டு வெடிப்பதன் மூலம் உண்டாகும் டைனமற் போன்ற இரசாயனப் பதார்த்தங்களால் வளியில் விஷவாயுக்களின் சதவீதம் அதிகரிக்கின்றது. வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தும். டீசல், மசகு எண்ணெய், மண்ணெய் போன்றவற்றின் மூலம் உண்டாகும் புகைகளால் வளியில் காபனீரெட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு போன்ற விஷவாயுக்களின் சதவீதம் அதிகரிக்கின்றன. கைத்தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்றப்படும் இரசாயனப்புகை களில் காணப்படும் குளோரோ புளோரோகாபன் வளிமண்டலத்தை மாசுபடுத்துவதுடன் எம்மை சூரியனில் இருந்து வரும் கழியூதாக்கதிர்களிலிருந்து பாதுகாக்கும் ஓசோன் படையையே தாக்கி அதில் துவாரங்களை உண்டுபண்ணியுள்ளமை நாமறிந்த விடயமாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தில் அமெரிக்கா ஐப்பானின் கிரோசிமா, நாகசாகி போன்ற இரு நகரங்கள் மீது அணுகுண்டு வீசியதன் மூலம் அப்பிரதேசம் புல்பூண்டு வளரமுடியாத நிலமாக மாறியுள்ளது அத்துடன் அணுகுண்டை நிலத்துக் கடியிலும் கடற் பிரதேசங்களிலும் பரிசோதிப்பதால் பூமியின் உட்பகுதியாக்கப்பட்டுள்ள தட்டுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தி எமக்கே எமது செயற்பாடுகள் அச்சுறுத்தலாக அமைகின்றன. இலங்கையை எடுத்துக் கொண்டால் அதிகரித்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகைக்கேற்ப குடியிருப்புக்களாலும். அபிவிருத்தி திட்டங்கள் மேற் கொள்வதன் மூலமும் இயற்கைச் சுற்றுப்புறச் சூழல் அழிவடைகிறது.

இவ்வாறு சுற்றுப்புறச் சூழல் அழிவடைந்து செல்வதை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் ஐக்கிய நாடுகள் சபையால் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச்சபை என்ற ஒரு ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது உலக நாடுகள் பலவற்றிலும் இயங்கிவருகின்றது. இந்நிறுவனத்தால் ''பசுமைதிட்டம்'' என்ற பத்து ஆண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இலங்கை உட்பட பல நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் நோக்கம் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் உள்ள பிளாஸ்டிக், பொலித்தீன் போன்றவற்றிக்குப் பதிலாக இன்றைய நாகரிகத்திற்கேற்ப இயற்கைப் பொருட்களையே பயன்படுத்துதல் ஆகும். அதுமட்டுமல்ல, சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளின் கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் வேண்டும். தொழிற்சாலைகள் மனிதச் சூழலுக்கு அப்பாற் தொலை தூரத்தில் அமைக்கப்படல் வேண்டும் என்பதாகும். அதனை அடையாளப்படுத்தும் நோக்குடன் ஆனிமாதம் ஆறாம் திகதியை சுற்றாடல் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதுடன் உலகளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன் மரங்களை வெட்டுவதன் மூலம் எமக்கு நாமே புதைகுழி தோண்டாது தடுத்து,மரநடுகைக்கும் ஊக்குவிக்கின்றது.

இலங்கையைப் நாட்டை பொறுத்தவரையில் சுற்றுப்புறச் சூழலைச் பாதுகாக்கும் அமைப்புகளாக, இலங்கைச் சுற்றாடல் அதிகாரசபை வனவளபாதுகாப்பு அதிகாரசபை கடல்வளபாதுகாப்பு சபை, இயற்கைவள பாதுகாப்பு சபை என்பவற்றை உதாரணமாக குறிப்பிடலாம் அத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் மாணவர்மத்தியில் சுற்றுபுறச் சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆனி மாதம் ஆறாம் திகதி சுற்றாடல் தினத்தை முன்னிட்டு போட்டிகள், கண்காட்சிகள் நடத்தி வருடாவருடம் மாணவர்களை ஊக்குவிக்கின்றது.

மாணவர்கள் என்றவகையில் எமது பாடசாலையிலும் வருடந்தோறும் கொண்டாடப்படும் சுற்றாடல் தினத்தில் நடைபெறும் கவிதை, கட்டுரை, வினாடிவினா, சித்திரம், நாடகம் போன்றவைகளில் பங்குபற்றியதன் மூலமும் மரநடுகை தினத்தில் மரங்களை நடுவதில் ஒரு மாணவி என்றவகையில் பங்கு பற்றிய நான் சுற்றுச் சூழல் பாதுகாப்பின் ஒரு அங்கத்தவர் என்ற வகையில் என்மனம் பூரிப்படைகின்றது. இதனைத் தவறாது ஒவ்வொருவரும் மனதில் எண்ணி பொதுமக்களிடையே சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப்பற்றிய சுவரொட்டிகள், வீதி நாடகங்கள், கண்காட்சிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் ஒரு சங்கிலி போல் கைகோர்த்து ஏற்பத்துவோமானால் சுற்றுபுறச்சூழலின் பாதுகாப்பை கெடுக்கும் சாத்தானின் கோரப் பிடியிலிருந்து விடுவித்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கலாம்

இளைய சமுதாயமாகிய மாணவசமுதாயமாவது, சுற்றுப்புறச் சூழலைப்பாதுகாக்கும் ஒரு புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டு மனித சமூகத்தை அதாளபாதாள அழிவிலிருந்து மீட்டுவருவதன் மூலம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்று மனமொன்றித்து இறைவனை பிராத்திப்போமாக!........

**செல்வி.குகாஞ்சனா கணே"**
**தி/சென்மேரிஸ கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைவரைதல் இலக்கியம் நயத்தல் : பிரிவு 5 (கட்டுரை)

# வியப்பூட்டும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சி

இருபத்தோராம் நூற்றாண்டிலே இன்று நாம் விஞ்ஞானத்திலே மிதந்து கொண்டிருக்கின்றோம். எங்கும் எதிலும் எவற்றிலும் அணுவுக்குள் அணுவாகவும் விஞ்ஞானவளர்ச்சியின் ஒரு சிறு துளியாவது புகுந்தும் பரந்தும் செறிந்தும் உள்ளது என்பதில் தவறில்லை மருத்துவம் கைத்தொழில், விவசாயம், விண்வெளி, சமுத்திரம், யுத்தம், போக்குவரத்து எனப் பலவற்றில் புதிய சாதனைகள் படைப்பதற்காகவும் இவற்றின் செயற்பாடுகளை இலகுவாக்கவும் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ளது.

ஆரம்ப காலங்களிலே மரங்களின் கீழும் குகைகளினுள்ளும் இலை, குழைகளை ஆடையாக அணிந்து காய்கனிகளை உண்ட மனிதன் வியப்பூட்டும் இந்த விஞ்ஞான அறிவின் மூலம் உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று வருகின்றான் ஒரு பாடலிலே ''....பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான், மீன்களைக் கண்டான் கப்பலை செய்தான்..'' என்றவாறு ஒன்றினைப் பார்த்து இன்னொன்றை உருவாக்கியுள்ளான் மனிதன் என்றே குறிப்பிடலாம்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும் ....'' என்ற வரிகளுக்கு இணங்க ஆரம்ப காலங்களிலே ஏடுகளிலே எழுதப்பட்ட இலக்கியங்கள் இன்று புத்தகங்களாக அச்சுப் பதிக்கப்பட்டு வெளியாகின்றன. பல காலங்கள் எழுதிய நூல்கள் ஒரு சில மணிநேரங்களில் புத்தகங்களாக வெளிவருகின்றன. இவையும் விஞ்ஞானத்தின் வளர்ச்சினால் ஏற்பட்டதே.

இன்று எல்லா இடங்களிலும், எல்லா வீடுகளிலும் இருக்கக்கூடிய ஒன்று கணினி. இது இணையம், வலைப்பின்னல், தொடர்பாடல், மின்னஞ்சல், என்னும் பகுதிகளை கொண்டு காணப்படும். இணையம் மூன்று வகைகளில் உள்ளது ஒன்று தனிப்பட்ட இரு நபர்களுக்கிடையிலானது. மற்றயது இரு தனிப்பட்ட குழுக்களுக் கிடையேயானது. அடுத்தது ஒரு நிறுவனம் இன்னும் சில நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கு ஏற்றது. இவ்வாறாக உள்ள இணையத்தில் சில பொழுது போக்கு அம்சங்களும், விளையாட்டுக்களான பூட்செயின், செஸ் போன்றனவும் காணப் படுகின்றன. உறவினர்களுடன் தொடர்பு கொள்ளவும் ஏற்றது. ஒரு சில நிமிடங்களில் உலகில் நடக்கும் எந்த விடயத்தினையும் வலைப்பின்னல் மூலம் அறிந்து கொள்ள உதவுகின்றது. பல நாட்களின் பின் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் மனிதர்கள் ஒரு சில நிமிடங்களில் மின்னஞ்சல் மூலம் தகவல்களை அனுப்புகின்றனர். இவ் கணனியிலே காணப்படும் மென் பொருட்களை வைரஸ்கள் அழிவடையச் செய்கின்றன. மேலை நாட்டிலே அறிமுகமான கணினி சில காலங்களிலே உலகெங்கும் வளர்ந்து விட்டன. இன்று கணினிப்பாவனையாளர்களுக்காக இலங்கையில் தமிழில் ''கம்பியூட்டர் ருடே'' எனும் நூல் வெளியாகின்றது. நேரத்தை மிச்சப்படுத்த தகவல்களை சேகரிக்கவும் கணினி உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மருத்துவத் துறையிலே முக்கிய ஒரு பகுதியாக விஞ்ஞான நவீன கருவிகள் காணப்படுகின்றன. இரத்த பரிசோதனைகள் ''எக்ஸ்ரே'' எனப்படும் ஒரு வகைப் புகைப்படம் எடுக்கவும், மனித உறுப்புக்களை பார்வையிட கணனி போன்றனவும் உதவுகின்றன. மாற்று இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்றனவற்றுக்கும் இதயத் துவாரம், சிறுநீரகக் கட்டி போன்றனவும் நவீன கருவிகளால் கண்டுபிடிக்கப்படுகின்றன. மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை மருந்துகள் மூலம் முற்றாக குணப்படுத்தவும் உதவுகின்றது.

கைத்தொழில்களில் முக்கியமாகத் தேவைப்படுவது இயந்திரமேயாகும். புதிய புதிய வடிவங்களில் மிகப்பாரிய வேலைகளைச் செய்வதற்கு இயந்திரங்கள் உதவுகின்றன. ஆடைக்கைத்தொழில், சவர்க்காரக் கைத்தொழில், சீமெந்து, உரம், மட்பாண்டம் போன்றனவும் இரத்தினங்களுக்குப் பட்டைதீட்டுவதிலும் இயந்திரமே முதலிடம் வகிக்கின்றது. துறைமுகங்களிலே பாரிய பொருட்களை வாகனங்களில் ஏற்றுவதற்கு பாரம் தூக்கி பயன்படுகின்றது. ஆயிரம் மக்கள் தூக்கும் பொருட்களை சில நிமிடத்தில் இது தூக்கி வைத்து விடும்.

போக்குவரத்திலே அதிநவீன வாகனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. படகிலே சமுத்திரத்தைக் கடந்த மனிதன் இன்று தன்னைவிடப் பெரிய. கப்பலிலே பயணம் செய்கின்றான். ஒரு சில நிமிடங்களில் விமானம் மூலம் வானில் பறந்து குறிப்பிட்ட இடத்தில் நிற்கின்றான். ஆரம்ப காலத்திலே கால்நடையாகவும், மாட்டு வண்டியிலும் பயணம் செய்த மக்கள் வாகனங்களில் உல்லாசமாகப் பயணம் செய்கின்றனர். கரியிலே ஓடிய புகைவண்டி மின்சாரத்திலே செல்கின்றது. எல்லாம் விஞ்ஞானத்தின் வியப்பூட்டும் வளர்ச்சியினாலே என்று குறிப்பிடலாம்.

விவசாயிகள் கலப்பை கொண்டு சாலிடத்தே விதைத்த நெற்பயிர் இன்று உழவு இயந்திர சாலிடத்தே வளர்கின்றன. அரிவாளால் நெற்பயிர்கள் ஆரம்பகாலத்தில் வெட்டப்பட்டன. தற்காலத்தில் இயந்திரம் மூலம் நெற்கதிர்கள் வெட்டப்படுகின்றன. களைகள் வளர வளர கையால் பிடுங்கிய மக்கள் களை கொல்லியினையும் நோய்கள் பயிரை அணுகாவண்ணம் கிருமி, பீடை நாசினியையும் பயன்படுத்துகின்றனர். அசேதனப் பொருட்களை இட்டு பயிர்களுக்கு கனிப்பொருட்களை வழங்கியோர் அசேதன பசளையை இடுகின்றனர். இதனால் நேரம் மிச்சயமாக்கப்படுவதுடன், குறிப்பிட்ட அயன் விரைவாகவும் பயிருக்குக் கிடைக்கிறது.

பூமியில் இடம் போதாதென்று விண்கலம் மூலம் சந்திரனிலும், செவ்வாயிலும் இடம் தேடுகின்றான் மனிதன். ''நிலாவினிலே வீடு கட்டவா'' என ஒரு பாடல் குறிப்பிடுவதைக் காணலாம். பல விண்கலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சமுத்திரப் பகுதிகளிலே ''ரேடர்'' என்னும் உபகரணம் மூலம் அதிக மீன்கள் உள்ள பகுதிகளைக் கண்டுபிடிக்கின்றனர். பூமியின் கீழ் காணப்படும் பெற்றோலியத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திர உதவியுடனேயே வெளியில் எடுத்து சுத்திகரிக்கின்றனர். மனிதனின் இறந்த உடல்கள் பழுதடையாவண்ணம் பாதுகாக்கவும், விஞ்ஞான வளர்ச்சியே காரணம் எனலாம்.

யுத்த கருவிகள் புதிய புதிய வடிவங்களில் புதுப் பெயர்களுடன் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவற்றிலே அணுகுண்டு ஹிரோசிமா, நாகசாயியில் வீசப் பட்டதால் அதன் தாக்கத்தை இன்றும் உணர்கின்றனர். கண்ணிவெடி, கிளைமோர் என்பனவும் முக்கியமானவை.

வியப்பூட்டும் விஞ்ஞான வளர்ச்சியினால் கைத்தொழில்கள் வளர்வதினால் கழிவுப் பொருட்கள் ஆற்றிலே கலக்கப் படுகின்றன. சுவிற்சலாந்திலுள்ள றைன் நதியில் கழிவுப் பொருள்கள் சேர்ந்ததனால் மீன்கள், பறவைகள், மிருகங்கள் போன்றனவும் இறந்தன. ஜேர்மனி மக்கள் குடிநீரின்மையால் பாதிக்கப்பட்டனர். டெல்லியில் போபால் என்ற தொழிற்சாலையின் கசிவுகளினால் நச்சு வாயுக்கள் வெளியேறி பலர் இறந்தனர்.

போக்குவரத்தின் மூலம் வாகனங்கள் காபனீர் ஒட்சைட்டை வெளியேற்றுகின்றன. இதனால் வெப்பம் உயர்வடையும். ஓசோன் தேய்வு வரட்சி நிலவும் சுவாச நோய்கள் உருவாகும். வாகனங்களின் தொகை அதிகரிப்புகேற்ப வீதிகள் அதிகரிக்காமை யினாலும் விபத்துக்கள் நேருகின்றன. விவசாய நடவடிக்கையில் கிருமிநாசினி, அசேதனப் பசளை, களைகொல்லி என்பனவற்றால் நிலத்தில் வாழும் உயிரினம் அழிக்கப்படு கின்றது. நீரில் கலப்பதால் சா ஏரி உருவாகின்றது. ஆவியாக்க நீரியல் வட்ட செயன் முறையின் மூலம் அமிலமழை பெய்கின்றது. சுண்ணாம்பு கட்டடம் பளிங்குகள் என்பன அழிகின்றன. தாஜ்மகால் நிறமாற்றமடைவதும் குறிப்பிடத்தக்கது.

கப்பற் போக்குவரத்தினால் சமுத்திரம் மாசுபடுகிறது. விமானங்களால், சுப்பர் சொனிக் ஜெட் என்பனவற்றின் மூலம் ஒலி மாசுபடுகிறது. இவற்றால் செவிட்டுத்தன்மை உருவாகிறது. நகரக் கழிவுகளால் தொற்று நோய்கள் உருவாகின்றன.

பல சூழல் அமைப்புக்கள் சூழலைப் பாதுகாக்க அக்கறை எடுத்து பல சட்டங்களை அமுல்படுத்துகின்றன. இதனால் உலகிலே நாடுகளுக்கிடையே யுத்தம் ஏற்படுவதைத் தடைசெய்ய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை ஏற்பட்டது. இதன்மூலம் பல நாடுகள் சமாதானத்திற்கு கைச்சாத்திட்டுள்ளன. நவீன விஞ்ஞான கருவிகளினால் நேரம் மிச்சப்படுத்தல் விரைவான சேவை இயற்கை அனர்த்தத்தை முன்கூட்டி அறியும் திறன் புதிய கண்டுபிடிப்பு எனப் பலவாறான நன்மைகளைப் புரியும் அதேநேரம் மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நோய், யுத்தம் என்பனவற்றிற்கும் வழிவகுக்கின்றன. இவையும் வியப்பூட்டும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியினாலே என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி. சு. கார்த்திகா
வ / கணேசா வித்தியாலயம்
பாவற்குளம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை : பிரிவு 4

# கண்ணீரில் கரைந்த பொழுதுகள்

அன்று முல்லைத்தீவு என்றும் இல்லாதவாறு கலகலப்பாகக் காணப்பட்டது. வீதியெங்கும் அலங்கார விளக்குகள், தோரணங்கள் என அந்நகர வீதிகள் எல்லாம் வரும் புதுவருடத்தை வரவேற்பதற்காக புத்தாடை பூண்டு காணப்பட்டது. அந்நகர வாசிகள் எல்லோருடைய மனங்களிலும் ஒரேவிதமான எண்ணமே இருந்தது. எல்லோரும் சேர்ந்து இந்தப் புதுவருடத்தை மகிழ்வோடு கொண்டாட வேண்டுமென்ற எண்ணமே அது. அவர்களுடைய இந்த ஆசை நியாயமானதே! ஏனெனில் கடலன்னை இந்தவருடம் அந்த மீனவர்களின் வாழ்வு விளங்க வேண்டுமென நிறைய திரவியங்களை அள்ளிக்கொடுத்திருந்தாள்.

முல்லைத்தீவில் இருக்கும் கரையோரத்தை அண்மிய கள்ளப்பாடு என்னும் கிராமத்திலே தான் செல்லம்மாவும் வாழ்ந்து வருகிறாள். ஆகா ஓகோ என்று வாழாவிட்டாலும் அவள் தன் ஒரே மகனுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் தான் வாழ்ந்து வருகிறாள். அன்று செல்லம்மா மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டாள். காரணம் அவளது ஒரே மகன் பேராதனை பல்கலைக்கழகத்திலே டாக்டருக்குப் படித்துக் கொண்டிருப்பவன். இந்த வருடம் புதுவருடத்திற்காக வருவதாக எழுதியிருந்தான். தன் மகன் சந்துருவை வரவேற்பதற்காகவே அவள் இன்று தடல்புடலாகச் செயற்படுகின்றாள். தானே தனிமரமாய் நின்று வீட்டிற்கு வெள்ளை அடித்துவிட்டு நிமிர்ந்தவள் காலையிலேயே ஒன்றும் சாப்பிடாமல் வேலையில் ஈடுபட்டதால் களைத்துப் போய் சற்று இளைப்பாற, அங்கு நின்ற ஒரு மரத்தின் கீழ் அமருகிறாள். அவள் மனம் பின்னோக்கி நடைபோடுகிறது.

அந்தோனியை அவள் காதலித்துக் கரம்பிடித்தவள். தன் பெற்றோரின் எதிர்ப்பை மீறி அந்தோனியுடன் வந்ததால் அவளுக்கு அந்தோனியைத் தவிர வேறு எவருமே துணையாகவில்லை. அந்தோனியும் செல்லம்மாவின் மனமறிந்து அவளிற்கு தாயாய், தந்தையாய், சிறந்த நண்பனாய் நடந்து வந்தான். இருவரும் ஈருடல் ஓருயிர் போல வாழ்ந்து வந்தனர். காலையில் அந்தோனி மீன் பிடிப்பதற்காக கடலுக்குப் போவான். மீண்டும் அடுத்த நாள் காலையில்தான் திரும்பி வருவான். அதுமட்டும் செல்லம்மா கடற்கரையில் கணவனுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பாள். கணவனைக் கண்டவுடன்தான் அவள் மீண்டும் இவ்வுலகிற்கு வருவாள்.

இவ்வாறு அவர்களின் வாழ்க்கைச்சக்கரம் ஓடிக்கொண்டிருந்தது. அந்தோனியும் செல்லம்மாவை ஏழ்மையிலும் இராணிமாதிரியே தாங்கி வந்தான். இவர்களின் இனிய இல்லறத்தின் நற்பயனாகப் பிறந்தவன்தான் சந்துரு. செல்லம்மாவும் அந்தோனியும் சந்துருவின் மீது தம் உயிரையே வைத்திருந்தனர். அவனின் எதிர்காலத்தை எண்ணி கணவன் மனைவி இருவரும் அதிகம் சிந்தித்தனர். சந்துருவின் வாழ்க்கை நன்றாக அமைய வேண்டும் என்ற நோக்குடன் அந்தோனி இரவு பகலாக பாடுபட்டுழைத்தான். வருமானத்தில் சிறுபகுதியை சேமித்து வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அவர்களின் குடும்பம் ஒரு சிறிய குருவிக் கூட்டத்தைப் போல ஆனந்தமாகக் கழிந்து கொண்டிருந்தது. இவர்களின் இந்த வாழ்க்கை கடவுளுக்கே பொறுக்கவில்லைப் போல. காலையில் கடலுக்குச் சென்ற அந்தோனி அடுத்தநாள் காலையும் ஆகிவிட்டது இன்னும் கரை திரும்பவில்லை. செல்லம்மா பதறிப்போனாள். இரண்டு வயதுச் சந்துருவையும் தூக்கிக்கொண்டு போய்க் கடற்கரையிலே கணவனின் வருகைக்காகத் தவமிருந்தாள்.

ஆனால் அந்தோனியின் உடலைத்தான் அவளால் காணமுடிந்தது. இரவு கடலில் நடைபெற்ற சிங்கள இராணுவத்தினரின் அடாவடித்தனத்தால் அந்தோனி அநியாயமாகக் கொல்லப்பட்டதை அறிந்த அவள் கண்கள் சொருக கால்கள் நடுங்க நெஞ்சு படபடவென அடித்துக்கொள்ள அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

ஒரு நாள் முழுவதும் அப்படியே ஆடாமல் அசையாமல் கிடந்த செல்லம்மா அடுத்த நாள் "அம்மா, அம்மா" என்றழைத்த அந்த ஒன்றுமறியாத பிஞ்சை நினைத்து எழுந்தாள். இனி சந்துருவுக்கு அவன் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து தானே அவனை வளர்த்தெடுப்பதாக இறந்துபோன தன் கணவனின் உருவப்படத்திற்கு முன் நின்று உறுதியெடுத்தாள். அந்தோனி ஆசைப்பட்டது போலவே தன் மகனை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என முடிவெடுத்தாள்.

இந்த நேரத்தில் தான் அவளுக்கு தன் தாய் தந்தையினரின் முகங்கள் ஞாபகத்திற்கு வந்தன. அவர்கள் என் அருகில் இருந்திருந்தால் நான் இப்படிக் கஸ்ரப்படத் தேவையில்லையே என நினைத்தாள். அவள் வீட்டை விட்டு ஓடி வந்தது எவ்வளவு தவறு என்பதை உணர்ந்தாள். ஆனால் செல்லம்மா துவண்டு விடவில்லை. அயலில் இருந்த தெரிந்தவர் வீட்டில் சந்துருவை விட்டுவிட்டு கடற்கரையிலே மீன் தெரியச் சென்றாள். அங்கே அவளுக்குத் தரப்பட்ட சம்பளத்துடன் இலவசமாக் கிடைத்த சிறிய மீன்களையும் வீட்டிற்குக் கொண்டுவருவாள். தன்னால் இயன்ற மட்டும் சிக்கனமாக வாழ்ந்தாள். தான் ஒருவேளை சாப்பிட்டாலும் தன் பிள்ளையை மூன்று வேளையும் சாப்பிட வைத்தாள். தன் உதிரத்தைப் பிழிந்து தன் மகனின் எதிர்காலம் ஒன்றையே நினைத்து வாழ்ந்து வந்தாள்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே சந்துருவும் வளர்ந்து பெரியவனாகி விட்டான். இனி அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும். படிப்புச் செலவுக்கு பணம் வேண்டும். இரவு செல்லம்மா நித்திரையில்லாமல் புரண்டுகொண்டிருந்தாள். அவளுக்கு தன் கணவன் அந்தோனியின் நினைவு வந்துவிட்டது போலும் அவள் அந்த ராத்திரியிலும் எழுந்துசென்று தன் கணவனின் படத்திற்கு முன் அமர்ந்து அழுதாள். எப்பாடு பட்டாயினும் சந்துருவின் படிப்பை குளப்பாமல் அவனை படிக்க வைத்து ஆளாக்குவதாகவும் சொல்லிக் கொண்டாள்.

சந்துருவும் தன்தாய் எவ்வளவு பாடுபட்டுத் தன்னை வளர்த்து படிக்க வைக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு அவளின் ஆசைப்படியே நன்றாகப் படித்தான். ஒவ்வொருநாளும் தவறாமல் தன் தாயையும் தந்தையையும் வணங்கி வந்தான். அவனது மனதில் தந்தையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தவுடன் தாய் எவ்வளவு கஸ்ரப்பட்டாள் என்பதும் எத்தனை இராத்திரிகள் தூங்காமல் அழுகொண்டிருந்தாள் என்பதும் அவனது இளமனதில் படம்போல வரையப்பட்டுவிட்டது. அவனது மனதில் தான் படித்து பெரிய ஒரு டாக்கடராக வரவேண்டும் என்ற இலட்சியம் வளர்ந்து வந்தது. அதன் பயன்தான் இன்று சந்துரு ஒரு மருத்துவக்கல்லூரி மாணவனாகத் தன்னை உயர்த்திக்கொண்டான்.

சந்துரு தான் படித்துப் பெரியவனானதும் தன் அன்னையை எவ்வாறு பாதுக்காத்துக் கொள்ள வேண்டும் என்று ஒவ்வொருநாளும் நினைத்துக் கொள்வான். "அம்மாவை ஒரு வேலையும் செய்யவிடக்கூடாது. அவவை ஒரு இடத்தில் இருத்தி வைச்சு பார்க்கவேணும். அவ கேட்டதை எல்லாம் வாங்கிக்கொடுக்க வேணும்" என்று தன் நண்பர்களிடம் சொல்லிக் கொள்வான்.

மரநிழலில் யோசனையோடு அமர்ந்திருந்த செல்லம்மா "அம்மா அம்மா" என்ற குரலைக் கேட்டு வெளியே ஓடி வந்தாள். அங்கே அவளது மகன் சந்துரு நின்று கொண்டிருந்தான். திகைத்து நின்ற தாயைக் கண்டதும் அவளை ஓடிவந்து கட்டியணைத்தான். அவளது தோளைப்பற்றித் தழுவியவாறே அவளை வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்.

அன்றைய காலைப்பொழுது என்றுமில்லாத அமைதியோடு மலர்ந்தது. சுவரிலே தொங்கிக்கொண்டிருந்த கலண்டரின் தாளை கிழித்த செல்லம்மா அன்றைய திகதியை ஏதோ அதிசயமாகப் பார்த்தாள். அன்று மார்கழி மாதம் 26ம் திகதி என்பதை அது காட்டி நின்றது. அப்போது அ்கே வந்த சந்துரு "என்னம்மா யோசிச்சுக்கொண்டு நிக்கிறியள் வாங்களன் அந்தோனியார் கோயிலுக்குப் போய் வருவம்" என்று கேட்டான். கணவன் இறந்ததில் இருந்து ஒருநாளும் தேவாலயப் பக்கமே போகாத செல்லம்மா பெரிதாக தலையை ஆட்டி "நான் வரல்லே ராசா நீ போயிற்று வா" என்றாள். தாயின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்ட சந்துரு தன் பழைய நண்பர்களுடன் புறப்பட்டான்.

தேவாலயத்திலே அவனால் ஒருமனப்பட்டு இறைவனைத் தொழுமுடியவில்லை. மனம் தாயைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தது. "அம்மா பாவம்" என்று அவன் தனக்குள் சொல்லி முடிப்பதற்குள்ளேயே எங்கிருந்தோ வந்த பல குரல்கள் "ஐயோ கடல் வருகுது ஓடுங்கோ ஓடுங்கோ" என கத்தியவாறு வந்துகொண்டிருப்பது அவன் காதுகளுக்குக் கேட்டது. அவன் தன்னைச் சுதாகரித்துக் கொள்வதற்குள்ளேயே அங்கு ஒரே சலசலப்பு எங்கும் அழுகுரல் "ஐயோ கடல் வருது கடல் வருது ஓடுங்கோ" என்றதைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றுமே கேட்கவில்லை.

அவனது மூளையில் பொறிதட்டியது "அம்மா வீட்ட தனியா நிக்கிறா பாவம் வயசான காலத்திலே" அவன் உரக்கக் கூறிக்கொண்டே வீடுநோக்கி ஓடுகிறான். ஆனால் அங்குநின்ற காவல்துறையினர் மற்றும் விடுதலைப்புலிப் போராளிகள் அனைவரும் அங்கிருந்தவர்களைப் பிடித்து பஸ்களிலேயும் வேறு வாகனங்களிலேயும் ஏற்றிக்கொண்டு அவர்களை அங்கிருந்து பாதுகாப்பான வேறு இடங்களிற்கு ஏற்றிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்துரு சற்றுமுற்றும் பார்த்தான் எங்கும் கால் கை முறிந்தவர்களும். கடலில், அகப்பட்டு உயிரை விட்டவர்களின் பிணங்களும், பெற்றோரை இழந்த பிள்ளைகளையும், பிள்ளைகளைத் தவறவிட்ட பெற்றோரையும் தவிர வேறு ஒருவரையுமே அங்கு காணக்கிடைக்கவில்லை. அவன் தன் தாயை நினைத்து ஓடிக்கொண்டிருந்தான். எங்கிருந்தோ வந்த பாரிய அலையொன்று அவனிற்கு முன்னால் வந்து விழுந்து திரும்பி கடலுக்கு அவனை இழுத்துச் செல்கிறது. அவன் தன் கண்களை மூடிக்கொள்கிறான். கையில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டதை உணர்ந்து மெல்லத் தடவிப் பார்த்தால் அது ஒரு மரக்கிளை. சந்துரு அந்த மரக்கிளையைப் பற்றிக்கொள்கிறான். அவனது தலைமட்டும் வெளியே தெரிகிறது. மற்றெல்லாம் ஒரே தண்ணீர் அவனை விலத்தியபடி பல உடல்கள் அள்ளிச் செல்லப்படுகின்றன. அவன் மெதுவாகக் கண்களை மூடிக்கொள்கிறான்.

இப்படியே எவ்வளவு நேரம் இருந்தானோ தெரியாது கைகள் விறைத்து விட்டன மெல்ல கண்களை விழித்துப் பார்க்கிறான். ஒரு மரக்கிளையில், தான் தொங்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. தண்ணீர் வடிந்து விட்டது. மரத்தில் இருந்து இறங்கி வீடு நோக்கி ஓடுகிறான். தன் குடிசை இருந்த இடமே தெரியவில்லை.

"அம்மா அம்மா'' தன்னால் இயன்ற மட்டும் உரத்துக் கூவிக்கொண்டு தன் தாயைத் தேடி ஓடுகின்றான். ஓரிடத்தில் அவன் கண்ட காட்சி....... அங்கே... அங்கே..... தன் தாயின் உயிரற்ற உடலைக் காண்கிறான். ஓடிச்சென்று தன் தாயைக் கட்டிக்கொண்டு அழுகிறான். "அம்மா சந்துரு வந்திருக்கிறன் அம்மா கண்ணைத் திறந்து பாருங்கம்மா உங்களைத் தங்கத் தட்டில வைத்து தாங்க வேணும் எண்டு கனவு கண்டுகொண்டிருந்தனான். ஆனால் இப்ப ஒண்டுமே முடியாமல் போயிட்டுதே அம்மா என்னை நல்ல நிலையில் வச்சுப் பார்க்கவேணும் எண்டு கனவு கண்டியள். இப்ப நீங்களே கனவாய்ப் போயிட்டீங்களே அம்மா...... இனி நான் மட்டும் இருந்து என்ன செய்யிறது" அவன் கதறிய சத்தம் ஒலித்து முடியும் முன்னமே சீறிப்பாய்ந்து வந்த இன்னொரு பேரலை அவனையும், இறந்து போன அவனது தாயின் உடலையும் அள்ளிச் சென்றது.

ஆம்! அவர்களிற்கு அள்ளிக்கொடுத்த கடல் இன்று அவர்களையே அள்ளிக் கொண்டது எதற்காகவோ?

செல்வி. கு. பிந்துஜா

" கல்வி என்பது ஒருவரது நுண்மதியாற்றல்களையும், திறன்களையும் விருத்தி செய்வதோடு மட்டும் நின்றுவிடாது அவனது உலக நோக்கை விரிவடையச் செய்ய வேண்டும். சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் அவரது பணிகள் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். அறக்கல்வியும் தெய்வீகக் கல்வியும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்குரிய பயிற்சியைத் தரும்."

**- ஸ்ரீ சத்திய சாயிபாபா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை ஆக்கம் : பிரிவு 5

# அந்த ஒரு நாள்

ஒரு கொடிய இருளகன்று,
நெடிய ஒளி தோன்றி,
என் மாய நினைவுகள்,
அறுந்து போனது; அந்த ஒருநாளில்தான்!

கருவறை தொடங்கி,
கல்லறை நோக்கிய,
என் நீர்குமிழி வாழ்க்கை,
நிச்சயமாக்கப்பட்டது; அந்த
ஒருநாளில்தான்!

ஒரு சூரிய ஒளிப்பந்தை,
சின்ன நிலவு மறைத்த,
விந்தை நீங்கியது, அந்த ஒருநாளில்தான்!
ஒரு மின்மினி தேடிய
என் கண்களிற்கு,
பல தாரகைகள், திசைப்படுத்தப்பட்டது,
அந்த ஒருநாளில்தான்!

அந்த ஒரு நாள்;
நான் மீண்டும் பிறந்ததாய் தோன்றியது
நான் பார்த்திருந்த, நாணயத்தின்,
ஒருபுறம் நீங்கி,
என்முன்னே அதன் மறுபுறம்
காட்டப்பட்டது
என் அறியாப்பருவத்தின்,
ஆட்டம், பாட்டம் நீங்கி
எனக்கு உலக உண்மைகள் புரிந்தது
மொட்டும் மலரும் என்று மட்டும்
அறிந்திருந்த நான்
அது வாடிக்கருகி உதிரும்,
என்ற வாடிக்கையை தெரிந்து
கொண்டேன்!

தாயின் வயிற்றில் கருக்கொண்டநான்,
ஒருமுறை உருத்தெரியாமல்,
கருக்கப்படுவேன், என்று
கருதிக் கொள்ள முடிந்தது;
என்னை ஒருமுறை ஆட்டிச்சென்ற
அந்த அற்புத நாளில்தான்!

உண்மையின் மறுபுறம் கண்டு,
நான் ஞானியாகிடாமல்,
பயந்துபோனது, அந்த ஒருநாளில்தான்!
காயங்கள் படாத என் காயத்தில்,
இரத்த வடுக்கள், தோன்ற தொடங்கியதன்
கால்கோள்விழா அந்த ஒருநாளில்தான்
நடந்தேறியது.
பூக்களை மட்டும் நுகர்ந்த நான்
அதன் முட்கள் குற்றினால்
தொற்றிக்கொள்ளும் வலியினை
உணர்ந்துகொண்டேன்!
பற்றினால் செய்யப்படும் பாவங்களை,
விட்டுவிட்டேன்!
இத்தனையும், தந்தது,
என்னைக்கடந்துபோன
அந்த ஒருநாள்!

அந்த ஒருநாள்,
எனக்கு குருந்த மரநிழலிலோ,
எழுதி வைத்த ஓலைத் துண்டிலோ
அல்லது பிணங்கள் எரிந்து போகும்
சுடலையிலோ,
ஏற்பட்டதாய், எண்ண வேண்டாம்.
சித்திரைநிலவொளியில்,
அனைவரும் நித்திரை, கொள்ளும்
நேரமொன்றில்?
காலாற ஒரு சோலையிடை,
நடந்து சென்றிருந்தேன்!
இன்பம் மட்டும் நுகர்ந்தபடி
துன்பம் என்பதை தேடியபடி
நண்பன் ஒருவனுடன்?
அளவளாவியபடிதான்,
அந்த பொழுதுகள்
கரைந்துகொண்டிருந்தன.

அன்று நான் அறிந்த வார்த்தை,
இன்று நான் இப்படியாக!
நீண்டநேரம் பேசிக்கொண்டு
சென்றடைந்தோம் ஒரு வெளியை
அந்தவெளிதான், என்வழியை மாற்றியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு மறைந்து போனது
புறச்சூழல் இருண்டு போனது
அந்தபொழுதுகளில்தான்,
என் மனச்சூழல் வெளிச்சமானது
நண்பனை பார்த்தேன்,
அவனைத் தெரியவில்லை.
திடீரென்று ஒரு பொழுதுகளில்
நில்வு தெரிந்தது.
கூடவே ஒரு இளைஞனும் தென்பட்டான்.
அவன் கையிலோ, மெழுகுவர்த்தி
ஞானம் உணர்த்திய தேவனை
போன்றிருந்தான்
ஆண்மை அழகு, அமைதியாய் தெரிந்தது.
மெழுகுதிரி உருகியது
அவனில் ஏதேதோ மாற்றங்கள்
மேலும் உருகியது.
அவன் மாறிக்கொண்டிருந்தான்,
அருவருக்கத்தக்க கிழவனாக,
ஈற்றிலே மெழுகுதிரி அணைந்தது.
அவனும் கீழே விழுந்தான்.
அப்பொழுது ஒரு வார்த்தை எனக்குத்
தெரிந்தது.
"மரணம்" என்றதற்கு பெயரென்று
ஓடிச்சென்று பார்த்தேன், திகைத்தேன்
தேடிச்சென்றவன், நான்
நான் செத்துக்கிடக்க, நான் பார்த்தேன்,
அந்தப் பொழுதுகளில்,
கிரகங்கள் மாறுவதாய், கிரகணங்கள்
விலகுவதாய்
புதுப்புது அர்த்தங்கள் புரிந்து கொண்டேன்.

நிலவு மறைந்தது, சோலையழிந்தது
வீதி தெரிந்தது. விபத்துக்கள் நேர்ந்தன
அந்தவிபத்தில், அர்த்தம் புரிந்தது.
அந்த ஒருநாளில் விபத்து நிகழ்ந்தது.
ஆடைகளைக் கிழித்தெறிந்தேன்.
மரங்களுடன் பேசித்திரிந்தேன்;
பறவைகளுடன் படிக்கச் சென்றேன்;
அந்த ஒருநாளில், அத்தனையும்
நிகழ்ந்தது.
ஞானியொருவனின், நற்பிறப்பு நிகழ்ந்தது -
ஆம் !.....
அந்த ஒரு நாளில் அத்தனையும்
நிகழ்ந்தது
ஞானியொருவனின் நற்பிறப்பு நிகழ்ந்தது

செல்வன். ப. திலீபன்
வ/வவுனியா தமிழ் மத்திய மகா
வித்தியாலயம்
வவுனியா

## காரணம் இதுதான்!

ஸ்டாலின் ஆட்சியில் நடந்த அக்கிரமங்களை ஒரு கூட்டத்தில் முன்னாள் ரஷ்ய அதிபராக இருந்த குருஷ்சேவ் கண்டித்துப் பேசிக் கொண்டிருந்தார்.அப்பொழுது அவரிடம் ஒரு துண்டுக் காகிதம் வந்து சேர்ந்தது பிரித்துப் படித்தார்.

"அந்த அக்கிரமங்கள் நடக்கும் போது, கண்டிக்காமல் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? " என்று அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

"இந்தக் கேள்வியை எழுதி அனுப்பியது யார்? " என்று குருஷ்சேவ் கேட்டதும் ஒரே மௌனம் யாருமே பதில் கூற முன்வரவில்லை!

" புரிகிறது? அன்று நான் பேசாமல் இருந்ததற்கும் இது தான் காரணம்." என்றார் குருஷ்சேவ்.

ஆம் .... இன்றும் கூட எந்த நாட்டில் அராஜகமும், அக்கிரமங்களும், தாண்டவமாடுகிறதோ அங்கே அப்பொழுது எவராவது தட்டிக் கேட்டால் அவரது நிலையும் ஸ்டாலின் காலத்தைப் போன்று தான்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை : பிரிவு 5**

# நீலக்கடலின் ஓரத்தில்

"சமீர்........... சமீர்........... எழும்புங்க மகன்.......... நேரமாயிட்டுது. எழும்பி டீயக்குடிச்சிட்டு டியூசனுக்குப் போங்க..." என்று சமீரின் தாய் சரீனா தூங்கிக்கொண்டிருந்த தன் மகனை எழுப்பினாள். காலை ஆறு முப்பது மணிக்கு அவன் பிரத்தியேக வகுப்பிற்குச் செல்ல வேண்டியிருந்ததால் நேரங்காலத்தோடேயே மகனை எழுப்பிவிட்டு ஏனைய அலுவல்களைக் கவனிப்பதற்காக சென்றுவிட்டாள்.

சமையலறைக்குள் புகுந்த சரீனா காலை உணவைத் தயார்செய்து வைத்துவிட்டு தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் பரிமாறலானாள். அவ்வாறே பரிமாறிக்கொண்டு பேசிக்கொண்டிருக்கையில், இரவு "கடற்கரையில்" பேசிக்கொண்டிருந்த அந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது அவளுக்கு.

"இஞ்ச நம்ம இரவு கடலுக்குப் போனநேரம் எல்லா நாளையும் விட அல கொஞ்சம் மேலெழும்பி அழகா வந்துட்டு இருந்தது என்ன!" "நேற்று பௌர்ணமிதானே அதால கடல்ல நீமட்டம் உயர்ந்து இருந்திச்சு. அதுமட்டுமில்ல நேற்று இரவு நாம கடற்கரைக்குப் பிள்ளையள் எல்லோரும் போனது எவ்வளவு சந்தோஷமா இருந்திச்சு தெரியுமே.........."

என்று தன் ஆனந்தத்தை சிறாஜ் வெளிப்படுத்தினான். "நாம அந்த நேரம் புதுப்பொண்ணும் மாப்பிள்ளையுமா இருக்கக்க நீ எனக்குப் பின்னால குழைந்து குழைந்து வருவாயே.............. வந்து கடலலையில கால் கழுவிறதிலேயே நேரத்தைக் கழிச்சி, சிப்பி பொறுக்கிறதிலயும் சின்னப் பிள்ளையள் மாதிரி ஓடியாடித் திரிவியே அதெல்லாம் இப்ப ஞாபகம் இருக்குதா?"

தன் மனைவியுடன் ஆரம்பகால நினைவுகளைப் பகிர்ந்துகொண்டான். சரீனாவும் தன் கணவன் கூறியவற்றைக் கேட்டு சற்று வெட்கித்து நகைத்தாள். மீண்டும் அவர்கள் இரவு பேசிக்கொண்டது ஞாபகத்திற்கு வந்தது.

"ஆஹா, இந்தப் பரந்த நீலக்கடலின் அழகென்ன! இதன் விசித்திரமென்ன! இதன் ஓசை, இந்த அலைகள் வந்து செல்லும் மாயமென்ன? என்னே அழகு! இது இறைவனின் கற்பனையா? கற்பனையின் பிரதிபலிப் இது! மனிதனாகப் பிறந்த எம்மால் இதைப்போல் ஒன்றை செயற்கையாகக் கற்பனை செய்ய முடியுமா? அந்த இறைவனின் படைப்புக்களில் மிக உன்னதமானது இதுவன்றோ!....."

"ஆமாம் சரீனா எனக்கு சின்ன வயசில இருந்தே கடல் என்றால் ரொம்ப பிரியம். அதனால எனது வேலைநாட்கள் தவிர்ந்த விடுமுறை நாட்களிலும், ஓய்வு நேரங்களிலும் இந்தக்கடற்கரைக்குவந்து மணித்தியாலக் கணக்கில் இதன் அழகை ரசித்துக் கொண்டிருப்பேன். கடலின் ரசிகன் என்பதனால்தானே கடலுக்கருகில் வசிக்க உன்னக் கலியாணம் செய்தன்".

என்று சாவகாசமாகப் பேசினான் சிராஜ். இவ்வாறே என்றுமே இல்லாதவாறு பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளையெல்லாம் மீட்டிக்கொண்டு அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சரீனாவிற்கு மூன்று குழந்தைகள். ஒரு ஆண்மகனும் இரண்டு பெண் பிள்ளைகளும். மூத்தவன் இப்பொழுதுதான் தரம் ஒன்பதில் கற்றுக்கொண்டிருக்கிறான். இரண்டாவது மகள் தரம் எட்டுப் படிக்கிறாள். மூன்றாவது மகளிற்கு இரண்டுவயது பூர்த்தியாகின்றது. சரீனாவின் கணவன் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். ஐந்துபேரைக்கொண்ட ஓர் சிறிய குடும்பமே அது.

சரீனா தன் கணவன்மேல் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவள். அதேபோல் தன் பிள்ளைகள் மீதும் அளவிலா அன்பு கொண்டவள். சரீனா படித்தவளாயினும் தொழில் புரிய விரும்பவில்லை. தன் பிள்ளைகளுக்கு வீட்டில் அவளால் முடிந்தவரை பாடம் சொல்லிக் கொடுப்பாள்.

சரீனாவின் வீடு கலை ரசனையும், இயற்கை எழிலும் கொண்ட கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் இருந்தது. தமது ஓய்வு நேரங்களிலெல்லாம் தானும் தன் கணவனுடனும் பிள்ளைகளுடனும் கடற்கரையிலேயே பொழுதுபோக்கை கழிப்பர். அதனால் பிள்ளைகளும் எவ்விதப் பெரும் அலைகளுக்கும் அஞ்சாதவர்களாக இருந்தார்கள்.

அன்று விடுமுறை நாளாதலால் மூத்த மகனை பிரத்தியேக வகுப்பிற்கு அனுப்பிவிட்டு ஏனையோர் வீட்டிலேயே இருந்தனர். அந்நேரம்தான் அந்தச் சம்பவம் நடந்தது. "ஐயோ! தண்ணீ.......... தண்ணீ......... தண்ணி வருது" என்று ஓர் அலறல் சத்தம் கேட்டது. அது கேட்ட உடனேயே வீட்டிற்குள் இருந்த சரீனா, சிறாஜ் பிள்ளைகள் அனைவரும் வீட்டு முற்றத்திற்கு ஓடி வந்தனர். "என்ன சத்தம்? என்னவாம்? என்று இருவரும் அவர்களுக் குள்ளேயே கேட்டுக்கொண்டு வீதியில் ஓடிக்கொண்டிருப்பவர்களிடம் கேட்க முற்படும்போது, "ச்.........சிர்.............சடார்" பெரும் சத்தத்துடன் பேரலை ஒன்று வீட்டை இடித்துக்கொண்டு வீட்டுக் கூரையையும் தாட்டு வந்தடித்தது. முற்றத்தில் நின்றுகொண்டிருந்த கணவன் மனைவி பிள்ளைகள் சேர்ந்து தாண்டனர்.

"உம்மா.......... உம்மா............." என்று தன் மகளின் அவலக்குரல் சரீனாவின் காதில் எட்டியது. மறுகணமே "சரீனா.......... சரீனா................ எங்க இருக்காய்........." என்று மற்றுமொரு குரல் அவள் செவிகளில் வந்து விழுந்தது. சரீனாவோ தன் கைக்குழந்தையை இறுகக் கட்டியணைத்துக்கொண்டு மகளையும் கணவனையும் காணாது தவித்தாள்.

"என்னங்க............... மகள்..................ஓ" அவர்களைக் கூப்பிட்டவள் ஓவென்று அழுது கொண்டு தாங்கள் இன்றே மரணிக்கப் போகின்றோம். என்று நினைத்துக்கொண்டாள். வந்த அந்தக் கொடூரப்பேரலை சற்றே வடிந்து சென்றதுதான் தாமதம், மறு தடவையும், "ச்சிர்............. சடார்" என்று முன்னையதிலும் பார்க்க மிகப் பெரும் பேரலையாக வந்து விழுந்தது. சரீனாவின் கையிலிருந்த குழந்தையை "படார்" என்று பறித்தெடுத்துச் சென்றது. அதேவேளை அவளின் சாரியையும் வாரியெடுத்துச் சென்றுவிட்டது. மானமிளந்தவள் போல் தன் கணவன் மற்றும் மகளை நோக்கினாள். சிறாஜை தண்ணீர் அள்ளியெடுத்து எங்கோ கொண்டு சென்றது. அந்தத் தண்ணீர், அதுமட்டுமல்லாமல் தன் ஆசை மகளையும் மூழ்கடிக்கச் செய்தது. தண்ணீரினால் மூச்சுத்திணறி அந்த அழுக்கான நீரை விழுங்கி அவ்விடத்திலேயே உயிர்துறந்தாள்.

தன் முன்னேயே கணவனையும் இருபிள்ளைகளையும் சாகடித்துக்கொண்டு அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரப் பேரலை வந்த வழியே சென்றுவிட்டது. தன் எதிரிலேயே கொண்டுசென்று கொன்றளித்த அந்த இனமறியாப் பேரலையை நினைத்து நொந்துகொண்டாள்.

"ஐயோ.......... என்ட புருஷன்................ ஐயோ......... என்ட பச்சிளம் பிள்ளையள்........ இப்ப நான் என்ன செய்வன்............ அவங்களையெல்லாம் கொண்டுபோன தண்ணீ என்னக் கொண்டுபோயிருக்கக்கூடாதா............... ஐயோ........... என் இறைவா என்ன கொடுமை இது...................." பெரும் சத்தத்துடன் புலம்பிக்கொண்டிருந்தாள். தான் உருக்குலைந்து கிடப்பதையும் கவனியாது அழுகையிலேயே தன்னை மறந்து இருந்துகொண்டிருந்தாள். அப்பொழுது அப்பக்கம் ஓடிவந்துகொண்டிருந்த பக்கத்துவீட்டுப் பையன் ஒருவன் "அன்டி வாங்க போவம். அடுத்த தண்ணி வாறத்துக்குள்ள நாம இங்கிருந்து போயிடோனும் வாங்க". வற்புறுத்தி அழைத்தான்.

"எனக்கேலா மகன். என்ட கண்முன்னாலேயே என்ட குடும்பத்தையே கொண்டுபோயிட்டுது.......... நான் வந்து என்ன செய்ற. நானும் இங்கேயே கிடந்து சாகப்போறன்" என்றவள் மேலும் கூற வாய் அனுமதிக்காததால் வீரிட்டு அழலானாள். எப்படியோ வற்புறுத்தி பலவந்தமாக அவளை "மெயினிற்கு" அழைத்துச் செல்லலானான். அவளைப்போல எத்தனையோ தாய்மார், பிள்ளைகளெல்லாம் உருக்குலைந்து அழுதுகொண்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். செல்லும் வழியில் தண்ணீர் வராத பிரதேசத்தவர்கள் கையில் உடைகளை வைத்துக்கொண்டு கொடுத்துக்கொண்டிருந்தனர். சரீனாவின் கையிலும் ஒரு உடை கொடுக்கப்பட்டது. வேண்டாவெறுப்பாக அதை அணிந்துகொண்டு சென்றாள். அன்றைய நாள் முழுக்க அவள் நடந்த சம்பவத்தை நினைத்து அழுது கொண்டே இருந்தாள். பின்னேரம் ஐந்து மணியைப்போல் பள்ளிவாசலில் சடலங்கள் கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. சடலங்களை இனங்காண்பதற்காக அனைவரும் ஓடிக்கொண்டிருந்தனர். சரீனாவும் நெஞ்சு பதைபதைக்க ஓடிச்சென்று பார்த்தாள். அதோ! அவள் கணவன் போல் தெரிந்தது. உடனே சென்று பார்த்தாள் என்ன ஆச்சரியம்! தன் கணவன் அருகில் மூன்று பிள்ளைகளும் அணைத்துப்பிடித்தபடிகிடத்தப்பட்டிருந்தனர்.

"ஐயோ என்ட பிள்ளையள்........... என்ட ராசா............ சமீர்............ சமீர்......... உன்ட உயிரையுமா வாங்கிட்டு இந்தத் தண்ணீ.................. உங்க எல்லார்ர உயிரையும் எடுத்தமாதிரி என்னையும் எடுத்துக்கொண்டுபோய் இருக்கலாமே..........." என்று அழுது புலம்பினாள். சிறிது நேரத்தில் சடலங்கள் அடக்குவதற்கு எடுத்துச் செல்லப்பட்டன. எல்லோரும் கூக்குரலிட்டுக் கத்தினர். ஆனால் சரீனாவோ சத்தமிட்டு அழுவதற்கு முடியாமல் தொண்டை அடைபட்டுக்கொண்டது. கண்களில் சிறிதேனும் நீரில்லாமல் வரண்டு கிடந்தது.

சரீனா இப்பொழுது பட்டமரம் போல் யாருமற்ற அநாதையாய் அனாதரவற்றுக் கிடந்தாள். தன் உயிர், உடல் இருப்பது ஏனோ? என்ற கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டு தன் கணவன் பிள்ளைகளை நினைத்து நினைத்து மனம் நொந்து மனதினில் ஆயிரமாயிரம் கேள்விகள் எழ அழுது புலம்பிக்கொண்டே இருந்தாள்.

சிறிது நாட்களின் பின் அனைவரும் தங்கள் வீடு வாசல்களை சென்று பார்வையிடப் போய்க்கொண்டே இருந்தனர். ஆனால், சரீனா தன் வீட்டிற்கு செல்லவில்லை. ஏதோ ஓர் எண்ணம் தோன்றியது போல் சரீனா எங்கோ நடக்கலானாள்.

அழுக்கான உடையுடன், சீப்பு அறவே படாத தலையுடன் சென்று கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வழியில் ஓர் ஆறு இருந்தது. அதில் ஒரு சிறுவன் நீராடிக்கொண்டிருந்தான். அவனைக்கண்டதுதான் தாமதம் அவ்விடத்திலேயே நின்றுகொண்டு அவதானித்தாள். அச்சிறுவன் நீரில் மூழ்கி நீராடலானான்.

"குரும்பையாய் தெரிந்த தலை. பனங்காயயளவாகி விளாங்காயளவு பரிணமித்து எலுமிச்சம் பழமாக உருவெடுத்து..........."

நீரில் மூழ்கிய அந்தத் தலையைக் காணவில்லை என்ற ஏக்கத்தில் இமைத்த விழி மூடாமல் அவனையே உற்றுநோக்கினாள். திடீரென நீரை விட்டு வெளியில் வந்தது அந்தத் தலை! அதனைக் கண்டதுதான் தாமதம் விறுவிறுவென நடக்கலானாள். கடற்கரைக்குச் சென்று கடலின் அருகில் நின்றாள்.

அங்கு நின்றவள் கடலையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். தன் கணவனும் நீராடும்போது தண்ணீரில் மூழ்கிய தலை இவ்வாறு சிறிது நேரத்தின் பின் வெளிவருவதை அவள் அடிக்கடி அவதானித்திருக்கிறாள். அந்த முன்நாட்களின் எண்ணத்திலோ என்னவோ தன் கணவன் வந்து விடுவார் என்று எண்ணியோ......... கடலையே இமைத்த கண் மூடாமல் அசையாமல் அந்த நீலக்கடலின் ஓரத்தில் நின்றுகொண்டு பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஆம்!......தன் சுய சினைவை இழந்து விட்ட நிலையில் சரீனா இன்றும் அந்த நீலக் கடலையே பார்த்துக் கொண்டு நிற்கின்றாள்.

செல்வி. எம்.எம் மாஹறா
கமு/ சம்மாந்துறை முஸ்லிம் ம. வி
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2004

## தேசிய நிலைப்போட்டி

## கொழும்பு

### வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களின் பெறுபேறுகள்

| நிகழ்ச்சி இல | நிகழ்ச்சி | பிரிவு | இடம் | மாணவர் பெயர் | பாடசாலை | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|
| 4.1 | வாசிப்பு | 1 | 1 | செல்வன். த. கோகிலன் | யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி | வடக்கு, கிழக்கு |
| | | | 3 | செல்வி.பொ. நீருபிகா | வ/விபுலானந்தா மகா வித்தியாலயம், வவுனியா | வடக்கு, கிழக்கு |
| 4.3 | ஆக்கம் எழுத்து | 1 | 2 | செல்வி. த. அபிநயா | யா/சாவகச்சேரி ஆ. பா. சாவகச்சேரி | வடக்கு, கிழக்கு |
| 4.4 | க.வரைதல் க.எழுதுதல் | 3 | 3 | செல்வி. பா.ஜசிந்தா | யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். | வடக்கு, கிழக்கு |
| 4.5 | க.வரைதல் இ.நயத்தல் | 4 | 3 | செல்வி. வா.தர்மிஷா | யா/யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம். | வடக்கு, கிழக்கு |
| 4.6 | தமிழிற் க.வரைதல் | 5 | 3 | செல்வி. த. சசிரேகா | மட்/மகஜனாக் கல்லூரி மட்டக்களப்பு | வடக்கு, கிழக்கு |
| 4.7 | இலக்கணப் போட்டி | 5 | 2 | செல்வி. தி. காயத்திரி | மட்/மகஜனாக் கல்லூரி யாழ்ப்பாணம் | வடக்கு, கிழக்கு |
| 4.9 | குறுநாடக ஆக்கம் | 5 | 3 | செல்வன்.கு. அறிவழகன் | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் வலிகாமம் | வடக்கு, கிழக்கு |
| 4.10 | கவிதை ஆக்கம் | 4 | 1 | செல்வி. அ. அனுஷானி | யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் | வடக்கு, கிழக்கு |
| 4.11 | சிறுகதை ஆக்கம் | 5 | 2 | செல்வன். ரா.ப. அருஸ் | தி/கிண்ணியா மத்திய கல்லூரி, கிண்ணியா | வடக்கு, கிழக்கு |
| 4.12 | பேச்சு | 2 | 1 | செல்வன். ர. ஜனகன் | மட்/சிவானந்தா வித்தியாலயம் மட்டக்களப்பு | வடக்கு, கிழக்கு |
| | | 3 | 1 | செல்வி.பி. கேஷினி ஏஞ்சலா | தி/சென்மேரிஸ் கல்லூரி திருகோணமலை | வடக்கு, கிழக்கு |
| | | 4 | 1 | செல்வி.சி. அபிராமி | தி/சென்மேரிஸ் கல்லூரி திருகோணமலை | வடக்கு, கிழக்கு |
| | | 5 | 2 | செல்வன். தெ. ஹர்சன் | யா/மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் | வடக்கு, கிழக்கு |
| 4.13 | பாவோதல் | 2 | 1 | செல்வன். த. தர்ஷாந் | தி/புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை | வடக்கு, கிழக்கு |
| | | 3 | 2 | செல்வி.ச. சதுர்த்திகா | மட்/வின்சன்ட் மகளிர் உயர் பாடசாலை மட்டக்களப்பு | வடக்கு, கிழக்கு |
| | | 5 | 1 | செல்வன் ச. ஜெயந்திரன் | மு/யோகபுரம் மகா வித்தியாலயம் மல்லாவி. | வடக்கு, கிழக்கு |
| 4.14 | இசையும் அசையும் | 1 | 1 | செல்வி.குருபரன் நாரணி | மட்/கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம் வித்தியாலயம், ம.களப்பு | வடக்கு, கிழக்கு |
| 4.15 | இசை-தனி | 2 | 3 | செல்வி.இ. மாதங்கி | யா/இணுவில் இந்துக் கல்லூரி இணுவில் | வடக்கு, கிழக்கு |
| | | 3 | 1 | செல்வி.மா. ஷயுக்ஷனி | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம். | வடக்கு, கிழக்கு |
| | | 4 | 1 | செல்வன். கு. ஜெகதீசன் | யா/யூனியன் கல்லூரி யாழ்ப்பாணம். | வடக்கு, கிழக்கு |
| | | 5 | 1 | செல்வி. வி. ஜீவிகா | யா/யூனியன் கல்லூரி யாழ்ப்பாணம். | வடக்கு, கிழக்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2004

## தேசிய நிலைப்போட்டி

## கொழும்பு

### வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களின் பெறுபேறுகள்

| நிகழ்ச்சி இல | நிகழ்ச்சி | பிரிவு | இடம் | மாணவர் பெயர் | பாடசாலை | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|
| 4.16 | இசை-குழு (குழு-1) | குழு | 1 | குழு | யா/வேம்படி மகளிர் உ.பா யாழ்ப்பாணம் | வடக்கு கிழக்கு |
| | இசை-குழு 11 | குழு | 3 | குழு | மட்/புனித சிசிலியா பெண்கள் ம.வி. மட்டக்களப்பு | வடக்கு கிழக்கு |
| 4.17 | நடனம்-தனி | 1 | 2 | செல்வி. தெ. சரண்யா | யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம் | வடக்கு கிழக்கு |
| | | 2 | 1 | செல்வி. யோ. ஹம்சானந்தி | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. | வடக்கு கிழக்கு |
| | | 3 | 2 | செல்வி. கி.துவாரகா | மட்/புனித சிசிலியா பெண்கள் ம.வி. மட்டக்களப்பு | வடக்கு கிழக்கு |
| | | 4 | 2 | செல்வன். பா. அனுஜன் | யா/பெரியகுளம் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம் | வடக்கு கிழக்கு |
| | | 5 | 1 | செல்வி. ம. யுமைரூபி | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் | வடக்கு கிழக்கு |
| 4.18 | நட்டிய நாடகம் | தி.போ | 1 | குழு | யா/இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம். | வடக்கு கிழக்கு |
| 4.19 | நாடகம் | தி.போ | 1 | குழு | யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி யாழ்ப்பாணம். | வடக்கு கிழக்கு |
| 4.20 | வில்லுப்பாட்டு | தி.போ | 1 | குழு | யா/யாழ்ப்பாணம் கல்லூரி யாழ்ப்பாணம். | வடக்கு கிழக்கு |
| 4.21 | விவாதம் | தி.போ | 3 | குழு | கமு/அல் - மனார் மத்திய கல்லூரி மருதமுனை. | வடக்கு கிழக்கு |
| 4.22 | தமிழ் அறிவு வினாவிடை | தி.போ | 1 | குழு | யா/தெல்லிப்பளை மகஜனக் கல்லூரி யாழ்ப்பாணம் | வடக்கு கிழக்கு |
| 4.25 | சிங்கள மாணவர் களுக்கான தமிழ் உறுப் பெழுத்து | விசேட பிரிவு 1 | 1 | செல்வி. எஸ்.எம். நிஸானி செவ்வந்தி | தி/திஸ்ஸ ம. வித்தியாலயம் திருகோணமலை | வடக்கு கிழக்கு |

1 செல்வி. எஸ்.எம். நிஸானி செவ்வந்தி சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து திஸ்ஸ ம வித்தியாலயம் நினைத்துக்கொண்டு இருந்துகொண்மு நினைக்கயில இருந்துிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களம்
# 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழித்தினம் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள்

| இல | நிலை | நிகழ்ச்சி | பிரிவு | மாவட்டம் | வலயம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | 1 | ஆக்கம் எழுத்து | 1 | யாழ்ப்பாணம் | தென்மராட்சி | செல்வி. த. அபிநயா | யா/சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை |
| 13 | 3 | ஆக்கம் எழுத்து | 1 | மட்டக்களப்பு | கல்குடா | செல்வி. சீ. வினோஜா | மட் குமாரவேலியர் கிராமம் வித்தியாலயம் |
| 14 | 1 | கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் | 2 | கல்முனை | அக்கரைப்பற்று | செல்வி. எச். இஸ்ஸத் சமீஹா | கமு ஆயிஷா பெண்கள் மகா வித்தியாலயம் |
| 15 | 2 | கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் | 2 | கிளிநொச்சி | கிளிநொச்சி | செல்வி. த. போபிதா | கிளி முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 16 | 3 | கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் | 2 | மட்டக்களப்பு | கல்குடா | செல்வி. ஏ.எம் பாத்திமா முபாஸியா | மட் ஓட்டமாவடி பாத்திமா மகளிர் பாலிகா வித்தியாலயம் |
| 17 | 1 | கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் | 3 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | செல்வி. பா. ஜசிந்தா | யா வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை |
| 18 | 2 | கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் | 3 | கிளிநொச்சி | கிளிநொச்சி | செல்வி. ந. பவித்ரா | கிளி புனித திரேசா மகா வித்தியாலயம் |
| 19 | 3 | கட்டுரை வரைதல், கடிதம் வரைதல் | 3 | திருகோணமலை | திருகோணமலை | செல்வி. ந. ஆரணி | தி சென். மேரிஸ் கல்லூரி |
| 20 | 1 | கட்டுரை வரைதல், கவிதை நயத்தல் | 4 | யாழ்பாணம் | வலிகாமம் | செல்வி. வா. தர்மிஷா | யா யூனியன் கல்லூரி |
| 21 | 2 | கட்டுரை வரைதல், கவிதை நயத்தல் | 4 | கல்முனை | கல்முனை | செல்வி. மு.ச. பாத்திமா சித்திக்கா | கமு அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை |
| 22 | 3 | கட்டுரை வரைதல், கவிதை நயத்தல் | 4 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | செல்வி. மு.றி.அ. பாத்திமா பர்ஹத் | மட் மில்லத் மகளிர் மகா வித்தியாலயம் |
| 23 | 1 | தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் | 5 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | செல்வி. த. சசிரேகா | மட் மகாஜனாக் கல்லூரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களம் 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழித்தினம் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள்

| இல | நிலை | நிகழ்ச்சி | பிரிவு | மாவட்டம் | வலயம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | 2 | தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் | 5 | கல்முனை | சம்மாந்துறை | செல்வி.யு.எல்.றிஷானா | கமு அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி |
| 26 | 1 | இலக்கணப் போட்டி | 4 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | செல்வி. ஆ.பா.பாத்திமா றிபானா | மட் மீரா பாலிகா மகா வித்தியாலயம் |
| 27 | 2 | இலக்கணப் போட்டி | 4 | கிளிநொச்சி | கிளிநொச்சி | செல்வன்.தி.சிறிரஜீவன் | கிளி கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 28 | 3 | இலக்கணப் போட்டி | 4 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | செல்வி. அ. அன்ரனற் றிரோயஜினி. | மு. முல்லைத்தீவு மகா வித்தியாலயம் |
| 29 | 1 | இலக்கணப் போட்டி | 5 | யாழ்ப்பாணம் | வலிகாமம் | செல்வி. தி. காயத்திரி | யா. மகாஜனாக் கல்லூரி |
| 30 | 2 | இலக்கணப் போட்டி | 5 | கல்முனை | கல்முனை | செல்வி.மு.ச. றினோஸா | கமு சம்ஸ் மத்திய கல்லூரி |
| 31 | 3 | இலக்கணப் போட்டி | 5 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | செல்வன்.ஆ. பிரதீபன் | மட் கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம் |
| 32 | 1 | திறனாய்வுப் போட்டி | 5 | யாழ்ப்பாணம் | வடமராட்சி | செல்வன்.வி.மயூரதாஸ் | யா.புற்றளை மகா வித்தியாலயம் |
| 33 | 2 | திறனாய்வுப் போட்டி | 5 | கல்முனை | அக்கரைப்பற்று | செல்வன்.எம்.முசாதிக் | கமு அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி |
| 34 | 3 | திறனாய்வுப் போட்டி | 5 | திருகோணமலை | மூதூர் | செல்வி. எம். இர்பானா | தி அந் - நஹார் முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம் |
| 35 | 1 | குறுநாடக ஆக்கம் | 4 | கிளிநொச்சி | கிளிநொச்சி | செல்வி. வே. சுபிதா | கிளி கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் |
| 39 | 2 | குறுநாடக ஆக்கம் | 5 | திருகோணமலை | திருகோணமலை | செல்வி.ஹ. நூர்ஜஹான் | தி அல் மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயம் |
| 40 | 3 | குறுநாடக ஆக்கம் | 5 | வவுனியா | வவுனியா வடக்கு | செல்வன். கா. கஜிகரன் | வ புத்துக்குளம் மகா வித்தியாலயம் |
| 41 | 1 | கவிதை ஆக்கம் | 4 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | செல்வி. அ. அனுஷானி | யா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 42 | 2 | கவிதை ஆக்கம் | 4 | மன்னார் | மன்னார் | செல்வன்.எஸ்.ஸ்ரனி கிஷோகர் | மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி |
| 43 | 3 | கவிதை ஆக்கம் | 4 | திருகோணமலை | திருகோணமலை | செல்வன். த. நிதர்சன் | தி.இ.கி.மி.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| 44 | 1 | கவிதை ஆக்கம் | 5 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | செல்வி.மு.றசீத் ஜுஸ்லா | மட் மீரா பாலிகா மகா வித்தியாலயம் |
| 45 | 2 | கவிதை ஆக்கம் | 5 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | செல்வன்.அ.ஜெ. டெனிசியஸ். | மு. வித்தியானந்தா கல்லூரி |
| 46 | 3 | கவிதை ஆக்கம் | 5 | யாழ்ப்பாணம் | தென்மராட்சி | செல்வன்.சி. சிவரூபன் | யா.சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் |
| 47 | 1 | சிறுகதை ஆக்கம் | 4 | கல்முனை | கல்முனை | செல்வி.மு.கேதுஜா | கமு விபுலானந்தா மத்திய கல்லூரி |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களம் 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழித்தினம் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள்

| இல | நிலை | நிகழ்ச்சி | பிரிவு | மாவட்டம் | வலயம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|---|---|---|
| 48 | 2 | சிறுகதை ஆக்கம் | 4 | திருகோணமலை | திருகோணமலை | செல்வி. கி. சிவப்பிரசாத் | தி. இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| 50 | 1 | சிறுகதை ஆக்கம் | 5 | திருகோணமலை | மூதூர் | செல்வன். ரா. அருஸ் | தி கிண்ணியா மத்திய கல்லூரி |
| 63 | 3 | பேச்சு | 3 | கல்முனை | கல்முனை | செல்வி. ஏ. ஜே. எப். சுமையா | கமு அல - மனார் மத்திய கல்லூரி |
| 85 | 1 | இசையும், அசையும் | 1 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | செல்வி. குருபரன் நாரணி | மட் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் |
| 138 | 3 | விவாதம் | திறந்த போட்டி | யாழ்ப்பாணம் | வலிகாமம் | | யா. யாழ்ப்பாணக் கல்லூரி |
| 141 | 3 | தமிழறிவு வினாவிடை | திறந்த போட்டி | திருகோணமலை | திருகோணமலை | | தி. இ. கி. மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி |
| 145 | 1 | சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு | விசேட பிரிவு 1 | திருகோணமலை | திருகோணமலை | இ. டி. கஜான் சமிந்து | தி சிங்கள மத்திய மகா வித்தியாலயம் |
| 147 | 1 | சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு | விசேட பிரிவு 2 | திருகோணமலை | திருகோணமலை | எம். தாரக துலாஜ் | தி திஸ்ஸ மகா வித்தியாலயம் |
| 149 | 1 | சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து | விசேட பிரிவு 1 | திருகோணமலை | திருகோணமலை | செல்வி. எஸ். எம் நிஸானி செல்வந்தி | தி திஸ்ஸ மகா வித்தியாலயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org